தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார்

வாழ்வும், பணிகளும்



கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

தமிழவேள்

த.வே. உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை, தஞ்சாவூர்.

2001

பதிப்பு : முதற்பதிப்பு
மார்ச் 2001

உரிமை : கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை, தஞ்சாவூர்–2.

விலை : ரூ.100/–

வடிவமைப்பு மற்றும் அச்சு : லக்மி பிரிண்டர்ஸ்,
1086, காக்கா வட்டாரம்,
தஞ்சாவூர் – 9

கிடைக்குமிடம் : கரந்தைத் தமிழ்ச் சங்கம்
கரந்தை, தஞ்சாவூர்–2.

பதிப்பாசிரியர் குழுவினர்

திரு. நா. **கலியமூர்த்தி,**
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. ச. **சுந்தரம்** பி.ஏ., பி.எல்.,
துணைத் தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. ச. **இராமநாதன்,**
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. சு. **சத்தியசீலன்** பி.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எட்.,
துணைச் செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு. ஆ.சோ. **தியாகராசன்,**
பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

புலவர். மீ. **இராமதாசு,** எம்.ஏ., எம்.எட்.,
நிறைவேற்றுக் கழக உறுப்பினர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

புலவர். ஆ. **இராமசாமி,**
தமிழாசிரியர் (ஓய்வு),
புனித மரியன்னை மேனிலைப் பள்ளி. திண்டுக்கல்.

புலவர். சிவ. **திருஞான சம்பந்தம்,** எம்.ஏ., பி.எட்.,
முதுகலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப் பள்ளி.

திரு. கி. **ஜெயக்குமார்.** எம்.எஸ்ஸி., பி.எட்.,
பட்டதாரி ஆசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப்பள்ளி.

நன்றிக்குரியோர்

திருமதி. செல்லம்மாள் சிங்காரவேலு
தமிழவேள் அவர்களின் மருமகளார்

திரு. இரா. கோவிந்தராசன்
சங்கம் நிறுவிய துங்கன் த.வே. இராதாகிருட்டின பிள்ளை அவர்களின் மகனார்.

முனைவர். ச. சாம்பசிவனார், ஆசிரியர்,
தமிழ் மாருதம் திங்களிதழ், மதுரை

திரு. வி.கே. அருணாசலம் பிள்ளை
முன்னாள் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொருளாளர்

தமிழ்த் தொண்டர். கோ. முத்துப்பிள்ளை
முன்னாள் அரசுச் செயலாளர், சென்னை.

சேக்கிழார் அடிப்பொடி. தி.ந. இராமச்சந்திரன்
வழக்குரைஞர், தஞ்சாவூர்

பெரியவர். அமரர். த.ம. ஆறுமுகம் பிள்ளை,
முன்னாள் கரந்தைத் தமிழ்ச் சங்க எழுத்தர்

முனைவர். இரா. குணசேகரன்
உதவி இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை, மதுரை.

முனைவர். த. பத்மநாபன்,
இயக்குநர், செய்தி சேகரிப்பும் நூலக கண்காணிப்பும்.
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

முனைவர். பழனி அரங்கசாமி,
முன்னாள் மொழி பெயர்ப்புத் துறைத் தலைவர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்

முனைவர். இரா. குருநாதன்,
முதல்வர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்
கல்லூரி

திருமதி. பா. நீலா,
நூலகர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்
கல்லூரி

முனைவர். பா. மதிவாணன்,
விரிவுரையாளர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்
கல்லூரி

முனைவர். சா.ர. செந்தில்குமார்,
விரிவுரையாளர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்
கல்லூரி

முனைவர். துரை. பன்னீர்ச் செல்வம்,
விரிவுரையாளர்,
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்
கல்லூரி

திரு. பா. தமிழ்மணி,
பட்டதாரி ஆசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப் பள்ளி.

திரு. ஆ. இராமகிருஷ்ணன்,
பட்டதாரி ஆசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப் பள்ளி.

திரு. மு. பத்மநாபன்,
தொழிற்கல்வி ஆசிரியர்,
உமாமகேசுவர மேனிலைப் பள்ளி.

அமரர். ப. சங்கரலிங்கம்,
நூலகர்,
ரோஜா முத்தையா ஆய்வு நூலகம், சென்னை.

ஆணையர்,
ஆவணக் காப்பகம், சென்னை.

மேலும் தமிழவேள். த.வே. உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும் எனும் இந்நூல் வெளிவருவதற்கு, அரிய செய்திகளை வழங்கியும், புகைப்படங்களை வழங்கியும், தமிழவேள் அவர்களோடு பழகிய தங்களுடைய நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டும் உதவிய தமிழ்ச் சான்றோர் அனைவருக்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

நா. கலியமூர்த்தி,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

முன்னுரை

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்ற செந்நாப்போதார் சீர்மொழிக் கேற்ப வழக்குரைஞர் தொழிலிலும், வளர் தமிழ் போற்றும் நெறியிலும், வறுமையுறு சிறார்களுக்கு வாழ்வளிக்கும் வகையிலும், வந்தாரை வரவேற்று வயிறார விருந்தளிக்கும் வழக்கத்திலும், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரைப்போல, வண்டமிழ்ப் புலவர்களின் வாட்டம் கண்டு வருந்தி அவர்கட்கு வாரி வாரி வழங்கிய வள்ளமையிலும், தனக்கு நிகரில்லை என்று கூறுமாறு; மேற்கொண்ட துறைதொறும் புகழுடன் திகழ்ந்து தோன்றியவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைக் கண்போலக் கட்டிக் காத்தவரும், இன்று அஃது ஆல் போல் தழைத்தோங்கி அகிலமே புகழ்ந்து போற்றும் அளவுக்குத் திகழ வழிவகை செய்தவரும் ஆகிய தமிழவேள். த.வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களைத் தமிழர்கள் என்றும் போற்றி வணங்கக் கடமைப்பட்டுள்ளனர். அந்த அளவுக்குத் தமிழ்த் தொண்டாற்றிய பிறவித் தலைவர் அவர். அத்தகைய தமிழ்த் தொண்டரை - சமுதாயத் தொண்டரை - தமிழினக் காவலரை - தமிழின மீட்பரை நினைவு கூர்வதில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெருமையடைகிறது. *"தமிழவேள் த.வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களின் வாழ்வும் பணிகளும்"* என்னும் நூலை வெளியிடுவதன் வாயிலாக அன்னாருக்கு நன்றியைக் காணிக்கையாக்கி மகிழ்கிறது.

தஞ்சாவூர்,
28.02.2001

நா. கலியமூர்த்தி

ச. இராமநாதன்,
செயலாளர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்

அணிந்துரை

வள்ளல் தமிழவேள் வாழ்க்கை வரலாற்றை
நல்ல முறையில் நவிலுதற்கு – வல்லமையை
எங்கள் மனத்தே இருக்கும் எழிற்கரந்தைச்
சங்கக் கணபதியே தா.

செந்தமிழின் புரவலராய்த் திகழ்ந்த தங்கம்;
சிறப்புடனே 'இராவ்சாகிப்' ஆன சிங்கம்;
வந்தவரை வரவேற்றுப் போற்றும் பண்பர்;
வாழ்வெல்லாம் தமிழுக்கே அளித்த வள்ளல்;
தந்தையைப் போல் சிறுவர்களைக் காத்த மேதை;
தமிழவேள் உமாமகே சுவரனார் வாழ்வை
அந்தமிலாப் பெரும்பணியைக் கூறுதற்கு
ஆஞ்சனே யன்மலர்த்தாள் போற்றுவோமே!

'அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த'

அற்புதனின் ஆணையால்தான் அனைத்துயிர்களும், இயங்குகின்றன என்பதிலும், சாட்டையில்லாப் பம்பரம்போல் ஆட்டி வைப்பவன் அவனே' என்பதிலும் "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பதிலும், "ஊழிற் பெருவலி யாவுள" என்பதிலும் அடியேன் அழுத்தமான நம்பிக்கையுடையவன்தான். ஆனால்

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"
"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்னும் குறட்பாக்களின் கருத்துகளை மேற்குறித்த ஆழமான நம்பிக்கையைக் காட்டிலும் மிக மிக அழுத்தமாகவும் உறுதியாகவும் நம்பினேன். முயன்றால் முடியாதது இல்லை என்று எண்ணி,

"உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ"

என்ற உணர்வுடன்

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்பதற்கேற்பத் துணிவுடனும் துடிப்புடனும் ஒருவன் செயல்படுவா னேயானால்

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"

என்ற மொழிக்கேற்ப, திருப்பணியாற்றப் புறப்படும் ஒருவனுக்குத் தெய்வமே மடிதற்று வந்து துணைபுரியும் என்னும் கொள்கையில் மாறாத உறுதியுடன் செயல்பட்டேன். அவ்வாறு செயல்பட்டபோது வெற்றி பெற்றுமிருக்கிறேன், வெற்றி வாய்ப்பை இழந்துமிருக்கிறேன்.

இவ்வகையில் வெற்றியெய்தியபோது சிந்தித்துப் பார்க்காத, நான் வெற்றி வாய்ப்பையிழந்தபோது மட்டும் சிந்தித்துப் பார்த்தேன். பட்டறிவும் பன்னூலறிவும் பெற்ற பாவலர்கள் காட்டிய வழியில் தானே நாம் பயணம் செய்தோம். அவ்வாறிருக்க இப்பாதையில் பாறைகளும், படுகுழிகளும் எவ்வாறுண்டாயின என்று எனக்குள் யானே வினாவெழுப்பிக் கொண்டபோதுதான் ஓர் உண்மை புலப்பட்டது. 'தெய்வத்தான் ஆகாத செயலையும், செய்து முடிப்போம்' என்ற திடமான முயற்சியையே அந்தத் தெய்வம்தான் தரவேண்டும்;

'ஊழையும் உப்பக்கம் காண்கின்ற வகையில் உஞற்றுதற்குரிய உள்ளத்தையும் அந்த ஒப்பற்ற ஒளிதான் உதவவேண்டும்; அருமை உடைத்து என்று அயர்ந்து போகாத அழுத்தத்தையும் அந்த ஆண்டவன்தான் அளிக்க வேண்டும்; என்ற உண்மைதான் அது. அப்படியானால், மேற்கூறப்பட்ட, தாழாதுஞற்றுகின்ற தன்னம்பிக்கையையும், மெய்வருத்தக் கூலிதருகின்ற மேலான முயற்சியும் எப்பொழுது நமக்குக் கிடைக்கும் என்றால், அவற்றிற்குரிய காலம் அணுகி வந்தால்தான் கிடைக்கும். இதனால்தான் எதற்கும் வேளை வரவேண்டும் என்று குறிப்பிடுவார்கள்போலும்.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல; உய்த்துச்
சொரியினும் போகா தம"
"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா"

"அடுத்து முயன்றாலும் ஆகுநா என்றி
எடுத்த கருமங்கள் ஆகா"

"ஆகுவது ஆகும் காலத்து அழிவது அழிந்து சிந்திப்
போகுவது அயலேநின்று போன்றிலும் போதல் செய்யும்"

என்னும் பைந்தமிழ்ப் பாவலர்களின் கருத்துகளும் இக்கருத்தினையே வலியுறுத்துகின்றன எனலாம். எனவே அவனருள் இருந்தால்தான் அவனையே வணங்க முடியும் என்பதையும், அவ்வாறு அவனருள் அமைவதற்கே காலம் கனியவேண்டும் என்ற இந்தக் கருத்தினையும் நினைவு கூற வேண்டியநிலை தற்போது ஏன் ஏற்பட்டது என்பதனையும் கூற வேண்டுமல்லவா.

"பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் "

"உண்டா லம்மவிவ் வுலகம் ....
....
....
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

என்னும் வளர்தமிழ்ப் புலவர்களின் வாய்மொழிகட்கேற்ப, வாழ்ந்து வந்த வள்ளலும் தம்முடைய கனவிலும் நனவிலும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பற்றியே கருதி

வந்தவரும் வீரமும் கொடையும், வித்தையும் பத்தியும், ஈரமும், பரிவும், இன்சொலும், எளிமையும், நேர்மையும் தூய்மையும், நேயமும் வாய்மையும், உயர்ந்த தோற்றமும் உலையா உள்ளமும், விருந்து புரத்தலும் வியன்பெருஞ் செல்வமும் மாண்புறு பதவியும் மதிப்புறு பட்டமும் பெற்றவராகத் திகழ்ந்தவரும், தமிழே தம் உயிர் மூச்சாகக் கொண்டவரும் தமிழ்ச் சான்றோர்களுடன் உரையாடுதலே தம் வாழ்நாளில் தனிப்பெரும் பேறு என்று எண்ணியவரும் முதன்முதலில் "தமிழவேள்" பட்டம் பெற்ற தகைமையாளரும், தன்னுடைய துணைவியார் மறைந்த நாளிலிருந்து 'முகம் பார்க்கும் கண்ணாடியையே' பார்ப்பதில்லை என்ற குறிக்கோளோடு தன் வாழ்நாள் முழுதும் வாழ்ந்தவரும் ஆகிய, செந்தமிழ்ப்புரவலர். இராவ்சாகிப் தமிழவேள். த.வே.உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் தன்னலமற்ற வாழ்க்கையையும், அப்பெருமகனார் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்துள்ள பணிகளையும், தமிழுலகம் நன்கு அறிந்துகொள்ளும் வகையில் நூல் ஒன்று வெளியிட வேண்டுமென்று எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே முடிவு செய்தோம். பின்னர் தமிழவேள். உமா மகேசுவரம்பிள்ளை அவர்களின் வாழ்வும் பணிகளும் என்னும் தலைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்டு நூல் எழுதும் பணியும் தொடங்கப்பட்டது. இந்நிலையில் நான் மேலே கூறியவாறு இப்போதுதான் அந்தப்பணி நிறைவேறுதற்குரிய வேளை வந்துள்ளது; காலம் கனிந்துள்ளது. ஆகுவது ஆகும் காலம் அமைந்துள்ளது என்று மகிழும் வகையில் இந்த நூலை வெளியிடுவதற்கு ஆண்டவன் கருணை கிடைத்துள்ளது. இதற்காக எல்லாம் வல்ல அந்த இறைவனுக்கு முதலில் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நூல் வெளிவர பல்லாற்றானும் பாடுபட்ட அருமை நண்பர் ஓய்வுபெற்றத் தமிழாசிரியர் புலவர். ஆ. இராமசாமி அவர்கட்கும், உமாமகேசுவ மேனிலைப் பள்ளி முதுகலைத் தமிழாசிரியர் புலவர். சிவ. திருஞானசம்பந்தம் அவர்கட்கும், திரு.கி. ஜெயக்குமார் அவர்கட்கும், சிறந்த முறையில் அச்சிட்டளித்த லக்மி அச்சகத்தாருக்கும் எம் நன்றி என்றும் உரியது.

தஞ்சாவூர்,
23.02.2001

ச. இராமநாதன்.

பாவலர். ச. பாலசுந்தரம்.

வாழ்த்துரை

தமிழகத்தில் சங்க காலத்திற்குப் பின் களப்பிரர், பல்லவர் ஆட்சிகளைக் களைந்து தலையெடுத்து நாடாளும் பொறுப்பை முதன்முதலாக ஏற்றவர்கள் இடைக்காலச் சோழ மன்னர்களாவர். பின்னர்ப் பாண்டியரும் இழந்த அரசாட்சியைக் கைப்பற்றினர். பாண்டியர் ஆட்சியில் நிகழ்ந்த சிறப்புக்களைக் காட்டிலும் சோழர் ஆட்சியில் நிகழ்ந்த சிறப்புக்களே தமிழகத்தின் சிறப்பையும் செம்மாப்பையும் உலகுக்கு உணர்த்தி இன்றளவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன.

சோழ வேந்தர்கள் உறையூர், தஞ்சை, செயங்கொண்ட சோழபுரம் ஆகியவற்றைத் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். அவருள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்களே வரலாற்றில் மதிக்கத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். ஆண்ட மன்னர்களுள் இராசராச சோழனே பெரிதும் புகழுக்குரியவனாகத் திகழ்கிறான். இற்றைக்குக் கட்டடக்கலையின் வியக்கத் தக்கக் கட்டடங்களுள் பெருவுடையார் எழுந்தருளி யிருக்கும் பெரிய கோவிலும் ஒன்றாகும். இது தஞ்சையின் புகழை உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கும் சின்னமாக விளங்குவதை யாவரும் அறிவோம். அவ்வாறே சமய உலகில் தஞ்சையையும் இராசராசனையும் அறிவித்துக் கொண்டிருப்பது நாயன்மார்கள் அருளிய சைவத் திருமுறைகளாகும். திருமுறைகள் சைவ சமயத்தை மட்டுமன்று முத்தமிழின் செம்மாப்பையும் பறைசாற்றிக் கொண்டிருப்பனவாகும்.

அவ்வாறே சோழர்களுக்குப் பின் தஞ்சையை ஆளும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களுமாவர். நாயக்க மன்னர்களின் புகழை விளக்கிக் கொண்டிருப்பது தஞ்சை எழுநிலை மாட அரண்மனையும், பெருமாள் திருக்கோயில்களுமாகும். மராட்டிய மன்னர்களின் புகழைத் தாங்கிக் கொண்டிருப்பது சரசுவதி மகால் நூலகமும், சரபோசி மன்னரின் சத்திரத் தருமங்களுமாகும்.

அம்முறையில் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் தஞ்சையின் புகழை விளக்கிக் கொண்டிருப்பது தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குப் புகழைச் சேர்த்து இற்றைக்கு அது ஒளி வீசிக்கொண்டிருக்கக் காரணராக அமைந்த பெருமகனார் தமிழவேள் உமாமகேசுவரனா ராவார். ஆங்கில மோகத்திற் சிக்கித் தமிழின் தனித் தன்மை யையும், செம்மாப்பையும் தமிழிலக்கியச் செல்வங்களையும் உணராமற் கற்றவர்களும் தமிழைப் பேணாது திரிந்த நிலையில் தமிழை வளர்க்கவும், அதன் சிறப்பை உணர்த்தவும் தமிழிலக்கியப் படிப்பினை அறிமுகப்படுத்தவும் ஒத்த உள்ளமுடைய நண்பர்களொடு கூடிக் கரந்தையில் ஓர் அமைப்பை நிறுவ எண்ணி அதனை நிறைவேற்றத் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவிய பெருமகனார் தமிழவேளவர்களின் இளவலான திருவாளர். த.வே. இராதாகிருட்டினப் பிள்ளை அவர்களாவார். அந்நாளில் மதுரை முதலிய இடங்களில் சில தமிழ்ச் சங்கங்கள் அமைந்து வளர்ந்து வந்தன ஆதலின் இதன் தனித் தன்மையை உணர்த்தத் தாம் வாழிடமாகிய கருந்திட்டைக்குடியின் பெயரைக் கரந்தை எனச் சுருக்கி அதனையே அடையாக அமைத்துக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் எனப் பெயரிட்டுத் தமிழ்ப் பணியைத் திட்டமிட்டுத் தொடங்கி நடத்தி வந்தனர்.

அது பல கிளைகளோடு தழைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகமாக ஒளிவீச வேண்டுமென்று பேரவாக் கொண்டனர். அங்ஙனம் அதை வளர்க்கும் ஆற்றலும் அறிவும் உடைய ஒருவரை அவர்கள் தேடிய காலை அவர்கள் அனைவரின் உள்ளத்திலும் தோன்றிய பெருமகனார். த.வே. உமாமகேசு வரனார் ஆவார். அவரிடம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை ஒப்புவித்துத் தங்கள் குறிக்கோளை இயம்பி வேண்டிக் கொண்ட போது தமிழவேளவர்கள் அச்சமுற்றனராயினும் தெய்வத் திருவருளின் கட்டளை இது போலும் எனச் சிந்தித்து அன்பர்களின் வேண்டுகோளை ஏற்றனர். ஏற்ற நாள் முதல் தன் பணி-குடும்பப் பொறுப்பு முதலியவற்றைப் பின் தள்ளித் தமிழ்ச் சங்கத்தை அன்பர்கள் வேண்டிக் கொண்டவாறு வளர்த்துத் தமிழ்த்தாயின் பெருமையை உலகுக்குணர்த்தும் கடமையையே தலையாயதாகக் கொண்டு நன்கு திட்டமிட்டுப் படிப்படியாக வளர்த்து வருவாராயினர். தமிழ்ச் சங்கம் வளர்ந்தது, அதனை ஒட்டித் தமிழவேளின் புகழும் வளர்ந்து கொண்டே வந்தது.

தமிழ் வளரச் சங்கம் -கிழமைக் கூட்டம், திங்கள் கூட்டம், ஆண்டு விழாக்கள் -நூல்களை அச்சிட்டு வெளிப் படுத்தல் என்னும் பணிகளோடு மட்டும் அமையுமாயின் அது ஊன்றிக் கால் கொள்ளாது. சங்கம் என்னும் ஆலமரம் செழிக்க வேண்டுமாயின் அது கிளை தொறும் விழுது விட்டுப் பெருக வேண்டுமென்று உணர்ந்து விழுதுகளாக ஊன்றச் சிறார் பயிலும் பள்ளியும், கலை வளர இசைப் பள்ளியும், அறிவு வளர நூலகமும், ஆக்கம் பெருக நூல்களை வெளியிடலும், மக்கள் மறவாதிருக்க இலக்கியச் செய்தி இதழ்களும், மக்கள் பயன்பெற மருத்துவக் கூடமும் அமைய வேண்டுமெனக் கருதித் தன் வருவாய் முழுமை யையும் அப்பணிக்கே என முடிவு செய்து அவ்வாறே கிளைகளையும், விழுதுகளையும் தோற்றுவித்துச் செழிக்கச் செய்து வந்தார்.

சங்கத்தில் பயின்ற மாணவன் எனின் அவன் பிற பள்ளி மாணவர்களைக் காட்டிலும் தமிழறிவில் பல மடங்கு சிறந்தவனாகவும், இசை நாடகப் பயிற்சியும், நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் அறிவும், உடலோம்பும் உடற் பயிற்சியும், இறைவுணர்வும் உடையவனாகவும் இருப்பான் என மக்கள் மதிக்கும் வண்ணம் நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி வந்த பெருமகனாரின் முடிவான குறிக்கோள் தாகூரின் நிறுவனம் போலத் தனித்தன்மை வாய்ந்த தமிழ்ப் பல்கலைக் கழகமாக இது செழிக்க வேண்டுமென்பதே யாகும். அதனால் சாந்திநிகேதனத்தின் அமைப்பையும், நடை முறையையும் நேரில் அறிந்து வர வடநாடு சென்றார். தமிழரின் ஊழ் அவரை இழக்க நேர்ந்து விட்டது. எனினும் அவருடைய ஆன்மபலம் மிகச் சிறந்ததாகலின் தமிழ் வளர்ச்சியில் கல்விப் பணியில் தளராமல் படிப்படியாக வளர்ந்து இற்றைக்குத் தொடக்கப்பள்ளி, மேனிலைப் பள்ளி, பல்கலைக் கல்லூரி, ஒப்பற்ற நூலகம், திங்களிதழ் நூல்கள் வெயியீடு, மலர்கள் வெயியீடு என்னும் முறையில் வளர்ந் தோங்கித் தஞ்சையின் பெருமையை உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது.

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றம் காணாத அக்காலப் பேரறிஞர்கள் எவருமிலர். உ.வே. சாமிநாதையர், ரா. ராகவையங்கார், மறைமலையடிகள், கா. நமச்சிவாய முதலியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், திரு.வி.க. முதலிய பேரறிஞர்கள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள், திருவாவடுதுறை ஆதினகர்த்தர் முதலாய சமயத் தலைவர்கள், ஆர்.கே. சண்முகஞ் செட்டியார், டாக்டர். சுப்பராயன், சர்.ஏ.டி. பன்னீர்ச் செல்வம்

போன்ற அரசியல் மேலாளர்கள், திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை முதலாய இசை மேதைகள் சங்கப் பெருமன்றத்தில் அமர்ந்து பெருமை சேர்த்தனர். தன்னலம் சிறிதுமின்றித் தன்மானத்திற்குறைவு நேராமல் ஈயென்று கேளாமல் புரவலர்களின் வளங்களை ஏற்றுச் சங்கத்தைப் புரந்து வந்த தமிழவேளின் செம்மாப்பை உணர்ந்து தந்தை பெரியாரவர்கள் பலபடப் பாராட்டிச் சீராட்டிப் போற்றினார்கள். அரசியலில் ஈடுபடுத்தினார்கள். இந்தி எதிர்ப்புக் குழுவிற்குத் தலைமை ஏற்கச் செய்தனர்.

தமிழவேளவர்களின் அளப்பரிய தமிழ்த் திருப் பணிக்குப் பல்லாற்றானும் துணை நின்ற பெருமக்கள் பலர் அவருள் என்றைக்கும் நினைந்து நன்றியோடு அஞ்சலி செலுத்துதற்குரியவர்கள் பள்ளியகரம் தமிழறிஞர் நீ.கந்த சாமிப்பிள்ளை, யாழ்நூலை வரைந்து பெருமை சேர்த்த அருட்டிரு விபுலானந்த அடிகள், பெருந்தகை அ. கணபதிப் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை, சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப் பிள்ளை, சிவ. குப்புசாமிப்பிள்ளை ஆகியோராவர்.

அத்தகு வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமகனாரின் பெயராலேயே இற்றைக்குமேனிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவை இயங்கி வருகின்றன. சங்கப் பொன்விழாவின் போது சிலை அமைத்து மனநிறைவு பெற்றனர் தமிழ் அறிஞர் பெருமக்கள்.

தமிழவேளவர்களைப் பற்றி இன்றைய பெருமக்கள் ஓரளவு தெரிந்திருப்பினும் வருங்கால மக்களும் அறிஞர் பெருமக்களும் அவர்தம் சீரியத் தன்னலமற்ற வரலாற்றை ஓரளவு நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் கடப்பாட்டுணர்வால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நடத்தும் பொறுப்பேற்ற பெருமக்கள் அவர் வரலாற்றைச் சுருக்கமாக அவ்வப்பொழுது வெளியிட்டு வந்துள்ளார்கள். அமரர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் விரும்பி என்னை அவர் வரலாற்றைச் செய்யுள் இலக்கியமாக வரைந்து தருமாறு பணித்தார்கள். அவ்வாறே யான் எழுதிய நூல் தமிழவேள் மலரில் வெளி வந்தது. கரந்தைக் கோவையில் தமிழவே ளவர்களின் ஒப்பற்ற பண்பையும் தமிழ்ப் பணியையும் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளேன். மதுரைப் பேராசிரியர் சாம்பசிவனார் ஓர் வரலாறு எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

அவற்றின் அடிப்படையில் மேலும் விரிவாக அவர் தம் அரும்பணிகளும் விளங்க ஒரு வரலாற்று நூலை வெளியிடப் பல ஆண்டுகளாக விரும்பி முயன்று இற்றைக்குச் செயலாளர் பொறுப்பிலுள்ள பெருமகனார் கரந்தைத் தமிழ்ச் செம்மல் ச. இராமநாதன் அவர்கள் "தமிழவேள். த.வே. உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும்" என்னும் இந்நூலைப் பதிவு செய்துள்ளார்கள். இன்றி யமையாத செய்திகள், நிகழ்ச்சிகளையெல்லாம் புலவர் இராமசாமியவர்கள் விடாமல் தொகுத்து நல்ல நடையில் உருவாக்கி உள்ளார்கள். ஒருவரின் சால்பு மேம்பட வேண்டு மாயின் சான்றோர்களைக் காணலும், அவர்களோடு அளவ ளாவலும், உடனுறைதலும் அவர்தம் வரலாற்றை நன்கு பயிலுதலும் அவர்தம் பணிகளை எண்ணுதலும் வேண்டும். அம்முறையில் பழகியவரால் எழுதப்பட்ட தமிழவேள வர்களின் வரலாறாகிய இந்நூல் சால்பினையும், தமிழ் மொழிப் பற்றையும், கடமை உணர்வையும் பணியாற்றும் உள்ளத்தையும் தரும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் ஆக்கம் பெறப் பல்லாற்றானும் துணைநின்ற - நிற்கும் சான்றோர்களுக்கும், நன்முறையில் எழுதிய புலவர் இராமசாமி அவர்களுக்கும், தமிழறிஞர்களின் குறிப்புக்களை யெல்லாம் திரட்டி அவற்றைச் செம்மையாகத் தொகுத்துச் சிறந்த முறையில் வெளியிடும் கரந்தைத் தமிழ்ச் செம்மல் ச. இராமநாதன் அவர்களுக்கும் தமிழ் நெஞ்சங்கள் பாராட்டினையும், வாழ்த்துக்களையும் வழங்கி மகிழும் என்பதில் ஐயமில்லை. வழங்க வேண்டும், மகிழ வேண்டும் என்று வேண்டி இவ்வாழ்த்துரை வாயிலாக என்னையும் இப்பணியில் ஈடுபடச் செய்துள்ள சங்கச் செயலாளர் அவர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன். வாழ்க தமிழவேள் அவர்களின் புகழும் பணியும்! வாழ்க தமிழ் ! வளர்க தமிழ்ச் சங்கம்!

தஞ்சாவூர்.
19.02.2001

ச. பாலசுந்தரம்.

பேராசிரியர். அ. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ., பி.எல்.,
முன்னாள் அரசினர் கல்லூரி முதல்வர், தஞ்சை.

வாழ்த்துரை

கரந்தைத் தமிழ்ச் சங்கம் : ஆயிரம் சங்குகளில் வலம்புரிச் சங்கம் போலத் தமிழ்ச் சங்கங்கள் எல்லாவற்றுள்ளும் வலம்புரிச் சங்கம் கரந்தைத் தமிழ்ச் சங்கம். இதன் வரலாற்று விவரங்கள் தனி.

பெரியவர் "உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும்" பற்றிய இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. காரணம், பெரியவரோடு மிக நெருக்கமாகவும், அவரது அன்புக்குரியவனாகவும் பணிபுரிந்த அந்த நாட்களை நினைக்கின்றேன். ஆசிரியர் மறைமலையடிகளார், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தமிழவேள் உமாமகேசுவரனார், பெரியார், அண்ணா-இந்தச் சான்றோர் ஐவரும்தான் சென்ற நூற்றாண்டுத் தமிழ் வரலாற்றின் நாயகர்கள்; தமிழை தமிழ் வரலாற்றை உருவாக்கியவர்கள்.

தமிழவேள் அவர்களின் வரலாற்றை இந்தத் தலைமுறையினர் வெளியிடவில்லையென்றால், பின்னாளில் இவ்வரலாற்றின் பல்வேறு உண்மைகள் தமிழுலகுக்குத் தெரியாமலே மறைந்து போகும். பல்லாண்டுகளாக முயன்றும் முடியாமல், இருந்தாலும் தளராமலும், இறுதியில் இப்பணியை மிகக்குறுகிய காலத்தில் நிறைவேற்றிய சங்க அமைச்சர் திருவாளர் ச. இராமநாதன் அவர்கட்கு என் அன்புப் பாராட்டுக்கள் பல; அதாவது இந்நூலை முற்றுவித்த, ஆக்குவித்த புரவலர் பெருமை அன்னாரைச் சாரும்.

இக்கவினார் நூலை உருவாக்கிய குழுவினர்க்கும் குறிப்பாக ஆசிரியர் புலவர். ஆ. இராமசாமி அவர்கட்கும்,

தோன்றாத் துணையாய்த் தம் அறிவையும் உழைப்பையும் நல்கி, நூல் நன்கு முற்றுப்பெற உதவிய சான்றோர்க்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள் பல.

சோழவளநாடு, தஞ்சைமாநகர், கருந்திட்டைக்குடி என்று நாடு நகரச் சிறப்புக்களைக் கூறி, மேலும் அவையடக்கம் கூறி, தமிழவேள் அவர்களின் குடும்ப மரபு கூறி, அரிய குறிப்புக் களுடன், நூலைக் காப்பியப் போக்கில் அமைத்திருக்கின்றார் ஆசிரியர்.

நூலை ஆக்கியோன் தண்டமிழ்ப் புலவர் ஆ. இராமசாமி வாழ்க! ஆக்குவித்தோன் தமிழ்ச் செம்மல் ச. இராமநாதன் வாழ்க!

கரந்தையின் திருத்தமான பெயராகிய கருந்திட்டைக்குடி என்னும் இயற்பெயர் குறித்து; நூலில் நல்ல ஆய்வுக் குறிப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன. 'கருந்தட்டான்குடி'-என்று இப்போது எங்கும் வழங்கும் இப்பெயரில், குறிப்பிட்ட ஒரு சாதியின் பெயர் தொனிக்கின்றது. இது உலக வழக்கில், பேச்சு வழக்கில் உண்டான தேவையில்லாத சிதைந்த வழக்கு. கருந்திட்டைக்குடி எனும் முன்னைப் பெயரில் இதனைத் திருத்தி வழங்குதல் வேண்டும்; இதனால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. இதுபற்றித் தமிழக அரசுக்கும் எழுதியிருக்கின்றேன். தமிழக அரசால் எவ்வளவோ பெயர்கள் செம் பெயர்களாகத் திருத்தப்பட்டு இன்றும் வழங்கி வருகின்றன. அவ்வாறே இந்தப் பெயரும் திருத்தப்படல் வேண்டும்; அப்பர் பெருமான் வாக்கில் பதிவு பெற்றது திட்டைக்குடி; இதனைத் திருத்தும் முயற்சியைத் தொடர்வேன்.

நூலில் தமிழ்நடை, இனிய விழுமிய சொற்களால் இலக்கியப் பாணியில் இயன்றிருக்கின்றது. தமிழவேள் அவர்கள் மன்றத்தில் உரை நிகழ்த்தும்போது தேர்ந்த விழுமிய செஞ்சொற்களால், அழுத்தம் திருத்தமாகப் பேசுவார்கள். அதுபோல் அவர்தம் வாலாறும் ஏறத்தாழ அதே பாணியில் அமைந்திருப்பதை-படிக்க, இலக்கியச் சுவையோடு இருப்பதைப் பாராட்ட வேண்டும்.

திருக்குறள் வாசகங்களை மிகநுட்பமாக ஆங்காங்குப் பரவலாக எடுத்துக்காட்டி, நூலின் செய்திகளையும், கருத்துக்களையும் ஆசிரியர் திட்பநுட்பமாக உறுதிப்டுத்திய பான்மையும் அவற்றின் பொருத்தமும் படித்து அனுபவிக்கத் தக்கன. மேலும், உலக வழக்கும், வாசகங்களும், முதுமொழிகளும் தக்க இடங்களில் வழங்கப்பெற்று, ஆங்காங்குச் செய்திகளுக்கும், கருத்துக்களுக்கும், இனிமையும், தெளிவும், உறுதியும் சேர்க்கின்றன.

தமிழுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று எழுபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு, சான்றோர்களால் பெரும் முயற்சி செய்யப்பட்டது. இதனை முழுமூச்சாக முன்னின்று இயக்கியது கரந்தைத் தமிழ்ச் சங்கம். இதனால் விளைந்த அரும்பெரும் உன்னத விளைவுகள் பல. ஏனோ இந்த நிகழ்ச்சிகளின் விரிவான விவரங்கள் நூலில் காணப்பெற வில்லை.

தமிழவேளின் பலதிறப்பட்ட பணிகளை அடுக்கடுக்காக ஆசிரியர், நுண்ணிய விவரக் குறிப்புகளோடு ஆங்காங்கு எழுதியிருப்பது இந்த வரலாற்று நூலை ஒரு சீர்த்தகு சிறப்பின் உயரிய நூல் வரிசையில் வைத்து ஏற்றம் பெறச் செய்கிறது. தமிழவேளின் இளமைக் காலத்தில் அவருக்கு அடுத்தடுத்து விளைந்த பெற்றோர், பெரியோர், துணைவியார், மக்கள், குடும்பத்தலைவர்களின் தொடர்ந்த இழப்புக்கள், துன்ப மாலையாகத் தொடர்ந்து வந்த ஆற்ற முடியாத அவலங்களை, ஆசிரியர் உள்ளம் நெகிழ உருக்கமாக எழுதியிருப்பது படிப்போர் மனத்தை நெகிழ வைக்கும் திறத்தன.

மேலும் சங்கத்தின் தோற்றம், தொடர்பு கொண்ட சான்றோர்கள், சங்கத்தின் பலதிறப்பட்ட பணிகள், தொடர்ந்த பல சர்ச்சைகளில் கண்ட வெற்றிகள், ஐயாற்று அரசர் கல்லூரியில் தமிழ்க் கல்வியை நிறுவியது (1927), வெள்ளிவிழா நிகழ்ச்சிகள், மக்கள் பணி சார்ந்த தொண்டுகள், புலவர் கல்லூரி, வித்துவான்

பட்டத்தைப் 'புலவர்' பட்டமாக மாற்றியது, தனித்தமிழ்த் தொண்டுகள், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சங்கம் தலைமை தாங்கியது, சைவத் தொண்டுகள், ஏழூர் விழாவில் ஆண்டாண்டுதோறும் நடந்து சென்றது, வழக்குரைஞர் தொழில், தம் வருவாய் முழுதையும் சங்கத்திற்கே செலவிட்டது, சங்க அமைச்சர், திருவாளர், திருவாட்டி எனும் மரியாதை மரபுகளை வழக்கில் கொண்டு வந்தது, 'தமிழ்ப் பொழில்' ஆற்றிய அரும்பெரும் ஆராய்ச்சிப் பணிகள், அரிய நூல்கள், ஏட்டுச்சுவடிகளை வெளியிட்டமை, சங்கத்துப் புலவர் பெருமானார்க்குக் 'கவியரசு'-எனப் பட்டம் சூட்டியது, தென்னகத்துச் சாந்திநிகேதனாகச் சங்கத்தை உயர்நிலை எய்தப் பாடுபட்டது முதலாக இன்னும் பலப்பல பலப்பல தொண்டுகள் புரிந்தமை, எல்லாம் சேர்ந்து,"என் கடன் பணி செய்து கிடப்பதே"-எனும் அப்பர் பெருமானின் தெய்வ மொழிக்கு எழுத்துக்கெழுத்து தம்மையே ஆளாக்கிக் கொண்டவர் திருத்தகவாளர் தமிழவேள் அவர்கள்.

சுருக்கமாக, "தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பராகில், அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"- என்று வாழ்ந்த அப்பெருந்தகையை ஆசிரியர் அவர்கள், தொண்டர்தம் பெருமையைச் சேக்கிழார் பெருமான் உணர்வு கலந்து எழுதியதுபோல் எழுதியிருக்கிறார்கள். ஆசிரியர் அவர்கட்கும், உடன் பணியாற்றி ஊக்கமும் உதவியும் உழைப்பும் நல்கிய பெரியோர்கட்கும் எனது அன்பு வாழ்த்துக்கள் ஆயிரம்.

சொல்லப்பட்ட இந்தப் பணிகளையெல்லாம் என் இளம் வயதில் உணர்ச்சி பூர்வமாகக் கண்டுகளித்த என் அனுபவ உணர்வு, இவற்றை ஒவ்வொன்றாக நூலில் படிக்கும்போது, அன்றுபோல் அவற்றை இன்றும் நான் நேரில் பார்ப்பதுபோலும் உணர்வுப் பெருக்கால் சேக்கிழார் பெருமான் உணர்வோடு ஒப்பிட்டு எழுதலானேன். தொண்டுகள் அத்தகையன; தொண்டர்களும் அத்தகையினர்; அவற்றின் விளக்கக் கூற்றுக்களும் அவ்வாறே; இது வெறும் உயர்வு நவிற்சி அன்று.

இந்த உண்மை, பல்லாண்டுகள் இவற்றை நேரில் பார்த்தவர்களுக்குப் புரியும். அந்தக் காலத்துச் சூழ்நிலையில் இவையெல்லாம் அற்புத உணர்வுகள், அற்புத நிகழ்ச்சிகள் . சென்ற நூற்றாண்டில் தமிழுக்கு இந்த அற்புதங்களை நிகழ்த்திய தமிழநாயனார்-திருத்தொண்டர், தமிழவேள் அவர்கள்.

தண்டமிழ்ச் சான்றோர் தமிழவேள் அவர்கள் மறைந்து, அறுபது ஆண்டுகட்குப் பிறகும், சங்கம் தன் நீடிய பணிகளில் நிலைத்து, அன்னார் வாழ்க்கையை, பணிகளைப் பெறலரும் நூலாக்கிச் சரித்திரப் பெட்டகமாக்கி வழங்குவதைத் தமிழுலகம் வணங்கி வாழ்த்துவதாக.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
(தமிழை) நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே" -

என வாழ்ந்த அத்தமிழ்ப் பெரும் சித்தர்-சித்தர் நாமம் வாழ்க, வாழ்கவே!

தஞ்சாவூர்,
28.02.2001

பேராசிரியர். அ. கிருஷ்ணமூர்த்தி

இரா. கோவிந்தராசன்
12, ரயில் நகர்,
தஞ்சாவூர்.

பாராட்டுரை

தூங்கும் தமிழ்க்குலத் தோள்களைத் தட்டித் துயிலெழுப்ப
ஓங்கும் கரந்தைத் தமிழ்ச்சங்க மொன்றை
யுயர்த்திவைத்தே
தாங்கும் உளத்தான் தமிழவேள் என்னும் தனிப்பெரும்பேர்
வாங்கும் திறனுமா மேச்சுரன் பாதம் வணங்குவமே.

என்று, போற்றி வணங்கி வழிபடத்தக்க அளவுக்குத் தானே தமிழ்ச் சங்கமாகவும், தமிழ்ச் சங்கமே தானாகவும் கொண்டு வாழ்ந்தவரும், தஞ்சையில் புகழ்வாய்ந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தவரும், தன்னேரில்லா வகையில் எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தவரும் ஆகிய என்னுடைய பெரிய தந்தையார் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்களைப் பற்றியும்,

சங்கம் நிறுவிய துங்கனெ னத்தமிழ்ச் சங்கமதை
தங்கக் கரந்தையில் தான்முத லாகச் சமைத்தளித்தோன்
எங்கும் சிறந்தோன் இராதா கிருட்டினப் பாவலனை
பொங்கும் புகழ்நிறை பொற்குணத் தானையே
போற்றுவமே.

என்று பாராட்டும் வகையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தாமே முதன் முதலாகத் தொடங்கியவரும், அதனைத் தக்க வகையில் வளர்த்தற்குரியார் தம்முடைய தமையனாரான தமிழவேள் அவர்களே என்று முடிவு செய்து எல்லாப் பொறுப்புகளையும் அவரிடமே ஒப்படைத்து அவர் காட்டிய

வழியில் நின்றவரும் ஆகிய என்னுடைய தந்தையார் த.வே. இராதாகிருட்டினப் பிள்ளை அவர்களைப் பற்றியும் நினைவு கூர்வதில் அடியேன் பெருமையும் பெருமிதமும் அடைகிறேன்.

என்னுடைய தந்தையார் இராதாகிருட்டினப் பிள்ளை பி.ஏ., பட்டம் பெற்றவர். அரசு அலுவலகத்தில் உயர் அலுவலராகவும் துணைப் பதிவாளராகவும் பின்னர் தனுஷ்கோடி கடற் சுங்கத் துறையில் உயர் அலுவலராகவும் புகழுடன் பணியாற்றியவர். அவர், தன்னுடைய தமையனார்மீது அளவு கடந்த பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந் தார். ஆங்கிலத்திலும், தமிழிலும் ஆழமான புலமை பெற்றிருந்தார்கள். தமையனும் தம்பியும் மிகவும் ஒற்றுமையாகவே இருப்பார்கள். இருவருமே மிகுந்த நேர்மையானவர்கள். தவறு செய்தவர்கள், நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும், கண்டித்து விடுவார்கள். காலம் தவறாமையை இருவரும் கடைசிவரைக் கடைப்பிடித்து வந்தனர்.

என்னுடைய பெரிய தந்தையார் தமிழவேள் அவர்கள் தம்முடைய வருவாய் முழுவதையும் சங்கத்திற்கே வழங்கினார். திருச்சியில் வழக்கறிஞராகப் புகழ்பெற்று விளங்கியவர் திரு. பழனிச்சாமி பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்கள். பெரும் செல்வந்தரான அவருக்கு வாரிசுகள் இல்லை. ஆதலால் தமிழவேள் அவர்களின் அறிவுரையின் பேரில் திரு. பழனிச்சாமி பிள்ளையவர்கள் தம்முடைய திரண்ட செல்வத்தினையெல்லாம் சங்கத்திற்கே வழங்கினார்.

தமிழவேள் அவர்கள் தஞ்சை வட்டக் கழகத் தலைவராக இருந்தபோது அவர் செய்த முயற்சியாலேயே முதன் முதலாகத் தஞ்சைக்கும், திருவையாற்றிற்கும் பேருந்து வசதி செய்யப்பட்டது. மற்றபடி தமிழவேள், ஐ. குமாரசாமிப் பிள்ளை, பூண்டி வாண்டையார் ஆகியோரின் முயற்சியால்தான் தஞ்சையில் கூட்டுறவு அச்சகம் உருவாயிற்று.

தந்தை பெரியார் அவர்கள் பலமுறை தமிழவேள் அவர்களிடம் வந்து சட்ட ஆலோசனை பெற்றுச் சென்றிருக்கிறார். போடி நாயக்கனூர் சமீன்தார் அவர்களின் பல வழக்குகளில் வெற்றி பெற்றுத் தந்தமையால் கொடைக்கானலில் இருந்த அவருடைய மிகப்பெரிய பங்களாவில் எப்போது வேண்டுமானாலும் சென்று தங்கிக் கொள்ளலாம் என்ற உரிமையை தமிழவேள் அவர்களுக்கு வழங்கியிருந்தார். சர்.ஏடி. பன்னீர் செல்வம் அவர்கள் சைமன் குழுவில் பங்கேற்கச் சென்ற போது, தமிழவேள் அவர்கள் தஞ்சையில் அவருக்கு விடை நல்கி விழாவை மிகச் சிறப்பாக நடத்தி வழியனுப்பி வைத்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தரும் வெளிநாட்டவர்கள் அனைவரும் தமிழவேள் இல்லத்திற்கு வந்து, தமிழக உணவு வகைகளை உண்டு, மகிழ்ந்து பாராட்டிச் செல்வது வழக்கம். இன்னும் அவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். அந்த அளவுக்குத் தமிழ்த் தொண்டும், சமுதாயத் தொண்டும் செய்தவர் என்னுடைய பெரிய தந்தையார் தமிழவேள் அவர்கள்.

இத்தகைய தன்மானத் தமிழ்த் தொண்டரின் வரலாற்றைத் தமிழ்ப் பற்றாளர்களும், தமிழ்ச் சமுதாயத்தினரும் தங்களின் நெஞ்சங்களில் நினைந்து போற்றும் வகையில் தமிழவேள் உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும் என்னும் தலைப்பில் நூல் ஒன்றினை மிகச் சிறப்பாக உருவாக்கி வெளியிட்டுள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கச் செயலாளரும் தமிழவேள் அவர்களுக்குத் தகுதியான வாரிசாக நின்று இளைய தமிழவேள் என்று போற்றும் அளவுக்கு ஏராளமான ஆக்கப் பணிகளைத் தமிழ்ச் சங்கத்திற்குச் செய்து வருபவரும் ஆகிய எங்கள் அன்புப் பெயரர் தமிழ்ச் செம்மல். ச. இராமநாதன் அவர்கள் உடல் நலமும், உயர் புகழும், நிறை பொருளும், மன நிறைவும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வதற்கு அருள்புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்,
28.02.2001

இரா. கோவிந்தராசன்



செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரனார்,

சங்கத்தின் முதற்றலைவர்.

வேம்பப்பிள்ளை
(உமாமகேசுவரம்பிள்ளையின் தந்தையார்)



வி. சுப்பராயப்பிள்ளை
(உமாமகேசுவரம்பிள்ளையை வளர்த்து நெறிப்படுத்திய அவருடைய சிறிய தந்தையார்)

பெரியநாயகத்தம்மையார்
[உமாமகேசுவரம்பிள்ளையைக்
கண்ணெனப் பேணிக் காத்த சிறிய
தாயார்]



உமாமகேசுவரனாரும் அவருடைய
மனைவி உலகநாயகி அம்மையாரும்

தஞ்சாவூர் சுப்பையா நாயுடு தொடக்கப் பள்ளியின்
தொடக்கவிழாவின்போது எடுக்கப் பெற்ற படம் 18.10.1923



மன்னார்குடி, கௌமார குருகுல முதியோர் கல்வி இயக்க இரண்டாம் ஆண்டு விழாவின்போது எடுக்கப்பெற்ற படம். கிராமக்கல்வி வித்யாசாலை ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் தமிழ்த் தாத்தா. உ.வே. சாமிநாதய்யர் மற்றும் உமாமகேசுவரனார் 28.04.1932



படத்திலிருப்போர் (இடமிருந்து வலமாக) 1. வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 2. திரு. ச.சு. கோவிந்தசாமிப்பிள்ளை, 3. டாக்டர் மா. இராசமாணிக்கனார், 4. தமிழவேள். த.வே. உமாமகேசுவரம்பிள்ளை, 5. திரு. சு. நடேசபிள்ளை, 6. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் 7. தவத்திரு விபுலானந்த அடிகளார், 8. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், 9. கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம்பிள்ளை (இப்படம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 28 ஆம் ஆண்டுவிழாவின்போது பிரமாதி, ஆவணி 3,4 - எடுக்கப்பட்டது)

தமிழவேள் அவர்களின் பெயர் தாங்கி நிற்கும்
அன்றைய வட்டக்கழக அலுவலகம், இன்றைய
சுகாதாரத் துறை அலுவலகம்.

தமிழவேள். த. வே. உமாமகேசுவரனார் வாழ்வும் பணிகளும்

உலகம் என்னும் ஒப்பிலாச் சொல்லினை நம் ஒண்டமிழ் நூல்களில் மிகுதியும் காணலாம்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

என்று திருமுருகாற்றுப்படை தெளிவுறக் காட்டும். நற்றிணை என்னும் பொற்புறு நூலோ ஈரிடங்களிலே எடுத்துச்சொல்லும். குறுந்தொகை மட்டும் குறைந்ததா என்ன? ஒன்பானிடங்களில் தென்பாய்ச்சுட்டும். பதிற்றுப்பத்தில் நான்கும் ஒன்பதும் நன்கனம் இயம்பும். அகநானூறும் அழகுறப் பேசும். புறநானூறும் பொருத்தமாய் உரைக்கும். உலகு புகழ் வள்ளுவமோ உறுமுதற்பாடல் தொடங்கி ஓராயிரத்து நூறாம் பாடல் முடியச் சீரோடமைத்துச் செம்மையாய்ச் செப்பும். இவ்வாறு

"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூறு
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை".

எனக் குறிப்பிடப்படும் எட்டுத்தொகை நூல்களும்

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாஅத்தொடும் பத்து"

என்று. பேசப்படும் பத்துப்பாட்டு நூல்களும்

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இந்நிலைய காஞ்சியொடு ஏலாதி என்பனவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு

என்று. கூறப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும்

சீவகசிந்தாமணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி
குண்டலகேசி

என்று, புகழப்படும் ஐம்பெருங்காப்பியங்களும்

யசோதரகாவியம்
நாககுமாரகாவியம்
சூளாமணி
நீலகேசி

உதயணகுமாரகாவியம் என்னும் பெருங்கதை ஆகிய ஐஞ்சிறு காப்பியங்களும் *உலகு* என்னும் சொல்லை எத்தனையோ இடங்களில் எடுத்தாண்டுள்ளன.

இம்மட்டோ! கற்றோரிதயம் களிப்படையுமாறு காகுத்தன் கதையைக் காவியச் சோலையாகக் காட்டியவனும் வடமொழியில் வான்மீகியளித்ததை வண்ணத்தமிழால் வகைப்படுத்தி, எண்ணி எண்ணி இதயம் நெகிழுமாறு இதிகாசமாக்கியவனும் ஆகிய கல்வியில் பெரியன் கம்பனும் இச்சொல்லைப் பல்வேறிடங்களில் பாங்குற அமைத்துப் பொன்அணிகளிலே பொருந்திய வயிரமாய்ப் பொலியவைத்துள்ளான். இக்கம்பனுக்குப் பின்னர் தோன்றிய 'கொம்பன்', பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய 'கவிவலவன்' அருண்மொழித் தேவனாம் பொருண்மொழிச் சேக்கிழாரும் போற்றத்தக்க வகையில் இச்சொல்லைப் பொருந்த அமைத்துள்ளார்.

இவ்வாறு, பொய்யாநாவிற் புலவர் பெருமக்களால் போற்றிக் குறிப்பிடப்பட்ட *உலகம்* என்ற இந்தச் சொல்லின் விழுமிய நுட்பம்தான் யாது? என்று தோலா நல்லிசைத் தூமொழிப் புலவர்களையே தொழுது பணிந்து உலாவினால், அவர்கள்

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

(திருமுருகாற்றுப்படை)

"உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்" : *குறள்*

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்" : *குறள்*

"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு" : *குறள்*

"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பெரியபுராணம்

என்பன போன்ற பாடல்களில் எடுத்தாளப்பட்ட *உலகம்* என்னும் சொல்லானது, ஒப்பற்ற அறிஞர் பெருமக்களை - ஆன்றவிந்தடங்கிய சான்றோர் பெருமக்களை - தனக்கென வாழாத் தகைசால் பெருமக்களைக் குறிக்கின்றது என்பதனை நீவிர் உய்த்துணர்ந்து கொள்ள வில்லையா என்ற வினாவினை நம்மிடமே கேட்கின்றனர். எனவே இத்தகைய உயர்ந்தோர் எனப்புகழப்படும் உத்தமச் சான்றோர்களை வரிசைப்படுத்த எண்ணும்போது, விரற்குமுன் வந்துநிற்கும் வித்தகராம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் கண்ட கண்ணியர்; கனித்தமிழ்க் காவலர் "அவனெம் மிறைவன் யாமவன் பாணர்"என்று செந்நாப் புலவர்களால் சிறப்பித்துப் போற்றப்பட்ட செம்மல்; தண்டமிழ் போற்றிடத் தம் உடல் பொருள் உயிரெலாம் உவந்தீந்த உரவோர். தன்னலம் கருதாது தமிழ் நலம் பேணித் தளரா துழைத்த தண்ணளியோர்; *தமிழவேள்* என்று தமிழுணர்வோரால் தலைமேல் வைத்துக் கொண்டாட தனித்தமிழ்க் காவலர் கரந்தை *த.வே.உமாமகேசுவரம்பிள்ளை* அவர்கள் நம் சிந்தையில் முந்தி

வந்து நிற்கின்றார். ஆதலால் தமிழராக வாழ்ந்ததோடமையாமல் தமிழாகவே வாழ்ந்த இந்தத் தமிழவேள் அவர்களின் வரலாறு பற்றிக் காண்பது நம் தலையாய கடமையாகிறதன்றோ?

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

(திருவாசகம்)

என்ற பாடலில், "அங்கிங்கெனாத படி எங்கும் நிறைந்துள்ள" இறைவா! நீ

வானமாகவும், நிலமாகவும், காற்றாகவும், தீயாகவும், நீராகவும், உடம்பாகவும், உயிராகவும், கண்ணுக்குப் புலனாகும் பொருள்களாகவும் புலனாகாப் பொருள்களாகவும், *நான்* என்றும், *என்னுடையது* என்றும் அகந்தை கொள்பவர்களையும் ஆட்டிவைப்பவனாகவும் விளங்குகின்றாய். அப்படியிருக்க உன்னுடைய பலவகைச் சிறப்புகளுள் எந்தச் சிறப்பைச் சொல்லி உன்னை ஏழையேன் வாழ்த்துவேன்' என்று அவனருளாலே அவனை வணங்கும் அருட்டிறம் படைத்த கனியாம் சொல்பகர் மணிவாசகப் பெருமானே ஏக்கம் அடைகிறார் என்றால் (மனிதருட்கடையனாகிய என்னால்) புகழ்வரம்பாகிய புண்ணியர்; கைப்பொருள் தந்து கன்னித்தமிழ் வளர்த்த கருணைக்கடல்; மண்நாணப் புகழ்பரப்பிய மாமேதை; தரணி போற்றும் தமிழவேள் அவர்களைப் பற்றி அறிவிலியாகிய எளியேன் எழுதப்புகுவது எவ்வகையிலும் பொருந்தாது தவறானது என்பதை அடியேன் அறிவேன் ஆயினும்.

"பத்தாயிரம் கவியைச் சொத்தாகப் பாடிவைத்த
முத்தான கம்பனுக்கு ஈடு இன்னும்
வித்தாக வில்லை என்றுபாடு"

என்று புகழப்பட்டவனும் விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் என்று பாவலரால் பாராட்டப்பட்டவனும் ஆகிய

கம்பநாட்டாழ்வார் இராமகாதை இயற்ற முற்படுவதற்கு முன்னயே

"ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ"

என்று அவையடக்கமாகக் கூறியிருக்கின்றார் என்றால் அறிவு எனும் சொற்பொருள் அறியாப் பேதையேன் நிலை எந்நிலைக்குரித்தாம் எனவே,

தண்ட மிழ்க்குத் தமிழ வேள்புரி
தொண்டு பற்றித் துரிசி னேன்சொலல்
வண்டெழுந்து சிறகினால் ஆழியை
சுண்டெ னுஞ்சிறு நாழிகொண் டாழியை
மொண்டு தீர்க்க முனைவதைப் போன்றதே

என்று கூறி, அறிஞர் பெருமக்கள் என்னுடைய பிழைகளைக் காணுங்கால் *சிறியோர் செய்த செழும்பிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே*

என்ற கருத்துப்படிப் பொறுத்தருள்வார்கள் என்ற துணிவினாலும்

கடவுளர், காவலராம் அரசர்கள், கருணைசால் வள்ளல்கள்.

கற்றறிந்த அறிஞர்கள் கண்ணியச் சான்றோர்கள் கனிவிளங்

குழந்தைகள் ஆகியோரைப் பாடுங்கால் ஏற்படும் பிழைகள்

போற்றுதற்குரிய பெரியோர்களால் பொறுத்தருளப்படும் என்ற

நம்பிக்கையாலும்; இவ்வினிய வரலாற்றை எழுதப்புகுந்தேன்.

குற்றங்களைந்து குறை பெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்

என்று பணிவுடன் கூறிப் பெரியோர்களின் திருவடிகளை

வணங்கித் தாரணி குறுகத் தனிப் புகழ் படைத்த *தமிழ்நெறிக் காவலர் தமிழவேள் த.வே.உமாமகேசுவரம்பிள்ளை* அவர்களின் இணையிலா வரலாற்றினை என்னாலியன்றவரை எழுதப்புகுகிறேன்.

நாடு

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்பது. அகிலம் புகழும் ஔவையார் வாக்கு. ஒரு நாடு. வளம்நிறைந்த நாடாக இருந்தாலும்; வளங்குறைந்த நாடாக இருந்தாலும் பள்ளங்கள் நிறைந்ததாக இருந்தாலும் மேடுகள் நிறைந்ததாக இருந்தாலும் எந்த நாட்டின் நல்லவர்கள் வாழ்கின்றார்களோ அந்த நாடு தான் சிறந்த நாடு என்பது இதன் கருத்து இதனையே பிற்காலத்தினர் *இராமன் செல்லுமிடம் எல்லாம் அயோத்தி* என்று கூறுவார்கள். இவ்வகையில் தந்நலம் துறந்து தமிழ் நலம் பேணிய தமிழவேள் அவர்கள் அவதரித்த இந்த நாடும் தகுதியால் சிறந்த நாடாகும் அன்றோ?

"சோழவளநாடு சோறுடைத்து"
"சோற்றால் படையடைக்கும் சோணாடு"
"அரிதாளின் கீழ்சிந்தும் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு"
"காவிரி புரக்கும் நன்னாடு"
"மிகுபெருங்காவிரி மல்லல் நன்னாடு"
"பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
... .
விழுநீர் வேலி நாடு."
"ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடு"

என்று *வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்* என்று வாடாக் கொள்கையுடன் வாழ்ந்த வண்டமிழ்ப் புலவர்களால் போற்றிப்புகழப்பட்ட சோழநாடு, சுயநலம் கருதாச் சூழ்புகழ் தமிழவேள் அவதரித்தமையால் *அழகுக்கு அழகு செய்ததுபோல, பொற்குடத்திற்குப் பொட்டிட்டது போல* மேலும் புகழ் பெற்றிலங்கும் பொற்புறு நாடாகிறது அன்றோ? இதுவரை வாடாப் புகழ்நிறை வளர்தமிழ் போற்றிய வள்ளற் பெருமாளாம் தமிழவேள் தோன்றிய தண்டமிழ்நாடு இஃதெனக் கண்டோம். உயிராய்த் தமிழினை உயர்வுடன் வளர்த்த ஒண்டிறற் புலமையராம் அந்த உமாமகேசுவரனார் அவதரித்துயர்த்திய அழகுநகர் பற்றி அடுத்துக் காண்போம்.

நகர்

"இல்லும் பதியும் இயல்பும் கூறி
நல்லாண்மையை நலமிகுத் தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை)

என்னும் ஆன்றோர் மொழிக்கேற்ப அண்ணலாய் விளங்கிய அகமுயர் அய்யன் உமாமகேசுவரர் உதித்து - உண்டு - உலவி - உறைந்த - ஊர், உயர்ந்த வரலாறு உடையதாக இருக்கும் என்பது உறுதியல்லவா? அதுபற்றிக் காண்போம்.

"வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை"

என்று அருள் உளம் படைத்த திருமங்கை ஆழ்வாராலும்

மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை"

என்று கருவூர்த் தேவராலும்

"தஞ்சென வாம்அடி யார்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே"

என்று. அந்தமிலாவுயர் சந்தக்கவி பொழி அருணகிரிநாதராலும்

"மஞ்சளும் இஞ்சியும் மாண்புறச் செழித்த
தஞ்சையம் பதி"

என்று பிற்காலப் புலவர்களாலும்

. . . . விண்ணில்

"தோயும்நீள் மாடவீதி சூழ்பதி கலைநூல் வல்லார்

மேயநல் தஞ்சை"

என இக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கண இலக்கியப் பெருங்கடல் பாவலரேறு பெரும்புலவர் பாலசுந்தரனார் அவர்களாலும் போற்றிப் புகழப் பெற்றது தஞ்சை மாநகராம். "பஞ்சமே அறியாத விஞ்சுபுகழ்த் தஞ்சை" என்றும், "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்" என்றும், "அஞ்சி வந்தார்க்கு ஆதரவளிக்கும் தஞ்சை மாநகர்" என்றும் ஏனைய நாட்டுமக்களால் ஏற்றிப் போற்றப்பெற்றது.

இத்தகைய தரணிபோற்றும் தஞ்சையை,

"தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச்

செல்வரும் சேர்வது நாடு"

என்ற வள்ளுவரின் சொல்லிற்கேற்ப எல்லாச் சிறப்புகளும் உடைய, ஏற்றமுறு நகராக்கியவள் *காவிரி* என்னும் கன்னித்தாயல்லாவா? அகிலம் போற்றும் அவளின் பெருமைதான் என்னே!

கன்னடமும் களிதெலுங்கும்

கவின்மலையாளம் துளுவும்

உன்னுதரத்து உதித்தெழுந்து

ஒன்றுபல ஆயிடினும்

ஆரியம்போல் உலக வழக்கு

அழிந்தொழிந்து சிதையா வுன்

சீரிளமைத் திறம் வியந்து

செயல்மறந்து வாழ்த்துதுமே

என்று மணக்கும் தமிழ்த்தாயை மனோன்மணீயம் பாடிய பேராசிரியர்.சுந்தரம்பிள்ளை அவர்கள் வாழ்த்தும்போது, எண்ணிலா மொழிகள் தன்னிடம் தோன்றினும் கன்னிமை

அழியாக் கவின்சுவைத் தமிழின் கரையிலாப் பெருமை பற்றிக் கழறுவதுபோல,

கோணிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'யை
பலப்பல நதிகளைப் பாங்குடன் படைக்கினும்
வளமையிற் குறையா வண்மைசால் காவிரி

என்று ஏற்றிப் போற்ற வேண்டிய இளமை வாய்ந்தவளாக இலங்குகிறாளன்றோ?

இதனால் தானோ என்னவோ, இல்லற வாழ்வுடன் இணைந்திருந்த சங்க காலத்துப் புலவர்கள் மட்டும் காவிரித் தாயின் தாவிலாப் பெருமையை ஓவியம் போல உரையால் தீட்டியமை போதாது துறவு வாழ்க்கையை மேற்கொண்டொழுகின்ற நாமும் பாராட்ட வேண்டும் என்று எண்ணியதைப்போல

துறந்தார் பெருமை துணைக் கூறின்; வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று

என்று பாவலர் வள்ளுவரால் பாராட்டப் பெற்ற துறவு வாழ்வைத் துணையெனப் பிடித்த தூயன் இளங்கோவடிகளார் பூவிரி பொழில் சூழ் காவிரியை

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்தாய் வாழி காவேரி,
கருங்கயற்கண் விழித்து ஒல்கி
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி.

என்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரப் பாடலில் சிறப்பித்தார் போலும். இருபக்கங்களிலும் எழிலுடன் இலங்கும் சோலைகளில் வண்டுகள் அமர்ந்து கொங்கு எனும் தேனைக்

குறைவற மாந்தி அகக்களிப்புடனே ஆரவாரம் செய்ய இருபுறச் சோலைகளும் இன்மலர் தூவி "வளமுடன் செல்க வாழ்வினைத் தருக" என வாழ்த்திப் போற்றிட, பொழில்கள் பொழிந்த பொன்னிற மலர்களைப் பூவாடையாகப் பொருத்தமாய் அணிந்து, கெண்டைகள் என்னும் ஒண்டிறல் மீன்களாகிய கண்களால் உலகை நோக்கிக் கொண்டு அசைந்து அசைந்து அழகு நடை நடக்கிறாளாம் அந்தமில் புகழ்சேர் செந்தமிழ்க் காவிரி. இவ்வாறு, அவள் அடக்கத்துடனும் அழகுடனும் ஆர்வத்துடனும் நடந்து செல்வது எதற்காக? என்றால் குளிர்திகழ்க் காவிரியின் கொழுநன் ஆகிய கோமான் சோழனின் வளர்புகழ் செங்கோல் வளையாமல் செங்கோலாக விளங்க வேண்டியேயாம்.

இவ்வாறு, காவிரியாற்றைக் கற்புக் கடம் பூண்ட பொற்புடைக் காரிகையாகவும், சோழ மன்னனை அவளின் சுந்தரக் கணவனாகவும் கற்பனை செய்து பாடுகிறார் சிலம்பு பாடிய இளங்கோவடிகள் இவ்வடிகளில் புகழப்படுவது காவிரியின் வளத்தால் பூவுலகம் போற்றத் திகழும் தாவிலாப் பெருமை சேர் தஞ்சைத் தரணியாகும்.

இத்தகைப் புகழ்சால் வித்தகத் தஞ்சையை சித்தத்தில் நினைக்கும் போதெல்லாம் நம் நெஞ்சத்தின் முன்னே நிமிர்ந்து நிலையாய் நிற்பவை மூன்று. அவற்றுள் ஒன்று; மும்முடிச் சோழனாக முனைந்து வென்றும்; இராசராசனாக ஏற்றமுறத் திகழ்ந்தும்; சிவபாத சேகரனாக வாழ்வதையே சிந்தையில் விரும்பியவனான மாமன்னன் இராசராசன், தன் எண்ணத்திற்கேற்ப விண்ணளாவ எடுத்த கண்ணுதல் அண்ணலாம் பெருவுடையாரின் திருவார் கோயில் ஆகும். அடுத்தது; நிலைத்த புகழ்சேர் கலைக் காவலனாம் *சரபோஜி* என்னும் சகம் புகழும் பேரரசனின் உழைப்பால்; விருப்பால்; உருவாக்கப்பட்டு இன்று வியனுலகெல்லாம் விரும்பி வந்து கண்டு வியந்து போற்றும் அளவுக்கு விளங்கும் சரசுவதி மகால்

என்னும் நூலகம். மூன்றாவதாக முகிழ்த்தது யாது எனில் அதுதான் கன்னித் தமிழின் பெருமையை இக்காசினிக்குணர்த்திக் கொண்டிருக்கும் *கரந்தைத் தமிழ்ச் சங்கம்.*

இவ்வாறு, தஞ்சை நகரத்திற்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே ஒப்பிலாப் பெருமை சேர்க்கின்ற இம் முப்பெரும் கலைக் கோவில்களைப் பற்றி நாம் அறிய வேண்டாவா?

தஞ்சை மாநகரின் பெருமையனைத்தையும் தன் சொந்தப் பெருமையாக ஆக்கிக் கொண்டவன் மாமன்னன் இராசராசன். இராசராசன் என்றால் அரசர்களுக்கெல்லாம் அரசன்-(மன்னர்களுக்கெல்லாம் மன்னன்) என்று பொருள். இதனைப் பேரரசன் என்று தமிழிலும் *சக்ரவர்த்தி* என்று வடமொழியிலும் கூறுவர். எனவே, இம்மன்னன் தன் பெயருக்கேற்ப வெற்றிகள் பல பெற்ற கொற்றவனாகவே விளங்கினான். பாண்டிய மன்னனான அமரபுயங்கனைப் போரிட்டு வென்று ப்ாண்டிய நாட்டைத் தனதாக்கிக் கொண்டான். தான் அனுப்பிய தூதுவனை அவமதித்த சேர நாட்டு மன்னனான பாஸ்கரரவிவர்மன் என்பவனோடு போரிட்டு வென்றதுடன் அச்சேரனின் வலிமை வாய்ந்த போர்க் கப்பல்களைக் காந்தளூர்ச் சாலையென்னு மிடத்தில் வென்று அழித்தான். மேலும் கங்கபாடி, நுளம்ப பாடி, தடிகைபாடி ஆகிய இடங்களையும் வேங்கிநாடு சாளுக்கியநாடுகள் ஆகியவற்றையும், மேற்குக் கடற் பகுதியிலே விளங்கிய முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரத்தையும் வென்றான். இதனால் மாபெரும் வீரனான இவனை *மும்முடிச் சோழன்* என்று முத்தமிழ்ப் பாவலர்கள் பாராட்டினார்கள்

இவ்வாறு, அயலாரை வெல்வதில் எத்துணை ஆர்வமும் ஆசையும் கொண்டிருந்தானோ அந்த அளவுக்கு, ஆண்டவனை வழிபடுவதிலும் விருப்பம் கொண்டிருந்தான். தன்னுடைய எண்ணற்ற வெற்றிகளுக்கு இணையிலாத் துணை செய்த

இறைவனுக்கு ஒப்பும் உயர்வும் கூறவியலாத வகையில் உயர்ந்த கோயில் ஒன்றையமைக்க உளங்கொண்டான். எனவே, அரசனாக ஆட்சிக்கட்டில் ஏறிய ஆண்டாகிய கி.பி. 985 இல் தொடங்கி 216 அடி உயரம் உடைய மாபெரும் கோவில் ஒன்றை நிறுவினான். இஃது அடித்தளம் முதல் முடித்தலை முடிய கருங்கல்லால் கட்டப்பெற்றது. உச்சியில் அமைந்துள்ள ஒரே கல்லால் அமைந்த - *பிரமரந்திர தளக்கல்* என்பது 25½ அடி சதுரமும் 80 டன் எடையும் உடையது. பொறியியற் கருவிகளின் துணையில்லாத அந்தக் காலத்தில் இவ்வுரு பெருங்கல்லினை உச்சியில் எங்ஙனம் உயர்த்திப் பொருத்தினர் என்று இன்றைய வித்தகப் பொறியாளர்களனைவரும் வியந்து நிற்கின்றனர். இக்கோயிற்கருவறை மூர்த்தி (சிவலிங்கம்) தான் உலகிலேயே மிகப்பெரிய சிவலிங்கம் என்று சிற்பநூல் வல்லார் செப்புகின்றனர். தஞ்சை நகரத்தை பல்லவர்கள், முத்தரையர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், மராட்டியர்கள், ஆஸ்திரேலியர்கள் ஆகியோர் ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால் சோழர்களின் ஆட்சி தான் பொற்கால ஆட்சியாகப் பொலிந்தது என்று வரலாற்றாசிரியர்கள் வரைந்துள்ளனர். இவ்வாறு பொற்கால ஆட்சி நடந்த சோழர்களின் காலத்திற்குப் பின்னால் பன்னூறு ஆண்டுகள் கழிந்த காலகட்டத்தில் ஆட்சிக்கு வந்த கலைவேந்தன், பல்கலை வித்தகன் சரபோஜி மன்னனுடைய காலத்தில் மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியைத் தஞ்சைத் தரணி பெற்று மகிழ்ந்தது என்று கூறுவார்கள்.

ஆசைப் பெருக்கோ ஆணவச்செருக்கோ இன்றி அகத்தூய்மை பெற்று விளங்கிய அருளாளனான சரபோஜி, ஆட்சியையும் அதிகாரத்தையும் ஆங்கிலேயரிடம் அளித்துவிட்டு, அவர்கள் தந்த உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டு உவகையோடு வாழ்ந்தான். இவ்வாறு வாழ்ந்த இந்த உயர்குணக்கோமான் கலைஞர்களைப் போற்றினான்; கலைக் கூடங்களை நிறுவினான்; மருத்துவச் சாலைகளை அமைத்தான்.

மாணவர் பயிலக் கல்விக்கூடங்களை மாண்புற நிறுவினான். அறப்பெருஞ் செல்வனாகவும் அருட்பெருஞ் செல்வனாகவும் திகழ்ந்த அம்மன்னன் அறிவு சால் கலைஞனாகவும் விளங்கியமையால் விரிந்து பரந்த தன்னுடைய மனத்தைப் போல மாபெரிய நூலகம் ஒன்றையும் மாண்புற அமைத்தான். ஆங்கிலம், தமிழ், மராட்டியம், தெலுங்கு முதலிய மொழிகளில் எழுதப்பட்ட மருத்துவம், இயல், இசை, கூத்து முதலிய பல்வேறு துறை நூல்களையும் தொகுத்து வைத்தான். கணக்கற்ற நூல்களில் தன் கையொப்பத்தினையும் இட்டுப் பாதுகாத்துத் தந்துள்ளான்.

இவ்வாறு சரித்திரம் படைத்த சரபோஜி மன்னனால் சால்புறச் சமைக்கப்பட்ட சரசுவதி மகால் என்னும் நூலகம் இன்று சகம் முழுதும் போற்றுமாறு அமைந்துள்ளது.

தஞ்சை நகர்க்கு விஞ்சு புகழ் சேர்த்த தலையாய மூன்றனுள் முதலாவது சோழநாட்டு மன்னன் பீடார் இராசராசன் பெட்புடன் அமைத்த பெரியகோயில்; இரண்டாவது கலைக் காவலனாம் மராட்டிய மன்னன் சரபோஜி அமைத்த சகம் புகழ் சரசுவதி மகால், மூன்றாவது தண்டமிழ் மன்னன் தமிழவேள் நிறுவிய கல்விக் கோயிலாக அமைத்து கன்னித்தமிழுலகம் போற்றும் கரந்தைத் தமிழ்ச் சங்கம். அரண்மனைக் கருவூலம் நிறையுமாறு அளவற்ற பொன்னும் பொருளும் பொருத்தமுறப் பெற்றிருந்த பூபாலனாம் இராசராசன் இமயப் பொருப்புக்கு இணையாக ஆண்டவனுக்கு ஓர் ஆலயம் அமைத்தான். கலைவேந்தன் சரபோஜி, ஆங்கிலேய அரசு அளித்த அளவற்ற செல்வத்தைக் கொண்டு அற்புதமான கலைக் கோவிலாம் சரசுவதி மகாலை நிறுவினான். ஆனால்,

"நிரம்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே"

என்று புறப்பொருள் வெண்பாமாலை புகலுதற்கேற்ப நாடாளும்

பேரரசனாகவோ நகராளும் சிற்றரசனாகவோ திகழாமல் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் உதித்த நம்மவராம் தமிழவேள் அவர்கள் தம்முன்னோர் வழி வந்த முழுச்செல்வத்தையும் தாம் தேடிய அளவற்ற செல்வத்தையும் கொண்டு அமைக்கபெற்றது தான் தமிழ்க் கோவிலாம் கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தண்டமிழ்க் காவலராம் நம் தமிழவேள் அவர்களின் இயற்பெயர் *த.வே.உமாமகேசுவரம்பிள்ளை*. என்பதாகும்

நம் தமிழவேள் அவர்களின் முன்னோர்கள் வாழ்ந்த ஊர், தஞ்சை நகரின் வடபால் திகழும் *சுங்காந்திடல்* என்னும் சிற்றூராகும். இது நாற்புறமும் கழனிகளால் சூழப்பெற்று நனிவளஞ்சேர் நற்பதிபாய்த் திகழ்வது. அயலூர்ப் பகுதிகளிலிருந்து அகநகராம் தஞ்சை நகர்க்குள் விற்பனைக்காகக் கொண்டு வரப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் உல்கு என்னும் சுங்கவரியினை இந்த ஊர் எல்லையில் தான் அரசு அலுவலர்கள் பெற்றுவந்தனர், என்றும் இவ்வாறு சுங்கவரி வாங்கும் முறையை மக்கள் வேண்டுகோளை ஏற்ற சோழ மன்னன் ஒருவன் தவிர்த்த காரணத்தால் *அவன் சுங்கம் தவிர்த்த சோழன்* என்று அழைக்கப்பட்டான் என்றும் அதனாலேயே இவ்வூர் சுங்காந்திடல் என்று அழைக்கப்படுகிறது எனவும் கூறுவர்.

இத்தகைய வரலாற்றுப் பெருமையும் வளமார்ந்த செழுமையும் உடைய இவ்வூரில் பரம்பரையாகச் செல்வச் செழிப்புடனும் சீரிய புகழுடனும் திகழ்ந்ததுடன் பண்பையும் பரிவையும் பாங்குறு குணங்களாகக் கொண்டு வாழ்ந்த *வைத்தியலிங்கம்* பிள்ளை என்பவர் தாம் நம்முடைய தமிழவேள் அவர்களின் தந்தையைப் பெற்ற பாட்டனாராவர். இப்பெருந்தகையார் தம்முடைய பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றும் நோக்கத்துடனும் வாணிகம் செய்யும் நினைவுடனும் கரந்தை என்று இக்காலத்தில் அழைக்கப்படும் கருந்திட்டைக்குடிக்குக் குடியேற எண்ணியிருந்தார்.

இந்நிலையில் இவருடைய உறவினரும், கணவரையிழந்தவரும், மிகப்பெரிய செல்வந்தரும் ஆகிய அம்மையார் ஒருவர் தனக்குக் குழந்தையில்லாக் காரணத்தால் வைத்தியலிங்கம் பிள்ளையின் மகனான *வேம்பப்பிள்ளை* (இவர்தாம் நம் தமிழவேளின் தந்தையார்) அவர்களைத் தனக்குத் தத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஆதரவற்ற அந்த அம்மையாரின் வேண்டுகோளை மறுக்கத் துணிவில்லாத வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் தன்னுடைய மகனாகிய வேம்பப்பிள்ளையை அந்த அம்மையார்க்குத் தத்துப்புத்திரராக அளிக்க ஒப்புக்கொண்டு தன் குடும்பத்துடன் சுங்காந்திடலை விட்டுக் கருந்திட்டைக்குடிக்கு வந்து சேர்ந்தார். அதிலிருந்து வைத்தியலிங்கம் பிள்ளையவர்களின் குடும்பம் கருந்திட்டைக்குடியிலேயே வாழ்ந்து வரலாயிற்று. இன்று தஞ்சை நகரத்தின் ஒரு பகுதியாகத் தரமுடன் திகழும் அழகிய ஊர்தான் கருந்திட்டைக்குடி என்பது. இது காவிரியின் கிளையாறுகளாகிய வடவாற்றிற்கும் வெண்ணாற்றிற்கும் இடையில் வளமுடன் அமைந்துள்ளது. இஃது இரு ஆறுகளுக்கு நடுவில் அமைந்திருப்பதால் திட்டு என்று பெயர் பெற்றுப் பின்னர் *திட்டை* என்று ஆயிற்று என்பர். இங்குக் கருவேல மரங்கள் நிறைந்திருந்தமையால் கருந்திட்டைக்குடி என்று பெயர் பெற்றது என்றும்; *கருத்து இட்டகுடி* என்று பகுத்து ஊர்களுக்கு நல்ல கருத்துக்களை வழங்கியமையால் இப்பெயர் பெற்றது என்றும், *கரு விட்டகுடி* என்று பிரித்து

> "பிறவாமை வேண்டும், பிறக்கின் இறைவா வுன்னை
> மறவாமை வேண்டும்"

என்று வேண்டுவார்களின் விருப்பத்திற்கேற்பப் பிறவிப் பெரும் பிணியிலிருந்து விடுவிக்கும் ஊர் என்றும்; *கரு இட்டகுடி* என்று பிரித்து மகப்பேறு அளிக்கும் மகத்தான இறைவன் வாழும் ஊர் என்றும் கூறுவர். கருணாசாமி என்றும் வசிஸ்டேஸ்வரர் என்றும் அழைக்கப்படும் இவ்வூர் மகாதேவரின் திருக்கோயிலுக்கு அருகில் உள்ள திருக்குளத்தில் நாற்பத்தெட்டு நாட்கள்

இடைவிடாமல் நீராடி வந்த மன்னன் ஒருவன் தனக்கிருந்த கருங்குட்டம் என்னும் கொடிய நோயிலிருந்து நீங்கப்பெற்று நலம் அடைந்தான் என்றும், அவனைப் போலவே அக்கொடிய தொழுநோய் (எல்லா நோய்களாலும் தொழுது வணங்கத்தக்கநோய்) உடையவர்கள் பலர் அக்குளத்தில் நீராடியிறைவனை வழிபட்டு நோய் நீங்கப் பெற்றுள்ளனர். இக்காரணத்தால் இவ்வூர் கருங்குட்டம் விட்டகுடி என்ற பெயரால் வழங்கியது. பின்னர் இப்பெயரே கருந்தட்டான் குடியென்று வழங்கியது பின்னர் அதுவே கரந்தை என மருவி வழங்கப்படுகிறது என்றும் சிலர் விளக்கம் கூறுகிறார்கள். இத்தகைய பெயர் விளக்கங்கள் யாவும் புலமையிற் சிறந்த பேரறிவாளர்களின் பொருண் மொழிகளேயன்றி அடிப்படையான ஆதாரங்களைக் கொண்டவையல்ல. ஆனால் அப்பர் அருட்பாடல்களும் இக்கோவிலில் காணப்படும் கல்வெட்டுகளும். இவ்வூரின் வரலாறு பற்றியும் இவ்வூரில் கோயில் கொண்டு இன்னருள் வழங்கும் இறைவன் திருக்கோயிலின் வரலாறு பற்றியும் உள்ளங்கை நெல்லிக் கனியென மிகவும் தெளிவாக விளக்குகின்றன.

அப்பரடிகள், மகேந்திரவர்மன் என்னும் பல்லவப் பேரரசன் காலத்தவர். அஃதாவது தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பிற்காலச் சோழர்களின் காலத்திற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் தாம்பாடிய அடைவுத் திருத்தாண்டகத்தில் கருந்திட்டைக்குடி என்ற பெயரையே பயன்படுத்தியுள்ளார்.

"நற்கொடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்பங்
குடிநல்லக் குடிநளி நாட்டியத் தான் குடி
கற்குடிதென் களக்குடி செங் காட்டங்குடி
கருந்திட்டைக்குடி கடையக் குடிகா ணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட்டங்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி

புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றஇடர் போகும் அன்றே"
(அப்பரடிகள்)

பாவமெலாம் போக்கித், தவநெறி காட்டும் சிவபெருமான், கோயில் கொண்டருளும் சிவத்தலங்களுள், *காடு* என்றும் *பள்ளி* என்றும், *ஊர்* என்றும் *கோயில்* என்றும், குடி என்றும் முடிவடைகின்ற தலங்களையெல்லாம் தனித்தனியாகக் குறிப்பிடுகின்ற திருநாவுக்கரசப் பெருமான் *குடி* என்று முடியும் தலங்களைப் பாடும்போது *கருந்திட்டைக்குடி* என்று ஏழாம் இடத்தில் வைத்துப் பாடியுள்ளதிலிருந்து, கருந்திட்டைக்குடி என்னும் இப்பழம் பதிக்கு எத்துணை உயரிய இடம் அளித்துள்ளார் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு ஓரிடத்திற் குறிப்பிட்டதுடன் அவருள்ளம் நிறைவு பெறாத காரணத்தால், இவ்வூரானது அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்றாகத் திகழும் அருமை வாய்ந்தது என்பதனையும்

"காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர் வீரட்டானம் காமரூசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம், விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டம் குறுக்கைவீ ரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நன் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன் தமர் என்றுஅகல்வர் நன்றே

என்னும் திருத்தாண்டகத்தின் வாயிலாகத் தெளிவு படுத்துகிறார். அத்துடன் இவ்வூரைக் *கோத்திட்டைக்குடி* என்றழைக்கிறார். கோ என்றால் அரசன் என்று பொருள்படும். எனவே, மேற்கூறப்பட்டுள்ள ஏனைய எழுபெரும் வீரட்டத்தலங்களுக்கும் அரசு போன்றது எட்டாவது வீரட்டத்தலமாகக் குறிப்பிடப்படுகின்ற கோத்திட்டைக்குடி

வீரட்டம் என்பதுதான் அப்பரடிகளின் அகக்கருத்து என்பது தெளிவாகிறது.

இவ்வகையில் நோக்குங்கால் திருநாவுக்கரசப் பெருமானின் திருத்தாண்டகங்களைப் பெற்றுத் திகழ்கின்ற கருந்திட்டைக்குடி என்னும் நகரமானது, பிற்காலச் சோழமன்னர்களின் தலைநகரமாகத் தஞ்சை நகரம் திகழ்வதற்கு பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே வரலாற்றுப் பழைமையும் வளத்தால் பெருமையும் பெற்றுப் பொலிந்திருக்கின்றது என்ற உண்மை புலனாகிறது. எனவே, இத்தகு பெருமையை எடுத்துக்காட்டிய கவினார் கல்வெட்டுகள் காட்டும் கருத்துகள் பற்றியும், அத்தகைய அற்புதக் கல்வெட்டுகளை அவனிக்கு அறிவுறுத்திய ஆலயம் பற்றியும் ஆராய்வது நம் கடமையாகிறது.

கருந்திட்டைக்குடியும் கவினார் கோயிலும்

கருந்திட்டைக்குடி பழமையாற் பேர் பெற்றது. இவ்வூரிலுள்ள சிவன் கோயில் திருநாவுக்கரசுப் பெருமானின் தேவாரப் பாடல் பெற்றுத் திகழ்வது என்பதிலிருந்தே இக்கோயிலின் பழமையையும் பெருமையையும் உணர்ந்து கொள்ளலாம்.

இத்திருக்கோயிலில் அமர்ந்து வேண்டுவோர் வினை தீர்த்து அவர் வேண்டுவன நல்கும் வித்தகராம் இறைவனின் பெயர், *கருவிட்டகுடி மகாதேவர் கருந்திட்டைக்குடி மகாதேவர்* என்றும்; அம்மையின் பெயர் *பெரிய நாயகி* என்றும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இக்கோயில் முப்பெரும் வாயில்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. ஒரு வாயில், கிழக்குத் திசையில் திருக்குளத்தை நோக்கி அமைந்துள்ளது. மற்றொன்று கரந்தை மக்களுக்குக் கரையிலாக் கருணையை வாரிவாரி வழங்குதற்கு

வாய்ப்பாகவும், வணங்கி வழிபடவிரும்புகின்ற மக்கள் வந்து செல்வதற்கு வசதியாகவும் தெற்கு நோக்கிய கோபுர வாசலாக அமைந்துள்ளது. பிற்காலத்தில் ஏற்பட்ட மூன்றாவது வாயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

நுழைவு வாயில்களை ஒட்டி அமைந்துள்ள மகாமண்டபம் பிற்காலத் திருப்பணியால் கட்டப்பெற்றதாகும். இந்த மகாமண்டபத்தின் வடபுறம் தெற்குப் பார்த்த நிலையில் அருள்வழங்கும் அம்மன் திருமுன்(சந்நதி) அமைந்துள்ளது. உள் மண்டபமும் கருவறையுமாக அமைந்திருக்கும் இத்திருமுன்னில் (சந்நிதியில்) பெரிய நாயகி என்ற திருப்பெயருடன் நாற்கர நாயகியாய் நானிலம் ஈன்ற அன்னை அருட்காட்சி வழங்குகிறார். முன்னிரு திருக்கைகள் காக்கும் குறிப்பையும் கருணைக் குறிப்பையும் காட்ட பின்னிரு திருக்கைகள் தாமரை மலர்களை ஏந்தியிருக்க, அம்மை நிற்கும் அழகினைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

உள் மண்டபத்திற்குச் செல்லும் வாயிலின் இருபுறங் களிலும் துவார பாலகர்கள் வடிவங்கள் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. நான்கு பெரிய தூண்களுடன் இம்மண்டபம் காணப்படுகிறது. இங்குதான் இக்கோயிலின் செப்புத் திருமேனிகள் சேமமுற வைத்துக் காக்கப்படுகின்றன. இம்மண்டபத்தின் தூண்கள் புதுமையான அமைப்புடன் பலகையில்லாமல் வெட்டுப்பொதிகையுடன் காணப்படுகின்றன. இத்தூண்களின் மேற்செல்லும் உத்தரத்தில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இங்கிருந்து பலகல்வெட்டுகளைப் படியெடுத்துச் சென்ற மைய அரசால் படியெடுக்கப்படாத சிறந்த கல்வெட்டு இது. பிற்காலத் திருப்பணிகளால் அமைக்கப்பட்ட மகாமண்டபம், திருச்சுற்றுகள் ஆகிய இவற்றைத் தவிர எஞ்சி நிற்கும் கருவறை, உள்மண்டபம் போன்றவை எல்லாம் முற்காலச் சோழர்களின் சிற்பக் கலைக் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன.

உள்மண்டபம், கருவறை ஆகியவற்றின் புறச் சுவர்களுக்கு ஏனைய தேவகோட்டங்களும், கோட்டப் பஞ்சரங்களும் அழகூட்டுகின்றன. உள் மண்டபத்தின் தென்புறக் கோட்டத்தில் காட்சியளிக்கின்ற ஆடல் வல்லானின் ஆனந்தத் தாண்டவக் கோலம் அற்புதமான அழகிய அரிய சிற்பப் படைப்பாகும். திரிபுரம் எரித்தவரின் விரிசடைக் கற்றைகள் தோள்களுக்கு புறங்களில் தொங்கிப்பறக்க நெற்றிப்பட்டையை முடிந்த முடிச்சு தலையின் வலப்புறம் தாழ்ந்தே அடைந்திட, செஞ்சடைப் புரிகளின் சிறப்புறு நுனிகளில் சுருளமைப்புடன் குழல்களாய் அசைந்தாட, பூக்கள் பொலிந்த புண்ணியச் சென்னியும் புன்னகை மலர்ந்த திருமுகமாக இறைவன் ஆடும் இணையிலா ஆட்டத்தை என்னென்று சொல்வது எப்படிப் புகழ்வது.

ஆடும் ஆட்டத்தின் ஆவேசச் சுழற்சியால் அழகிய உடலம் வலப்புறம் இலேசாய் வளைந்து திரும்பியிருக்க, அழகிய முகமோ அன்புடன் நேரே அருளுடன் நோக்க, எழிலார் இதழ்கள் இளநகை சிந்த, அக்குமிண் சிரிப்புக் கேற்பக் குழைந்திடும் கண்கள் கோடிக் கதைகள் சொல்ல எங்கும் என்றும் எல்லாம் ஆன இறைவா உன்னை இங்கு இன்று எங்ஙனம் புகழ்வேன் தலைவா என்று நினைந்து நினைந்து உணர்ந்து உருகி உருகிப் பாடத் தோன்றும்.

ஒருவேளை இவ்வெழிலார் காட்சியை எதிரேகண்டதால் தான்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவழம் போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற் பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இம்மாநிலத்தே

என்று அன்பே ஊற்றெழும் கண்ணீரோடு உள முருகிப் பாடியிருப்பாரோ?

இவ்வாறு ஆனந்தத் தாண்டவம் கண்ட அகமகிழ்விலும் குமிண்சிரிப்பைக் கண்ட கொள்ளைப் பெருமிதத்திலும் மெய்ம் மறந்து நிற்கும் நம்மிடம் இறைவனைப் பார்த்த எழிலார் கண்களால் எங்களையும் தான் கொஞ்சம் ஏறிட்டுப் பாருங்களேன் என்று, ஆண்டவனின் ஆடலுக்கு அரண் சேர்க்கும் உடன் கூட்ட வடிவங்கள் மௌன மொழியில் மெல்லப் பேசுகின்றன. வையத்தை ஆட்டித் தானே ஆடும் வள்ளலாம் இறைவனின் வலப்புறம் ஆறு வடிவங்கள் அழகுறக் காட்சியளிக்கின்றன. இடப் புறம் இரண்டு வடிவங்கள் எழிலுடன் இலங்குகின்றன. இவை ஒப்பற்ற கலை நுட்பங்களுடன் நம் உள்ளத்தைக் கனியச் செய்கின்றன.

இடப்புறம் கீழே: காரைக்காலம்மையார் கருணை பொழிகிறார். "எல்லாவுயிர்களுக்கும் அம்மையாய், அப்பனாய் விளங்கி அருள்புரியும் ஆண்டவனின் திருவாக்கினாலேயே *என் அம்மை* என்று மாண்புறப் பாராட்டப் பெற்ற மாதரசியார் மூப்படைந்த பேய் முக வடிவுடன் கால்களை மடித்து, முழங்கால்கள் தரையில் படுமாறு அமர்ந்துள்ள அகம் உருக்கும் காட்சியைக் காணும்போது, அப்பா உன் திருவடியின் அருளிலே அமர்ந்து எப்போதும் உன் ஆடலை என் கண்ணால் காண்கின்ற செப்பரிய பெரும் பேற்றைத் தந்தருள வேண்டும்" என்ற அவருடைய ஏக்கம் நிறைந்த வேண்டுகோளை இறைவன் நிறைவேற்றி வைப்பதைப் போன்றுள்ளது.

அடுத்து, மூன்று கால்களையும் மூன்று கைகளையும் உடைய கோலத்துடன், சோமசுந்தரப் பெருமானின் ஆடலில் சொக்கிப் போய் நிற்கும் பிருங்கி முனிவரின் பேசும் கற்சிலை காட்சியளிக்கிறது. ஆண்டவனின் ஆனந்தத் தாண்டவத்தின் இருபுறங்களிலும் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்தத

ஞானசம்பந்தப் பெருமானும், அயராது தளராது உழவாரப் பணியாற்றிய அப்பர் பெருமானும் அருள் வழங்கும் அற்புதச் சிலைவடிவில் காட்சியளிக்கின்றனர். இவை பிற்காலத்தில் நுழைக்கப் பெற்றவையாக இருக்கலாம் என்கின்றனர் கட்டட வல்லுநர்கள்.

உள்மண்டபத்தின் வடபுறத்துத் தேவகோட்டத்தில் கொற்றவையும், சுவரில் பிச்சைத் தேவரும், பெரும்புகழ் முருகனும் இடம்பெற்றுள்ளனர். அற்புதமாக அமைந்துள்ள கொற்றவை சோழர் காலப் படிவம் ஆகும் என்று சிற்பநூல் வல்லார் செப்புகின்றனர். எட்டுக்கைகளுடன் எடுப்பாகக் காட்சியளிக்கும் இந்த அழகுத் தேவியின் கோலம் கண்டுகண்டு களிக்கத்தக்கது. பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டுவது. இப்படிமத்தை இக்கோயிலின் அபூர்வச் செல்வங்களுள் ஒன்றெனக் கொள்ளலாம்.

கருவறையின் தென்புறத் தேவகோட்டத்தில், ஆலமர் கடவுள் அழகுற வீற்றிருக்கிறார். அவருக்கு இடப்புறம் கொள்ளை அழகுடன் பிள்ளையார் காட்சியளிக்கிறார். காண்டமகுடத்துடன் காட்சி நல்கும் இப்பிள்ளையாருக்கு வலக்கொம்பு இல்லை. இடக் கொம்பு உடைந்துள்ளது. இவருடைய தலைக்குமேல் பூச்சக்கரக்குடையும், பொற்புறு இரு பக்கங்களிலும் கவரிகளும் காணப்படுகின்றன. கோலமார் காட்சி தரும் ஆலமர் செல்வரின் வலப்புறம் *வசிட்டர்* என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்ற தமிழ் மாமுனிவர் *அகத்தியர்* காணப்படுகிறார். வளர்தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வசிஸ்டர் என்ற பெயருடன் சந்தனக் காப்பெல்லாம் பெற்ற சால்புறு மகிழ்ச்சியோடு இங்கு அருள் புரிகிறார்.

சிறந்த சிவபக்தையாகிய செம்பியன்மாதேவியாரின் கலைமுறையின்படி அமைந்த புறச் சுவர்ச் சிற்பப் பட்டியலில் தான் புதியதாக அகத்தியர் இடம்பெற்றிருக்கிறார்.

இவ்வம்மையார் எழுப்பிய கோயில்கள் அனைத்திலும் அகத்தியர் இடம்பெற்றிருப்பார். ஆனால், அவரால் கட்டப்பட்ட வேறு கோயில்களில் கிடைக்காத சிறப்புகளும் வழிபாடுகளும் இவரை வசிஸ்டர் என்று பெயர் மாற்றிப் புரிந்து கொண்ட: பெயர் மாற்றி வழங்குகின்ற, காரணத்தால் இக்கோயிலில் மட்டும் இவருக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு இவ்வூராகிய கருந்திட்டைக்குடியில், நிகழ்ந்த அதிசயத்தையும் கிடைக்கும் வரவேற்புகளையும் கண்டு அவரே புன்முறுவல் பூத்தபடி மகிழ்வமர்வில் அக்கமாலையையும், குண்டிகையையும், கரங்களில் ஏந்தியவாறு தாமரைத் தளத்தில் அமர்ந்திருக்கிறார் அகத்தியர்.

கருவறையின் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோற்பவர் கோட்டத்திற்கு உள்ளேயே நான்முகனும் திருமாலும் நன்றாகக் காட்டப்பட்டுள்ளனர். வலப்புறச்சுவரில் கங்காளரும் இடப்புறச் சுவரில் அம்மையப்பரும் எழிலுறக் காட்சி தருகின்றனர். காசினியில் விளங்கும் கணக்கற்ற சிவத்தலங்களைக் காட்டிலும் கருந்திட்டைக்குடி சிவத்தலம் கருதிப் போற்றத்தக்க தனிப்பெருமை வாய்ந்தது என்பதை ஆன்மீக நெறியாளர் ஆராய்ச்சியாளர் முதலிய அனைவர்க்கும் உணர்த்த எண்ணிய ஆனேறு கொண்ட அண்ணல் இவ்வூரில் மட்டும் அதிசயிக்கத்தக்க வகையில் வலப்பக்கம் அம்மையும் இடப்பக்கம் தானுமாக அமர்ந்து வரலாற்றையே மாற்றிக் காட்டுகிறார்.

அம்மையப்பர் என்றால், அம்மை இடப்பக்கத்திலும் அப்பன் வலப்பக்கத்திலும் தான் காட்சியளிப்பர். இதனால் தான்.

"நாரியிடபாகருக்கு நஞ்சளித்த பாவியென்று
வாரியிடம் சேராத வையை"

என்று பாடுவர் புலவர். பிட்டுக்கு மண் சுமந்த படலத்தில் பாண்டிய மன்னனிடம் இறைவன் பிரம்பால் அடி வாங்கியபோழ்து தன் முதுகின் வலப்பாகத்தில் தான் அந்த

அடியைத்தாங்கிக் கொண்டார். இடப்பாகத்தில் அந்த அடி விழாதபடி சாய்த்துக் கொடுத்தார் என்று பாடுவார் பரஞ்சோதி முனிவர். எனவே, அம்மையப்பர் கருந்திட்டைக்குடியில் மட்டும் பெருந்திட்டமிட்டுப் புதுமையான தோற்றத்துடன் காட்சியளித்து இவ்வூருக்குப் பெருமை சேர்க்கிறாரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

கருவறையின் வடக்குக் கோட்டத்தில் நான்முகப் பிரம்மன் நன்கு காட்சியளிக்கிறார். அவருக்கு வலப்புறம் வீணாதரரும், இடப்புறம் கங்காதரரும் கருணைபொழிகின்றார். கங்காதரருக்கு வலப்புறம் பகீரதனின் தவக்கோலம் பாங்குற அமைந்துள்ளது. உயர்த்தி மடித்த இடக்காலின் பாதம் வலக்கால் தொடையின் மேற்பொருந்தியிருக்க, இருகைகளையும் தலைக்குமேல் தூக்கியவாறு கடுந்தவம் புரியும் பகீரதனின் தவக்கோலம் பாங்குற அமைந்துள்ளது. உயர்த்தி மடித்த இடக்காலின் பாதம் வலக்கால் தொடையின் மேற்பொருந்தியிருக்க இருகைகளையும் தலைக்குமேல் தூக்கியவாறு கடுந்தவம் புரியும் பகீரதனின் சிற்பத்தைக் கங்காதரரின் சிற்பத்திலேயே இணைந்த நிலையில் காட்சியளிப்பது வேறெங்கிலுமே காணமுடியாத அரிய காட்சியாகும்.

கருவறையும் உள்மண்டபமும் கூடும் இடத்தில் அமைந்துள்ள, சிறியதோர் இடைநாழிகையின் புறச்சுவரில், வடபுறம் காலடியில் வீழ்ந்தவரைக் காக்கும் கருணையுடன் கடமையைச் செய்யவந்த காலனையும் காலால் உதைத்தழித்த காலசம்காரர் என்னும் காலாரி, அனைவரையும் காப்பேன் என்று அருட்குறிப்புடன் திகழ்கிறார். அவரை அணைத்தபடி மார்க்கண்டேயன் காணப்படுகிறார். தென்புறம் கங்காளர் கருணை பொழிகிறார். சோழமன்னர்கள் இக்கங்காளர் தோற்றத்தில் கரையற்ற காதல் கொண்டவர்கள் என்பதைக் கருந்திட்டைக்குடிக் கங்காளர் கருத்துடன் காட்டிவிடுகிறார். முடிவிலா அழகுடைய இந்தச் சிற்பங்கள் முற்காலச் சோழர்களின் கலைத் திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

கருவறையின் மேல் கழுத்துப் பகுதியும் வேசரசிகரமும் உச்சிக் குடமும் முறையாக அமைந்து, இதனை ஒரு தள அமைப்பாகக் காட்டுகின்றன. மகாநாசியின் கிழக்கில் முருகனும் தென்புறம் ஆலமர் செல்வனும் வடபுறம் நான்முகனும் மேற்கில் திருமாலும் உள்ளனர். முருகனின் வலப்புறம் தீக்கடவுளும் இயமனும் விளங்க இடப்புறம் இந்திரனும் ஈசானனும் உள்ளனர். வாயு, குபேரன், வருணன், நிருதி ஆகியோர் அற்புதமாகக் காட்சியளித்து இவ்வாலயத்தின் பெருமையை மேலும் உயர்த்துகின்றனர். இத்துணைக்கலைச் சிறப்புகளைச் சில கோயில்களில் மட்டுமே காணமுடியும். அந்த அளவுக்குச் சிறந்த வேலைப்பாடுகளுடன் இக்கோயில் காணப்படுவது சோழரது ஆட்சிக்கும், சூழ்புகழ் கரந்தைக்கும் மேலும் புகழ் கூட்டுவதாக உள்ளது.

அந்தக் கோயிலில் இருந்து கிடைத்துள்ள இருபது கல்வெட்டுகளும் அரியபல செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன. அக்கால அரசியல், கோயில் நிர்வாக முறைகள், சமுதாய நிலை போன்றபல துறைகளைச் சார்ந்த வரலாற்றுக் குறிப்புகளை இவற்றால் அறிந்து கொள்ள முடிகிறது. இக்கல்வெட்டுகளுள் காலத்தால் முந்தியதும் இத்திருக்கோயில் கட்டப்பெற்ற ஞான்று வரையப்பட்டதுமான கல்வெட்டு ஒன்றுளது. அது முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தது. அவனுடைய காலத்திலேயே இக்கோயில் சிறப்புடன் திகழ்ந்திருக்கிறது என்பதையும், இவ்வூர் (கரந்தை) தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்ப் புறம்படி கருவிட்டகுடி, என்றும் கருந்திட்டைக்குடி என்றும் அழைக்கப் பெற்றிருக்கிறது என்பதையும் இப்பழைய கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது. இரண்டாவதாகக் கருதப்படுவது தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்கிய முதலாம் இராசராசனின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இஃது இக்கரந்தைப் பகுதியை *நித்த விநோத வளநாட்டுத் தஞ்சாவூர்க்*

கூற்றத்துத் தஞ்சாவூர்ப் புறம்படி வடவாற்றின் கரை கருந்திட்டைக்குடி என்று குறிப்பிடுகிறது. இதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்த, இரண்டாம் இராசாதிராசனின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், *பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் கருந்திட்டைக்குடியான சுங்கம் தவிர்த்த சோழ நல்லூர்* என்று கரந்தைப்பகுதி சுட்டிக் காட்டப்படுகிறது. இப்புதிய செய்தியால் பல்லாண்டுகளாக வாங்கப்பட்டு வந்த *சுங்கம்* என்னும் வரியை முதலாம் குலோத்துங்கன் என்பவன் வாங்காமல் நிறுத்தினான் என்பதும், இக்காரணத்தால் இவன் சுங்கம் தவிர்த்த சோழன் என்று புகழப்பட்டான் என்பதும் இவனைப் பாராட்டும் வகையில் இவ்வூர் சுங்கம் தவிர்த்த சோழநல்லூர் என்று அழைக்கப்பெற்றது என்பதும் தெரியவருகின்றன. சுங்காந்திடல் என்று தற்காலத்தில் வழங்கப்படும் ஊரின் பெயர்க்காரணமும் இதனால் ஒருவகையில் விளங்குகின்றதன்றோ.

மேலும் இக்காலக் கல்வெட்டுகள் அக்காலச் சமுதாய அமைப்புகள் பற்றியும், குறிப்புகள் தெரிவிக்கின்றன. தஞ்சையைச் சுற்றிலும் ஆவூர், வெள்ளனூர் பெராவத்தூர், சிறுவேலூர், குறுக்கை முதலிய ஊர்ப் பெயர்களைப் பற்றியும் அவ்வூர்களில் ஊர்ச்சபைகள் - மகாசபைகள்- இயங்கிவந்தன என்பதும், ஏரியூர் நாடு, பட்டின நாடு, நல்லூர் நாடு போன்ற நாடுகள் திகழ்ந்தன என்பதும், செம்பொற் கூற்றம், தஞ்சாவூர்க் கூற்றம், ஆவூர்க் கூற்றம் போன்ற கூற்றங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன என்பதும் ஸ்ரீ கோயிலுடையார்கள், தேவகன்மிகள் ஸ்ரீ கார்யம்செய்வார் முதலான கோயில் அலுவலர்கள் பொறுப்பில் கோயில் ஆட்சிமுறை இருந்து வந்தது என்பதும் முதலாம் இராசராசனின் அன்புத் தமக்கையாரான குந்தவைப் பிராட்டியார், ஆழ்வார் பராந்தகன் என்னும் புகழ்ப் பெயருடன் இக்கோயிலுக்குக் கொடைகள் பல அளித்துள்ளார் என்பதும் இக்கல்வெட்டுகள் வெளிப்படுத்தும் அரிய செய்திகளாகும்.

கரந்தை என்னும் கவினார் மூதூர்

வரலாற்றுக் குறிப்புகளாலும் வண்டமிழ் இலக்கியங்களாலும் வானளாவப் புகழப்படுகின்ற, *கருந்திட்டைக்குடி* என்னும் இவ்வூர் 'புகழ்சேர் தஞ்சையைக் காட்டிலும் முந்திய பழமையும் பெருமையும் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது' என்பதனை இதுவரை நாம் தெளிவாகவுணர்ந்து கொண்டோம். வரலாற்றில் *கருவிட்டகுடி* என்றும் *கருந்திட்டைக்குடி* என்றும் வழங்கப்பட்டபெயர்கள் பிற்காலத்தில் *கருந்தட்டான்குடி* என அழைக்கப்பெற்றது. இஃது இலக்கண வகையில் *மரூஉ மொழி* என்று குறிப்பிடப்படும். தஞ்சாவூரைத் தஞ்சை, என்றும், கோயம்புத்தூரைக் கோவை, என்றும் திருநெல்வேலியை, நெல்லை என்றும் அழைப்பதுபோல இவ்வூரையும் கரந்தை என வழங்கினர் போலும். ஆனால் மருவி வழங்கும் ஏனைய ஊர்களுக்கு அமையாத் பெயர்ப் பொருத்தம் *கரந்தை* என்ற பெயருக்கு மட்டும் அமைந்திருப்பது வியத்தற்குரியதாகும். எடுத்துக்காட்டாக கோயம்புத்தூர் என்றால் என்ன பொருளோ அதே பொருளைத் தான் *கோவை* என்ற மரூஉமொழியும் தருகிறது. அதே போலத் தஞ்சாவூர் என்பது எந்த ஊரைக் குறிக்கிறதோ அதே ஊரைத் தான் தஞ்சை என்ற மரூஉ மொழியும் குறிக்கிறது. ஆனால் '*கரந்தை* என்ற பெயரோ, கருவிட்டகுடி, என்ற பெயரையும் கருந்திட்டைக்குடி, என்ற பெயரையும், கருந்தட்டான்குடி, என்ற பொருளையும் தருவதுடன் *இழந்தவற்றை மீட்டுவருதல்* என்ற மற்றும் ஒரு பொருளையும் தருகிறது. இது பற்றிய விளக்கத்தைக் காண்போம்.

கரந்தை என்ற சொல் பூக்களுள் ஒருவகையான கரந்தைப் பூவைக் குறிக்கும். ஆனால் இந்த மலரை மக்கள் எவரும் சூடிக் கொள்வதில்லை. மாறாகப், போர் நிகழும் காலத்தில் போர்வீரர்கள் மட்டுமே இப்பூவைச் சூடிக்கொள்வார்கள்.

எவ்வாறெனில்; முற்காலத்தில் நிகழ்ந்த போர் முறைகளுக்கும் தற்காலத்தில் நிகழும் போர் முறைகளுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு. அக்காலத்தில் ஓர் அரசன் பகை நாட்டின் மீது படையெடுக்க விரும்பினான் என்றால் இச்செய்தியை அவன் பகைவர் நாட்டிலுள்ள மக்களுக்குத் தெரியப்படுத்திவிடுவான். "நான் உங்கள் நாட்டின் மீது படையெடுக்கப் போகிறேன். ஆதலால் ஆநிரைகளையும், அந்தணர்கள் பெண்கள், பிணியாளர்கள், குழந்தைகள், குழந்தைப் பேறுஇல்லாதவர்கள், முதியவர்கள் ஆகியவர்களையும் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று விடுங்கள்" என்று முரசறைந்து தெரிவித்து விடுவான்.

இவ்வாறு, தாங்கள் படையெடுக்க விருப்பதைப் பகை நாட்டார்க்குத் தெரிவித்த பின்னர் அடுத்தபடியாகத் தன்னுடைய படைவீரர்களையனுப்பி பகை நாட்டின் ஆநிரைகளை (பசுக் கூட்டங்களை)க் கவர்ந்து வரச் சொல்வான். அவ்வாறு பகைவருடைய ஆநிரைகளைக் கவர்ந்து வருவதற்காகச் செல்லும் வீரர்கள் *வெட்சி* என்னும் ஒரு வகைப் பூவை (மலரை) அணிந்து கொள்வர். எனவே 'வெட்சிப் பூ என்றால் பகைவருடைய ஆநிரையைக் கவர்ந்து வரும் வீரர்களுக்கு உரியது' என்று பொருள்படும். அவ்வாறு அயல் நாட்டிலிருந்து வந்த, பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தங்கள் நாட்டு ஆநிரைகளை மீட்டுவருதற்காக வீரர்கள் புறப்படுவார்கள். அவ்வாறு மீட்டு வரச் செல்லும் வீரர்கள் கரந்தைப் பூவைச் சூடிச் சென்று ஆநிரையை மீட்டு வருவார்கள். எனவே, *கரந்தைப்பூ* என்பது பகைவர்களால் கவர்ந்து செல்லப்பட்ட, தங்களின் ஆநிரைகளை (உரிமைகளை) மீட்டுவரும் வீரர்களுக்கு உரியது' என்று பொருள்படும். இதனை

"வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்"

என்று தொடங்கும் பாடல் உறுதிப்படுத்தும்.

எனவே, கரந்தை என்ற சொல்லானது, *கரந்தைப் பூச்சூடிச் சென்று இழந்த உரிமைப் பொருள்களை மீட்டு வருதல்* என்ற பொருளைத் தருகிறது என்பது தெளிவாகிறதல்லவா. இதைப் போலவே தமிழ்ப் பகைவர்களால் வஞ்சகமாகக் கவர்ந்து செல்லப்பட்ட தமிழரின் பழம் பெருமையையும் தமிழின் தனித்தன்மையையும், 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்ற புகழ்ப்பூவைச் சூடி, மீட்டுவந்தமையால் இவ்வூருக்குக் கரந்தை என்ற பெயர் எத்துணைப் பொருத்தமாக அமைந்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்த வகையில், 'தன்மானக் கரந்தையை யணிந்த தமிழ்நெறிக் காவலன் ஒருவன் தோன்றுவான் அவன் தமிழின் பெருமையை மீட்டுத் தருவான்' என்று ஆன்றவிந்தடங்கிய அறிஞர் பெருமக்கள் தங்களின் அகத்தே கண்ட கனவு நனவாகும் வகையில் தமிழ்த்தாயின் தவப்புதல்வனாக ஆற்றல் சால் கரந்தை நகரில் அவதரித்தவர்தான் தண்டமிழ்க் காவலர் தமிழவேள் உமாமகேசுவரனார் அவர்கள் என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா?

நம் தமிழவேள் அவர்கள் முடியுடை வேந்தர்களால் *முக்குலத்தோர்* என்று பாராட்டப்பெற்ற நற்குலமரபைச் சார்ந்தவராவார். மும்மை என்றும் எண்ணுக்கும் தமிழர்க்கும் செம்மையான தொடர்புகள் உண்டு. இயல், இசை, கூத்து என்னும் முத்தமிழ், மா.பலா, வாழை என்னும் முக்கனி, சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர், வில், புலி, கயல் என்னும் முக்கொடி, பாடலம், கோரம், கனவட்டம் என்னும் மும்மா, பனம்பூ, ஆத்திப்பூ, வேப்பம்பூ, என்னும் மும்மலர்கள், கொடைமுரசு, போர்முரசு, மணமுரசு என்னும் மும்முரசுகள், ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் முந்நீர், (கடல்) சுவர்க்கம், மத்திமம், பாதாளம் என்னும் மூவுலகம், ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம், அலைமகள், கலைமகள், மலைமகள் என்னும் முத்தேவியர், நான்முகன், திருமால், சிவபெருமான்

என்னும் மும்முதற்கடவுளர் என்று மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போகும் அளவுக்கு மூன்று என்னும் எண்ணுக்கும் முதன்மைத் தமிழுக்கும் முடிவிலாத் தொடர்பு உண்டு. அவ்வகையில்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தகுடி"

என்று குளிர் தமிழ்ப் பாவாணர்களால் குறிப்பிடப்பட்ட மூத்த மரபினர் தாம் முடியரசர்க்குத் துணையாக நின்ற முக்குலத்தோர் மரபினர். இத்தகைய பெருமை வாய்ந்த முக்குலத்தாருள் ஒருபிரிவான அகமுடையார் என்னும் ஓர் உயர்ந்த குடி தான் நம் தமிழவேள் அவதரித்த தனிப்புகழ்க்குடி. அஃகம் என்றால் கூல வகைகளைக் குறிக்கும். எனவே, வேளாண்மைத் தொழில் செய்து நெல் முதலிய கூலங்களை மிகுதியாகப் பெற்றிருந்த காரணத்தால் அஃகம் உடையார் என்றும், வாணிகம், செய்து பெரும்பொருள் ஈட்டி அவற்றை வறியவர்க்கு அளிக்கும் வள்ளல் மனம் படைத்திருந்த காரணத்தால் அகம் உடையார் என்றும், அமைச்சர் முதலிய அரசுப் பணிகளில் அமர்ந்து அரசனுக்குத் துணை செய்ததுடன், போர் நிகழும் காலங்களில் அரண்மனையிலேயே தங்கியிருந்து (அகம்படிந்து) புறத்தே, போர் புரியச் சென்ற படைகளுக்குத் தேவையான உதவிகளைத் திட்டமிட்டுத் தருகின்ற பெரிய நிர்வாகப் பொறுப்பில் அமர்ந்தும் செயல்பட்ட காரணத்தால் *அகம்படியர்* என்றும் *அகந்தை என்னும் அகம்* படியாத தூய்மையான மனம் உடையவர்களாக வாழ்ந்த காரணத்தால் *அகம்படியார்* என்றும் புறத்துக்கு (வீரத்துக்கு) அஞ்சி என்றுமே படியமாட்டார்; ஆனால் அகத்துக்கு (அன்புக்கு) மட்டுமே படிவார், என்பதால் அகம்படிவர் என்றும், பெயர் பெற்றுத் திகழும் பெருமை வாய்ந்த குலம் அகம்படியர் குலம். இக்குலத்தோர் வீரமும் விவேகமும் நிறைந்தவர்கள்.

போரென்னில் பொருப்பன்ன புயங்கள் பூரிக்கும்
தன்மையுடையவர்கள்
கூற்று டன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் வாய்ந்த அடல் மறவர்கள்

"விழித்தகண் வேல்கொண்டெறிய அழுத்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு"

என்ற குறட்பாவுக்கேற்ப அஞ்சாமையையே அணியாகக் கொண்டவர்கள்

"நின்மகன் போரில் புறமுதுகிட்டனன்" எனப் பேதையர் சிலர் கூற, அங்ஙனமாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்பினை அறுத்தெறிவேன்" என வஞ்சின முரைத்துப் போர்க்களம் சென்று, தன் மகன் தன்னுடைய மார்பினில் பாய்ந்த வாளால் மாய்ந்து கிடத்தலைக்கண்டு, ஈன்ற ஞான்றினும் பெரிது மகிழ்ந்தாள் என்ற வீர வரலாற்றுக்குரிய குடி.

"கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று முரணவிந்தார் என்னையர்- பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு"

என் தந்தையோ விழியமைக்காது போர் புரிந்து வீரமரணமெய்தி நடுகல் வடிவமாக நற்புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறான். என் கணவனும் போர்க்களத்திலே வீழ்ந்து புகழ் தேடிக் கொண்டார். என் ஆருயிர் உடன் பிறப்புக்களும் அமர்க்களத்திலே ஆற்றலைக் காட்டி அமரர் உலகெய்தினர். ஒரே வாரிசாக உதித்த என் மகனோ பகையரசனை வீழ்த்துதற்குப் பாய்ந்தோடியபோது எதிர்ப் படைவீரர்களால் எய்யப்பட்ட ஏராளமான கணைகள் மார்பிற் பாய்ந்தமையால் முள்ளம் பன்றியைப் போல முனைமுகத்தில் கிடக்கிறான் என்று விம்மிதம் அடைந்த வீரப் பெண்மணிகளைப் பெற்றுப் பெருமையுற்றகுடி.

இத்தகைய பெருமை வாய்ந்த பரம்பரையினர், *பிள்ளை* என்ற பட்டத்துடன் பெருமை மிகு வாணிகத்தையும், பிறர்க்குதவும் வேளாண்மையையும் மேற்கொண்டு செல்வச் செழிப்புடனும் சீரார்ந்த புகழுடனும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய ஓர் உயர்ந்த பாரம்பரியம் நிறைந்த குடும்பத்தில்தான்: தன்னாடு தமிழ்நாடாகவும், தன்குடி தமிழ்க் குடியாகவும் கொண்ட தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் அவர்கள் பிறந்தார்கள். தமிழவேள் அவர்களின் தந்தையார் வேம்பப்பிள்ளை என்பார். இவருடைய தந்தையின் தந்தையாரான பாட்டனார் பெயர் வைத்தியலிங்கம் பிள்ளை என்பதாகும். வைத்தியலிங்கம் பிள்ளையும் அவருடைய முன்னோர்களும் கள்ளமிலா உள்ளம் படைத்தவர்கள் இரவாமையையும் இரப்பார்க்கு இல்லையென்னாமல் ஈதலையும் பண்புகளாகப் பெற்றவர்கள்.

வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் கரந்தையில் வாழ்ந்து வரும் காலத்தில் அவருடைய ஒன்று விட்ட தமக்கையார் *அன்னபூரணி* என்னும் மங்கை நல்லாளைக் கரந்தையில் வாழ்ந்தவரும் *நாட்டாண்மைக்காரர்* என்றும் *பெரியவீட்டுக்காரர்* என்றும் புகழ் பெற்று விளங்கியவரும் ஆகிய *சண்முகத்தாபிள்ளை* என்பார் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு இல்லறவாழ்வினை இனிதே நடத்திவந்தார். இந்நிலையில் சண்முகத்தாபிள்ளையவர்களின் குடும்பம் பெருகத்தலைப்பட்டது. எனவே, தனது வாழ்க்கையை மேலும் வளப்படுத்த எண்ணிய சண்முகத்தாபிள்ளை, தம் வீடு முதலியவற்றைத் தம்முடைய உறவினர் மேற்பார்வையில் ஒப்படைத்துவிட்டுத் திருச்சியைச் சார்ந்த தென்னூரில் குடும்பத்துடன் சென்று வாழத் தொடங்கினார். சீரோடும் சிறப்போடும் அங்கு அவர் வாழ்ந்து வரும் காலத்தில் தம்முடைய ஆண் மக்கள் ஐவரையும் ஆங்கிலக் கல்வி பயிலச் செய்து உயர்ந்த அலுவல்களில் அமர்த்தினார். அவர்களுட சிலர் அரசு அலுவல்கள் காரணமாக மேலைநாடுகளுக்கெல்லாம்

சென்று வந்த பெருமைக்குரியவராவர். இவர்களைப் பார்த்த பிறகுதான் தமிழவேள் அவர்கட்கும் அவருடைய இளவல் போன்றவர்க்கும் ஆங்கிலக்கல்விக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று என்று கூடக் கூறலாம்.

தமிழவேளின் முன்னோர்கள் உழவே தலையாய தொழிலெனக் கொண்டவர்களாயினும் தமிழில் நல்ல பயிற்சியும் உடையவர்கள். தமிழ் நெடுங்கணக்கு ஆத்திசூடி கொன்றைவேந்தன் முதலான நீதி நூல்களிலும் புராண இதிகாச நூல்களிலும் மிகுந்த ஈடுபாடுடையவர்கள். இத்தகைய கல்வியறிவும் கண்ணியப் புகழும் நிறைந்த குடும்பத்தைச் சேர்ந்தவரான வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் தம் உறவினரும் கணவரையிழந்தவரும் பெரும் செல்வந்தருமாகிய அம்மையார் ஒருவருக்குத் தத்துப் பிள்ளையாகக் கரந்தைக்கு வந்து சேர்ந்தார் என்பதனை முன்பே கூறினோம்.

கரந்தையில் வாழ்ந்துவந்த வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள், பலசரக்குக் கடையொன்றைப் பாங்குற நடத்தி வந்தார்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம், பேணிப்
பிறவும் தமபோற் செயின்

என்னும் குறட்பாவுக்கேற்ப முறையாக வாணிகம் செய்தமையால் தொழில் வளர்ச்சியடைந்தது. செல்வமும் செல்வாக்கும் தேடிவந்தன. இவ்வாறு நிறைபொருளும் உயர் புகழும் படைத்து வாழ்ந்த வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் உரிய வயதில் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த மங்கை நல்லார் ஒருவரை மணமுடித்துக் கொண்டு மனநிறைவோடு வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார்.

மூன்று பெண் குழந்தைகளுக்கும் ஓர் ஆண் குழந்தைக்கும் தந்தையானார். அந்த ஆண் குழந்தைதான் நம்

தமிழவேள் அவர்களைத் தமிழுலகத்திற்குத் தந்த, தரும தேவதையாம் *வேம்பப் பிள்ளை* அவர்கள். தந்தை வைத்தியலிங்கம் பிள்ளையவர்களைப்போலவே தனயனாகிய வேம்பப் பிள்ளையவர்களும் இளமையிலேயே பலரும் போற்றி மதிக்கும் வகையில் சிறந்த பண்பாளராக விளங்கினார். தக்கவயது வந்தவுடன் தங்களுடைய குடும்பத்திற்குப் பொருத்தமான புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்த *காமாட்சி அம்மை* என்னும் காரிகையாரைத் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். மாண்பு மிக்க குடும்பத்தில் பிறந்த அந்த மங்கை நல்லாரும் மணாளரின் மனக்குறிப்பறிந்து நடந்து கொண்டு

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்னும் அய்யன் திருவள்ளுவன் கருத்துக்கு அணி செய்துவந்தார். கருத்தொருமித்த கணவனும் மனைவியும்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் குறட்பாவை மெய்ப்பிக்கும் வகையில் மேலான வாழ்க்கை நடத்திவரும் காலத்தில்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்னும் பொய்யாமொழியாரின் பொருண்மொழிக்கேற்ப மனைக்கு மங்கலமாகத் திகழ்ந்த காமாட்சி அம்மையார் சிறந்த மக்களைப் பெறுதலே அந்த இல்லறவாழ்வுக்கு நல்ல அணிகலம்' என்னும் உண்மையை உறுதிப்படுத்துவார் போலத் *தர்மசம்வர்த்தினி* என்னும் பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தார். ஆசைக்கொரு செல்வியாய்ப் பிறந்த அன்பு மகளை அருமைப் பெற்றோர் இருவரும் *தலைச்சன் பெண்ணாக*

இருந்தால் தாயாருக்கு உதவும் என்ற மகிழ்ச்சியுடன் கண்ணும் கருத்துமாக வளர்த்து வரலாயினர். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன. ஆசைக்கொரு பெண்மகளை அடைந்த இவர்கள் ஆஸ்த்திக்கோர் ஆண்மகனையும் அடைய வேண்டும் என்று ஆசைகொண்டனர். பேரன்பைக் காட்டிடப் பெண்குழந்தை மட்டும் போதாது ஆதரித்துப் போற்றுதற்கு ஆண்குழந்தையும் வேண்டும் என்று விரும்பினார்கள். இத்தகைய விருப்பத்துடன் கணவன் மனைவி இருவரும் கரந்தையிலிருந்து தஞ்சைப் பெரிய கோவிலுக்கு நாள்தோறும் நடந்தே சென்று, வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் வித்தகராம் தஞ்சைப் பெருவுடையாரையும்; உள்ளன்போடு வழிபடுபவரின் உறுதுயர் போக்கி உதவிநல்கிடும் ஒப்பற்ற அன்னையாம் உமாமகேசுவரியையும் உளம் உருகி வேண்டி நின்றனர்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்றும் தேன்குறட்பாவை உறுதிப்படுத்துவது போலவும்;

"முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ"

என்னும் சேக்கிழார் பெருமானின் சீரிய கருத்தைச் செம்மைப்படுத்துவது போலவும்,

"கடவுளை நம்பினார் கைவிடப்படார்"

என்னும் கனித்தமிழ்ப் பழமொழியை மெய்ப்பிப்பது போலவும்; மதுரையம்பதியாம் முதுபழம்நகரில் முதற்றமிழ்ச் சங்கத்தின் முதன்மைப் புலவராக வீற்றிருந்து முத்தமிழ் காத்த விரிசடைச் சிவபிரான்; தாம் தலைமையேற்றுப் போற்றிக் காத்த தமிழ் மொழியானது தளர்ச்சியடைந்ததனையுணர்ந்து அத்தளர்ச்சியைப் போக்கித் தாங்கி நிறுத்தத் தக்கவன் ஒருவனைத் தஞ்சைக் கரந்தையில் தந்திடவேண்டும் என்று எண்ணிப் படைத்ததைப் போல, வேம்பப்பிள்ளையும் காமாட்சி அம்மையும் வேண்டியவாறு ஆண் மகவு ஒன்றையும்

அளித்தருளினார். அவ்வாறு உமையொருபாகனின் ஒப்பற்ற கருணையால் உதித்தவர்தாம் நம் உமாமகேசுவரனார் அவர்கள்.

தேடாச் சிறப்பமர் தேன்றமிழ் மொழிக்கு, வாடாக் கரந்தையில் வளர்சங்கம் கண்ட வள்ளற் பெருந்தகை; தமிழ்த் தாயின் தவப் புதல்வர்; தமிழவேள் அவர்கள். அவதரித்த அந்த நாள் வரலாற்றின் பொன்னேடுகளில் வைர வரிகளால் பொறிக்கப்படவேண்டிய கி.பி. 1883 ஆம் ஆண்டு மேத்திங்கள் ஏழாம் நாள் (சுபானு ஆண்டு சித்திரைத் திங்கள் 16ஆம் நாள்) திங்கட்கிழமையாகும். ஆண்மகன் பிறந்தமைகண்டு அகமகிழ்வடைந்த பெற்றோரிருவரும் இவ்வரும்பெரும் மகற் கொடை *உமாமகேசுவரனின் உயர்கருணையால் கிடைத்தது* என்னும் நன்றியுணர்வோடு அந்தக் குழந்தைக்கு உமாமகேசுவரன் என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

"பொன்னுடையரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ-இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்"

என்று புகழேந்திப் புலவர் புகன்றதற் கேற்பவும்,

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லார்க்குப்
பயக்குறை வில்லை தான்வாழு நாளே"

என்று பாண்டியன் அறிவுடைநம்பி பகர்ந்ததற்கேற்பவும்

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று திருக்குறளமுதம் தெரிவிப்பதற்கேற்பவும்,

பெற்றோரிருவரும் பிள்ளைகளின் மழலையும் குதலையும் கேட்டு மட்டிலா மகிழ்ச்சியடைந்தனர்.

"சித்திரையில் ஆண் பிறந்தால் பெற்றவர்க்கு ஆகாது"

என்றவொரு நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவி வருவதை நாமறிவோம். ஆனால், இந்த மொழியைப் பொய்யாக்கி

"சித்திரையில் ஆண் பிறந்தால் செழும்புவியை
வாழவைக்கும்"

என்ற புதுமொழியையே தமிழ்வேள் அவர்களின் வாழ்க்கை உருவாக்கி விட்டது என்று கூடச் சிலர் கூறி மகிழ்வதுண்டாம்.

பெற்றோர் அளித்த பேரருட்செல்வம்

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்றும் செந்தமிழ்ப் பாடலானது; சித்திரம் வரைதல், செந்தமிழ் பயிறல், கல்வி கற்றல், கவினுற நடத்தல் ஆகியவை இடைவிடாப் பயிற்சிகளின் வழியே எய்தப் பெறுபவை. ஓய்விலாப் பயிற்சிகளால் இவற்றை உறுதியாக அடைந்து விடலாம் ஆனால், ஆழ்ந்த நட்புணர்வு, அகங்கனிந்த அருளுணர்வு, குறிப்பறிந்து ஈயும் கொடையுணர்வு என்னும் இம்மூன்று பண்புகளும் அவரவர்களின் குடும்பத்தாரிடமிருந்து வந்தடையும் கொடைச் செல்வங்களாகும் என்ற உயர்ந்த உண்மையை உலகுக்கு உணர்த்துகிறது.

இவ்வகையில் நோக்குங்கால் தமிழ் நெறிக் காவலராம் நம்முடைய தமிழவேள் அவர்கட்கு மேற்கூறப்பட்ட நட்பு, தயை, கொடை ஆகிய நற்பெரும் பண்புகளை நன்கனம் அளித்தவர்

அவரின் அந்தமில் புகழுறு தந்தையாரே எனலாம். வித்தகராம் அந்தத் தத்துவர் யாரெனில் வேம்பப்பிள்ளை என்னும் வேந்தராவார்.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

என்னும் தெள்ளு தமிழ்க் குறட்பாவை வள்ளுவப் பாட்டன் நம்முடைய வேம்பப் பிள்ளை அவர்களுக்காவே விரும்பிப் பாடியுள்ளாரோ என்று வியக்கும் அளவுக்குத் திருவாளர். வேம்பப்பிள்ளையவர்கள் அறவாழ்வு வாழ்ந்திருக்கிறார்கள். *வேம்பு* என்னும் மருந்து மரமானது தன்னுடைய அடி, வேர் முதலாக முடி, யிலை முடிவாக அனைத்துப் பகுதிகளையும் நாட்டு மக்களின் நோயைப் போக்குவதற்காகவே தந்தருளுகிறது அன்றோ? அது போலவே, வள்ளல், வேம்பப் பிள்ளையவர்களும் தன்னுடைய அளவற்ற செல்வத்தைத் தமிழ் வளர்ச்சிக்காக அளித்ததுடன் அன்பு மகனையும் அளித்துள்ளார் என்றால் ஏற்றமிகு வள்ளுவரின் இனிய குறட்பாவுக்குப் போற்றலுறு எடுத்துக்காட்டாக இவர் பொலிகிறார் என்று கூறுவது மிகையாகாதல்லவா?

உமாமகேசுவரரை அடுத்துத் தோன்றியவர்கள் மூவர். இராதாகிருட்டினன், கோபால்சாமி, செண்பகவல்லி என்று அவர்கட்குப் பெயர்கள் சூட்டப்பட்டன. இம்மூவருள் முதல்வராகிய இராதாகிருட்டினபிள்ளை அவர்கள் தாம் *கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை* முதன்முதலில் கால்கோள் நாட்டித் தொடங்கிய பெருமைக்குரியவர். இன்று ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரோடி அகில உலகத்தில் அளவிலாப் புகழுடன் கரந்தைத் தமிழ்ச் சங்கம் திகழக் காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவர். இதனால் இவ்வள்ளற் பெருந்தகையைச் *சங்கம் நிறுவிய துங்கன்* என்று செய்ந்நன்றி மறவாத செந்தமிழ் வாணர்கள் பாராட்டிப் புகழ்வார்கள்.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா"

என்று பாடிய பெரும்புலமை வாய்ந்த ஔவைப்பெருமாட்டியார்; பிள்ளையாரைப் புகழ்ந்து பாடும்போது *துங்கக் கரிமுகன்* என்று பாடியுள்ளார். சங்கத் தமிழ் மூன்றும் சால்புடனளிக்கும் ஏற்றமிகு பிள்ளையாரைத் *துங்கக் கரிமுகத்துத் தூமணி* யென்று பாராட்டியது போல, கரந்தையில் தங்கத் தமிழ் போற்றத் தமிழ்ச் சங்கம் கண்ட இராதாகிருட்டின பிள்ளை அவர்களையும் சங்கம் நிறுவிய துங்கன் என்று பாராட்டியது எத்துணைப் பொருத்தமானது. இவரையடுத்துப் பிறந்த கோபாலசாமி இளமையிலேயே இயற்கையெய்திவிட்டார். அன்புமகன் மறைந்தமை கண்டு அகங்கலங்கிய பெற்றோரிவரும் ஒருவாறு ஆறுதல் பெற்று ஏனைய மூவரையும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் கடவுட் பற்றிலும் சிறந்தவர்களாக வளர்த்து வந்தனர்.

தாலாட்டுப் பாடும் போதுகூட இறையுணர்வையும் இன்றமிழ்ச் சுவையையும் கலந்துபாடித் தாலாட்டினர். *தால்* என்றால் நாக்கு என்றும்; *ஆட்டுதல்* என்றால் அசைத்தல் என்றும்; பாட்டு=என்றால் பாடுதல், என்றும் பொருள் கூறுவர். இவ்வாறு நாவை அசைத்துப் பாடுங்கால் ஊன்கலந்து உயிர்கலந்து உணர்வு கலந்து, உறவு கலந்து தாலாட்டுவது தமிழ்ப் பெருமக்களின் இயல்பு. ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிராரோ என்று பாடித் தாலாட்டுவர். ஆர் ஆர் ஓ = குழந்தையே நீ ஆத்திமாலையணிந்த சிவபெருமானின் அருள் பெற்றவனோ? ஆர்-அரிர்-ஓ; அல்லது அழகு பொருந்திய அரியென்றும் திருமாலின் அருள் பெற்றவனோ? ஆர் ஆரோ, புகழ் பெற்று விளங்குகின்ற யார் யாரைப் போல நீ விளங்கப் போகிறாயோ? எதிர்காலத்தில் உன்னைக் கண்டு யார் இந்த

பெருமகன் என்று கேட்கும் வகையில் புகழுடன் வாழப் போகிறாயோ? தால்+ஓ = தால்+ஏல்+ஓ=உன்னுடைய நாவில் ஓம் என்னும் பிரணவ ஒலி ஒன்றி விளங்கிடுமாறு சிறந்த இறையுணர்வும் இயலிசை நாடகப் புலமையும் உடையவனாக விளங்குவாயோ? என்று தாலாட்டுப் பாடுவர். இவ்வாறு பாடி முன்னோர்களின் வீரமும் பரிவும் தீரமும் செய்கையும் கருணையுணர்வும் கல்வியின் தெளிவும் தன்னல மறுப்பும் தாய்மொழிச் சேவையும் மென்மைக் குழந்தைகளின் மெழுகனைய உள்ளங்களில் ஆழங்கால் பட்டு அழுந்திப் பதியுமாறு செய்வர்.

இந்த வகையில் வேம்பப்பிள்ளையும் அவர்தம் விருப்புறு துணைவியும் தங்கள் குழந்தைகளைத் தாலாட்டும்போது முத்தமிழ் மொழியின் முடிவிலாச் சிறப்பையும் இத்தரைதனில் அதன் ஏற்றமும் இயல்பும் கூறி அத்தகு, தமிழ்மொழி இன்று அடைந்துள்ள தளர்ச்சிபற்றியும் தந்திருப்பார்கள் போலும். அதனாற்றான் அவர்களின் புதல்வருள் இளையார்; வயதில் இளையாராயினும் இன்றமிழ்த் தொண்டில் இளையாராகி அந்தமில் புகழ்சேர் தங்கக்கரந்தையில் செந்தமிழ் வளர்க்கும் சிந்தையராகிக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரால் கால் கோள் நடத்திக் கவின் தமிழ் போற்றினார். இதனால் *சங்கம் நிறுவிய துங்கன்* என்று சான்றோர் குழுவால் போற்றிடப் பெற்றார். துங்கனாம் தம்பி நிறுவிய தொல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் *செந்தமிழ்க் காவலராம் உமாமகேசுவரனார்* சிங்கமாய் நின்று போற்றிக் காத்தார் என்றால் இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தவர்கள் தம்மக்களை கருவிலே திருவுடையாராகக் கனியச் செய்தவர்கள் வேம்பப்பிள்ளையும் அவருடைய வித்தகப் பத்தினியாரும் அன்றோ.

இவ்வாறு இவர்கள் தங்கள் கண்மணியனையை குழந்தைகளின் கருத்துச் செறிவினையும், கல்வியறிவினையும் கண்டுகண்டு களிப்புடன் வாழ்ந்து வரும் நாளில்

காமாட்சியம்மையார் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். ஆனால், அக்குழந்தைகள் இறந்துபோயின. இவ் வருத்தத்தாலேயே சின்னாட்களில் காமாட்சியம்மையாரும் இறந்துவிடவே இவ்வம்மையாரின் சிறிய தந்தையார் மகளைத் தம் இரண்டாம் மனைவியாகக் கொண்டார் வேம்பப்பிள்ளை. உயர்ந்த பண்பாளருக்குத் துணைவியாக வந்த இந்த உத்தமியும் தம்முடைய மூத்தாள் பெற்ற குழந்தைகளைத் தம்முடைய குழந்தைகளாகவே கருதிப்பாசம் காட்டிப் பரிவு கூட்டி வளர்த்து வந்தார். உமாமகேசுவரனும் இராதாகிருட்டினனும் செண்பகவல்லியும் தம்மைப் பெற்ற அன்னையைக் காட்டிலும் பெரிதும் அன்பு காட்டிவரும் சிற்றன்னையின் அளவற்ற ஆதரவாலும், அரவணைப்பாலும் நலமாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இந்த அம்மையார் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானார். இந்தக் குழந்தைக்குத் தம்முடைய முதல் மனைவியின் நினைவாகக் காமாட்சியம்மை என்ற பெயரையே சூட்டினார் வேம்பப்பிள்ளை.

இல்லறத்தை இனிதே நடத்தி வந்த வேம்பப் பிள்ளையவர்கள், தஞ்சையில் அக்காலத்தில் சிறப்பாக இயங்கிவந்த தூயபேதுரு கல்லூரியில் (இதுவே தற்காலத்தில் தூயபேதுரு மேனிலைப்பள்ளியாகத் திகழ்கிறது) இடைநிலை வகுப்பில் (இண்டர் மீடியேட் என்றும் F.A. என்றும் அக்காலத்தில் குறிப்பிடுவார்கள்) பயின்றவர். ஆதலால் வல்லத்தில் அப்போழ்து செயல் பட்டு வந்த தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் எழுத்தராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றி வந்தார்.

புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்னமாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர்

என்று புறநானூறு காட்டும் பொற்புடைச் சான்றோர் மரபில் வந்தவராதலால்

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார்"

என்னும் குறட்பாவுக்கேற்ப, நேர்மையுடனும் தூய்மையுடனும் கடமையைக் கண்ணாகக் கொண்டு பணியாற்றி வந்தார் இவ்வாறு இந்தப் பெருந்தகையார்

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற குறட்பாவைக் கடைப்பிடித்து வந்தமையால் *உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ* என்ற பழமொழிக்கேற்ப, மேலும் மேலும் பதவிகளில் உயர்வுகள் பெற்றார். இறுதியாகச் சீர்காழியில் வட்ட ஆட்சியராக நியமிக்கப்பெற்றார். அக்காலத்தில் இந்தியர்கள் அதிக அளவில் அடைந்திராத. பெருமையும் அதிகாரமும் உடைய பதவி அது. அத்தகைய வட்டாட்சியர் பதவியைப் பெற்ற வேம்பப்பிள்ளை, அகந்தையோ அதிகார உணர்வோ இல்லாதவராய் அடக்கத்துடன் அயராது பணியாற்றி அனைவராலும் பாராட்டப் பெற்றார். கடமையில் கண்ணும் கருத்துமாக விளங்கிய வேம்பப்பிள்ளையவர்கள் இளகிய மனம் படைத்தவராதலால், இசைத்துறையிலும் ஈடுபாடுடையவராக விளங்கினார். 'வயலின்' என்று கூறப்படும் *பிடில்* இசைக் கருவியை இசைப்பதில் நல்ல பயிற்சியும் திறமையும் உடையராகத் திகழ்ந்தார்.

இவ்வகையில், *தந்தையறிவு மகனறிவு, தந்தையொப்பர் மக்கள்* என்னும் முன்னோர் மொழிகளுக்கேற்ப, வேம்பப்பிள்ளையிடம் நிறைந்து விளங்கிய உயர் பண்புகள் யாவும் நம் உமாமகேசுவரனாரிடமும் இயல்பாகவே அமைந்திருந்தன. *விளையும் பயிர் முளையிலே தெரியும்* என்பதற்கேற்பத் தம் தந்தையார். வல்லத்தில் வேலை பார்த்த

போது உமாமகேசுவரனாரும் அவ்வூரில் இருந்த பள்ளியில் சேர்ந்து பயின்றபோது முதல் மாணவராகத் திகழ்ந்தார். தந்தையார் கும்பகோணத்துக்கு மாற்றாலாகிச் சென்றபோது தாமும் கும்பகோணம் சென்று கல்வி பயிலத் தொடங்கினர். அக்காலத்தில் எட்டாம் வகுப்புத் தேர்வு (ஈ.எஸ்.எல்.சி.) அரசினரால் நடத்தப் பெற்று வந்தது அத்தேர்வில் நம் உமாமகேசுவரனார் நிறைந்த மதிப் பெண்கள் பெற்றுப் பள்ளியிலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சிபெற்றார்.

இந்நிலையில், அடிக்கடி வெளியூர்களுக்குத் தாம் மாற்றலாகிச் செல்வதால் தம் மகனின் படிப்புக்குத் தொல்லை ஏற்படுவதை உணர்ந்த வேம்பப்பிள்ளை மிகவும் கவலையடைந்தார்.

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்று எண்ணியவர் ஆதலின், 'தம் மகன் தம்மைக் காட்டிலும் உயர்கல்வி கற்றுச் சிறந்த சான்றோனாகப் புகழுடன் திகழவேண்டும்' என்று கருதினர். இதன் பயனாக எண்ணிய எண்ணியாங்கு இயற்றி முடிக்கும் வினைத்திட்பமும் மனநுட்பமும் உடைய அவர், தம்முடைய முதல் மனைவியின் தங்கையும் உமாமகேசுவரனாரின் சிற்றன்னையுமாகிய பெரியநாயகத்தம்மையார் அவர்களின் வீட்டில் மகனைத் தங்கியிருக்கச் செய்ததுடன்; தாம் கல்வி பயின்ற தூயபேதுரு கல்லூரியில் நான்காம் படிவத்தில் சேர்ப்பித்துப்படிக்கச் செய்தார். (அப்போதெல்லாம் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்றாம் வகுப்புகள் முறையே முதல்படிவம், இரண்டாம் படிவம், மூன்றாம் படிவம், நான்காம் படிவம், ஐந்தாம் படிவம், ஆறாம் படிவம் என்று அழைக்கப்பெற்றன. பதினொன்றாம் வகுப்புதான் உயர்நிலைப்பள்ளியின் இறுதி வகுப்பாக அமைந்திருந்தது.)

பெரியநாயகத் தம்மையாரின் கணவரும் வேம்பப்பிள்ளையவர்களின் *சகலர்* என்னும் உறவுடையவரும் ஆகிய சுப்பராய பிள்ளை, கரந்தையில் சிறந்த முறையில் வாணிகம் செய்து, செல்வச் செழிப்பும் சிறந்த புகழும் உடையவராக விளங்கினார். அன்புளம் படைத்த அறவோராகவும் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வண்மையுடையவராகவும்

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்"

என்ற குறட்பாவுக்கேற்ப உற்றார்க்கும், உறவினர்க்கும் மட்டுமல்லாது அற்றார்க்கும் அலந்தார்க்கும் அகமகிழ்ந்து அளிக்கும் அருளாளராக வாழ்ந்தவர் ஆதலால் தம் சொந்த மகனாகிய சிதம்பரத்தின் மீது காட்டிய அன்பைக் காட்டிலும் தம் கொழுந்தியார் - சகலர் - மகனாகிய உமாமகேசுவரனார் மீதும் மிகுந்த அன்பு காட்டி வந்தார். இவ்வாறு தம் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் காட்டிய கங்குகரை காணாத கடல் போன்ற அன்பினாலும், தம்முடைய தங்கையான செண்பகவல்லி, முன்னமேயே அங்குத் தங்கி வளர்ந்து வருகின்ற காரணத்தாலும், உமாமகேசுவரனார் மகிழ்ச்சி நிறைந்த மனநிலையோடு கல்விபயின்றுவந்தார். சுப்பராய பிள்ளையவர்கள் உமாமகேசுவரனாரை அடிக்கடி அழைத்து, அவருடைய உடல் நலம் பற்றியும் கல்விப் பயிற்சி பற்றியும் கேட்டறிந்து, பாராட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தார். எனவே உமாமகேசுவரனாரின் வாழ்வும், வளமும் சுப்பராயபிள்ளை அவர்களுடைய அன்பினாலும் ஆதரவு நிறைந்த மேற்பார்வையாலும் உயர்நிலையடைந்தன எனலாம்.

புகழ் பெற்றுத் திகழ்ந்த தூயபேதுரு கல்லூரியில் நான்காம் படிவத்தில் சேர்க்கப்பட்ட உமாமகேசுவரனார் தம் தந்தையார்; தன்னுடைய முன்னேற்றத்திற்காக எத்துணை முயற்சி

எடுத்துள்ளார் என்பதனை நன்றாக உணர்ந்துகொண்டமையால்

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்

என்னும் குறட்பாவுக் கேற்பத் தந்தையின் கடமையை தன் தந்தையார் தக்கவாறு செய்து முடித்துவிட்டார் எனவே

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல் எனும் சொல்"

என்னும் குறட்கேற்பக் கல்வியிலும் கடமையிலும் ஒழுக்கத்திலும் உழைப்பிலும் உயர்ந்து விளங்குவேன். என்னுடைய தந்தையின் எண்ணத்தை இனிதே நிறைவேற்றுவேன் என்று எண்ணி நன் முறையில் கற்றுவந்தார்.

"கோடல் மரபே கூறும் காலை
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவர் குறிப்பிற்சார்ந்து
இருஎன இருந்து, சொல் எனச் சொல்லி,
பருகுவன் அன்ன ஆர்வத்தனாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவாயாக நெஞ்சு களனாக,"

கல்வியைக் கற்பவனே முதன் மாணாக்கன் என்னும் கொள்கைக்கேற்பக் கல்லூரிக்கு உரிய காலத்தில் சென்று ஆர்வத்துடன் கல்வி கற்றார்.

"ஒரு முறை கேட்போன் இருகால்கேட்பின்
பெருக நூலில் பிழைபாடு இலனே
முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்"

என்ற, இலக்கணத்திற்கு ஏற்ப வகுப்பில் கேட்ட பாடங்களை, வீட்டிற்குச் சென்ற பிறகு பலமுறை படிப்பார்.

அத்துடன் *எருப் போடாதநிலம் உருப்படாது, பாடங்களை உருப் போடாத மாணவனும் உருப்படமாட்டான்* என்பவற்றையுணர்ந்திருந்த உமாமகேசுவரர் மனப்பாடம் செய்ய வேண்டியவற்றைத் தவறாமல் மனப்பாடம் செய்துவிடுவார். சுருங்கச் சொன்னால் *புத்தகப் புழு* என்று சொல்லும் அளவுக்கு எப்பொழுதும் படித்த வண்ணமேயிருப்பர்.

மேலும், ஆசான்பாற் சென்று பயன் பெற்றுக் கொள்ளும் பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தார். உமாமகேசுவரரின் அறிவுத் திறன், அவர் படிப்பின் மீது காட்டிய ஆர்வம், அனைவரிடமும் அவர் அடக்கத்துடனும் பணிவுடனும் நடந்து கொண்ட பண்பின் திறம் ஆகியவற்றைக் கண்ட ஆசிரியர்கள் இவர்பால் மிகுந்த அன்பும் அக்கரையும் கொண்டிருந்தனர். அப்போது இவருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியராக அமைந்திருந்தவர். 'கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர்' என்று மாணவர் அனைவராலும் அலுவலர்களாலும் ஏனையவர்களாலும் புகழப் பெற்ற திருவாளர். *டைகர் சண்முகம் பிள்ளை* என்பார். ஆங்கில இலக்கண இலக்கியங்களில் இவர் புலிபோல் விளங்கியமையால் டைகர் சண்முகம் பிள்ளை என்று சிறப்புப் பட்டத்துடன் அழைக்கப்பெற்றவர். இவர் வேம்பப்பிள்ளையின் நெருங்கிய நண்பர் ஆவார். இத்தகைய ஆற்றல் வாய்ந்த டைகர் சண்முகம் பிள்ளையவர்கள், தம்முடைய ஆருயிர் நண்பரின் அருமருந்தச் செல்வன், உமாமகேசுவரர் என்ற காரணத்தாலும் அவருடைய ஆர்வம் அறிவுநுட்பம் ஆகியவற்றைக் கண்டுணர்ந்ததனாலும் *உமாமகேசுரரை ஆங்கிலத்திற் சிறந்த மேதையாக்க வேண்டும்* என்று பெரிதும் விரும்பினார். இதன் காரணமாக ஞாயிற்றுக் கிழமை தோறும் தாம் குடியிருந்து வந்த தஞ்சையிலிருந்து உமாமகேசுவரர் தங்கிப் படிக்கும் கரந்தைக்கு நடந்தேவந்து ஆங்கிலம் கற்பித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வேம்பப்பிள்ளையவர்கள் மறைந்த பிறகும் இந்த வழக்கத்தை

விட்டு விடாமல் தொடர்ந்து வந்து பாடம் நடத்திவந்தார் என்றால் இவர் தம்முடைய நண்பர் வேம்பப்பிள்ளையின் மீது எத்துணை அன்பும் மதிப்பும் வைத்திருந்தார் என்பதையும், தாம் மேற்கொண்டிருந்த ஆசிரியத் தொழிலின் மீது எத்துணை ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார் என்பதையும் நன்கு தெரிந்து கொள்ளலாம். இத்தகைய உத்தமத்தியாகியால் தான் உமாமகேசுவரர் அவர்கள் ஆங்கிலத்தில் ஒப்பற்ற மேதையாகத் திகழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. இவ்வகையில், நற்பண்புகள் அமைந்த *பெற்றோர்கள்* என்னும் நாற்றங்காலில் முளைத்த *நாற்று* கருணையும் கனிவும் நிறைந்த *சுப்பராயபிள்ளை* தம்பதியர் என்னும் *கழனி*யில் நடப்பட்டது; இப்பயிருக்கு ஆங்கில மேதை சண்முகம்பிள்ளை போன்ற ஆசிரியப்பெருமக்கள் அடியெருவும், மேலெருவும் இட்டு அன்பு நீர் பாய்ச்சி வளர்த்தனர். பலனை இன்றைய தமிழ்ச் சமுதாயம் அறுவடை செய்கிறது என்று கூறலாம் அல்லவா.

கல்லூரியிற் பயின்ற காலத்தில் உமாமகேசுவரர் மேற்கொண்டிருந்த கடமைகள், வழிமுறைகள் ஆகியவையே இவர் பேரறிஞராக வருவதற்கு அடிப்படைகளாக அமைந்திருந்தன எனலாம். இவர் பள்ளி நேரம் தவிரப் பிற நேரங்களில் தம் வீட்டை விட்டு வெளியே எங்கும் செல்வதேயில்லை. வேடிக்கை பார்ப்பதையோ வீண்பொழுது போக்குவதையோ இவர் என்றுமே விரும்பியதில்லை. விரும்பிப் பழகுகின்ற இனிய பள்ளித் தோழர்களின் வீடுகளுக்குக் கூடச் செல்ல மாட்டார். அந்த நண்பர்கள் தாம் இவரைத் தேடி இவர் வீட்டுக்கு வந்து தேவையானவற்றைப் பெற்றுச் செல்வார்கள். விளையாட்டிற் கூட ஆர்வம் கொள்ளமாட்டார். ஆனால் பக்கத்தேயுள்ள மீனாட்சியம்மன் கோயிலுக்கு மட்டும் நாடோறும் செல்வதை மறப்பதில்லை. நீராடி, மிகுந்த பத்தியுணர்வோடு கோயிலுக்குச் சென்று முறையாக வலம் வந்து இதயம் நெக்குருகுமாறு இறைவனை

வழிபட்டபின்னரே வீடு திரும்புவார். இளமையிலேயே ஆழ்ந்த கடவுள் பற்றும் அளவற்ற சைவப் பற்றும் இவர்பால் மிகுந்து விளங்கின. இக்காரணங்களால்

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்"
"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர் போல் எண்ணியுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென
நான் தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்
சிந்தைமிக விழைந்த தாலோ"

என்னும் வள்ளலார் பெருமானின் வாய்மொழிகளுக்கேற்ப உமாமகேசுவரரும் அடுத்தவர் துன்பம் கண்டு அகம் வருந்தும் மனத்தையும், பிறரை மதித்துப் போற்றும் பெருந்தன்மையும் உடையவராக விளங்கினார். இந்நிலையில் இவருடைய தந்தையார் வேம்பப்பிள்ளையவர்கள் பதவி உயர்வு கருதிச் சீர்காழிக்கு மாற்றப்பட்டார். இதனால் தம்முடைய ஏனைய மைந்தர்களையும் மூத்த மகனாகிய உமாமகேசுவரர் படித்து வந்த தூயபேதுரு கல்லூரியிலேயே சேர்ப்பித்துப் படிக்க வைத்தார்.

தம்முடன், தம்முடைய தம்பியரும் கல்லூரிக்கு வரவேண்டியிருந்தமையால் தமக்கென அமைந்த சொந்த வண்டியிலேயே அவர்களையும் அழைத்துக் கொண்டு, கல்லூரிக்குச் சென்று திரும்புவார் உமாமகேசுவரர். பெரும்பாலும், நண்பகல் உணவு பணியாளர்கள் வழியாகக் கொண்டு வரப்படும். சில சமயங்களில் சிறிய தாயார் பெரியநாயகத்தம்மையாரே கொண்டு வந்து பரிமாறுவதும் உண்டு.

இங்ஙனம், சில மாதங்கள் கழிந்த நிலையில் உமாமகேசுவரரின் பாட்டனாரும் வேம்பப்பிள்ளையின் தந்தையுமான வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் இறைவன் திருவடியடைந்தார். அலுவலிலிருந்து மூன்று திங்கள் விடுப்புப் பெற்றுக் கரந்தையில் வந்து தங்கியிருந்த வேம்பப்பிள்ளையவர்கள் தம்முடைய தந்தையாரின் மறைவினால் தாங்க முடியாத துயரத்தில் ஆழ்ந்திருந்தார். இதன் காரணமாக *ஒக்கமடிந்து உடன் கட்டை ஏறினார்* என்று கூறும் வகையில், தந்தையிறந்த பதினான்காம் நாளே வேம்பப்பிள்ளையும் இறைவனடியடைந்தார். "பட்ட காலிலேபடும் கெட்ட குடியே கெடும்" என்னும் பழமொழிக் கேற்ப: இளமையிலேயே பெற்ற தாயை இழந்த துயரத்துடன் வாழும் உமாமகேசுவரர், தற்போழ்து உற்ற தந்தையையும் இழந்து ஆற்றொணாத் துன்பம் அடைந்தார். இவ்வாறு இளமையிலேயே அடுக்கடுக்காகத் துன்பங்களை அனுபவித்ததால் தானோ என்னவோ, உமாமகேசுவரர், தம் வாழ்வில் எத்துணையோ இடையூறுகளும் துன்பங்களும் தடைகளும், எதிர்ப்புகளும் வந்து மோதியபோதிலும்,

"மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடுடைத்து"

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்

என்னும் வள்ளுவன் வாக்குகளுக்கு ஏற்ப இத்துன்பங்களை யெல்லாம் தம்முடைய பட்டறிவு வாழ்வின் படிக்கட்டுகளாக மாற்றிக்கொண்டு

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்; துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு

என்னும் கருத்துக்கு எடுத்துக்காட்டுபோலத் தன்னுடைய கல்வியில் மிகுந்த அக்கறை காட்டி வந்தார் உமாமகேசுவரர்.

"கொடிது கொடிது இளமையில் வறுமை"

என்பார்கள். ஆனால் இளமையில் வறுமையைக் காட்டிலும் மிகமிகக் கொடியது இளமையில் மரணம் என்பார்கள். குழந்தைகள் இளம் வயதிலேயே இறந்து போதல் கொடிது தான் என்றாலும், இளம் வயதுக் குழந்தையர்கள் ஏங்கியழுது தவிக்க, பெற்றோர்கள் இறந்துபோதல் அனைத்தையும் விடக் கொடியது ஆகும். நம் உமாமகேசுவரர் அவர்கள் தம்முடன் பிறந்த தம்பி இறந்துபோன துயரம் நீங்குவதற்குள் இடிமேல் இடிபோலப் பெயர்சூட்டிப் பாலூட்டித் தாலாட்டிய அருமைத் தாயாரையும் இழந்தார். பின்னர் இடிகளுக்கு மேலாகப் பேரிடி வீழ்ந்ததுபோல ஈன்றாளுமாய் தந்தையுமாய் உடன் தோன்றினராய் விளங்கிவந்த தந்தையையும் இழந்தாரென்றால் அவருடைய நிலையை எண்ணிப் பார்க்கவே மனம் கசிகிறதல்லவா. இத்தனைத் துன்பங்கள் தொடர்ந்துவரினும் துவளாத உள்ளத்துடன் தளராத தொண்டுசெய்ய இவரால் எங்ஙனம் இயன்றது என்ற வினாவுக்கு கம்பன் காட்டிய இராம-இலக்குவர்களின் உரையாடலே இவ்வினாவுக்கு உரியவிடையாக நினைக்கத் தோன்றுகிறது.

இராமனும் இலக்குவனும் சீதையும் குகனுடைய படகில் ஏறி வனத்தைச் சென்றடைகின்றனர். அவர்கள் தங்கியிருக்கும் வகையில் பன்னக சாலையொன்றை அங்கு இளையவன உருவாக்குகின்றான். பன்னக சாலைகள் பல அமைத்துப் பழகியவனைப் போலப் பண்ணவனான இராமன். எழிலுறச்

சாலை அமைத்த இளையானை அழைத்து இறுகத் தழுவிக் கொண்டு கேட்கிறான்.

குன்றுபோலக் குவலிய தோளினாய்
என்று கற்றனை நீயிதுபோல் என்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்.

மலைபோன்ற தோள்களைப் படைத்த மாவீரனே! என்னுடன் அரண்மனையில் வாழ்ந்து வந்த நீ, இவ்வாறு சிறப்பு வாய்ந்த பன்னக சாலை அமைக்கும் கலையை எப்போது கற்றுக் கொண்டாய் என்று கேட்கிறான். அவ்வாறு வினவும்போழ்து அவனுடைய தாமரை போன்ற கண்களிலிருந்து பனிபோன்ற கண்ணீர் வழிகின்றதாம். இஃதென்ன வியப்பு. கண்ணீர் வெப்பமாகவன்றோ விருக்கும். அவ்வாறிருக்க இராமனின் கண்ணீர் மட்டும் பனிபோன்று தட்பமாகக் குளிர்ந்து வழியக் காரணம் என்னவென்றால். தம்பிக்கு ஏற்பட்ட துன்பம் காரணமாக வழிந்த கண்ணீரன்று அஃது அவனுடைய சகோதர பாசம், ஆற்றல், முயற்சி ஆகியவற்றை நினைந்து இராமன் வடித்த மகிழ்ச்சிக் கண்ணீர். அதனால் தான் அது பனிபோலத் தண்மையாக உள்ளதாம். சரி தமையன் வினவிய வினாவிற்குத் தம்பி கூறிய விடையைக் கவனிக்கவேண்டாவா? இலக்குவன்,

"எந்தை காண்டி இடரினுக்கு அங்குரம்
முந்திவந்து முளைத்தன்றோ"
என்னுடைய தந்தை போன்றவனே!

துன்பங்கள் மேலும் மேலும் வந்து மோதும் போது அவற்றையெல்லாம் வெல்வதற்கரிய நங்கூரம் போன்ற ஆற்றல் ஒருவனுக்குத் தானாகவே வந்துசேரும் அல்லவா என்று விடை கூறுகிறான். இதைப்போலவே நம்முடைய உமாமகேசுவரர் வாழ்விலும் இத்தகைய சிறப்புகள், இழப்புகள், துன்பங்கள் துயரங்கள் எல்லாம் நேர்ந்தபோது

வெற்றிகொள்ளும் விவேகமும் வீரமும்
முந்தி முந்தியே வந்து முளைத்ததை

என்று கூறும் வண்ணம் அவருள்ளத்தில் தளராமையும் தன்னம்பிக்கையும் உறுதியும், ஊக்கமும் எழுந்து அவரை ஆற்றல் மறவராக்கின என்றால் அதுமிகையாகாது.

கரந்தைத் தலைவரும், ஏனைய காவியத் தலைவர்களும் இவ்வாறு சோதனைகள் பல வந்து சூழ்ந்து நின்றபோதிலும் சோர்ந்து விடாமல் மனத்துணிவுடன் அவற்றை எதிர்கொண்டு நின்று மதியாலும், மனந்தளராத உழைப்பாலும் மட்டற்ற முயற்சியாலும் மாபெரும் சாதனைகளைச் செய்துகாட்டிய காவிய நாயகர்கள் நம் கரந்தை நாயகர் உமாமகேசுவரர் போன்றவர்களின் வரலாறுகளைப் படிக்கும் தற்கால மக்கள் இத்தகைய சான்றோர்களுக்கே இத்துணைத் துன்பங்கள் வந்தனவென்றால் நமக்கு இவற்றைவிடக் கொடிய துன்பங்கள் அல்லவோ வந்து சேரும். நாமும் அவர்களைப் போன்றும் துணிவுடன் எதிர்த்து நின்றால் இறுதியில் வெற்றியடைவோம் என்றுணர்வீர்களாக.

சுப்பராய பிள்ளையும் அவர் தம் அன்புத் துணைவியாரும், பெற்றோரை இழந்து பெருந்துயரால் வருந்தும் பிள்ளைகட்கு ஆறுதல் மொழிகள் பல புகன்று அன்பும் ஆதரவும் அளித்தனர்; பெற்றோரினும் மிக்க பேரன்புகாட்டி இவர்களை வளர்த்து வந்தனர். எனவே, பெற்றோரை இழந்த கவலை, பிள்ளைகட்குத் தெரியாது போயிற்று.

சுப்பராய பிள்ளையைவிட அவர் மனைவி பெரியநாயகத்தம்மையாருக்கே பொறுப்புகள் மிகுதியாயின. தாம் பெற்ற ஒரே மகன், சிதம்பரத்தைவிடத் தம் தமக்கை மக்களையே மேலாகப் போற்றி வந்தார் அவ்வம்மையார். உயர் குடியிற் பிறந்து, உயர் குடியிற் புகுந்து, உயர்ந்த முறையில்

மனையறங் காத்துவரும் மாண்புடையவர் ஆதலின், உமாமகேசுவரரைத் தம் மூத்த மகனாகவே கருதி வளர்த்து வந்தார். இந்நிலையில், 'இவ்வுலக வாழ்விற்குப் பொருளே பெரிதும் வேண்டற்பாலது எனக் கருதிய சுப்பராயபிள்ளை, *உமாமகேசுவரனாரை* மேல் படிப்பிற்கு அனுப்பிவைக்காமல், வாணிகத் துறையில் ஈடுபடுத்த வேண்டும் என விரும்பியபோது அவ்வெண்ணத்திற்கு முற்றிலும் மாறாக நின்று, *உமாமகேசுவரனாரை* மேற்படிப்பு படிக்க வைத்த பெருமை கற்பிற் சிறந்த இவ்வம்மையாருக்கே உரியது! இஃதன்றித் தமிழவேள் அவர்கள், பிற்காலத்தில், 'தமிழின் வாழ்வே தம் வாழ்வு' எனக் கொண்டு, கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவராயமர்ந்து அதனைப் புரந்த காலை, தமிழவேளின் விருந்தினராக வரும் தமிழுலகப் புலவர்களும் அன்பர்களும் உள்ளங்களிக்குமாறு அவர்கள் வேண்டிய உதவி களனைத்தையும் அளித்துதவிய சிறப்பும் இவ்வம்மையாருக்கு உண்டு. மேலும், உற்றார், உறவினர், அறிந்தார், அறியாதார் என்ற வேறுபாடின்றி, யாவர்க்கும் வேண்டிய மருந்துகளை அள்ளி வழங்கி, அன்புடன் காத்தருளிய கொடை வள்ளலாக விளங்கியவர்; தம் செல்வக் குடும்பத்தினைச் சார்ந்தவர்கட்கும், பணியாளர்களுக்கும், இரவலர்க்கும், பிறர்க்கும் நாடோறும் தம் அறக்கரங்களால் அமுதனைய இன்சொல்லோடு, நல்லமுதை வாரி வழங்கிய வகையில் ஒரு கற்பகத் தருவாகவும், ஒரு காமதேனுவாகவும் விளங்கியவர். இத்தகு நல்லவரான அம்மையார், உமாமகேசுவரரின் இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொண்டு உழைத்தவர். உமாமகேசுவரர் இறந்தபின்னரும் சில ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, தம் 95-ஆம் வயதில் (27-7-1949இல்) மறைந்தனர். இவ்வம்மையாரின் உள்ளன்போடு கூடிய வளர்ப்பு முறையே, உமாமகேசுவரனாரை உலகில் ஒரு தனி மனிதராக-ஒப்பற்ற தலைவராக-தமிழவேளாக-ஆக்கியது எனத் துணிந்து கூறலாம்.

வளர்ப்பன்னையின் ஊக்கமும், இயற்கையறிவும் துணை செய்யத் தஞ்சைத் தூயபேதுரு கல்லூரியில் இளங்கலை வகுப்பு (B.A.) வரை படித்து வெற்றி பெற்றார் *உமாமகேச்வரனார்*. உடனே, தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எழுத்தர் பணியை மேற்கொண்டார். காலையில் பத்து மணிக்கு அலுவலகம் செல்பவர் இரவு பத்து மணிக்கே வீடு திரும்புவார்; வேலை மிகுதியால் குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொள்வதில்லை; இதனால் இவருடல் மெலியலாயிற்று. இதுகண்ட சிறியதந்தை சுப்பராய பிள்ளைக்கு *உமாமகேசுவரனார்*, வேலை பார்ப்பது பிடிக்கவில்லை; 'வேலை வேண்டாவென்று சொல்லிவிடு' என்று ஓயாமல் சொல்லிக்கொண்டேயிருந்தார். அதற்கேற்றாற்போல், நேர்மையின் உறைவிடமாக விளங்கிய *உமாமகேசுவரனாருக்கும்* நேர்மையற்ற துணைமாவட்ட ஆட்சியருக்கும் (Deputy Colletor) சிறிது மனத்தாங்கல் உண்டாயது. இதனால் தம் வேலையை வேண்டாமென்று உதறித்தள்ளிவிட்டு, மேற்கொண்டு என்ன செய்யலாம் எனச் சிந்தித்தார் *உமாமகேசுவரனார்*. அப்போது, தஞ்சையில் கே. சீனிவாச பிள்ளை என்பார் சிறந்த வழக்கறிஞராக விளக்கமுற்றுத் திகழ்ந்தார். ஆட்சியாராலும் பொதுமக்களாலும் பெரிதும் போற்றப்பட்ட அன்னாரைப் போலத், தாமும் சட்டப் படிப்புப் பயின்று, வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்வதே நலம் எனக் கருதினார். எனவே, சென்னை செல்லத் திட்டமிட்டார். இவர்தம் உள்ளக்கிடக்கையை உணர்ந்து செயல் புரியும் சிற்றன்னையார், *உமாமகேசுவரனாரை* அழைத்துக்கொண்டு சென்னை சென்று, தம் குடும்ப நண்பர் ஒருவரது இல்லத்தில் அவரை இருக்கச் செய்து, திரும்பினார். இடையிடையே தாமும் சென்னைக்குச் சென்று சின்னாட்டங்கி *உமாமகேசுவரனாரின்* உடல் நலமறிந்து வருவார்.

சென்னைச் சட்டக் கல்லூரியிற் சேர்ந்த *உமாமகேசுவரனார்*, சட்டக்கலைத் தேர்விலும் **(B.L.)** வெற்றி பெற்றுக் கரந்தை திரும்பினார்; அக்காலத்தில் தஞ்சை கே.சீனிவாசம் பிள்ளையைத் தெரியாதார் தமிழகத்தில் யாரும் இருந்திருக்க முடியாது. சிறந்த வழக்கறிஞர்; நல்ல தமிழறிஞர். *தமிழ் வரலாறு* போன்ற ஆராய்ச்சி நூல்களை ஆக்கித் தந்தவர்; தஞ்சை நகரவைத் தலைவராயிருந்து நல்ல பணிகள் பல புரிந்தவர்; ஆங்கில அறிவுடன், ஓரளவு வடமொழியும் தெரிந்தவர்; சட்டத்துறையில் வல்லவர்; பெரிய வழக்குகளை எடுத்து நடத்தி வெற்றி தேடித் தருவதில் கைதேர்ந்தவர்; பொறியியலிலும் போதிய அறிவு பெற்றவர். இன்னோரன்ன தன்மைகளால் அவர் புகழ்யாண்டும் பரவியிருந்தது. மேலும், இவர் வேம்பப்பிள்ளையின் நெருங்கிய நண்பரும் பள்ளித் தோழருமாவார். எனவே, அன்னாரிடம் வழக்குப் பயிற்சி **(Practice)** பெறுதல் நன்றெனக் கருதினார் உமாமகேசுவரர். அவ்வாறே சில ஆண்டுகள் அவரிடம் பயிற்சிபெற்று, வழக்குரைக்கும் வன்மையறிந்து, பின்னர்த் தாமாக அத்தொழிலைச் செய்யத் தொடங்கினார்.

மணவாழ்வு

இதற்கிடையில் *உமாமகேசுவரனாருக்கு* மணமுடித்து வைக்க வேண்டுமெனச் சிற்றன்னையார் விரும்பினார். அன்னையின் அன்புக் கட்டளைக்கு எதிர் நிற்பாரோ *உமாமகேசுவரனார்?* உடன்பாட்டினைத் தெரிவித்தார். திருச்சியில், நெருங்கிய உறவினாராகவும், செல்வக் குடும்பத்தினராகவும் திகழ்ந்தார் தாசில்தார் அண்ணாமலைப் பிள்ளைஎன்பார். அவருடைய தம்பியார் அரங்கசாமிப் பிள்ளை என்பார்க்கு அருமைத் திருமகளாராக உலகநாயகி என்னும் அம்மையார்; அறிவும் திருவும் ஒருங்கே பெற்றவராக விளங்கினார். அத்தகு நல்லாரே *உமாமகேசுவரனாரின்* வாழ்க்கைத் துணைவியாவதற்கு உரியர் எனச் சிற்றன்னையார் கருதினார்.

நல்ல நாளும் வேளையுங் கூடிய பொன்னாளில், கருத்திட்டைக்குடியில், உமாமகேசுவரனாருக்கும் உலகநாயகி அம்மையாருக்கும் ஊரார் போற்றும் திருமணம், உயரிய முறையில் சிறப்புடன் நிகழ்ந்தது. அப்போது உமாமகேசுவரனாருக்கு ஏறத்தாழ இருபத்தைந்து வயது இருக்கலாம்.

உமாமகேசுவரனாரின் மனத்திற்கேற்ற மங்கையாக உலகநாயகி விளங்கினார்; தம் கணவரது குறிப்பறிந்து, குணத்திற்கேற்பப் பழகும் பண்பினராகவும், துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறியார்மாட்டு அருளுடைமை, முதலிய நற்குணங்களையும், வாழ்வுக்கு வேண்டும் பொருள் அறிந்து கடைப்பிடித்தல், அட்டில்தொழில் வன்மை, ஒப்புரவு முதலிய நற்செயல்களைச் செய்யும் ஆற்றலையும் பெற்றவர்; கற்பெனுந் திண்மையைப் பொற்புடன் போற்றி ஒழுகுபவர்; 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்' எனும் பொய்யாமொழிக்கேற்ப, மெய்ம்மையாய் ஒழுகும் மாதரசி; இத்தகைய மங்கைநல்லாளின் மலர்க்கரம்பற்றிய நாள் முதல் உமாமகேசுவரனாரின் வாழ்வு முன்னிலும் பன்மடங்கு சிறந்தோங்கி வளரத் தலைப்பட்டது. 'இல்லவள் மாண்பானால் இல்லது என்?' என்பது பொன்னுரையன்றோ?

கருத்தொருமித்த இவ்விருவர்தம் இல்வாழ்க்கையின் பயனாய்த் தோன்றிய மக்கள் மூவர். முதலாமவர் *பஞ்சாபகேசன்* என்னும் பெயரினர்; அடுத்தவர் *மாணிக்கவாசகம்* என்பவர்; மூன்றாமவர் *சிங்காரவேலு* என்பவர்.

சிங்காரவேலு பிறந்த நான்காவது திங்கள் கடந்த நிலையில், தம் வாழ்வின் இன்ப துன்பமனைத்திலும் பங்குபெற்றுத் தம் பொதுநலப் பணிக்கும்-தமிழ்ப் பணிக்கும் எவ்வித இடையூறும் நேராவண்ணம் பெருந் துணையாக நின்ற

அருமைத் துணைவி உலகநாயகியை உமாமகேசுவரனார் இழக்க நேர்ந்தது. உடல்நலக்குறைவால் உலகநாயகியம்மையார் தம் அன்புக் கணவரும் அருமைக்குழந்தைகளும் கண்ணீர் சிந்திக் கலங்கித்தவிக்குமாறு இறைவனடி சேர்ந்தார் கொடுமையினும் கொடுமை! என்று கூறுமாறு இராட்சச ஆண்டு பங்குனித்திங்கள் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று, *காலன்* என்னும் கண்ணிலி, உலகநாயகியின் உயிரைக் கவர்ந்து சென்றான்; ஊழின் வலியோ, பெரிது பெரிது! என்று உமாமகேசுவரரும் உற்றார் உறவினரும் உருகிக் கண்ணீர் சிந்தினர்.

மகன் பஞ்சாபகேசன்

பெற்றெடுத்த மக்கள் மூவரில் 'முதல்மகன்' என்னும் பெயருக்கேற்பப் பஞ்சாபகேசன் (தோற்றம்: 22-7-1909) அனைத்துத் துறைகளிலும் முதல்வனாக விளங்கி வந்தான். தன் அன்பாலும் நுண்ணறிவாலும் அனைவருடைய உள்ளங்கங்களையும் கவர்ந்ததுடன், கல்வி கற்பித்த கணக்காயர்க்கும் மிகுவியப்பினையும் மகிழ்ச்சியினையும் தந்து வந்தான். பள்ளியில் தனக்கு நிகர் எவனுமில்லை எனுமளவில் அனைத்துத் துறைகளிலும் முதன்மைபெற்று விளங்கி வந்தான். ஒருநாட் பழகியோரும் தனது அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலிய உயர்குணங்களை நன்கு அறிந்து பெருமகிழ்வுற நின்றவன். தம்கடமைகள் எத்துணையவாயினும் எச்சம் சிறிதும் வையாது உடனுக்குடன் அவற்றை முடித்துக் காட்டும் ஆற்றல் நிறைந்த பேராண்மையாளன். தம் தந்தையார் வளர்த்துவரும் கரந்தைத் தமிழ்ச்சங்கம்ஆகியபயிருக்கு நற்றொண்டாகிய நன்னீர் விட்டு நாளும் காத்துவரும் கடமையாளன். *தமிழவேளுக்குப் பின் சங்கத்தைப் புரந்துவருபவரில் இவனை விஞ்சுவார் எவரும் இருத்தல் இயலாது!* எனப் பலரும் மெச்சுமாறு திகழ்ந்தவன். இவ்வாறு பெருமைப்பட்டுக் கொண்டிருந்த காலத்து, அப்பெருமை யனைத்தும் ஒருங்கே இடிந்து சுக்குநூறாகுமாறு, தன் பதினாறாம் வயதிலேயே - (அட்சய புரட்டாசி 15 வெள்ளி) பள்ளியிறுதி வகுப்பில் பயிலுங்

காலத்திலேயே - இறைவன் இணையடியினை எய்தி விட்டான்! இளமையிலேயே பெற்றோரை இழந்து, பின்னர் தம் ஆருயிர்த் துணைவியையும் இழந்து, மருகி நின்ற உமாமகேசுவரனார் உள்ளத்துப் பின்னும் பேரிடி விழுந்துவிட்டது. அந்தோ! அருமருந்தன்ன மகன் பஞ்சாபகேசன் பரமனடி சேர்ந்தான். மகனையிழந்த உமாமகேசுவரர் மனம்நொந்து வாடினார். அவனையிழந்து, அருமைத் தந்தையார்மட்டுமா உருகி நின்றார்? அன்று, அன்று! அவனோடு உரையாடியவர், நெருக்கமாய்ப் பழகியவர், அவனின் பண்புகளை உடனிருந்து அறிந்தவர், "அவனால் கரந்தைத் தமிழ்ச்சங்கம் ஒப்புயர்வற்ற பெருங்கோட்டையாய்த் திகழப் போகிறது" என மனக்கோட்டை கட்டியவர் அனைவருமே வருந்தி அரற்றினர்; அழுதனர்; புலம்பினர்; உருகிநின்றனர்.

பஞ்சாபகேசன் மறைந்து போனாலும் அவனை என்றும் நினைவுகூர்தற் பொருட்டுக் கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியில் *'பஞ்சாபகேசன் அவை'*(மன்றம்) *என்பதொன்று 20-10-1926 இல் தோற்றுவிக்கப் பெற்றது.* உமாமகேசுவரனாரும், தம் மகன் பெயரால் நினைவு நிதி ஒன்று ஏற்படுத்தி, ஆண்டுதோறும் ஏழைமாணவர்கட்கு உண்டி உடை முதலியனவும் கொடுத்துவரலானார்.

உமாமகேசுவ்ரரின் அடுத்த இருமக்களுள், மாணிக்கவாசகம் என்பார், பிணிகள் பல அணியணியாக வந்துற அவற்றால் எவ்வித வேலையும் செய்யமுடியாத நிலைக்கு ஆளானார். சிங்காரவேலு என்பார், ஆங்கிலக் கல்விகற்று, மருத்துவராகச் சென்னையில் *பணிபுரிந்து சிறப்பாக வாழ்ந்தார்.*

இவ்வாறு, வாழ்வில் அல்லல் பல உற்ற உமாமகேசுவரனாரை, நண்பர் பலர் நெருங்கி, மறுமணம் செய்து கொள்ளுமாறு எத்தனை முறை கூறியும் எத்துணையோ முயன்றும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. "ஒருத்திக்கு

ஒருவனாயின், ஒருவனுக்கும் ஒருத்தியே" என்று கூறி, நண்பர்களைக் கடிந்து கொண்டார். வெறும் பேச்சளவில் நில்லாமல், வாழ்வின் இறுதிவரையிலும் உண்மையான ஒழுக்க சீலராய்க் கொழுங்குடிச் செல்வராய் விளங்கினார் உமாமகேசுவரனார் என்னின் இவர்தம் பண்பின் தன்மையை எங்ஙனம் இயம்புவது?

சங்கத் தலைவர்

தமிழ்ச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் தமிழ்மக்கட்குத் தனித்தமிழ் உணர்ச்சியையும், நாட்டுப்பற்றையும் ஊட்டித் தமிழ்மொழி, பிற மொழியின் உதவியின்றித் தானே தனித்தியங்கவும், செழித்தோங்கவும் வல்லது என்பதனை உலகிற்கு அறிவிக்கும்வகையில் சிறந்த பணியாற்றிப் புகழுடன் மிளிரும் சங்கம்; (1) தான் வழங்குகின்ற நாட்டிலுள்ள ஏனைய மொழிகளைக் காட்டிலும் இலக்கண இலக்கியங்களைப் பெற்றிருப்பதே உயர்மொழியாகும். (2) ஏனைய மொழிகளின் துணையுமின்றித் தானே தனித்துவழங்கும் ஆற்றலும் தகுதியும் வாய்ந்ததே தனிமொழியாகும். (3) திருந்திய பண்பும், சீர்திருத்த நாகரீகமும், பொருந்திய தூய மொழியே புகழ் செம்மொழியாம். எனவே, இத்தகுதிகளையெல்லாம் பெற்றிருக்கின்ற ஒண்டமிழ் மொழியை உயர் தனிச் செம்மொழி என்று கூறலாம் என்று அறிவுறுத்திய-சங்கம்; தமிழர்கள் தங்கள் பெயருக்கு முன் *ஸ்ரீமான், ஸ்ரீமதி, ஸ்ரீ* என வடமொழிச் சொற்களைப் பெய்து எழுதி வந்த நிலையை மாற்றி, முறையே *திருவாளர், திருவாட்டி, திரு* என்ற தனித் தமிழ்ச் சொற்களைப் பெய்து எழுதுமாறும் அங்ஙனம் எழுதுதலையே சிறப்பாகக் கொள்ளுமாறும் தமிழ்மக்கட்கு அறிவுறுத்தி வெற்றிகண்ட-சங்கம்; ஆண்டு தோறும் நூற்றுக் கணக்கான செந்தமிழ்ப் புலவர்களை

உருவாக்குதற்கு வழிவகுத்துக் கொடுத்த-சங்கம்; தமிழ் மொழிக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் அமைத்தல் வேண்டும் என இடையறாது எடுத்துக்கூறி, அதன் பயனாய் அண்ணாமலை நகரில் அரியதொரு பல்கலைக்கழகம் உண்டாக வழிகோலிய-சங்கம்; *சில்லா போர்டு, தாலுகா போர்டு, பஞ்சாயத்துப்போர்டு, முனிசிபாலிட்டி* எனத் தமிழகத்தில் அமைந்த கழகங்கட்குப் பிறமொழிப் பெயர்களை அமைத்து, வழங்கிவந்த நிலைமையை மாற்றி, இக்கழகங்கட்கு முறையே ***நாட்டாண்மைக் கழகம், வட்டாண்மைக் கழகம், ஊராண்மைக் கழகம், நகராண்மைக் கழகம்*** என்ற தனித் தமிழ்ப் பெயர்களையமைத்து, ஆட்சி முறையில் இப்பெயர்களே பெரும்பாலும் வழங்கும் வண்ணம் செயல்புரிந்த-சங்கம்; சாதிசமய வேறுபாடின்றித் தமிழர் அனைவரும் பயன் பெறத் தக்கவகையில், தொடக்கப்பள்ளி, உயர்பள்ளி, புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவரில்லம், நூல்நிலையம், படிப்பகம் முதலியவற்றை வைத்து நடாத்திக் கொண்டு வரும்-சங்கம்; நாட்டில் நல்ல தமிழ் நடமாடத் 'தமிழ்ப் பொழில்' என்னும் திங்களிதழை வெளியிட்டு வரும்-சங்கம்; ஆம், அதுவே கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்னும் கரந்தை சிறந்த தமிழ்ச் சங்கமாகும்!

தமிழவேள் உமாமகேசுவரனாரின் வாழ்வும், வளமும், ஏன் முடிவுங்கூடக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கென்றே அமைந்துவிட்டன என்று கூறலாம். தமிழவேள் அவர்களின் வாழ்க்கை வரலாறு முழுதுமே சங்கத்தோடு பின்னிப் பிணைந்துவிட்டன. தமிழவேளையும் சங்கத்தையும் பிரித்துப் பார்த்தல் இயலாது. தமிழ் தமிழ் என்று சொல்லிப் பார்த்தால் இறுதியில் *அமிழ்து* என்று முடியும். அதேபோல் அமிழ்து அமிழ்து என்று சொல்லிக்கொண்டேபோனால் இறுதியில் ***தமிழ்*** என முடியும். இதனால்தான் 'தமிழே, அமிழ்து' என்றும் அமிழ்தே, தமிழ் என்றும் கூறுவார்கள். இதைப்போலவே, சங்கமே- தமிழவேள்!தமிழவேளே!-சங்கம்! என்று கூறிவிடலாம்.

எனவே இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிய செய்திகளை அறிந்துகொள்வதன் வாயிலாகத் தமிழவேளின் வரலாற்றையும் அறிந்தவர்களாவோம்.

அரிய பெரிய செயல்களைச் செய்தற்குப் பலரது கூட்டு முயற்சி தேவைப்படுவது உண்மையே. என்றாலும் பலரது கூட்டுறவின் துணை இல்லாமலுங்கூடத் தனி மனிதர் சிலர், செயற்கரிய செயல்களைச் செய்துகாட்டியும் உள்ளனர். உயர்ந்த உள்ளமுடையோர் ஒரு சிலரே இருந்தாலும் அவர்களால் உலக முழுமைக்குமே நன்மை கிடைப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தோற்றமும் இத்தகையதாகவே காணப்படுகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் தோற்றத்தைக் காண்பதற்கு முன், மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றியும் ஓரளவு தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

முச்சங்கங்களை வைத்து முத்தமிழை வளர்த்த சிறப்பும்- பெருமையும் பாண்டியர்க்கே உரியன. முதலிரு சங்கங்களையும் கடல் கொள்ளை கொண்டுபோக, மூன்றாஞ் சங்கத்தைக் காலம் கொள்ளை கொண்டு போயிற்று. இந்நிலையில் பெரியார் ஒருவர் தோன்றினார். அவரே, 'பாவேந்தர் எல்லாரும் இலவம் பஞ்சாய்க் காற்றில் பறக்கையிலே, தேவேந்திரதாரு வொத்தாய்' என்று புலவர்களாற் பாராட்டப்பெற்ற இராமநாதபுரம் சேதுபதிகளின் மரபைச் சேர்ந்தவரும், சென்ற நூற்றாண்டில் தூயதமிழ்த் தொண்டாற்றிய பெருந்தகையும், இராமநாதபுரச் சீமையை மேற்பார்த்து ஆட்சி புரிந்தவருமாகிய பொன்னுசாமித் தேவருடைய அருந்தவச் செல்வர்-*பாண்டித்துரைத்* தேவராவார். பைந்தமிழை வளர்க்கும் பெருநோக்கங் கொண்ட அவர் நான்காம் தமிழ்சங்கத்தை மதுரையில் நிறுவினார். அவர் நிறுவுவதற்கும் காரணம் இல்லாமலில்லை!

ஒரு சமயம் இவர் மதுரை வந்தபோது, திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் பார்க்க வேண்டுமென விரும்பி, எவரிடமாவது இருந்தால் வாங்கிக் கொண்டு வருமாறு ஆள் அனுப்பினார். ஆனால் எவரிடமும் இவ்விரு நூல்களும் இல்லை. இறுதியில் புத்தகக் கடையிலிருந்தே அவை விலைக்கு வாங்கப்பெற்றன. சங்கம் வளர்த்த தமிழ் மதுரையில் தமிழ் நூல்களாகிய குறளும், கம்பராமாயணமும் ஒருவரிடத்தும் இல்லாமை கண்டு மனங் கவன்ற பாண்டித்துரைத் தேவர், மதுரைமாநகரில் தமிழ்ச்சங்கம் ஒன்றை எவ்வாற்றானும் தொடங்க வேண்டுமென உள்ளத்தே உறுதிபூண்டார். 'எண்ணிய எண்ணி யாங்கு எய்தும்' திண்ணியராதலின், அவரது முயற்சியால் *1901-ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ஆம் நாளன்று மதுரைத் தமிழ்ச் சங்கம்* தோற்றுவிக்கப் பெற்றது. இதற்குப் பேருதவிபுரிந்த பெருந்தகையாளர் இரா்மநாதபுரத்தரசரேயாவார்.

தமிழ் மக்களிடையே மொழியுணர்ச்சி பரவிப் பெருகுதற்கு இச் சங்கம் செய்த தொண்டுகள் பலப்பல. தனித் தமிழ்த் தேர்வுகளை ஏற்படுத்தியும், *சேதுபதி செந்தமிழ்க் கல்ாசாலை* என்னும் பெயரால் மாணவர்கட்கு உண்டியும், உறையுளும் தந்து தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தும் வந்ததன் பயனாக மாணவர்கள் பலர் தமிழ்மொழியில் நிறைந்த புலமை பெறுவாராயினர். இப்போது நமது தமிழ் நாட்டில் தமிழ்த் தொண்டாற்றிவரும் புலவர் பெருமக்களுள் பலர் இச்சங்கத்தினின்றும் வெளிப்போந்தவர்களே. மேலும் இச்சங்கம் *'பாண்டியன் புத்தகசாலை'* என்ற பெரியதொரு நூல் நிலையத்தை அமைத்து, அரிய பல ஏட்டுச் சுவடிகளைத் தொகுத்து அவற்றுள் சிலவற்றை அச்சேற்றி வெளிக்கொணர்ந்த பெருமையும் இச் சங்கத்திற்கு உண்டு. *'செந்தமிழ்'* என்னும் திங்கள் ஏட்டின் வாயிலாகப் பெரும் பெரும் பேராசிரியர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுப் புலவர் உலகம் மகிழுமாறு செய்தும் வருகின்றது.

முன்னர் இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாக்கள் தமிழ் நாட்டின் பல்வேறிடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றுவந்தன. அதன் பயனாய் ஆங்காங்கே பல சங்கங்களும், கழகங்களும் தோன்றலாயின.

தஞ்சைத் தமிழ்ச் சங்கம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 9-ஆம் ஆண்டுவிழா, தஞ்சை நகரில் சிறப்புற நடந்தது. அதனைக் கண்ட தமிழன்பர் சிலர், தஞ்சையிலும் ஒரு தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிக்க உளங்கொண்டனர். அதன் பயனாகத் *தஞ்சைத் தமிழ்ச் சங்கம்* என்பதொன்று தோன்றியது. இதன் சார்பில் *தமிழகம்* என்ற இதழும் வெளிவந்தது. எனினும் இச் சங்கம் நீடித்து நிற்கவில்லை. போற்றுவாரும், கொண்டு செலுத்துவாரும் இல்லாமையால், சில ஆண்டுகள் நின்று, தன்னாலியன்ற தொண்டுகளைச் செய்து மறைந்து போயிற்று. இச்சங்கத்தின் தலைவராகப் பாப்பா நாடு-சமீன்தார் சாமிநாத விசய தேவரும், அமைச்சராக இராசம் ஐயங்காரும், உறப்பினர்களாகப் பண்டித உலகநாத பிள்ளை முதலானோரும் இருந்தனர் என்பர்!

தஞ்சைத் தமிழ்ச் சங்கம் மறைந்தாலும், தமிழ்ச்சங்கம் பற்றிய எண்ணமும் ஏக்கமும் தமிழன்பர் சிலரிடமிருந்து, மறையவில்லை; மறாக வளரத் தலைப்பட்டன! தஞ்சையில் தூயபேதுரு கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்துவந்தவர் விசுவலிங்கம்பிள்ளை என்பவர். அவருடைய மகன் *புலவர் வி.சாமிநாதபிள்ளை* என்பார். தமிழ் இலக்கண இலக்கியங்களில் பெரும் புலமை பெற்று போற்றப்படும் *அரசஞ்சண்முகனாரும்* இவரும் நெருங்கிய நண்பர்கள்.

ஒருமுறை, அரசஞ்சண்முகனார், தமது 'தொல் காப்பியப் பாயிரவிருத்தி' நூலை அச்சிடுதற்கெனத் தஞ்சை வந்திருந்தார். அப்போது அவருடைய தூண்டுதலினாலும் புலவர் சாமிநாத பிள்ளை போன்றவர்களின் முயற்சியினாலும், கரந்தையில்,

வடவாற்றங்கரையிலமைந்த *பஞ்சநதப் பாவா மடத்தில்* தமிழ்ச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. அக்காலையில் வங்காளத்தில், கவி இரவீந்திரரின் *சாந்திநிகேதனம்* புகழ்பெறத் தொடங்கிய காலமாதலின், அதனைப் பின்பற்றி இந்தத் தமிழ்ச் சங்கத்திற்கு *வித்தியாநிகேதனம்* என்று பெயர் சூட்டப்பெற்றது.

அரசஞ்சண்முகனாரின் நண்பரும், தமிழ் வடமொழி, ஆங்கில நூலாராய்ச்சியையே பொழுது போக்கும் விளையாட்டாகக் கொண்டவரும், மருத்துவ நூற்பயிற்சி உடையவரும், பெருநிலக்கிழாரும் பெருவள்ளலுமாகிய அரித்துவாரமங்கலம் *வா.கோபாலசாமி இரகுநாத இராசாளியார்* என்பாரே இச் சங்கத்தின் தலைவராவர்; *வி. சாமிநாத பிள்ளை* செயலாளராவர். *அரசஞ் சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், த.வே.இராதாகிருட்டின பிள்ளை, நீ. கந்தசாமிப் பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, கலியாணசுந்தரம் பிள்ளை, பாலசுப்பிரமணிய பிள்ளை* முதலியோர் உறுப்பினர்களாவர். *தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்* அவ்வப்போது இச் சங்கத்திற்கு வந்து சில காலம் தங்கித் தமிழாராய்ச்சி செய்வதுண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பாண்டித்துரைத் தேவரின் உறுதுணையும் இதற்கிருந்தது. இதன் வளர்ச்சிக்காக இளைஞர் சிலர் முனைந்து நின்று உழைத்து வந்தனர். அதன் பயனாகச் சில காலம் இவ் *வித்தியா நிகேதனம்* செவ்வையாக நடைபெற்று வந்தது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

வித்தியா நிகேதன் சங்கத் தலைவர் இராசாளியார் மிகவும் கண்டிப்பானவர். செயலாளர் சாமிநாத பிள்ளை, இளைஞர்களிடத்துத் தம் ஆணையைச் செலுத்தத் தொடங்கினார். இவற்றால் இளைஞர் சிலரின் மனம் வெதும்பியது. 'நாமே தனியாக ஒரு தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தால் என்ன?' என்ற எண்ணம்

அவ்விளைஞரிடையே உருவெடுத்தது. அவ்வுருவின் பயனே *'கரந்தைத் தமிழ்ச் சங்கம்'* ஆகும்!

இந்த இளைஞர் குழுவிற்குத் தலைமை தாங்கியவர் இராதாகிருட்டினபிள்ளையாவர். இவர், நம் தமிழவேள் உமாமகேசுவரனாரின் உடன்பிறந்த தம்பியாவார். 2-9-1985 இல் தோன்றிய இவர், இளங்கலை (B.A.) ப் பட்டம் பெற்றவர். அரசினர் அலுவலகத்தில் துணைப் பதிவாளராகச் (Sub-Registrar) சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர்த் தனுக்கோடிக் கடற்சுங்க ஆய்வுக் கழகத் தலைமைத் தாளாளராகப் பணிபுரிந்தவர்; தமிழே தம் வாழ்வெனக் கொண்ட தகைமையாளர்; கனிந்த கேண்மையும் காட்சியும் உடையவர்; எண்ணியன முடிக்கும் திண்ணியர்; அருங்கலை ஆய்ந்த பெருங்கலை வாணர்; தமிழ் நலங்கருதாமல் தந்நலமே கருதும் கீழ் மக்களைக் கண்டு உளம் பதைத்தெழுந்த உண்மைத் தமிழ்த் தொண்டர்; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்தம் உறவை வெறுத்தொதுக்கும் உள்ளமுடையார்; கல்வியிற் சிறந்தவர்; கலங்கா நெஞ்சினர்; போலித் தமிழர் புகழ்வரிசையை எள்ளிய புலவர்; கருத்தொருமித்த காதன் மனையொடுந் தாய்க்கடனாற்றாலே தகுதியென்றோர்ந்து அவ்வாறே தமிழுக்குழைத்த தகவுசால் பெரியர்; அயர்வுறும் நந்தமிழ் அன்னை, தன் தொன்னிலையடைய, உலகு உளங்குளிர உழைத்த சான்றோர்.

இத்தகைய வித்தகராய நம் த.வே.இராதாகிருட்டின பிள்ளையவர்கள் வித்தியாநிகேதனத்தின் பொறுப்பாளர்கள் மீது வெறுப்புக் கொண்ட காரணத்தால் தம் நண்பர் குழாத்தை அழைத்தார். கரந்தையிலுள்ள 'கந்தப்பச் செட்டியார்' சத்திரத்தில் சிறு கூட்டம் ஒன்றைக் கூட்டினார். வித்தியா நிகேதனத்தினின்றும் விலகிப் புதியதொரு தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவிப்பதன் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இளைஞர் எல்லாரும் அவர்தம் கருத்தினை வரவேற்றனர்.

ஆக்கம் அளிப்பதாக ஊக்கமுடன் உறுதியளித்தனர். நல்லோர் எண்ணம் கைகூடியது. தமிழர் செய்த தவப்பயனாய்ப் புதியதொரு சங்கம் பிறந்தது!

சங்கத் தொடக்கம்

1911-ஆம் ஆண்டு 'மே'த் திங்கள் 14-ஆம் நாளன்று (விரோதிகிருது யாண்டு-வைகாசித் திங்கள் முதல் நாள்) நாவலர் பண்டித-ந.மு.வேங்கடசாமிநாட்டார் தலைமையில் சங்கத்தின் தொடக்கவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. மதுரையில் தமிழ் வளர்க்கும் பணியினை மேற்கொண்டு வந்த 'மதுரைத் தமிழ்ச் சங்கத்'தைப் பின்பற்றியே இச்சங்கத்திற்கும் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' என்ற பெயர் சூட்டப்பெற்றது.

சங்கம் எந்நாளும் நிலைத்து நின்று பணிபுரிய வேண்டுமென எண்ணிய இராதாகிருட்டினர், சட்ட முறையில் தலைவர், அமைச்சர், உதவி அமைச்சர் மற்றும் பொருளாளர் முதலானோரைத் தேர்ந்தெடுத்துச் செயல் புரிவதே தக்கதென முடிவு செய்தார். அங்ஙனமே தொடக்கத்தில் பதினெண்மர் சங்கச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் இதற்குத் தலைமை தாங்குதற்குரிய தகுதியுடையார் ஒருவரைப் பற்றி ஆராய்கையில், ஆங்கிலத்துடன் அருந்தமிழையும் அமைவுறக் கற்று, நேர்மைக்கும் உண்மைக்கும் போராடும் பெருஞ் செயல் வீரர், உமாமகேசுவரனாரே தலைமைக்கு உரியவர் எனப் பலரும் தெளிந்தனர். பலருடைய விருப்பத்திற்கிணங்கக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் உமாமகேசுவரனார்.

இக்கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய பிறகு 'வித்தியா நிகேதனம்' சரியாகச் செயல்படாமற் போயிற்று. அதன் தலைவர் இராசாளியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடு மனவேறுபாடு எதுவுங் கொள்ளாது, தமிழ் வளரும் வகையை எவர் செய்யினும்

சரியே எனும் உயர் கொள்கையினராய்த் தம்மாலியன்ற உதவிகளனைத்தையும் இச்சங்கத்திற்கு அளித்து வந்தார்.

ஓராண்டு முடிந்தது. *ஆண்டு விழாவைச்* சிறப்புறக் கொண்டாட விழைந்த சங்கத்தார், சென்னையினின்று *பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரை* அழைத்து வந்து. ஆண்டுவிழாத் தலைமை பூணச் செய்தனர். இரண்டாவதாண்டில் சங்கத்தின் பணி மேலும் சிறந்தோங்கத் தலைப்பட்டது. சிவ. சோலைமுத்துப்பிள்ளை, உலகநாத பிள்ளை, சுப்பிரமணிய ஐயர், மகாதேவபிள்ளை, முதலான தமிழறிஞர்களைக் கொண்டு பெரியபுராண ஆராய்ச்சிக் கூட்டங்களை (33) நடத்தியது. வணிகர் குலத் தலைவரும், கொடைவள்ளலுமாகிய *கானாடுகாத்தான் சா.ராம.மூ.சித.பெத்தாச்சி செட்டியார் தலைமையின் கீழ்* (23-2-1913) ஒரு பெருங் கூட்டத்தைக் கூட்டி, அரசியலாரால் தயாரிக்கப்பட்டு வந்த தமிழகராதி, கீழைத்தேய மொழிப் பட்டத் தேர்வு குறித்து ஆராய்ந்தது. தஞ்சைக் கலியாணசுந்தரம் உயர்பள்ளித் தலைமையாசிரியர் டி. இராசமையங்கார், பி.ஏ., எல்.டி., தலைமையின் கீழ், 'சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகளில் தமிழ் கட்டாயப் பாடமாக ஏற்படுத்தப்பட வேண்டு'மென்ற முடிபினைச் செய்து அதனை அப்பல்கலைக் கழகத்திற்கு அனுப்பியது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகத்தாரோ, *தமிழ் மொழி, கட்டாயப்பாடமாக இருக்கவேண்டியதில்லை* யென முடிவு செய்துவிட்டனர். சங்கம் அதைக் கண்டு வாளாவிருந்துவிடாமல், உயர்நீதிமன்ற வழக்கறிஞர், சாம்பமூர்த்தி, பி.ஏ.பி.எல்., தலைமையில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, ஆங்கில ஆசிரியர் கூறும் கூற்றுக்களனைத்தையும் தக்க அடிப்படைச் சான்றுகளுடன் மறுத்துத் தமிழைக் கட்டாயப் பாடமாகச் செய்யவேண்டிய இன்றியமையாமையை எடுத்துரைத்தது.

இத்தகு முடிவுகள் பிற்காலத்தில் (1913-க்குப் பின்) பலனளிக்கத் தொடங்கின என்று எண்ணுகின்றபோது, இதன் தொண்டினையும் எதிர்காலச் சிந்தனைகளையும் யாரும் மறந்துவிட முடியாது!

இச்சங்கத்தின் சார்பில், *'கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலாநிலையம்'* என்ற பெயரில் நூலகம் ஒன்று, பரிதாபி ஆண்டு ஆனி 31 இல், இராசாளியாரால் திறந்து வைக்கப்பெற்றது. அப்போது, சங்கத்திற்கெனத் தனி இடம் இல்லை. எனவே, கரந்தை அப்பாவு செட்டியார் என்பவர், தமது சத்திரத்தில் சங்கக் கூட்டங்கள் நடத்த இடந் தந்து உதவினார். *நூல் நிலையம், சங்கத் தலைவர் உமாமகேசுவரனாரது வீட்டில் இருந்து செயல்பட்டு வந்தது.*

பதிவும் நோக்கமும்

எந்த ஒரு சங்கமும், பதிவு செய்யப்படாவிட்டால் அதனால் சரியாக இயங்க முடியாது. அதனைக் கருத்திற்கொண்ட தலைவர் உமாமகேசுவரனார். 1860ஆம் ஆண்டின் 21-ஆம் சட்டத்தின்படி, 1-5-1914-இல் (ஆனந்த-சித்திரை-10) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பதிவு செய்தார்.

சங்க நூல் நிலையம்

சங்க நூலகத்திற்கென வள்ளல் பெத்தாச்சி செட்டியார், தம்பாலிருந்த ஆயிரக்கணக்கான அரிய நூல்களை நன்கொடையாக வழங்கினார். எனவே, அவர் செய்த நன்றிக்கறிகுறியாகக் 'கரந்தைத் தமிழ்ச் சங்கக் கலாநிலையம்', என்ற பெயர் மாற்றப்பட்டு, *பெத்தாச்சிப் புகழ் நிலையம்* கரந்தைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம் என்ற பெயர்கள் இடம்பெற்றன. முதன் முதலில் இருபது நூல்களுடன் தொடங்கப்பெற்ற இந்த நூல் நிலையம் இன்று ஆயிரக்கணக்கான நூல்களைக் கொண்டு 'தமிழகத்திலேயே தலைசிறந்த நூல் நிலையம்' என்ற பெயரைப் பெற்று

இலங்குவதற்குத் தமிழவேள் உமாமகேசுவரனாரின் பெருமுயற்சியே காரணமாகும்!

சங்கத்தின் வயது வளர வளரத் தொண்டின் எண்ணிக்கையும் வளர்ந்து வரலாயின. இவ்வகையில் இருபத்தைந்து ஆண்டுகளில்-அஃதாவது-தமிழவேள் உமாமகேசுவரனார் தலைமையேற்ற பிறகு இக்கரந்தைத் தமிழ்ச் சங்கம் செய்த செயல்களைச் சுருக்கமாகக் காண்போம். அவ்வாறு காண்பதன் வாயிலாகத் தமிழவேளின் செயற்றிறங்களையும் அறிந்தவர்களாவோம்.

செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி

சங்கச் சார்பில் 6-10-1916 (விசயதசமி) அன்று இராசாளியார் வாழ்த்துரையோடு தொடங்கப்பெற்றது இது. முதலில் நாற்பது மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தனர். ஏட்டுக் கல்வி மட்டுமே தொடக்கத்தில் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. கவியரசு வேங்கடாசலம் பிள்ளை இதன் தலைவராயிருந்தார். இக்கல்லூரி சிறிது சிறிதாக வளர்ச்சியுற்று 1924-25 இல் எட்டாம் வகுப்பை எட்டிப் பிடித்தது. அப்போது ஆசிரியராய் இருந்தோர் எண்ணிக்கை பதினொன்று ஆகும். இப் பதினொருவரில் தமிழுக்கெனத் தனித் தமிழாசிரியர் ஒருவரும் அக்காலத்திலேயே அமர்த்தப் பெற்றிருந்தார். (இச் செயலை நம் அரசியலார் தற்போது நிறைவேற்றிக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.) நாளடைவில் ஏட்டுக் கல்வியுடன் தொழிற் கல்விகளான பஞ்சு நூற்றல், பாய் நெய்தல் முதலானவையும் மாணவர்க்குக் கற்றுக் கொடுக்கப் பெற்றன. இதனால் மாணவர் பெரிதும் பயன் பெற்று வந்தனர். *1930-31 இல் இக் கல்லூரியிற் பயின்ற மாணவர் தொகை 450 ஆகும். தலைமையாசிரியர் சிவ. குப்புசாமி பிள்ளை உட்பட இருபது ஆசிரியர்கள் அச்சமயத்தில் வேலை பார்த்தனர்.* மாணவர் எவரிடமிருந்தும் கல்விக்கெனக் கட்டணம் எதுவும் வாங்கப்படவில்லை. உண்மையான அறக்கல்லூரியாகவே இது

திகழ்ந்தது. மாணவரிடையே பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி முதலியன நிகழ்த்தப்பெற்றுப் பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன. கல்லூரிக்கு மிகுதியான நாட்கள் வந்தவர்க்குத் தனிப் பரிசுகள் அளிக்கப்பெற்றன. மேலும் திக்கற்ற மாணவரில்லம் ஒன்றும் தொடங்கப்பெற்று முதலில் பத்து மாணவர்க்கு, உண்டி, உடை, உறையுள் முதலியன அன்பளிப்பாக வழங்கப்பெற்றன. *1928-29 இல் கட்டணமில்லா மருத்துவமனை* (Free dispensary) ஒன்றும், சங்கச் சார்பில் தொடங்கப்பெற்றது. மாணவர்கட்கும், பொது மக்கட்கும் மருந்து முதலியன அளிக்கப்பெற்றன. இவையெல்லாம் இன்று நமக்குப் புதியனவாகத் தோன்றாவிடினும், அன்று புதியனவாக-மக்கள் போற்றத்தக்கனவாக-மாணவர்க்குப் பெருந்துணை புரிவனவாக இருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. அன்றியும், இன்றைய நிலைக்கு இவை, அன்று வழிகாட்டிகளாய் அமைந்தன என்று கூறினாலும் மிகையாகாது.

தமிழ்ப் பொழில்

சங்கம் தொடங்கிய நான்காவது ஆண்டிலேயே திங்கள் இதழ் (Monthly Issue) ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் தமிழவேள் உமாமகேசுவரனார் உள்ளத்தே முகிழ்த்தெழுந்தது. தமிழைப் போற்ற நினைக்கும் தம் நோக்கங்களைத் தமிழ்ப் பற்றாளர்களுக்குத் தெளிவிக்க வேண்டும், அன்னார் உதவியுடன் அவற்றினை நிறைவேற்ற வேண்டும்; தமிழ்மக்களையும் தெய்வத் தமிழ்மொழியினையும் இழி தகவு செய்தும், உண்மை வரலாற்றை மறைத்தும் நெறிபிறழ எழுதியும் வரும் தமிழ்ப் பகைவர்களின் கருத்துக்களை நேரிய முறையில் கண்டிக்கவேண்டும்; மேல்நாட்டு வரலாற்றைத் தமிழில் மொழிபெயர்த்தமைத்துக் கொள்ளவேண்டும் என்பன போன்ற இன்னோரன்ன நோக்கங்களை நிறைவேற்றத் தமிழ் இதழ் ஒன்றை வெளியிடுவது இன்றியமையாதது என்று எண்ணிய தலைவர் உமாமகேசுவரர், அதற்கான ஏற்பாடுகளைச் செய்தற்கென, *இராதாகிருட்டின பிள்ளை, சோமநாதராவ்,*

ஐ.குமாரசாமிப் பிள்ளை, பெரியசாமிப்பிள்ளை, நா.சீதாராமபிள்ளை ஆகிய ஐவர் கொண்டகுழு ஒன்றினை அமைத்தார். எனினும் பத்தாண்டுகட்குப் பின்னரே இவ்வெண்ணம் நிறைவேறியது. 'தமிழ்ப்பொழில்' எனும் தகவுறு பெயர் தாங்கிய இதழ் ஒன்று *1925-26* ஆம் ஆண்டிலிருந்து திங்கள் தோறும் மணம் வீசத் தலைப்பட்டது. இதன் முதற் பொழிற் றொண்டராகப் (இதழாசிரியர்) பணிபுரிந்தவர் *கவியரசு வேங்கடாசலம் பிள்ளை யாவார்.*

இதன் ஒவ்வோர் இதழும் படிக்கப்படிக்கத் தமிழார்வத்தையும், தமிழ்ப் பற்றையும் ஊட்டும் வகையில் தருவதாய்த் திகழ்வதைக் காணலாம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இப்பொழில் செய்த-செய்கின்ற போற்றற்குரிய பணிகள் பலப்பல. அரிய தமிழராய்ச்சிக் கட்டுரைகள், ஆங்கில மொழிபெயர்ப்புக் கட்டுரை-கவிதைகள், தமிழ்க்கலைச் சொல்லாக்கம், வரலாற்றுக் கட்டுரைகள், மறுப்புக்கட்டுரைகள் ஆகியவற்றைத் தாங்கி வெளிவரும் இப்பொழில், கற்போர் கரங்களில் நின்று களிநடம் புரிவதாயிற்று. தமிழின் கடந்த கால வரலாற்றை ஆய்வோர் இத் 'தமிழ்ப் பொழிலை'த் துணையாகக் கொள்வதும், மேற்கோள் காட்டுவதும் இன்றும் வழக்காறாக இருந்துவருவது அனைவரும் நன்கறிந்ததே!

நல்ல தமிழ் மொழியில் பேசவும் எழுதவும், வேண்டும். வடமொழி கலந்து பேசுதலும் எழுதுதலும் தமிழ்மொழியின் ஆக்கத்தைத் குறைப்பனவாகும். வரலாறு காணமுடியாத காலந் தொட்டு நல்ல நாகரிகம் கொண்டு வாழ்ந்தவர் தமிழர்கள். அவர்கள் நாகரிகம், தனித்த சிறப்பு வாய்ந்தது என்பதை அனைவர்க்கும் உணர்த்த வேண்டும். பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியிற் கொணர்தல் வேண்டும். இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்-என்பன போன்ற கொள்கைகளைத், தான் தோன்றிய நாள் தொட்டு நிறைவேற்றி வந்துள்ளது இப்'பொழில்'.

தமிழார்வம் சிறிதும் இல்லாத அக்காலத்திலும்சரி, இக்காலத்திலும்சரி, எவ்வித ஊதியமும் கருதாமல், கட்டுரை வரைவோர்க்கு கூட அன்பளிப்புத்தர முடியாத நிலையில், ஏறத்தாழ தொண்ணூறு ஆண்டுகள் ஓர் இதழை-அதுவும் தனித்தமிழ் இதழை-இத்துணைச் சிறப்போடு வெளியிட்டு வருதல் என்பது எத்துணை அரிய செயல்? சால்புடைப் பெருமகனாரான தமிழவேள் உமாமகேசுவரனாரின் உயர்ந்த உள்ளமல்லவா இந்த வெற்றிக்குக் காரணம்!

இத்தகு *'பொழிலி'*ன் ஆசிரியராக இருந்தவர்கள் *கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, தமிழவேள் உமாமகேசுவரனார், நீ.கந்தசாமிபிள்ளை, எல்.உலகநாதபிள்ளை, கோ.சி.பெரியசாமிப் புலவர், திரு. செ. தனக்கோடியா பிள்ளை, திரு.எஸ். பெத்தண்ணன், திரு.எஸ்.நடராஜன், திரு.ச.இராமநாதன்* முதலியோராவர். தற்போது சங்கத் தலைவராக இருக்கும் *திரு.நா. கலியமூர்த்தி* அவர்களைப் பொழிற்றொண்டராகக் கொண்டு வெளிவருகிறது.

நூல் வெளியீடு

சங்க வாயிலாகத் தமிழவேள் செய்த செயல்களுள் குறிப்பிடத்தக்க வொன்று 'நூல் வெளியிடுதல்' ஆகும். தொடக்க காலத்தில் சங்க அறிக்கைகளையும், துண்டு வெளியீடுகளையும், சுந்தரம்பிள்ளை பாடிய தமிழ்த் தெய்வ வணக்கப் பாடல்களையும் மட்டுமே அச்சிட்டுப் பொதுமக்களிடையே ஓரளவு தமிழறிவு பெருக வேண்டுமென்ற உணர்வோடு, அனைவர்க்கும் அன்பளிப்பாக வழங்க ஏற்பாடு செய்தார். பின்னர்ப் படிப்படியாகப் பல அரிய தமிழ் நூல்களையும் வெளியிடலானார். *1920-21 ஆம்* ஆண்டிலேயே நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் எழுதிய *'நக்கீரர்'* என்ற நூலை வெளியிட்டுச் சென்னைப் பல்கலைக்கழக இளங்கலை வகுப்புக்குப் பாடமாக வைக்குமாறு செய்தவர் *தமிழவேளேயாவார்! இதுதவிர, யாழ் நூல், தொல்காப்பியம்-சேனாவரையம்-தெய்வச் சிலையார் உரை, நெல்லை வருக்கக்*

கோவை, சித்தரந்தாதி, சுருதி வீணை, தமிழரசி குறவஞ்சி, பரத சாத்திரம், கவியரசு நினைவுமலர், சிவமும் செந்தமிழும், சிலப்பதிகாரம்-புகார்க்கண்டம், கச்சிக் கலம்பகம், அப்பர் புகழ்மாலை, சுந்தரர் புகழ்மாலை, பாரதசார வெண்பா, யவன மஞ்சரி, இந்தியத்தலயாத்திரை, புலவராற்றுப்படை, கரந்தைக் கட்டுரைக் கோவை, கட்டுரைப் பொழில், பரணர், பாயிரவிருத்தி, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு நினைவு மலர், தமிழவேள்.த.வே.உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழாச்சிறப்பு மலர், கட்டுரைப் பூங்கா, ***Services unto Language and Culture,*** *உமாமகேசுவர மேனிலைப்பள்ளி மணிவிழாச் சிறப்பு மலர்* முதலான நூல்கள், தமிழவேள் உள்ள காலத்தும் அதன் பின்னரும் சங்கத்திலிருந்து வெளியிடப் பெற்றவையாகும்.

படிப்பகம்

சங்கப் பணிகளுள் குறிப்பிடத்தக்க மற்றொன்று, கட்டணமிலாப் படிப்பகம், (Free Reading Room) நடத்துதல் ஆகும். இதில், நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள், முதலியன வரவழைக்கப்பெற்றுப் பொதுமக்கட்குப் படிக்கத் தரப்பெறுகின்றன. இப்படிப்பகம், 1915 முதல் இன்று வரையும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இடம் வாங்குதல்

சங்கத்திற்கெனத் தனி இடம் இல்லாமை கருதிப் பெரிதும் வருந்தினார் தலைவர் உமாமகேசுவரனார். சங்கத்தின் இடையறாப் பணிகளை நேரிற் கண்டு மகிழ்ந்த, வள்ளல், பெத்தாச்சி செட்டியார், தமிழவேளின் விருப்பப்படி கரந்தையிற் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார்; ஆங்கே ஆற்றங்கரையின் வடபால் ஒரு வெளியிடத்தை விலைக்கு வாங்கக் குறித்ததோடு, அங்ஙனம் வாங்குவது பற்றியும், அவ்விடத்தே கட்டடம் அமைப்பது பற்றியும் சங்கம் பொருட்கவலையடையாதவாறு பேருதவி செய்வதாகவும் வாக்குறுதியளித்தார். அவர் கூறியபடியே, கரந்தைப்

'பாவாமடத்' திற்கு உரியதொரு வெளியிடத்தை அரசினர் வழியாக, அம்மடத்திற்கு நிலைத்த பேரூதியஞ் செய்யுந் தொகையை ஈடு அமைத்து, விலைக்கு வாங்குதற்குரிய ஏற்பாடு செய்யப்பெற்று அவ்வாறே 1923-24 இல் வாங்கப்பெற்றது. பெத்தாச்சி செட்டியார் கட்டடத்திற்கென ஓராயிரம் ரூபாய் நன்கொடை தந்து உதவினார்.

தலைவர் உமாமகேசுவரனார், சங்கத்திற்கெனப் *பெருநிதிச் சீட்டு* ஒன்றை ஏற்பாடு செய்து, அதன் வாயிலாக 1929-30 இல் *கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தைக்* கட்டி முடித்தார். 1932-33இல் வடவாற்றின் தென்பாலுள்ள ஒரு பெரிய வெற்றிடத்தை அரசியலார் ஆணை பெற்று வாங்கி, மாணவர்கட்குப் பயன்படும் வகையில் விளையாட்டரங்குகளும், தோட்டமும் அமைத்தார்.

படிப்படியான வளர்ச்சி

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் முதல் செயலாளராகப் பணிபுரிந்தவர் *கலியாணசுந்தரம் பிள்ளை* என்பவராவர். அவருக்குப் பின்னர்க் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, அ.கணபதிப்பிள்ளை, நீ.கந்தசாமி பிள்ளை ஆகியோர் முதல் இருபத்தைந் தாண்டுகளில் செயலர்களாக அமர்ந்து இச்சங்க வளர்ச்சிக்குத் தமிழவேளோடு உடனிருந்து பாடுபட்டுள்ளனர். சங்கந் தொடங்கிய இரண்டாவதாண்டில் இதன் வரவு-செலவு உரூ.300 ஆக இருந்தது; பத்தாவதாண்டிறுதியில் ஏறத்தாழ உரூ.3,000 ஆக இருந்து; இருபதாவதாண்டிறுதியில் உரூ.10,000 ஆக உயர்ந்துள்ளது என்பதை அறியும்போது இதன் வளர்ச்சியை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். தொடக்க காலத்தில்; சங்கத்தின் பொருளாதார வளர்ச்சியில் பங்கு பெற்றவர்கள், கோபாலசாமி இரகுநாத இராசாளியாரும், பெத்தாச்சி செட்டியாருமாவர்.

இத்தகு சீரிய தொண்டுகளைச் செய்துவரும் இக்கரந்தைத்

தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் இராதாகிருட்டின பிள்ளையேயாயினும் சங்கத்தின் தலைவராகத் தொடக்ககால முதல் தம் வாழ்நாள் வரையிலும் இருந்து சங்க வளர்ச்சிக்குத் தம் வாழ்க்கை முழுவதையும் அளித்த பெருந்தகையாளர் உமாமகேசுவரனாரேயாவர்! முதல் ஐந்தாண்டுகளில் இவர் அத்துணைக் கவனத்தை இதன்பாற் செலுத்தினாரில்லை. ஆறாவதாண்டிலிருந்து; எண்ணும்போதும், எழுதும்போதும், உண்ணும்போதும், உறங்கும்போதும் சங்கவளர்ச்சியையே நினைவிற் கொள்ளலானார். மணமான சில ஆண்டுகளுக்குள்ளாகவே பெறலரும் மனைவியை இழந்தார்; அதனையடுத்துத் தம் பெயர் துலங்கத் தோன்றிய திருமகன் பஞ்சாபகேசனையும் இழந்தார்.

இவருடைய காலமனைத்தும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கே ஆக்கப்படவேண்டும் என எம்பெருமான் எண்ணினன்போலும்! அதனால் தாழ்ந்துகிடந்த தமிழகம் தலைதூக்க வேண்டும், அலமந்துதிரியும் தமிழன்னை அரியணையேற வேண்டும் என்று எண்ணி, இறைவன் மீது பற்று ஏற்பட வேண்டுமானால் இவ்வுலகப் பற்றினை விட்டுவிடவேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று வள்ளுவர் கூறியாங்கு உமாமகேசுவரருக்குத் தமிழ்ச் சங்கத்தின் மீது பற்று ஏற்படவேண்டுமானால் அவர் தன்னுடைய குடும்பத்தின் மீது வைத்திருக்கும் பற்றினை மாற்றியாக வேண்டும் என்று திட்டமிட்டவர் போல உமாமகேசுவரரின் அன்புத் துணைவியையும் அருமை மகனையும் தன்பால் அழைத்துக் கொண்டாரோ? அதனாற்றான் மிக இளமைக் காலத்திலேயே உமாமகேசுவரரின் உள்ள முவக்கும் உலகநாயகியின் இன்னுயிரை இறைவன் ஈர்த்தனன் போலும்! 'எல்லாம் இறையருள்' என எண்ணிய உமாமகேசுவரனார், உற்ற

துணைவியை இழந்தமை குறித்துப் பெரிதும் வருந்தினாரெனினும், தாம் கற்ற கல்வியால் அதனை ஒருவாறு போக்கிக்கொண்டார். 'மீண்டும் மணம் புரிக' என உற்றாரும் மற்றாரும் வலிந்துரைத்தும் கேட்டாரிலர். 'ஒருவனுக்கு ஒருத்தியே' என்ற கற்புமேம்பாட்டைக் கைக்கொண்டு இறுதிவரையிலும் தூய ஒழுக்கத்தில் தலைநின்றார் எனின் இவர் தம் திண்ணிய நெஞ்சகத்தை எங்ஙனம் புகழ்வது?

வழக்குமன்றம் செல்லும் வேளைதவிர உமாமகேசுவரரின் எஞ்சிய பொழுதெல்லாம் சங்கத்திலேயே கழிந்தன. சங்கம் பங்கமிலாப் பணிகளைப் பகட்டேதுமின்றிச் செய்துவந்தது. இதுகாறும் கூறப்பட்ட சங்கத்துச் செயல்களனைத்தும் முதல் இருபத்தைந்தாண்டுக் காலத்திற்குள் சங்கத் தலைவர் உமாமகேசுவரராலேயே செய்துமுடிக்கப் பெற்றன!

வெள்ளி விழா

சங்கம், தன் வெற்றிப்பாதையில் 25ஆம் ஆண்டெல்லையை எட்டிப்பிடித்தது. இந்த வெள்ளி விழவினைத் தமிழகம் முழுதும் போற்றும் வகையில் கொண்டாடத் திட்டமிட்டார் தலைவர் உமாமகேசுவரனார்.

வெள்ளி விழாவை முத்தமிழ்விழாவாக ஏழுநாட்கள் கொண்டாட வேண்டும்? தமிழ்ப் புலவர்களைத் தோற்று வித்தற்கெனத் 'தமிழ்ப்புலவர்கல்லூரி' ஒன்றினை நிறுவவேண்டும்; அதில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியுடன் ஆங்கில மொழியையும் கற்கும் வழி செயல் வேண்டும்; அம்மாணவர்கள் தங்கள் முயற்சியாலும், கைத்தொழிலாலும் தங்கள் வாழ்க்கையைப் பிறர் உதவியின்றித் தாங்களே நடத்தவேண்டும். இவர்கள் தமிழ் இலக்கிய அறிவுடன், பயிர்த்தொழில், மருத்துவம், சிற்பம், இசை, ஓவியம், நாடகம், ஆடை நெய்தல் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றில் வன்மைபெற வேண்டும்; வெள்ளி விழாவின்போது, பல்வேறு

காலங்களிலும் பல்வேறு இடங்களிலும் தோன்றிய சிற்ப, ஓவிய, கைத்தொழில் திறமைகளைப் பலரும் அறிந்து இன்புறும் வகையில் *'கண்காட்சிச் சாலையும்' 'பல்பொருட் காட்சியும்'* வைத்தல் வேண்டும்; இலக்கண அகராதி, தமிழ்ப் புலவர் வரலாறு முதலான நூல்களை வெளியிட வேண்டும்; தமிழ்நாட்டுப் பேரறிஞர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துக் *'கரந்தைக் கட்டுரை'* என்னும் பெயரால் மலர் ஒன்றினை வெளியிட வேண்டும்; ஆங்கில நாட்டில் கலை வளர்ச்சிக்கெனப் பேரறிஞர் 'பேகன் என்பவரால் தோற்றுவிக்கப்பெற்ற 'கலைக் கழகம்' போலவும், பிரெஞ்சு மொழியைச் செம்மைப் படுத்துவதற்கென அந்நாட்டில் அமைக்கப்பட்ட சங்கம் போலவும், முன்பு நம்நாட்டில் நிலவிய முச்சங்கங்கள் போலவும், தமிழைப் பல்லாற்றானும் வளர்த்தற்கெனத் தமிழ்மன்றம் ஒன்றைத் தோற்றுவித்தல் வேண்டும்; நாட்டுப்புறத் தொண்டர்குழு என்ற ஒன்றை உண்டாக்கிச் சங்கத்தைச் சுற்றிலும் இருபத்தைந்து சதுரக்கல் தொலைவிலுள்ள சிற்றூர்களுக்குச் சென்று பொது மக்களிடையே தொண்டுசெய்தற்கெனத் தனித் தொண்டர்களை அமைத்தல் வேண்டும்; என்பவையே உமாமகேசுவரனார் போட்ட திட்டங்களாகும்!

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா 1938 ஏப்ரல் 15,16,17-ஆம் நாட்களில் மிகச் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. சங்கத்தின் முன்றிலில் தொடங்கி, வடவாற்றின் மகாலக்குமி பாலக்கரை வரையிலும் புதுமணல் பரந்த பூம்பந்தர் அமைக்கப்பெற்றது. இடந்தொறும் காட்சிச் செடிகள் கண்ணுக்கு விருந்தாய்க் கவினுற வைக்கப்பெற்றிருந்தன; மின்செய் விளக்கினம் மீனினம் போற் காட்சியளித்தன. வந்தவர் யாவரேயாயினும் அவரை இன்முகத்துடன் வரவேற்கும் தொண்டர்குழாம் ஒன்று ஏற்படுத்தப்பெற்றது.

முதல் நாளன்று வெள்ளிவிழாத் தலைவராம் அருட்டிரு ஞானியாரடிகளைச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனாரும்,

ஏனைய தண்டமிழ்ப் பெருஞ் செல்வரும், மங்கல முழக்கத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்தனர். தவத்திரு. ஞானியாரடிகளார், சங்கத்திலமைந்திருந்த தமிழ்ப்பெரு மன்றத்தின் தலைமை மேடையின்கண் அமர்ந்தபின், உமாமகேசுவரனார், தமக்கு இயல்பாக வாய்த்துள்ள செந்தமிழ்ப் பெருநலத்தால், அனைவரையும் தேனில் தேக்கிய, செஞ்சொற் பெருமழை பொழிந்து வரவேற்றார். நிகழ்ச்சி நிரலிற் குறித்தாங்கு வணக்கமும் வாழ்த்தும் அறிக்கையும் வரவேற்பும் வளம்பெற முடிந்தன. *சங்கத் தலைவராம், உமாமகேசுவரனார் அவர்களுக்குத் 'தமிழவேள்' என்னும் பட்டம்* வழங்கப்பெற்றது. தமிழவேள் என்னும் பட்டத்தால் உமாமகேசுவரர் பெருமையடைந்தார். உமாமகேசுவரரால் தமிழவேள் பட்டமும் பெருமையுற்றது.

கரந்தைக் கவியரசு:

பின்னர், *பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார்,* இச்சங்கம் தோன்றிய நாள்தொட்டு அமைச்சராய்த் தொண்டாற்றியதோடு, செந்தமிழ்த் தீஞ்சொற்களாலாகிய இன்கவித் தொண்டு புரிந்த *ஆர். வேங்கடாசலம் பிள்ளையவர்கட்குக் 'கரந்தைக் கவியரசு* என்னும் தமிழியற் பட்டமொன்று இவ்விழாப் பேரவைப் பெருமக்களால் வழங்கப்பெறுகிறதென பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியாரவர்கள் முன் மொழிந்தார். அப்போது, அவர் 'கரந்தைக் கவியரசு, வேங்கடாசலம் பிள்ளையவர்களின் கவிநலம் பற்றிக் கூறுமிடத்து, இக்காலத்து, நிலவும் தமிழ்ச் சந்தப்பாக்கள் பலவற்றில் வடசொற்களே பரவியிருக்கின்றன. தூய தமிழ்ச் சொற்களாலானவை இல்லை. என்னையும், பலர் சந்தாப்பக்கள் ஆக்கவேண்டுமென்று தூண்டினர்; யானும் தூய தமிழ்ச் சொற்களாற் சந்தப்பாக்களை அமைக்க முயன்றதுண்டு; ஆனால் யான் அத்துறையில் தோல்வி அடைந்ததோடன்றி அது முடியாது என்ற துணிவும் கொண்டேன். நம் வேங்கடாசலம் பிள்ளையவர்கள் தூய தமிழ்ச் சொற்களால் எல்லா அழகுகளும் அமைந்த சந்தப்பாக்கள் பலவற்றைச் செய்திருக்கின்றார்" என்று

கூறினார். கரந்தையைச் சார்ந்து இனியகவிகளியற்றிவரும் பிள்ளையவர்கட்கு வெள்ளியின் மறுபெயராகிய *கவி* என்னும் பெயரோடு சார்ந்த பட்டமளித்தல் புலமைக்கும் நாளுக்கும் ஒத்திருக்கிறதென்று கூறி வாழ்த்தினார்.

பிறகு பண்டித, ந.மு.வேங்கடசாமி நாட்டார், சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை ஆகியோர் வேங்கடாசலம் பிள்ளையின் கவித் திறனைப் பலவாறு பாராட்டிப் பேசினர். தலைமை தாங்கிய அடிகளார், பிள்ளையவர்களை வாழ்த்தியபோது, அவர் இயற்றியுள்ள ஆசானாற்றுப்படை, தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்புப் பாக்கள் முதலியவற்றிலுள்ள பல்வகை நலங்களைப் பாராட்டிக் கூறுமாற்றால் அவர்தம் தகுதிப் பாட்டினைத் தீவிய சொற்களால் நன்கு விளக்கி; அதற்கறிகுறியாகப் பொற்பதக்கத்தால் அணிசெய்யப்பெற்ற 'கரந்தைக் கவியரசு' எனும் பட்டத்தை வழங்கினர்.

வெள்ளி விழாவின் நினைவு மலராகப் புலமை மிக்க அறிஞர்கள் எழுதி உதவிய கட்டுரைகளைத் தொகுத்து இலக்கியப் பூங்கொத்து என மிளிரும் *கரந்தைக் கட்டுரை* எனும் நூலைச் சங்கத்தார் வெளியிட்டனர். புலவர்.க.வெள்ளை வாரணனார், நாவலர்.ச.சோமசுந்தரபாரதியார் ஆகியோர் சிறந்த விரிவுரைகளாற்றினர். இரவில் 'திருநாளைப்போவார்' எனும் நாடகமும் நடத்தப்பெற்றது.

புலவர் கல்லூரித் தோற்றம்

16-4-1938 சனிக்கிழமையன்று காலையில் அடிகளார் தலைமையில் வெள்ளி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. அன்றைய விழவில் குறிப்பிடத்தக்கது *'கரந்தைத் தமிழ்க் கல்லூரி'* யின் திறப்புவிழா நிகழ்ச்சியாகும். சங்கத் தலைவர் தமிழவேள் உமாமகேசுவரனார், கல்லூரியின் குறிக்கோள்களைக் குறித்துப் பேசுமிடத்துப் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டனர்.

(1) தமிழிற்கெனத் தனியே அமைக்கப்படும் இக் கல்லூரியில், சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஏற்படுத்தியிருக்கும் புகுமுகம், முதனிலை, இறுதிநிலை என்ற தேர்வுகட்கு மாணவர்கள் தமிழ் பயிற்றப் பெறுவர்.

(2) குறைந்தது நான்காவது படிவமாவது கற்றுள்ள மாணவர்களே இக்கல்லூரியிற் சேர்க்கப்பெறும் தகுதியுடையவராவர்.

(3) தனித் தமிழேயன்றி, மருத்துவம், இசை, ஓவியம், கைத்தொழில் முதலியவையும் துணைப்பாடங்களாக கற்பிக்கப் பெறும்.

(4) மாணவர்க்கு உண்டியும் உறையுளும் பிற கல்வி நலங்களும் அளிக்கப் பெறும்.

(5) மாணவர்கள் ஐந்தாண்டுகள் கல்லூரிப் பயிற்சி பெற்றுத் தேறியபின், இரண்டாண்டுகள் சிற்றூர்த் தொண்டில் பயிற்சி பெறுவர்.

(6) இக்கல்லூரியிற் பயின்று வித்துவான் பட்டம் பெற்றுவெளியேறும் மாணவர்கள், ஆசிரியர்களாவ தொன்றையே நாடாது, தத்தமக்கேற்ற வேறு தொழில் ஒன்றினைத் திறம்பட மேற்கொண்டு, தன் மதிப்புடன் வாழ்க்கை நடத்துபவர்களாதல் வேண்டும்.

(7) வரும் 1939 ஆம் ஆண்டுப் புகுமுகத் தேர்வுக்கு ஏறத்தாழ முப்பது மாணவர்களைச் சேர்த்துப் பயிற்சி தந்து, தேர்வுக்கனுப்புதல் வேண்டும்.

இன்னோரன்ன சீரிய கருத்துக்களை மேற்கொண்டு தொடங்கும் இக்கல்லூரிக்கு அருட்செல்வர்கள் பொருளுதவி புரிய முன்வரவேண்டும்!"

இவ்வாறு தமிழவேள் உமாமகேசுவரனார் எடுத்துரைத்த பின், தென்னார்க்காடு மாவட்டக் கல்வித் தலைவர் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், தமிழரல்லாதார்க்கும் நம் தமிழ்மொழிக்கண் ஆர்வமும் அதன் வளர்ச்சிக்கண் பேரூக்கம் கிளர்ந்தெழுமாறு தமது சிறப்புப் பொழிவினைச் செய்துமுடித்தார். பின்னர் திருச்சி, திவான்பகதூர் டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, திருவையாற்று அரசர் கல்லூரித் தலைவர் சுப்பிரமணிய சாத்திரியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, தென்னூர்ப் பொறியியல் வல்லுநர் பொன்னுசாமிப் பிள்ளை, சாத்தூர் வழக்கறிஞர், தூ.சு. கந்தசாமி முதலியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் நாட்டார், சேதுப்பிள்ளை ஆகிய தமிழ்ப் பெருமக்கள்; கல்லூரியின் இன்றியமையாமை, இக்கால நிலைக்கேற்பத் தமிழர் வாழ்க்கையைத் திருத்தவேண்டிய நெறி, தமிழ் கற்பித்தற்குரிய முறை, அம்முறை அறிதற்குரிய பயிற்சி முதலிய பொருள்களை அழகுமிகத் திரட்டி, கல்லூரியைத் திறந்தருளினார் நாவலர். ந. மு. வே. நாட்டார்,

"நன்மா ணவராகும் வண்டர் நனிபயின்று
பன்மாண் கலைத்தேன் பருகுமா-மண்மாண்
கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரிப் பூங்காப்
பரந்தொளிர்ந்து வாழியர்இப் பார்"

எனப் பாடி வாழ்த்தினார்.

கல்லூரிக் கட்டடததில் எழுந்தருளப் பெற்றிருந்த தமிழ்க் கடவுளாகிய முருகன் திருவுருவத்துக்கு வழிபாடியற்றப் பெற்றது. வித்துவான் வெள்ளை வாரணனாரை ஆசிரியராக நிறுத்தி, அதுபோது கூடியிருந்த மாணவர்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்குமாறு பணித்தலும், அவர் நம் தெய்வப் புலவர் திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளின் தலைக்குறளாகிய 'அகர முதல' என்னும் அருமைத் திருக்குறளைக் கற்பித்தனர். பின்னர்

அடிகளார், புதிதாய்த் தோன்றிய கல்லூரியை வாழ்த்தி, அகர முதலவெனத் தொடங்கும் திருக்குறளின் பருப் பொருளையும், நுண்பொருளையும் இனிது விளக்கினார்.

வேலூர் வே. ஆழ்வார்இராமாநுச நாயக்கர், ந.மு.வே. நாட்டார், மு. கதிரேசச் செட்டியார் ஆகியோர் சொற்பெருக் காற்றினர். அடிகளார் முடிப்புரைக்குப் பின் திருவனந்தபுரம் டி. இலக்குமணப்பிள்ளையின் இசை நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.

வெள்ளிவிழாவின் மூன்றாம்நாள் நிகழ்ச்சி, 17-4-1938 ஞாயிற்றுக் கிழமையன்று காலையில் தொடங்கியது. வழக்கம்போல் கடவுள் வணக்கமும் தமிழ்த் தெய்வப் பராவலும் நடைபெற்றபின், தலைவர் பணித்தவண்ணம், தோரமங்கலம் புலவரேறு அ. வரதநஞ்சையப்பிள்ளை, *'தமிழரசி குறவஞ்சி* என்ற பெயரில் தாம் இயற்றிய, சீரிய கூரிய தீந்தமிழ்ச் சொற்களாற் றொடுக்கப்பெற்ற இன்னிசைச் செய்யுணூலை அரங்கேற்றம் செய்தார். இக்குறவஞ்சி நூலின் பாட்டினங்களை வித்துவான் பொன்னுசாமி முதலியார், தமது இனிய தீங்குரலால் சந்தமுறப் பாடிவர, ஆசிரியர் வரதநஞ்சையபிள்ளை அப்பாக்களின் பொருள் நலங்களைத் தம் கண்ணினும் மொழியினும் எண்மையில் விளங்க எடுத்துக் காட்டினர்.

பின்னர்த் துடிசைகிழார் அ. சிதம்பரனார், பெரிய புராண உரையாசிரியர் சி.கே. சுப்பிரமணிய முதலியார், பெருஞ்சொல் விளக்கனார். அ.மு. சரவண முதலியார், ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைமைப் பெருமைமிக்க அடிகளாரின் முடிப்புரை, மன்றத்தின் அகத்தும் புறத்தும் குழுமியிருந்த பெருமக்களின் செவிப்புலம் புகுந்து; மனவயலில் தோய்ந்து; அறிவுப் பைங்கூழுக்கு ஆக்கம் தந்தது. முடிவில் சங்க அமைச்சர் நீ. கந்தசாமிப்பிள்ளை நன்றி கூற, சங்கமாணவர்கள் *'கரிகாலன்'* என்ற நாடகம் நடிக்க

வெள்ளிவிழா, அனைவரும் வியந்து போற்றும் வண்ணம் இனிதே முடிவுற்றது.

தமிழ்ப் புலவர் கல்லூரி

தமிழவேள் உமாமகேசுவரனாரின் இடையறா உழைப்பின் பயனாக, வெள்ளி விழாவின் இரண்டாம் நாளாகிய 16-4-1938 இல் அருட்டிரு ஞானியாரடிகள் தலைமையில், தோற்றுவிக்கப் பெற்ற *'கரந்தைத் தமிழ்ப் புலவர் கல்லூரி'* கோடை விடுமுறைக்குப் பின் 30-6-1938 முதலே செயல்படத் தொடங்கிற்று. அவ்வாண்டு, கல்லூரியில் வித்துவான் முதல் வகுப்புக்குரிய பாடங்கள் மட்டுமே சொல்லிக் கொடுக்கப் பெற்றன.

என்றும் நிலைத்த அளவில் கல்லூரி ஒன்றைச் செயற்படுத்தவேண்டுமானால், போதிய பொருள் வருவாய் வேண்டுமன்றோ? சங்கத்தை நடாத்துதற்கே போதிய பொருள் இல்லாதபோது, கல்லூரியை நடாத்துதல் எங்ஙனம் இயலும். ஆனால் தொடங்கிய பணியை இடையில் நிறுத்திவிடுதல் இழுக்கன்றோ? என்று எண்ணிய உமாமகேசுவரனார், உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை "முயற்சி திருவினையாக்கும்" என்னும் கருத்துக்களைக் குறிக்கோள்களாகக் கொண்டவராதலால் கீழ்க்கண்ட விண்ணப்பத்தைத் தமிழ்ப் பெருமக்களுக்கு விடுத்தார்.

"கரந்தைத் தமிழ்ச் சங்கம் இதுபோது தமிழ்நாடு முற்றுமே மதிக்கத்தகும் அரும்பணியை மேற்கொண்டிருக்கின்றது. கரந்தைத் தமிழ்க்கல்லூரி முதல்வகுப்புடன் அரும்பி யிருக்கின்றது. மேலும் நான்கு வகுப்புகளுடன் நாளடைவிற் றோன்றி முற்றுப் பெற வேண்டிய நிலையிலிருக்கின்றது. இதன் இன்றியமையாத அங்கங்களாகிய இசை, ஓவியம், மருத்துவம், சிற்பம் போன்ற தொழிற்கலைகளும் ஈண்டு முகிழ்த்துப் பிஞ்சு காய், கனிகளாகிய நற்பயன்களை நல்கவேண்டும்.

இவ்வெண்ணங்கள் சிறு அளவிலாவது உருப்பெற வேண்டுமானால் நூறு மாணவர்க்காகிலும் உண்டியும் உறையுளும் தருதற்கான மாணவர் இல்லமும், பத்து ஆசிரியர்களாகிலும் பணி செய்தற்குரிய வசதிகளும் அமைக்கப்படவேண்டும். ஆண்டுதோறும் ரூபாய் ஐயாயிரத்திற்குக் குறையாத வருவாய், தட்டில்லாது வந்துகொண்டே இருத்தல் வேண்டும். இதுபோது தொடங்கியிருக்கும் முதல் வகுப்பில் பதினைந்து மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். திருச்சி, நெல்லை, கோவை, வட, தென் ஆர்க்காடுகள் ஆகிய பிற மாவட்டங்களிலிருந்து வந்தவர் ஒன்பதின்மர் ஆவர். யாழ்ப்பாணத்து மாணவர் ஒருவர் வருவாரென எதிர்பார்க்கப்படுகின்றது. மலேயா நாட்டிலிருந்தும் விண்ணப்பம் வந்துள்ளது. இவர்களில் பன்னிரு மாணவர்கள் சங்கத்தார் அமைத்திருக்கும் இல்லத்தே இருந்தும், ஏனோர் வெளியே இருந்தும் கல்வி பயின்று வருகின்றனர். இதனை உய்த்து நோக்குவோர் இக்கல்லூரி தமிழ்நாட்டிற்கே உரியதொன்றெனவும், இதனைப் பேணி வளர்த்தல் தத்தம் கடமை எனவும் தமிழன்பர்கள் கருதுவர் என்று எண்ணுகின்றோம்.

"தமிழ்ப் புலமையும் தொழிற்கலையும் ஒருங்கே பயிற்றப்படும் கல்விமுறை சாலச் சிறந்த நன்முயற்சியாம். இம்முயற்சி உரம்பெறுதற்கு இலக்கிய இலக்கண நூல்களே யன்றிக் கலை நூல்களையும், தமிழில், எளிய விலைக்கு வெளியிடுதல் வேண்டும். இத்தகைய பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளவும், செவ்வனம் இயற்றவும் அறிவாளிகள், செல்வர்கள், அன்பர்கள் ஆகிய அனைவரின் துணையும் இன்றியமையாது வேண்டப்படுகிறது.

"தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சங்கங்களும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து கொண்டு தமிழ் மொழியின் ஆக்கத்தையும் தமிழன்பர்களின் ஆக்கத்தையும் வளர்க்க

முற்படுதல் வேண்டும். அன்றியும் தமிழன்பர்கள் எல்லோரும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராகவும், தமிழ்ப் பொழிலின் ஆண்டுறுப்பினராகவும் ஆயிரக்கணக்கினர் சேர்ந்து துணைபுரியவும் வேண்டும்!" என்பதே அவ்விண்ணப்பமாகும்.

மற்றுமொரு விண்ணப்பம்

இவ்வேண்டுகோள், உமாமகேசுவரனார் விரும்பிய வண்ணம் பயனளிக்கவில்லை யாயினும், கல்லூரி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. இத் தமிழ்க் கல்லூரியின் முதல் விரிவுரையாளராக அமர்ந்து பெருந் தொண்டுபுரிந்தவர் க.வெள்ளைவாரணனாராவர். 1940-41 இல் நாதமுனி முதலிய மாணவர்கள் வகுப்பிற் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தனர். கல்வெட்டாராய்ச்சியாளர் தி.வை.சதாசிவ பண்டாரத்தார், சனிக்கிழமை தோறும் தம் செலவிலேயே வந்து கல்வெட்டைப் பற்றிய வகுப்பை நடத்திவந்தார். உமாமகேசுவரனாரும் வாளாவிருக்கவில்லை. *ஞாயிறுதோறும் காலை ஒன்பது மணி முதல் பதினொரு மணிவரை, ஆங்கிலத்திலுள்ள கால்டுவெல் ஒப்பிலக்கணத்தை எளிய, இனியதமிழில், மாணவர்* உளங்கொளக் கற்றுக்கொடுத்து வந்தார். கல்லூரியைச் சிவ. குப்புசாமிப் பிள்ளை மேற்பார்த்து வந்தார். பின்னர், நல்ல கவிஞரும் நாவலருமான கே.சி.பெரியசாமிப் புலவர், கல்லூரி ஆசிரியராக இருந்து பணிபுரியலானார். கோடை விடுமுறைக்குப்பின் (1940-41) கல்லூரி இயங்க முடியாதவாறு பேரிடர் வந்துற்றது. கல்லூரிக்கென ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமான முதற்பொருள் இன்மையின், சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைப்புப் (Affiliation) பெறமுடியாததாயிற்று. இதனால், இக்கல்லூரியிற் பயின்று கொண்டிருந்த மாணவர்கள் பல்கலைக் கழகத் தேர்வு எழுதுதற்குத் தகுதியற்றவராயினர்! மாணவர் மனமுடைந்தனர்: திக்குக்கொருவராகச் சிதைந்துவிட்டனர்; சிலர், தொழிலில் அமர்ந்தனர்; சிலர் வேலையின்றி வாளாவிருந்தனர். கல்லூரி வாழ்வில் இருள்

சூழத் தலைப்பட்டது. ஆனால் எண்ணியன முடிக்கும் அண்ணலாரான உமாமகேசுவரனார் மட்டும் மனம் தளர்ந்தாரிலர்.

இச்செந்தமிழ்க் கல்லூரிக்குப் போதிய முதற்பொருள் இன்மையான் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஒப்ப மறுக்கின்றனர். தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலம் போன்ற பிற மொழிகளின் வளர்ச்சியைக் கருதி உழைக்கும் கலைக் கூடங்கள் எத்தனை? அவற்றிற்காகப் பணி செய்து செழுமையுடன் தருக்குற்று வாழும் கணக்காயர் எத்துணையர்? இந்நிலையில் தமிழ் மொழி ஒதுக்கிடம் பெறுவதும், தமிழ்ப் புலவர்கள், வீணர்கட்கு எளியராய் அஞ்சி வாழ்வதும் இழிவன்றோ? தமிழ் மக்கள் இப்புலவர் கல்லூரிக்குப் பொருளுதவி புரிந்து தம் கடனாற்றுவார்களாக!" என்ற ஒரு விண்ணப்பத்தை விடுத்தார்!

செயலாற்றும் கல்லூரி

இதனோடு நின்றுவிடாமல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தம் கல்லூரி நிலையை விளக்கி முடங்கல் ஒன்றினையும் விடுத்தார் உமாமகேசுவரனார். இவரது அயரா முயற்சியால் 1941 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், சென்னைப் பல்கலைக் கழகத்தார் இக்கல்லூரியை ஏற்றுக் கொண்டு, '*தனித் தமிழ்வித்துவான்*' தேர்வுக்குப் பயிற்றுதற்குரிய ஒப்புதலைத் தந்தனர். 'கல்லூரிக்குப் புத்துயிர் வந்தது. கவலை விட்டது!' என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில், காலன் என்னும் கண்ணிலி, கன்னித்தமிழ்க் காவலர் உமாமகேசுவரரின் அரிய உயிரை எவருமறியாமற் கவர்ந்து கொண்டுவிட்டான்! எனினும் தமிழ்த்தாயின் தண்ணருளால் கல்லூரி செயல்படத் தொடங்கிற்று. திருச்சி. பொன்னுசாமிப்பிள்ளை அளித்த நன்கொடையும், ஏனையோர் தந்த பொருளுதவியும் கல்லூரிக்கு உறுதுணை புரிந்தன.

பல்கலைக் கழகத்தோடு இப்புலவர் கல்லூரி இணைந்த பிறகு, 1942 முதல் வித்துவான் புகுமுகத் தேர்விலும், 1943 முதல் முதனிலைத் தேர்விலும் 1945 முதல் இறுதி நிலைத் தேர்விலும் மாணவர் கலந்துகொள்ளலாயினர். இறுதிநிலைத் தேர்வில் முதன்முதலாகச் சென்ற கல்லூரி மாணவர் அறுவரும் ஒருங்கே வெற்றி பெற்றனர். இங்குப் படித்தவர்களில், *அ.மா.பரிமணம் என்பாரும், இரா. கலியபெருமாள் என்பாரும் வித்துவான் இறுதிநிலைத் தேர்வில் முதல் வகுப்பில் முதல் தரத்தில் தேறி ஓராயிர ரூபாய்ப் பரிசைப் பெற்றுள்ளார்கள்* என்றால், இக் கல்லூரியின் தகுதிப்பாட்டை எங்ஙனம் எடுத்துரைப்பது? மேலும் புலவர். ந. இராமநாதனும், வித்துவான் ஐ. மாயாண்டி பாரதியும் இக் கல்லூரியிற் பயின்று முதல் வகுப்பில் வெற்றி பெற்ற சிறப்புக்குரியராவர்!

1945 ஆம் ஆண்டு முதல் இக் கல்லூரியின் பெருமையைத் தமிழகம் உணரத் தலைப்பட்டது. எனினும் போதிய வருவாயின்றியே நடந்து வந்தது அப்போது இக் கல்லூரியிற் பயின்ற மாணவர் தொகை எண்பத்து மூன்றாகும் இம் மாணவர் சாதி, சமய வேறுபாடின்றி, எல்லாரும் தமிழ்க் குடியினரே எனும் எண்ணத்தால் ஒன்றி உறைவாராயினர். இக் கல்லூரியாலாகும் பயனைத் தமிழக முழுமையுமுள்ள மக்கள் துய்த்துக் கொண்டிருந்தனர் என்று கூறலாம். தேர்விற்குச் செல்வோரும், நூற்றுக்கு நூறுபேரும், தொண்ணூற்றொன்பதின்மரும் தேர்ச்சிபெற்றே வந்தனர். அக்காலையில், இக் கல்லூரியைக் கண்காணித்தற்கெனப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரறிஞர் ஏ.இலக்குமணசாமி முதலியார் வந்தபோது, *சங்கத் தலைவர் இராவ்சாகிப், ஐ.குமாரசாமிப்பிள்ளை,* சங்கத்திற்குற்ற பொருள் முட்டுப்பாட்டால் கரந்தைப் புலவர் கல்லூரிக்கெனத் தனிக் கட்டடம் அமைக்க இயலவில்லை' என இரங்கிக் கூறினர் அதற்குத் துணைவேந்தர், "பெருஞ் செல்வர்களும், பெருநிலக் கிழார்களும், குறுநில மன்னர்களும் குழுமிவதியும் இத் தஞ்சை மாநாட்டில், நாட்டப்பெற்றுள்ள தமிழ்ப் புலவர் கல்லூரியொன்று

சிறப்புற வளர்ந்தோங்க ஈண்டுள்ளோர் பொருள் உதவி புரிந்து புரக்காதிருக்கின்றனர் என்பதனைக் கேட்க யான் வியப்பும், வருத்தமும் அடைகின்றேன். எதிர்காலத்திலேனும் இச் செல்வர்களின் ஆதரவைப் பெற்று, இக் கல்லூரி சிறந்தோங்க வேண்டுமென வேண்டுகிறேன்" என்றார்.

ஆனால் இவ்வேண்டுகோள் பதினைந்தாண்டுகள் கழித்தே பயனளித்தது. கல்லூரிக்கெனத் தனிக் கட்டடம் ஒன்று, தஞ்சைப் பெரு வணிகர் முயற்சியால் கட்டப்பெற்றுள்ளது. இத்தகு கல்லூரியைத் தோற்றுவித்த தமிழவேள் உமாமகேசுவரனார், இன்று நம்மிடையே இல்லாவிடினும், ஆண்டுதோறும் இக் கல்லூரியினின்று வெளியேறும் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்-தமிழ்ப் புலவர் உள்ளங்களிலெல்லாம் உலவிக்கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமுண்டோ?

இப்புலவர் கல்லூரியைத் தவிரத் தற்போது இராதாகிருட்டினர் தொடக்கப்பள்ளி ஒன்று நன்முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தொடக்கப்பள்ளியோடு தொடர்புடைய ஓர் உயர்நிலைப்பள்ளியும் இருத்தல் நலம் எனக் கருதிய தமிழவேள் உமாமகேசுவரனார், அதற்கான முயற்சிகள் அனைத்தும் செய்து அரசினர் ஒப்புதலும் பெற்றார். ஆனால் இவ்வுயர்நிலைப்பள்ளி செயல்படுவதற்கு முன் உமாமகேசுவரனார் மறைந்து விட்டார்! இவர் தம் மறைவுக்குப் பின் இவருடைய பெயராலேயே *உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி* தோற்றம் பெற்று, தற்போது உமாமகேசுவர மேனிலைப்பள்ளியாக மேன்மையுற்று சீரிய முறையில் பணி புரிந்து வருகின்றது!

தமிழவேளின் அரிய செயல்கள்

இன்று தமிழகத்திலேயே தலைசிறந்த தமிழ் நிலையமாகத் திகழ்தற்கு முதற்காரணமாயிருந்தவர் தமிழவேள்

உமாமகேசுவரனாரேயாவர்! சங்கத்தைத் தோற்றுவித்தவர் இராதாகிருட்டினபிள்ளையேயாயினும், தொடக்க காலம் முதற் கொண்டு வாழ்வின் இறுதிக் காலம்வரையிலும், எண்ணம், சொல், செயல் இம்மூன்றாலும் இச்சங்கத்திற்காகப் பாடுபட்டுத் தம் இன்னுயிரைத் துறந்தவர் சங்கத் தலைவர் உமாமகேசுவரனாரே யாவர்!

பேச்செல்லாம் தமிழ்ப் பேச்சாக, மூச்செல்லாம் தமிழ்மூச்சாகத் தமிழ்ப் பணிக்கே செலவிட்ட உமாமகேசுவரனாரால் இச் சங்கம் ஆற்றிய செயல்கள் எண்ணிறந்தனவாம். அவற்றின் சுருக்கமாகச் சில சொல்லலாம்.

கடந்த கால்நூற்றாண்டில் தாய்மொழியின் நிலைமையும், தரமும் பல துறைகளிலும் பல படித்தானும், சீரும் செப்பமும் அடைந்துள்ளனவென்றால், அதற்குக் காரணம் நீறுபூத்த நெருப்புப் போல ஆரவாரமின்றி இச் சங்கம் தன்னிலை திரியாது தொண்ணூறு ஆண்டுகளாகப் பல துறைகளிலும் ஆற்றிவரும் தொண்டுகளேயாகும் எனக் கூறுதல் மிகையாகாது. கடந்த தொண்ணூறு ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் ஏற்பட்ட பற்பல துன்பமான காலத்தும், தலைநிமிர்ந்து நின்று தமிழின் உரிமைகளையும், தமிழரின் உரிமைகளையும் காத்துக் கொடுத்தது இச்சங்கம். பண்டு மதுரைநகரில் இயங்கிய தமிழ்ச் சங்கங்கட்குப் பிறகு, முறையாகத் தக்க தரத்தில் தன் கன்னித்தன்மை மாறாது தமிழன்னை வளர்கின்றாள் என்பதை இச்சங்க மேடையிற் காணலாம். தமிழ்மொழி, தன் வளப்பத்திலும், தூய்மை, சிறப்பு முதலியவற்றிலும் குன்றாது மிளிர்வதை இங்கே காணலாம். ஆதலின் தமிழ் நாட்டுப் பலப்பல சங்கங்கட்கும், தொன்மையிலும் குறையாதது இச்சங்கம்!

அண்ணமாலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்க்கு அளிக்கப் பெற்ற 'வித்துவான்' என்ற பட்டத்தை

மாற்றித் தனித் தமிழ்ப் பெயராய்ப் 'புலவர்' என்ற பட்டத்தை வழங்கும் வண்ணம், அப்பல்கலைக்கழகப் பேரவையில் **(Senate)** சிறந்த முடிபினைக் கொண்டுபோய்த் தமிழ்மொழி பயின்றோர்க்குப் பிறமொழியிற் பட்டமளித்தல் கூடாதென வாதிட்டது இச் சங்கமேயாகும். ஆந்திரர் தங்கள் மொழிக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் பெற்றாற் போல, வங்காளிகள் தங்கள் மொழிக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் பெற்றாற்போல உசுமானியப் பல்கலைக் கழகம் கண்டாற் போலத் தமிழரும் தங்கள் மொழிக்கென ஒரு தனிப்பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்து நடத்தல் வேண்டும், என முழக்கவிட்டது இச்சங்கமேயாகும்! சுருங்கச் சொன்னால், இப்பகுதியின் தொடக்கத்திற் கூறியவாறு, தமிழன் தமிழனாக வாழவும் தனித் தமிழுணர்ச்சியும் நாட்டுணர்ச்சியும் கொண்டவனாக விளங்கவும் பாடுபட்ட ஒரே தமிழ்ச் சங்கம் *'கரந்தைத் தமிழ்ச் சங்கமே'* ஆகும்!

கண்ணுதற் பெருங்கடவுளாகிய உமாமகேசுவரன், கழகமோடமர்ந்து, பைந்தமிழைப் பண்ணுறத் தெரிந்தாய்ந்த பான்மை போலச் செந்தமிழ்ச் செல்வராம் தமிழவேள் உமாமகேசுவரனாரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தனிப்பெருந்தலைவராயமர்ந்து தண்டமிழை வளர்த்தாரெனின் அது மிகையாகாது!

உலகின்கண் விளங்கும் உயர்கலைகள் பலவாகும். அவற்றுள் ஒன்று பேச்சுக்கலை. கற்றல் எளிது; கற்றவற்றைப் பிறர்க்கு எடுத்து மொழிதல் அரிது; அங்ஙனம் மொழியுங்காலும், கேட்டார்ப் பிணிக்கவும், கேளார் வேட்பவும் மொழிதல் அதனினும் அரிது! இவ்வருமைப்பாட்டின் திறன் உணர்ந்தே திருவள்ளுவர் *'நாநலம்'* என்று இதனை நன்கு மொழிவாராயினர். அம்மட்டோடு அவர் நின்றாரிலர்; "நலங்கள் பலவற்றுள்ளும் மேலானது நா நலம்; இதனை நன்கமையப் பெற்றவர்களின் தம் சொல் வழியேதான் இவ்வுலகமும் இயங்கும்; பல நூல்களை

நன்றாகக் கற்றறிந்தும் பிறர்க்கு எடுத்துச் சொல்ல முடியாதார். மலர்ந்தும் மணந் தாரா மலரை யொப்பர்" என்றெல்லாம் சொல்வன்மை என்ற தலைப்பில் பலபடக் கூறுகின்றார். இத்தகு நாநலம் பெற்றவரையே 'நாவலர்' என நந்தமிழறிஞர் போற்றிப் புகழ்வர்.

தமிழகத்தில் நாவலர் பலர் அவ்வப்போது தோன்றி நம்து தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஆதரவும் தந்துள்ளனர் அவர்களில் குறிப்பிடத்தக்க பெருமை சான்ற தலைவர்களில் நம் உமாமகேசுவரனாரும் ஒருவர்.

இவர். பள்ளியிலும். கல்லூரியிலும் பயிலும்போதே பேச்சாற்றல் கைவரப்பெற்றுப் பரிசுகள் பல பெற்றுள்ளார். பின்னர் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்ட ஞான்று நடுவர் மன்றங்களில் ஆங்கில மொழியில் அழகாகப் பேசும் வாய்ப்பினைப் பெற்றார். இவர்தம் நா வன்மைக்கு வழக்கறிஞர் தொழில் பெரிதும் துணை புரிந்தது என்று கூறலாம்.

வழக்குரைஞர் தொழில்

தஞ்சை சீனிவாசம்பிள்ளையிடம் சிலஆண்டுகள் பயிற்சி பெற்ற உமாமகேசுவரனார். கரந்தையிலிருந்தவாறே தனியாக வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளலாயினார். பெயர்ப்பலகை கூடத் தொங்கவிடாமல். ஏறத்தாழ முப்பத்திரண்டு ஆண்டுகட்கு மேலாக வழக்கறிஞராய் விளங்கிக் கட்சிக்காரர்கள். நடுவர்கள், பொதுமக்கள் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றாரென்றால் இவரிடத்து எத்தனை அரிய பண்புகள் இருந்திருத்தல் வேண்டும்.

பெற்ற பணத்தைவிடப் 'பேரும் புகழும் அடையவேண்டும்' என்ற ஆர்வம். அதனால் ஏற்படும் இடையறா உழைப்பு. உழைப்பிலும் உண்மையே காணவேண்டும் என்ற அவா. அவ்வுண்மையை அச்சம் சிறிதும்

இல்லாமல் உரைக்கும் ஆண்மை-இவையே வழக்கறிஞர் உமாமகேசுவரனாரிடம் அமைந்த அரிய பண்புகள்.

வழக்குகளை ஆயத்தம் செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர் இவர். பெரும்பாலும் சமூகத்தைச் சார்ந்த வழக்குகளையே (Civil Case) மேற்கொள்வார். கொலைக்குற்ற வழக்குகளைவிடச் (Criminal Case) சமூகத் தொடர்பான வழக்கிற்கு ஆழ்ந்த பட்டறிவும், நிறைந்த உலகியலறிவும், கடின உழைப்பும் தேவை என்பர் அத்துறைவல்லார். தஞ்சை மாவட்டத்திலேயே இத்தகு வழக்குகளை நடத்தி வெற்றி காண்பதில் உமாமகேசுவரனாரை விஞ்சியவர் எவருமிலர் என்று இன்றுங்கூடச் சொல்லப்பெறுதலைக் காது குளிரக் கேட்கலாம்!

தம்பால் வரும் வழக்கிற்கெனச், சான்று கூறுவார் பலரை (Witness) ஆயத்தமாக்குவார்; நிறையப் புள்ளி விவரங்களைத் தொகுப்பார்; அங்ஙனம் தொகுப்பதற்குத் தம் கட்சிக்காரர்கள் சரியாக ஒத்துழைக்காவிடில் அவர்கள் பாற் கடுஞ்சினங் காட்டுவார். தம் உள்ளத்தில் உண்மையென்று பட்ட வழக்குகளையே பெரும்பாலும் எடுத்துக் கொள்வார். எனவே இவரிடம் பொய் வழக்கிற்கென வழக்குரைக்க வருமாறு அழைப்போர் பெரிதும் அஞ்சுவர். வழக்கினைக் கொண்டுவருபவர்கள், முதலில் உள்ளதை உள்ளவாறே இவரிடம் உரைத்துவிடவேண்டும். ஒளிவு மறைவுள்ளவர்களை விரட்டிவிடுவார். சிலபோழ்து தம் கட்சிக்காரரிடம் "இஃது உண்மைக்குப் புறம்பாய் எனக்குத் தோன்றுகிறது; வெற்றி கிடைப்பது அரிது" என்று சொல்லிப் பார்ப்பார். "நாங்கள் கூறுவதே உண்மையென நம்புகின்றோம். எங்களுக்காக வழக்காடிப் பாருங்கள். தோல்வி கிடைத்தாலும் கவலை கொள்ளோம்" என்று கட்சிக்காரர் உரைப்பாராயின், அவர்கட்காக வழக்காடுதலும் உண்டு. ஒருவர்க்கு உண்மை என்று தோன்றக்கூடிய ஒன்று, மற்றவர்க்குப் பொய் என்று தோன்றுவது உலக இயல்பல்லவா? எனவே பொய் என்று பிறர்

சொல்வதை நம்பி விட்டுவிடாமல் அதனை ஆராய்ந்து உண்மை காண்பதே வழக்கறிஞர்க்குள்ள இயல்புகளில் ஒன்றாகும் எனச் சட்டத்துறை வல்லுநர் கூறுவர். அம்முறையில் சிலபோழ்து சில வழக்குகளை இவர் மேற்கொண்டு நடத்துவதும் உண்டு!

மிகுதியான சாட்சிகளை ஆயத்தம் செய்தபின், வழக்கினை நடாத்துதற்குரிய குறிப்புகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொகுத்து எழுதிவைத்துக் கொள்வார் உமாமகேசுவரனார். எத்தகைய வழக்கறிஞர் பார்த்தாலும், அவ்வழக்கினைத் தாமே ஏற்று நடத்துதற்குரிய முறையில் இவருடைய குறிப்புகள் அமைந்திருக்கும். 'காலங் கடந்தாலும் கவலைப்படாமல் குறிப்புகளைத் தொகுத்து வைத்து, வழக்கினை நடாத்துவதில் வல்லவர் இவர்' எனப் பல வழக்கறிஞர்கள் இவரைப் பற்றிக் கூறுவதுண்டு.

நீதிமன்றத்தில், பலரும் போற்றும்வகையில் அழகிய ஆங்கிலத்திலேயே வழக்காடுவார் இவர். குறுக்குக் கேள்விகள் கேட்பதில் பெயர் பெற்றவர்; இவர் வழக்காடும் முறையினைக் கேட்டு அதனை முன்னெடுத்துக்காட்டாகக் கொள்வதற்கென்றே வழக்கறிஞர் பலர் நீதி மன்றத்திற்கு வருவார்கள் என்றால் இவர்தம் நாவன்மையை எங்ஙனம் எடுத்துரைப்பது? இக்காரணங்களால் எவர்க்கும் அஞ்சாத அரிய நடுவர்கூட இவரிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

எந்தக் கட்சிக்காரரிடமும் வழக்காடுதற்குரிய தொகை இன்னது எனத் தம் வாயால் ஒருபோதும் கேட்கமாட்டார்; கையேந்திப் பணமும் பெற்றுக் கொள்ளமாட்டார். இவரிடம் எழுத்தராகப் (Valkil's Clerk) பணி புரிந்த 'பாப்பையர்' என்பவரே, கட்சிக்காரரிடம் தொகை பேசுவதும், பெறுவதும் செய்வார். கட்சிக்காரரைப் பெருந்தன்மையாக நடத்தும் இயல்பு உமாமகேசுவரனாரிடம் இயற்கையாய் அமைந்ததொன்று. பணம் கொடுக்க முடியாத ஏழ்மை நிலையிலுள்ள எத்தனையோ

பேர்களுக்கு எவ்விதத் தொகையும் பெறாமல வழக்காடி வெற்றி தேடித் தந்திருக்கிறார்.

இத்தகு தன்மைகளால், அரசாங்கத்துக்கும் நம்பிக்கையானவராகத் திகழ்ந்தார் உமாமகேசுவரனார் என்பதில் வியப்பேதுமில்லை. அதனாலேயே அரசினர், உதவிப் பொது வழக்குரைஞர்' (Additional Public Prosecutor) பணியை இவருக்கு அளித்தனர் போலும்.

இவர் கடைப்பிடித்த கொள்கைகளால், அக்காலத்திலேயே, இவருக்குத் திங்கள் ஒன்றுக்கு ஓராயிர ரூபாய்க்குங் குறையாமல் வருமானம் கிடைத்து வந்தது. தஞ்சை மாவட்டத்திலேயே சமூகச் சார்பான வழக்கில் நிறைய வருமானம் பெற்றவர் இவரே'

வழக்குத்துறையில் இவருக்கு முதன்முதலாகப் பெயர் வருவதற்குக் காரணமாயிருந்தது. 'கும்பகோணம் குப்புசாமி ஐயர் வழக்கே' யாகும் என்பர் சிலர். இதனை நடத்தி வெற்றி பெறமுடியாது என்று புகழ்பெற்ற வழக்கறிஞர்களாலேயே கைவிடப்பட்ட இவ்வழக்கை இவர் எடுத்துக் கொண்டு தக்க முறையில் வழக்காடி வெற்றி தேடித் தந்தார். அன்று முதல் உயர் வழக்கறிஞர் குழுவில் இவர் பெயர் முதலிடம் பெறுவதாயிற்று.

உமாமகேசுவரனார் மேற்கொண்டு நடத்திய வழக்குகள் எண்ணிறந்தன. அவற்றுள் சுவையானவையும் சில உள கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் தம்பி பொருட்டு வழக்காடியதும், வரகனூர்க்கோயில் கருப்பக்கிரகத்திற்குள் நுழைதற்கென வழக்காடியதும், நீதிக் கட்சிக்காக வழக்காடியதும். சட்டத்துறையில் வல்லார்கட்குப் பெரு விருந்தாயமைவன.

உமாமகேசுவரனாரிடம் பயிற்சி பெற்ற வழக்கறிஞர் (Junior) பலராவர். அவருள், பேருய் புகழும் பெற்று சிறப்புடன்

வாழ்ந்தவர்கள் இராதாகிருட்டினநாயுடு, டி.கே.சுப்பிரமணிய பிள்ளை, தி.பொ.வேதாசலம், சி.வேதாசலம் ஆகிய பெரு மக்களைக் குறிப்பிடலாம்.

இராதாகிருட்டின நாயுடு என்பவர் உமாமகேசுவரனாரிடம் பயிற்சி பெற்றதோடு, பல ஆண்டுகள் நெருங்கித் தொடர்பு கொண்டவருமாவார். அவர் அரசினர் வழக்கறிஞராகவும், நடுவராகவும் **(Munsiff)** பணி புரிந்து ஓய்வும் பெற்றார்.

தி.பொ.வேதாசலமும், சி.வேதாசலமும் உமாமகேசுவர னாரின் உறவினராவர்: இவர்கள் முறையே திருச்சியிலும், தஞ்சையிலும் வழக்கறிஞராகத் திகழ்ந்தனர். இவர்களுள் பின்னவர், உமாமகேசுவரனாரின் அணுக்கத் தொண்டராயிருந்து, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சராகவுமிருந்து பணி புரிந்தவர்.

தமிழ் நாவலர்

உமாமகேசுவரனார் சிறந்த நாவலராக விளங்குவதற்கு வழக்கறிஞர் தொழில் காரணமாயமைந்தது போலவே, கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பும் காரணமாயமைந்தது எனலாம். முன்னது ஆங்கிலப் பேச்சாற்றலுக்கும், பின்னது தமிழ்ப் பேச்சாற்றலுக்கும் பெருந்துணை புரிந்தன.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் பொறுப்பேற்ற பின்னர்ப் பல தமிழ்க் கூட்டங்களில் இவர் பேச வேண்டிய நிலை வந்துற்றது. இதனால், இவர்பால் இயற்கையாகவே அமைந்திருந்த நல்ல தமிழறிவு மேலும் பெருகத் தலைப்பட்டது. சங்ககால இலக்கியம் முதல் பிற்கால இலக்கியம் வரையிலும் தாமே முறையாகக் கற்றார். போதிய புலமை பெற்றார்: மேடையில் தமிழ் முழக்கம் செய்து 'தமிழ் நாவலர்' ஆனார்.

சங்கம் தன் தொடக்ককாலத்தே பிறமொழிக் கலப்பைப் பற்றி அத்துணைக் கவலையேதுங் கொள்ளவில்லை. நான்கைந்து ஆண்டுகளில் தனித் தமிழை வளர்க்கப் பெரிதும் பாடுபடத் தொடங்கிற்று. இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தனித் தமிழில் பேசவும், எழுதவும் வல்லவராயிருத்தற்குக் காரணம் இக் கரந்தைத் தமிழ்ச் சங்கமாகும். இச் சங்கத்தின் வாயிலாகத் தமிழைப் பரப்பிய பெருமை உமாமகேசுவரனாருக்கே உரியது! இவர், மேடையில் மட்டுமின்றி வீட்டிலும், வெளியிலும் தனித் தமிழிலேயே பேசுவார். இவரைக் கண்டு பலர் தூய தனித் தமிழில் பேசத் தொடங்கினர்.

தமிழ் மொழியில் சொற்பொழிவாற்றுவதில் ஒரு தனி நிலையை அடைந்திருந்தார் உமாமகேசுவரனார். எத்தகைய கருத்துக்களையும் பிறமொழிக் கலப்பின்றித் தனித் தமிழில் எவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையிற் பேசுவதில் ஓரெடுத்துக்காட்டாகவே இவர் விளங்கினார். குற்றங்களைத் திருத்துவதற்காகவும், நல்ல நெறிகளை அடைவதற்காகவும் இவர் பேசும் பேச்சுக்கள் எவரையும் அஞ்சி நெறிப்பட வைப்பனவாக இருக்கும். இவர் பேச்சுக்களெல்லாம் உண்மையும், உணர்ச்சியும் ததும்பியனவாகவே இருக்கும். இவ்வகையில் தமிழகத்தில் எதற்கும் அஞ்சாத ஒரு வீரர் இவர் என்று இறுமாந்து இயம்பலாம்.

தமிழகத்தில் அக்காலத்தில் நடந்த பல்வேறு மாநாடுகளிலும், பிற கூட்டங்களிலும் உமாமகேசுவரனார் தலைமை தாங்கியும், வரவேற்புரை நிகழ்த்தியும், சொற்பெருக்காற்றியும், சிறந்த முடிபுகளை முன்மொழிந்து வழிகாட்டியும்-இன்னோரன்ன பிற செயல்களாலும் 'பெருநாவலர்' என்னும் அருநிலையடைந்துள்ளார். அங்ஙனம் இவர் பேசிய பேச்சுக்கள் பல, குறிப்பெடுப்பார் இன்மையின் காற்றொடு கலந்து வீணே போயின. எனினும் சிற்சில குறிப்புக்கள் மட்டும் கிடைத்துள்ளன. அவற்றுள் எடுத்துக்காட்டாக இரண்டினைக் காண்போம்.

தமிழர் மாநாட்டு வரவேற்புரை

தஞ்சை-திருச்சிராப்பள்ளி மாவட்டத் தமிழர் மாநாடு ஒன்று 7-8-1932-இல், துறையூரில் பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்பெற்றது. அதற்கு, வரவேற்புரை வழங்கும் வாய்ப்பு, தமிழவேள் உமாமகேசுவரனாருக்குக் கொடுக்கப் பெற்றது. அப்போது இவர் ஆற்றிய பேருரையின் சுருக்கம் வருமாறு:

"மொழி வளத்தால் ஒரு நாடு நன்னிலை பெறும்; மொழி வளங்குன்றின் வீழ்ச்சியுறும். தமிழ்மொழி பழமையானது; இலக்கண இலக்கியச் செறிவு மிக்கது. அரசரும் குடிகளும் தமிழைப் போற்றிப் புரந்தனர்; அதுகாறும் அவர்கள் வெற்றிக்கு வீழ்ச்சியில்லை. பின்னர் அடிமை வாழ்வில் அகப்பட்டு மொழியை மறந்தனர்; மீளும் வகையின்றி ஆளாத் துயரில் உழல்கின்றனர். எனவே, இவ்விழிநிலைமாறத் தமிழ் இலக்கியங்களையும், பிறநாட்டாரின் கலைத்திறனையும் கற்று முன்னேற வேண்டும்! பட்டம் பெற்ற பட்டதாரிகளிற் பலர், தாம் கற்ற கலைத்திறனை, ஆங்கிலம் அறியாத கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்படுமாறு செய்வதில்லை. நமது நாட்டு மக்கள் கல்வியில் முன்னேற வேண்டுமாயின், தம் நாட்டு மொழியிலே அனைத்தையும் கற்றல் வேண்டும். மேனாட்டினரும் வியக்கும் வண்ணம், சப்பானியர், மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே, மதி நலமும், படைநலமும், பொருள் நலமும் பெற்றுத் திகழ்வது, அவர் தம் நாட்டு மொழி அளித்த மதுகையாலேயாம்! தாய் மொழிப் பயிற்சியால் ஆங்கில மொழித்திறன் குன்றிவிடுமென்று கூறுவது தவறுடைத்து. இசுலாமியா பல்கலைக் கழகத்தினர், தோற்றிய காலமுதல் அருங்கலையனைத்தையும் நாட்டு மொழியாகிய *'உருது'*வில் மாணவர்க்குக் கற்றுத்தரும் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளனர். மற்றொரு சாரார், கலை நூற்களைக் கற்றுத்தரத் தாய்மொழியில் கருவி நூற்கள், மரபுச் சொற்கள், வாய்பாடுகள் இல்லையென்கின்றனர். ஆங்கிலத்திலும்,

தமிழிலும் புலமை மிக்க தமிழறிஞர் சிலரை ஒன்று சேர்த்துப் பணவுதவி புரிந்தால் இக் குறைபாடு மிக எளிதில் நீங்கிவிடும்! கலை நூற்களைத் தாய்மொழியில் எழுதுவோர்க்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படுமென விளம்பரம் செய்யின் எத்துணை நூல்கள் விரைவில் வெளிவரும் தெரியுமா? எனவே, குறைபாடுகளை நீக்கிவிட்டுத் தமிழ்மொழி ஆக்கம் பெறுதற்குரிய வழி வகைகளைக் காண வேண்டுவது தமிழர்களின் தலையாய கடமையாகும்!"

தமிழர் மாநாட்டுத் தலைமையுரை

நெல்லைப்பாலம் இந்துக் கல்லூரி ஆங்கிலமண்டபத்தில், 'சென்னை மாகாணத் தமிழர் முதலாவது மாநாடு' கூடிற்று. தமிழவேள் உமாமகேசுவரனார், தலைமையேற்றுத் தம் தலைமைப் பேருரையை நிகழ்த்தினார். அவ்வுரையின் சுருக்கம் வருமாறு:-

"பழந்தமிழ்க் காலமுதல் வடசொற்களும், திசைச் சொற்களும் தமிழில் இன்றியமையாதவிடத்து வழங்கி வந்திருக்கின்றன. ஆனால் அவ்வாறு வருகின்றபோது, அவை தமிழியலுக்கு ஏற்ப உருமாறித் தொழில்புரிய வேண்டுமென்பது ஆன்றோர் வகுத்த தமிழ் மரபு. "வட சொற் கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்பது நூற்பா. வடவெழுத்துக்களிற் பல, தமிழியலுக்கு முரண்படுதலின் அவற்றை நீக்கி எழுதுவதே முறையென மூதறிஞர் கண்டனர். வடசொற்கள் பெரிதும் வழங்கத் தலைப்பட்ட, பிற்காலத்திலும் இவ்வியலுக்கு மாறுபடா வண்ணம் நன்னூலார் வகுத்தனர். சங்க கால முதல் இதுகாறும் தோன்றி வரும் சிறந்த நூல்கள் யாவும் இம்மொழி மரபு வழுவாமல் பாதுகாத்து வருகின்றன! ஒரு சிலர், தமிழ் எழுத்திலக்கணத்தில் குறைபாடுகள் மலிந்துள்ளனவென்றும் அவற்றை அகற்ற வேண்டுமென்றும் கூறுகின்றனர். 'லார்டு கிரோமர்' **(Lord Cromer)** என்ற ஆங்கிலப் புலவர், தம் மொழியின் எழுத்திலக்கணத்திற்

காணப்பெறும் சில குறைகளைத் தொகுத்து ஒரு கவியில் விளக்கியுள்ளார். எனினும், ஆங்கில மொழியின்' வளர்ச்சி சிறிதும் குன்றவில்லை! அச்சுக்கோப்போரின் துன்பத்திற்காகச் சிலர், தமிழ் எழுத்துக்களிற் சிலவற்றை அகற்ற விரும்புகின்றனர். வேறு சிலர் 'க' என்ற ஆங்கில எழுத்தையும், தமிழில் இல்லாத பிறமொழி எழுத்துக்களையும் தமிழிற் சேர்க்கக் கருதுகின்றனர். இவை, எம்மொழியாளரும் ஏற்கக்கொள்ளாதவை! வீரமாமுனிவர், போப்பையர் போன்ற அயல் நாட்டவர் கூட இவ்வாறு சொல்லத் துணியவில்லை! வடகலை, தென்கலை உணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர், வடநூலார் கொள்கையில் அடிப்பட்டிருந்தும் தமிழ் மரபு இழுக்காவண்ணம் உரை நூல்கள் இயற்றினார்களே! ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் சீர்திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்தும் அவற்றைத் திருத்தத் துணியாது, தமிழ்மொழியைத் திருத்துவோமென்பது பேதமையாகும்! கலை நூல்களில் வழங்கும் குறியீட்டுச் சொற்களுக்கு, ஏற்ற தமிழ்ச் சொற்கள் நூலிலோ, வழக்கிலோ கிடைத்தால் அவற்றைப் பயன்படுத்தவேண்டும்; இல்லாதபோது, தமிழில் படைத்துக் கொள்ள வேண்டும்; இதுவும் இயலாவிடில், தமிழ் மரபிற்கேற்பத் திரித்து அமைக்க வேண்டும். ஆங்கிலேயர், அரிசி, இஞ்சி என்பவற்றை 'Rice, ginger' என ஆக்கிக்கொண்டனர். சர்மானியர், அறிவுநூற் பொருள்களைக் குறிப்பதற்கான சொற்களைத் தம் தாய் மொழியிலேயே ஆக்கிக் கொண்டனர். எனவே, இம் முறையைத் தமிழர்களும் பின்பற்றலாம்!"

தமிழவேள் உமாமகேசுவரனார் இத் தலைமை உரையில் கூறியன யாவும் இக்காலத்துக்குங்கூட எத்துணை ஏற்றனவாய், விழுமியனவாய் மிளிர்கின்றன என்பதை ஊன்றி நோக்குவார் உணர்தல் கூடும். இவர் தலைமையில் உருவாகிய *'சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்'* இன்றும் சீரிய முறையில் பணியாற்றிக் கொண்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலப் பேச்சாற்றல்

இவ்வாறு தமிழவேள் உமாமகேசுவரனார் ஆங்கிலத்திலும், அருந்தமிழிலும் அழகுறப் பேசும் ஆற்றல் பெற்றதனோடமையால், ஆங்கிலப்பேச்சினை அழகுத் தமிழில் மொழி பெயர்த்துப் பேசும் ஆற்றலும் கொண்டு விளங்கினார் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சியால் அறியலாம்.

ஒருமுறை சென்னை மாநில ஆளுநர் மேதகு சர்-ஆர்தர்கோப், தஞ்சை நகருக்கு வந்தபோது, 'இராமநாதஞ் செட்டியார் மன்றத்' தில் (Ramanathan Chettiar Hall) ஆங்கிலத்தில் அரை மணி நேரம் விரிவுரையாற்றினார். அப்பேச்சினை மொழிபெயர்க்கும் பொறுப்பு உமாமகேசுவரனாருக்கு கிடைத்தது. ஆளுநர், தம் உரை முழுவதையும் பேசி முடித்தபின் உமாமகேசுவரனார் எழுந்தார். அதே அரை மணி நேரத்தில், ஆளுநர் பேசிய முறையிலேயே, எவ்வெவ்விடங்களில் உணர்ச்சி ததும்ப அவர் பேசினாரோ, பாராட்டுதல்களைப் பெற்றாரோ, அவ்வவ்விடங்களில் உமாமகேசுவரனாரும் உணர்ச்சியுடன் பேசிப் பாராட்டுதல்கள், ஆரவாரக் கை தட்டல்கள் முதலியவற்றைப் பெற்றார் எனின் இவர்தம் நா வன்மையை நாம் எந்நாவால் நவில்வது? எந்தவித மொழி மாறுபாடுமின்றித் தெளிவும், ஆற்றலும் அமையத் தூய தமிழில் இவர் பேசிய பேச்சினை வியந்து பாராட்டாதார் இலர். கூட்டமுடிவில் ஆளுநர் இவரைப் பலபடப் பாராட்டிச் சென்றனர்.

பிற கூட்டங்கள்

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார், தேசிக விநாயகம் பிள்ளைக்குக் 'கவிமணி' எனுங் கவினுறு பட்டம் தந்து சிறப்பித்தனரன்றோ? அஃது, உமாமகேசுவரனார் தலைமையில் தான் வழங்கப்பெற்றது!

கொண்டல்போலப் பெருஞ் சொன்மழை பொழியும் பேராசிரியர் அ.மு. சரவண முதலியார், திருச்சிராப்பள்ளிச் சைவ

சித்தாந்த சங்கத்தில் இரண்டு ஆண்டுகளாகப் பெரிய புராண விரிவுரையாற்றியமையக்காக அவருக்குப் 'பெருஞ்சொல் விளக்கனார்' என்னும் பெருமைமிகு பட்டம் (5-12-1937-இல்) கொடுக்கப்பெற்றது. அப்போது அவரைப் பாராட்டிப் பேருரை நிகழ்த்திய பேரறிஞர்கள் பலருள் நம் உமாமகேசுவரனாரும் ஒருவராவார்.

இவை தவிர மதுரைத் தமிழ்ச்சங்க விழாக்களிலும், நாகைச் சைவசித்தாந்த சபையிலும், இன்னும் இவைபோன்ற தமிழகத்தின் பல்வேறு இலக்கிய மன்ற விழாக்களிலும், தலைமையாளராகவும் சொற்பொழிவாளராகவும் சென்று, இவர் நிகழ்த்திய விரிவுரைகள் எண்ணிறந்தனவாம்.

கரந்தைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாக் காலங்களிலும், அதன் கணக்கற்ற கூட்டங்களிலும் உமாமகேசுவரனார் பேசிய பேச்சுக்கள் பலப்பல. அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக்கினால் தமிழ்ப் பெரு மக்கட்கு அறிவுக் களஞ்சியங்களாக விளங்கியிருத்தல் கூடும்!

இன்னோரன்ன செயல்களில் உமாமகேசுவரனாரை *'ஒரு பெரு நாவலர்'* எனப் பீடுடன் உரைக்கலாமன்றோ?

எழுத்து வன்மை

நாவலராக விளங்கிய நம் உமாமகேசுவரனார், கட்டுரை எழுதும் வன்மையும் பெற்றிருந்தார். அதற்குக் காரணம் *'தமிழ்ப் பொழிலி'*ன் ஆசிரியராகப் பல்லாண்டுகள் இருந்து பணி புரிந்தமையேயாகும். தம் எழுத்தாற்றலை விளக்குமுகத்தான் நூல் எதுவும் எழுதவில்லையெனினும் 'தமிழ்ப் பொழிலி'ல் காலத்துக்கேற்பத் தமிழ் மொழியும், தமிழ்நாடும் தமிழினமும் முன்னேறுதற்கான வகையில் இவர் தீட்டிய தலையங்கங்கள் எத்தனை? வரைந்த விண்ணப்பங்கள் எத்தனை? விடுத்த வேண்டுகோள்கள் எத்தனை? ஆய்ந்த நூன்மதிப்புரைகள்

எத்தனை? இவற்றையெல்லாம் கணக்கிட்டுத் தொகுத்தால் எண்ணில் பல் நூல்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

இவருடைய எழுத்தில் அன்பு தவழும்; அறம் தலை நிற்கும்; வீரம் பெருகும்; விளங்கிய அறிவு சிறந்து தோன்றும்! அது நாட்டுப் பற்றைத் தரும்; மொழிப்பற்றை ஊட்டும்; இனப்பற்றைப் பெருக்கும்.

குணங்கண்டவிடத்துப் போற்றியும், குற்றங்கண்டவிடத்து இடித்துரைத்தும்-எழுதும் இயல்பு; பட்டதைப் பட்டாங்கு எழுதும் வன்மை இவர்பாலுண்டு. 19-1-1941-இல், மதுரையில் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டில், தலைமை தாங்கிய வையாபுரிப் பிள்ளை, தம் தலைமையுரையில் கூறியவற்றுள், நல்லன போற்றி, அல்லன மறுத்துத் தம் 'தமிழ்ப் பொழிலி'ல் (துணர் 16-மலர்11) இவர் எழுதிய தலையங்கம் ஒன்றே இதற்குச் சான்றாகும்.

தமிழ் மொழியில் மட்டுமின்றி ஆங்கில மொழியிலும் கட்டுரை எழுதுவதில் இவர் வல்லவர். ஆங்கிலப் பேரறிஞர் பைரன் பிரபு (Lord Buron) எழுதும் நடையை யொப்ப, இவர்தம் ஆங்கில நடை அமைந்திருக்கும் என ஆங்கிலம் கற்ற வல்லோர் கூறுவர். ஆங்கிலத்தினின்றும் தமிழில் மொழி பெயர்த்து எழுதுவதிலும் இவர் வல்லவர் என்பதற்கு "VOYAGE" என்ற ஆங்கிலக் கட்டுரையைக் *'கடற்செலவு'* எனப் பெயரிட்டு மொழிபெயர்த்து எழுதினமையே இதற்குச் சான்றாகும்.

இவ்வாறு தமிழ் நாவலராய் விளங்கிய உமாமகேசுவரனார் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கிப் பெரும் புகழுற்றார்!

செயல் வீரர்

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்னும் குறட்பாவிற்கேற்ப, அரும்பெரும் பொருள்களைப் பற்றி அழகுபடப் பேசலாம்; எழுதலாம். ஆனால் சொல்லிய வண்ணமும் எழுதிய வகையிலும் செயலாற்றுதல் என்பது அரிதினும் அரிது; அஃது ஆன்றோர்க்கு மட்டுமே கைகூடுவதொன்று. ஆனால், நாவன்மைமிக்கவராக விளங்கிய தமிழவேள் உமாமகேசுவரனார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் செவ்வனே நடாத்திய ஒன்றே இவர் ஒரு பெருஞ் செயல்வீரரும் கூட, என்பதை உணர்த்துவதாகும். செயற்கரிய செய்த பெரியருள் ஒருவராக நம் உமாமகேசுவரனார் திகழ்ந்தார். அங்ஙனம் திகழ்தற்கு இவர்பால் அமைந்திருந்த அருங் குணங்கள் பலவாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடலாம்.

நாடாளும் மன்னவனுக்குரிய மாண்புகளை மொழிய வந்த முப்பாலின் ஆசிரியர்,

அஞ்சாமை யீகை அறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு (குறள்:382)

என்கின்றார். இந்நான்கு பண்புகளும் தமிழ் வேந்தராகிய உமாமகேசுவரனாரிடம் இயல்பாகவே அமைந்திருந்தன.

உள்ளம் உணர்வதை உரைப்பதிலும், அதனை அச்சமேதுமின்றிப் பிறர் மனங்கொள்ள மொழிவதிலும் சிறிதும் பின்வாங்கியவரல்லர் உமாமகேசுவரனார். அங்ஙனங் கூறுங்கால், கேட்பவர் உயர் அலுவலர் என்றோ, பெருஞ்செல்வர் என்றோ, தம் கருத்துக்கள் அவர் உள்ளத்தை வருத்துமென்றோ பார்க்கமாட்டார்.

அஞ்சாமை

ஒருமுறை, துறையூரில் தமிழ்ப்புலவர், தமிழ் மாணவர், தமிழ் மாநாடுகள் நடந்தன. அவற்றின் வரவேற்புக் கழகத் தலைவராக உமாமகேசுவரனார் பொறுப்பேற்றிருந்தார். மாநாட்டின் தலைவராய் வந்தவர்கள், பேரறிஞர்கள்;

செல்வாக்குப் பெற்றவர்கள். ஆயினும் அவர்கள் நடந்துகொண்ட முறை பொருத்தமற்றதென உணர்ந்த உமாமகேசுவரனார், தம் 'தமிழ்ப் பொழில்' தலையங்கத்தில் பின்வருமாறு கண்டித்து எழுதியுள்ளார்.

" .... இம்மூவரில் இருவர் மிகவும் காலந் தாழ்த்து வந்தமையால் மாநாடுகள் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்க முடியாமற் காலமும் அவலமாய்க் கழிந்தது. இவருள் ஒருவர் காலங் கடந்து வந்ததோடமையாது, மாநாட்டை விரைவில் முடித்துவிட்டு வேறு அலுவல்களில் படரும் கருத்துடையராயுமிருந்தனர். மாநாட்டில் நிறைவேற்றுதற் பொருட்டுவந்த முடிபுகளைக் கண்ணுற்று அவற்றினைச் செப்பஞ் செய்வதும், கொள்வன தவிர்வனவற்றை ஆய்வதும் தமது கருமமெனத் தலைவர்கள் கருதினாரல்லர். வரவேற்புக் கழகத்தின் ஆராய்ச்சிக்குரியனவென்று தேர்ந்து கொடுத்த முடிபுகளைத் தானும் பேரவையில் வைப்பதற்கு நேரமில்லையெனக் கூறித் தமிழர் மாநாட்டின் தலைவர் மிகப் பல முடிபுகளைப் புறக்கணித்துப் போந்தது போற்றத்தகும் முறைமையன்று. மாநாட்டின் நோக்கத்தினை நன்குணராத ஒருசிலர் முறை பிறழ்ந்து அடாதன செய்ய முற்பட்டதைக் கடிந்து பாதுகாவாதும், அன்னார் தொடுத்த அழிவழக்குகளை வாதிக்க இடந்தருதற்கு அஞ்சி நடுநில்லாதொதுங்கியும், தலைவர்கள், மாநாட்டின் உரிமைகளை நெகிழவிடுத்தது வருந்தத்தக்கதொன்றாம்."

ஒருகால், கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியைப் பார்வையிடக் கல்வி அலுவ்லர் ஒருவர், காலை பத்து மணிக்கு வருவதாக முன்னமே அறிவித்திருந்தார். உமாமகேசுவரரும் குறிப்பிட்ட வேளையில் அவரை வரவேற்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் அவ்வலுவலரோ காலங்கடந்து வந்து சேர்ந்தார். வாயிற்கதவைக்கூடத் திறக்காமல் அவரை 'வெளியேறுக' என்று சொல்லி அனுப்பிவிட்டார்

உமாமகேசுவரர். அவ்வலுவலர் பெருஞ்சினங் கொண்டு, பள்ளியைப்பற்றித் தவறுதலாக எழுதி அரசினர் உதவித் தொகையை நிறுத்த ஏற்பாடு செய்தார். உமாமகேசுவரர் வாளாவிருந்துவிடவில்லை; தக்க ஏற்பாடுகளைச் செய்தார்.அதே அலுவலரைப் பள்ளிக்குத் தாமாக வருமாறு செய்ததோடமையாமல், கூட்டத்தில் அவர் மன்னிப்புக் கேட்குமாறும் செய்துவிட்டார். அம்மட்டோ? அவ்வலுவலர், பள்ளி உதவித் தொகையில் முன்பைவிடக் கூடுதலாகக் கிடைத்தற்கும் வழிவகுத்துச் சென்றார்.

இதேபோன்று மேலுமொரு நிகழ்ச்சி, மற்றொரு முறை நடந்தது. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக்குரிய உதவித் தொகை தருவதில் கல்வியலுவலர் ஒருவர், தம் மனம் போனவாறெல்லாம் நடந்து கொண்டார். இதைத் தக்க முறையில் எடுத்துக்காட்ட வேண்டுமெனத் துணிவு கொண்ட உமாமகேசுவரர் அதற்குரிய காலத்தை நோக்கிக் கொண்டிருந்தார். அப்போது, சென்னைக் கல்வியமைச்சராக இருந்த திவான்பகதூர் குமாரசுவாமி ரெட்டியார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினைப் பார்வையிட வந்தார். இதுவே தக்க வாய்ப்பெனக் கருதிய உமாமகேசுவரர், தம் வரவேற்புரையில், கல்வியலுவலர் செய்ததவற்றைத் தக்க காரணங்களுடன் எடுத்துக் கூறி ஆவன செய்தார்.

தஞ்சையிலிருந்த மாவட்டக் கூட்டுறவுப் பதிவாளர் ஒருவர், மாற்றலாகி வேற்றூருக்குச் சென்றார். அப்போது நண்பர் சிலர் அவர்க்கொரு பாராட்டு விழா நடத்தினார். உமாமகேசுவரனாருக்கு அது பிடித்தமில்லையாயினும் பலர் விருப்பத்திற்கிணங்க அக் கூட்டத்திற் கலந்து கொண்டார். அவரைப் பாராட்டிச் சிலர் பேசினர். ஆனால் இவரோ, இப்பதிவாளர் மிகவும் பொல்லாதவர்; இனியேனும் சரியான முறையில் நடந்து கொள்வார் என நம்புகிறேன்" என்று பல சான்றுகளை அஞ்சாமல் காட்டி உரைத்தார்.

பொது நலம் பேணல்

பொதுநலத் தொண்டில் இவர் காட்டும் ஆர்வத்தையறிந்த சென்னை அரசியலார், தஞ்சை வட்டக் கழகத்தலைவராக (Taluk Board President) முதன் முதல் இவரை அமர்த்தினர். பின்னர் இப்பதவியில் இவர், பதினைந்து ஆண்டுகட்கு மேலாக இருந்து வந்தார். தஞ்சை மாவட்டக் கழகத்தில் (District Board) பல ஆண்டுகள் உறுப்பினராகவும், இடைக்காலத் தலைவராகவும் இருந்து வந்துள்ளார். கூட்டுறவியக்கத்திற் சேர்ந்து, தஞ்சைத் திராவிட வங்கி, நில அடமான வங்கி, கூட்டுறவுப் பதிப்பகம் முதலியன தோன்றுவதற்குப் பெருந் துணையாயிருந்தார்.

இத்தகு பொறுப்புக்களாலும், நீதிக்கட்சித் தலைவரா யிருந்தமையாலும் உமாமகேசுவரனார், தமிழர்க்குச் செய்த தொண்டுகள் அளப்பில. தம் ஆட்சிக்குட்பட்ட அனைத்திடங் களிலும் தமிழர் பலர்க்கும் தக்க வேலைகளை அளித்து முன்னேற்றமடையச் செய்தார்; தமிழர் கல்வி நலம் பெறப் பல வழி துறைகளை வகுத்தார்; ஏழைத் தமிழ் மாணவர்க்குப் பொருளுதவியும் புத்தக உதவியும் செய்து கொடுத்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில், தஞ்சை வட்டத்தில் தொடக்கக் கல்வி எங்கும் பரவிற்று; தமிழ் ஆர்வம் பொங்கித் ததும்பியது; போக்குவரத்து வசதிகள் பெருகின.

அணி செய்யும் ஐயாறு

இஞ்சிசூழ் தஞ்சையைச் சூழப் பல சிவத் தலங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் தஞ்சைக்கு வடபால் ஏழுகல் தொலைவில் உள்ள ஊர் திருவையாறு ஆகும். வடநாட்டில் *'பஞ்ச நதி'* பாயும் பழனத் திருநாடு *'பஞ்சாப்'* என்று பெயர் பெற்றதுபோல, ஐந்தாறுகள் அடுத்தடுத்து அழகாய்ச் செல்லும் இடம் *'ஐயாறு'* என்று பெயர் பெற்றது. பின்னர், *'திரு'* என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருவையாறு வழங்கப்பட்டு வருகிறது. காவிரியன்னையின் திருக்கரத்தால் அணைக்கப்

பெற்ற ஐயாற்றின் அழகினைக் கண்டு அக மகிழ்ச்சியுற்றோர் பலராவர். காவிரியாற்றில் இறைவனுக்குரிய துறைகள் பல; அத்துறைகளில் அமைந்த திருக்கோவில்களும், பல. எனினும் திருவையாற்றுக் கோவில் ஒன்றே *'காவிரிக் கோட்டம்'* எனத் தேவாரத்தில் சிறப்பிக்கப்படுகின்றது.

ஐயாற்றுக் கோவிலைச் சூழ்ந்து சோலைகளும், கழனிகளும் கண்ணுக்கு விருந்தாய்க் காட்சியளிக்கும். ஆங்கே கலையும், பிணையும் களித்துத் திரியும்; களிறும் பிடியும் காதல் புரியும்; மந்தியும், கடுவனும் மரங்கள் நோக்கும்; மயிலும், குயிலும், ஆடிப்பாடி அகமகிழும்; மடவார் பலர் ஐயாறப்பனை அகங்குளிர வலம் வருவர்; முழவுக்கேற்ப நடனமாடுவர்; அம் முழவின் ஒலி, முகிலின் ஒலி போன்றிருக்கும். உண்மை உணராத மந்திகள் சில, இடியின் ஒலியென அஞ்சி, மழை பொழியுமோ என்ற ஏக்கத்தால் விரைந்து மரம் ஏறும்; முகிலினைப் பார்த்து முழக்கமிடும்! இத்தகு இயற்கை எழில் மிகுந்த ஐயாற்றில், அடியார் பலர் ஆண்டவனை வழிபடுவர். அருளுளங்கொண்ட ஆண்டவன் 'அஞ்சேல்' என்று அங்கை காட்டுவான். இக் காட்சியினை ஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில் காட்டுகிறார்! இதோ அப்பாடல்,

"புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி அறிவழிந்திட்டு
ஐ மேல்உந்தி
அலமந்த போதாக அஞ்சேலன் றருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடம்ஆட முழவுஅதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம் ஏறி முகில் பார்க்கும் திருவையாறே"

ஆண்டவன் அருள்பெற்ற அப்பரடிகள் ஐயாற்றிலே தான் கயிலைக் காட்சியினைக் கண்டு களித்தார். இதோ அந்தப் பாடல்,

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின் புகுவேன்

யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்

இப்பழவிறல் நகரம், முத்தமிழறிஞர்களைத் தன்பாற் கொண்டிலங்குவதாம். காசி நகரம், வடமொழிப் புலவர்களைப் பெற்றமையால் பெயர் பெற்றது என்பர் அறிஞர். அத்தகு நகரத்து அம்மொழி வல்லாரும் இத்திருவையாற்றிற்கு வந்து தம் ஐயத்தினைப் போக்கிக் கொள்வார் எனின், இதன் சிறப்பை என்னென்பது? இயற்றமிழோடு, இசையும் கூத்தும் ஈண்டு இணைந்து நின்றன எனும் செய்தியை இவைபோன்ற தேவாரப் பாக்களால் மேலும் அறியலாம். இன்னிசைவாணர் தியாகையர், தெலுங்கில் இசையமைத்து ஏற்றம் பெற்ற தன்மையை உலகம் நன்கறியும்; இத்தகு இன்னிசை ஏந்தல்கள் இனிதுறைந்த இடம் திருவையாறே.

ஐயாற்றில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள ஐயாறப்பருக்குப் பல திருவிழாக்கள் நடத்தப் பெறுவதுண்டு. இவற்றுள் எத்திக்கும் புகழ்பெற்றது *'ஏழூர்த் திருக்கோவில் திருவிழா'* வாகும். திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம்-என்னும் தேவாரப் பாடல்பெற்ற ஏழு ஊர்களைச் *'சப்ததானத்தலங்கள்'* என்று கூறுவர். இக்கோவில்கள், காவிரி, குடமுருட்டி என்ற ஆறுகளின் கரையில் அமைந்தவை. இதனால் எங்கு நோக்கினும் நெற்கழனிகளும், கமுகந் தோப்புகளும் இன்னபிறவும் அணியாய் அமைந்துள்ளன.

திருவையாற்றுப் பெருமானின் திருக்கோவிலில் சித்திரைத் திங்களில் பெருவிழா நடைபெறும். அத்திங்கள் நிறைமதியன்று ஐயாறப்பர் திறந்த பல்லக்கில் புறப்படுவர். ஆயிரக்கணக்கான அடியவர் பின்தொடரத் திருப்பழனம் அடைவர்; அவ்வூர் இறைவர், சிவிகையில் வருவர்; இவ்விரு பல்லக்குகளும்

திருச்சோற்றுத் துறை சேரும்; அவ்வூர் இறைவர் உடன் சேர்வர்; பின் மூன்று பல்லக்குகளும் திருவேதிகுடி வரும்; அவ்வூர் இறைவர் பங்கு பெறுவர்; நான்கு பல்லக்குகளும் கண்டியூர் அடையும்; அவ்வூர் இறைவர் சேர ஐந்து பல்லக்குகளும் திருப்பூந்துருத்தி சேரும்; அவ்வூர் இறைவர் பங்கு பெற ஆறு பல்லக்குகளும் பொழுது புலரும் போதில் திருநெய்த்தானம் வரும்; அங்கு அவ்வூர் இறைவரும் கலந்துகொள்ள ஏழு பல்லக்குகளும் திருவையாற்று ஐயாறப்பர் கோயிலை உச்சிப்போதில் அடையும். ஒரே வேளையில் எல்லா இறைவர்க்கும் பூசை, வழிபாடு நிகழும். இவ்விழாவில் கடவுள்நம்பிக்கை, சமயஉணர்வு, சாதிப்பாகுபாடின்றிப் பழகுதல், ஒப்புரவாண்மை முதலியன உண்டாவதில் வியப்பில்லை! இதன் பயனுணர்ந்த தஞ்சை மன்னர்கள் இதனைப் பெருஞ்சிறப்போடு நடத்தி வந்தனர்.

சிவநெறிச் செல்வர்

தமிழவேள் உமாமகேசுவரனார் ஆழ்ந்த-உண்மையான - கடவுட்பற்றுக் கொண்டவர்; சிந்தை முழுதும் சிவன்பாலே வைத்தவர்; நீறுபொலியும் நெற்றியுடன் என்றும் விளங்கும் இவர், உயர்ந்த சைவப் பற்றுடையவராகத் திகழ்ந்தார்.

வாலையானந்த அடிகளார் என்பவர் ஒருவர் சைவத் துறவியாய் அக்காலத்து விளங்கி வந்தார். இவர் காரைக்காற் பகுதியிலுள்ள பஞ்சாட்சரபுரம் என்ற ஊரில் தோன்றியவர்; வேளாண் மரபைச் சேர்ந்தவர்; பிரெஞ்சு மொழியைக் கல்லூரி இடைக்கலை வகுப்பு வரையிற் கற்றவர். இளமையிலேயே சிவப்பற்று, யோக முறையில் ஆர்வம் முதலியன கொண்டு துறவு 'மனப்பான்மையை மேற் கொண்டிருந்தார்; எனவே ஊரைவிட்டு வெளியேறினார். ஆண்டவன் அருளைப் பெற்றார். பன்னிரண்டு ஆண்டுகள் வாய்பேசாமல் கடுந்தவம் மேற்கொண்டார். தருமபுர ஆதீனத்தில் சிறிது காலம் அருட்டலைவராய் இருந்தார். பிறகு கொரடாச்சேரியடைந்து

நிலையாகத் தனி மடம் ஒன்று கண்டு அதில் தங்கியிருந்து சைவ சித்தாந்த அறிவு நூல்களை எல்லாம் தெள்ளத்தெளிய ஆய்ந்தார். தமிழ் நூல்களையும் எல்லாம் தெள்ளந்தெளிய ஆய்ந்தார். தமிழ் நூல்களையும் சைவப் புராணங்களையும் ஆழ்ந்து நோக்கினார். தாம் உணர்ந்த சைவ சித்தாந்தத்தின் அரிய உண்மைகளை மாணவர் பலர்க்குத் தெள்ளத் தெளிய எடுத்துரைத்தார். சைவ மெய்யன்பர் சிலர் இவரைத் தம் ஆசிரியராகக் கொண்டனர்; சிவஞான போதம், சித்தியார் முதலிய பாடங்களைக் கேட்டனர். தமிழகச் சைவ அவைகள் இவரைத் தம் ஆண்டுவிழாக் காலங்களில் தலைமை தாங்க அழைப்பதுண்டு. இத்தகு அருளாளரிடம் சித்தாந்த நூல்களைப் பாடங் கேட்டும் சிவதீக்கை பெற்றும் அடியார்களானவர்களில் நம் தமிழவேள் உமாமகேசுவரனாரும் ஒருவர்.*

ஏழூர்த் திருவிழா

'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என முழு மூச்சாக நம்பி, அதற்காகப் பாடுபட்ட பெரியார் உமாமகேசுவரனார்! எனவே, ஏழூர்த் திருவிழாவில் இவருள்ளம் ஈடுபட்டதில் வியப்பேதுமில்லை. இவர், வெண்ணீறும், உருத்திராக்க மாலையும் கொண்டு புன்முறுவல் பூத்த பொன்மேனியராய் இடையிற்கட்டிய வேட்டியும், அதன் மேற் சுற்றிய துண்டும் கொண்டு, ஏறத்தாழ இருபத்தைந்து கல், கால்நடையாகவே, நடந்து அன்பர் புடைசூழ இவ்விழாவிற் பங்கு பெறுவார். இவர்க்குக் கீழ்ப் பணிபுரியும் பலர் ஆங்காங்கே அஞ்சிய நெஞ்சினராய்க் கைகட்டியிருப்பர். சிவப்பற்றின் பொருட்டு நாள்தோறும் காவிரியில் நீராடிப் பக்தியுடன் இவர் செல்வார். உடன் வருவோர்க்குச் சிறந்த உண்டிவகைகளைத் தம் இல்லத்திலேயே செய்வித்து, வண்டியில் கொண்டுவரச் செய்வார். அன்பரும் அடியவரும் உண்ணத் தாமும் உண்பார். சிவனடியாரை அழைத்துக் கொண்டு செல்வார்; சமயச் சொற்பொழிவுகள் ஆற்றச் செய்வார்; ஆண்டவன் அருட்டிறத்தைத் தாமும் உரைப்பார். 'விழா நடக்கும் இரண்டு

நாட்களிலும் வேறு எப்பணியிலும் ஈடுபடார். பல நூறாயிரக்கணக்கான மக்களால் கொண்டாடப் பெறும் இப் பெருவிழா, உமாமகேசுவரனாரால் மேலும் சிறப்பெய்தியது.

வேறு எந்த விழாவிலும் பங்குபெறாத இவர், இவ்வேழூர்த் திருவிழாவில் மட்டும் ஆண்டுதோறும் பங்கு பெறத் தவறுவதில்லை. இறக்கும் வரையிலுங் கூட இப்பணியில் ஈடுபட்டிருந்தார். அக்காலத்தில் இறைவனை எடுத்துச் செல்லும் பல்லக்குகளைக் கொண்டு செல்லுவதற்குக் கூடச் சரியான பாதைகள் கிடையா! அதனால் பல்லக்குச் சுமப்பவரும், அதன் பின்னே செல்லும் ஆயிரக்கணக்கான ஆடவர் பெண்டிரும், பெரிதும் தொல்லையுற்றனர். அத்தொல்லையினைக் கண்ணாற் கண்டு கசிந்துருகிய உமாமகேசுவரனார், தாம் தஞ்சை வட்டக் கழகத் தலைவராயிருந்த காலத்து, இவ்வேழூர்கட்கும் அழகான பாதைகளை அமைத்தார்; நறு நிழல்தரும் நன் மரங்களை நட்டார். திருவையாற்றிலிருந்து திருப்பழனம் வரையிலுமுள்ள சாலையில் தென்னை மரங்கள் பல, இன்றுங்கூட உமாமகேசுவரரின் திருப்பெயரை ஒலித்துக்கொண்டு நிற்கின்றன! இத்தகு அருஞ்செயலால் தஞ்சை மாவட்டத்தார் அனைவரும் உமாமகேசுவரனாரை உள்ளத்துட் கொண்டு போற்றி வருவாராயினர்.

சைவசமயத்தில் தளராத நம்பிக்கை கொண்ட இவர் தம் கல்லூரியிற் பயிலும் மாணவர்க்கும் அவ்வெண்ணம் உண்டாக வேண்டுமென விழைந்தார். அதற்காகச் சைவ சித்தாந்த மகாசமாசத்தைச் சேர்ந்த பெரியார்களை அடிக்கடி வரவழைத்துச் 'சித்தாந்த வகுப்பு' நடத்தச் செய்தார்; அதற்கெனத் தேர்வுகள் வைத்து வெற்றி பெற்றோர்க்கு 'இளம் சைவப்புலவர்' 'முதுசைவப் புலவர்' எனும் பட்டங்கள் வழங்கினார். அருட்டிரு.விபுலானந்த அடிகளார் ஒருமுறை கரந்தைக் கல்லூரியில் தங்கிச் சைவப்பாடம் நடத்தினார் எனக் கூறுவர் சிலர்.

'சைவ சமயத்தைச் சார்ந்த ஒருவர், வேறு எந்தச் சமயத்துடனும் தொடர்புகொண்டவராக இருப்பார்; எந்தக் கோவிலுக்கும் போவார், சைவ சமயத்திற்கு அத்தகு இயல்புண்டு!' என்பது உமாமகேசுவரனார் அடிக்கடி கூறும் விளக்கமாகும்.

இதை இவர், தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தொழுகி வந்தார். பழுத்த சைவப் பற்றுடைய இவர், பழுத்த கிறித்தவர்களுடனும் முகம்மதியர்களுடனும் நெருங்கிப் பழகி வந்தார்; அவர்களைத் தமக்குரிய நெருங்கிய நண்பர்களாகக் கருதிப் போற்றியும் வந்தார்.

விரிந்த சிந்தை

மதத்தின் பொருட்டு வேறுபாடு கருதாத இவர் அரசியற் கொள்கையின் பொருட்டும் வேறுபாடு கருதமாட்டார். தொடக்ககால முதற்கொண்டு இறுதிக்காலம் வரையிலும் இவர் நீதிக் கட்சியைச் சார்ந்திருந்தவரேயாயினும், பிற கட்சிக்காரரிடம் பெருந்தன்மையுடனேயே நடந்து வந்தார். எடுத்துக்காட்டாக ஈண்டு ஒன்றைக் குறிப்பிடலாம்.

உமாமகேசுவரரின் மைத்துனர் (தங்கையின் கணவர்) சாம்பசிவம் பிள்ளையென்பார், பழுத்த காங்கிரசுக்காரர். காந்தியடிகளிடத்து அளவிறந்த அன்புகொண்டவர்; உண்மைத் தொண்டர்; நாட்டுப்பற்றில் நாட்ட மிகக் கொண்டு, தமக்கு வேலூரில் உதவிப் பொறியாளர் பதவி கிடைத்த காலத்து அதனை வேண்டாமென உதறித் தள்ளியவர்; தம்பாலிருந்த உயர்ந்த விலையுள்ள பிற நாட்டுத் துணிகளை நெருப்பிலிட்டுக் கொளுத்தியவர்.

பெரியவர்கள் சிலர், நீதிக்கட்சியின் சார்பில் மேல் மன்றத்திற்காக உமாமகேசுவரனாரை வேட்பாளராக நிறுத்தி வைத்தனர். உமாமகேசுவரனாா தமக்கு அது விருப்ப

மில்லையெனக் கூறியும் கட்சியினர் கேட்கவில்லை. இவருக்காகத் தேர்தலில் வேலை செய்யவும் தொடங்கி விட்டனர். இதையறிந்த காங்கிரசுக்காரா சிலர், உமாமகேசு வரனாரின் மைத்துனர் சாம்பசிவம் பிள்ளையின் பேருதவியுடன், பூவராக ஐயங்கார் என்பாரை உமாமகேசுவரருக்கு எதிராக நிறுத்திவைத்தனர். ஒரே தொகுதி வாக்காளரிடம் தம் மைத்துனருக்கெதிராக வேலை செய்தார் சாம்பசிவம்பிள்ளை. இருந்தாலும் அதற்காக உமாமகேசுவரனார் தம் மைத்துனர் மீது வருத்தப்பட்டாரில்லை. நாள்தோறும் ஒரே வீட்டில், உடனிருந்தே இவ்விருவரும் உணவு கொள்ளுவர்; ஆனால் வெளியில் வந்துவிட்டால் அவரவர் தத்தம் கொள்கைக்காகப் பாடுபடுவர். தேர்தலுக்காக எந்தவித முயற்சியும் மேற் கொள்ளாமையினால் உமாமகேசுவரனாருக்குத் தோல்வியே கிடைத்தது! இதற்காகத் தம் மைத்துனரிடம் மனவருத்தங் கொண்டாரிலர்.

தஞ்சை வட்டாட்சிக் கழகத்தில் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கு உமாமகேசு வரனார் போட்டியிட்டார். இவருக்கு எதிராக நல்ல முத்து நாட்டார் என்பாரும் நின்றார். இறுதியில் உமாமகேசுவரருக்கே வெற்றி கிடைத்தது. எனினும் தம்மையெதிர்த்த நல்லமுத்து நாட்டாரிடம் பகைமை ஏதுங் கொள்ளாமல் முன்னிலும் பன்மடங்கு நட்புரிமையே பாராட்டி வந்தார் உமாமகேசுவரனார்.

தளராத தமிழ்ப்பற்று

இத்தகு உயர்ந்த உள்ளமுடைய இவர், தமிழ் மொழிக்குக் கேடு செய்வார் எனின் அவரை விடார்! உறவினராயினும் நண்பராயினும் நொதுமலராயினும் இறுதிவரை எதிர்ப்பார். இவர் தம் மூச்சே, தமிழ் மூச்சன்றோ? சைவத்தில் எத்துணை ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்தாரோ, அத்துணையளவு, ஏன் அதனைவிடப் பன்மடங்கு தாய்மொழியாகிய தமிழின் மீது பற்றுக்கொண்டிருந்தார். இதனை முன்னைய தலைப்புக்களில்

பரக்கக் கண்டுள்ளோம். "ஒரு காலத்தில் நாடுகள் பலவற்றை வென்று ஆட்சிசெய்தான் தமிழன். அதுபோல் தமிழ்மொழியும் இன்று பல நாடுகளிலும் வீறுபெற்று விளங்கவேண்டும். தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ச்சங்கங்கள் பல இதற்கென ஒன்றுபட்டுழைக்க வேண்டும். தமிழ்ப் புலவர் பலரும் தொழிற்கல்வியிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கவேண்டும். தமிழின் நிலை உயரத் தமிழ்-தனித் தமிழாக இலங்கவேண்டும்!"- இவை உமாமகேசுவரனாரால் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகள்.

இக் கொள்கைகட்காக இவர் செய்த தொண்டுகள் அளப்பில. இவர்தம் சீரிய முயற்சியில்லையேல் தமிழகம் இன்று இந்த அளவுகூட விழிப்புணர்ச்சி பெற்றிருத்தல் இயலாது எனத் துணிந்து கூறலாம்!

உமாமகேசுவரனார், தமிழறிவு பெற்றவர் என்று சொல்வதைவிடத் தமிழ்ப்புலமை பெற்றவர் என்று கூறவதே பொருந்தும். இவர் தமிழ் இலக்கியங்களை-சிறப்பாகச்-சங்க இலக்கியங்களை-இரண்டு அல்லது மூன்று முறை படித்துத் தேர்ந்தவர். தமக்கெனத் தனி நூல் நிலையம் ஒன்றைத் தம் இல்லத்திலேயே வைத்திருந்தார். தமிழ் நூல்களைத் தாமே விலைகொடுத்து வாங்குவார்; அவற்றை நாள்தோறும் இரவு ஏழு மணிமுதல் ஒன்பது மணிவரையிலும் படிப்பார்; ஆங்காங்கே குறிப்புக்களை அந்நூல்களிலேயே எழுதிவைப்பார்; பிறகு கரந்தைத் தமிழ்ச் சங்க நூல் நிலையத்திற்கு நன்கொடையாகத் தந்து விடுவார்; இவ்வாறு இவர், முதல் இருபத்தைந்தாண்டுக் காலத்திற்குள் 810 நூல்களை விலைக்கு வாங்கித் தந்துள்ளார். சங்க நூல்கள் முழுமைக்கும் அட்டவணை (index) ஒன்றும் தொகுத்து வைத்திருந்தார்.

காலை வேளையை வழக்குத் தொழிலுக்கெனவும் மாலை வேளையைச் சங்க வேலைக்கெனவும் பகுத்துக் கொண்டார்

உமாமகேசுவரர். இதில் மிகவும் கண்டிப்பாகவே இருநதுவந்தார். கட்சிக்காரர் யாரேனும் மாலை நேரத்தில் வந்தால் முகங்கொடுத்துக் கூடப் பேசமாட்டார்; அவ்வாறே சங்க வேலையாகக் காலை நேரத்தில் யாரேனும் வந்தாலும் பேசமாட்டார். நீதிமன்றத்திலிருந்து நேராக வீடு செல்வார்; உடைகளை மாற்றி, வேட்டி. துண்டுடனே சங்கத்திற்கு வருவார்; அதன் வேலைகளைக் கவனிப்பார். சங்கத்திற்கு வரும் புலவர் யாராயிருந்தாலும் தம் வீட்டிற்கழைத்துச் சென்று உணவளிப்பார்; விழாவிற் பங்குபெறும் புலவர் பெருமக்களை சிறந்தமுறையில் வரவேற்று விருந்துபேணுவார்; வேட்டி முதற்கொணடு சலவை செய்வித்து அன்புடன் அவர்க்குத் தருவார். தமிழறிஞரிட த்தும் இவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் முகத்தில் ஒரு தனிக் கவர்ச்சி காணப்படுவதுண்டு. தமிழ் இலக்கியங்களையும் நயங்களையும் எவர் எடுத்துக் கூறினாலும் மிகவும் அமைதியாக, ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருப்பார்.

உமாமகேசுவரனாரின் தமிழ்ப்பற்றுக்கு மற்றுமோர் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது கரந்தைத் தமிழ்ப் புலவர் கல்லூரியாகும். இக்கல்லூரியைத் தோற்றுவித்தற்கும் பல்கலைக் கழகத்தாரின் ஒப்புதல் பெறுதற்கும் இவர் பட்டபாடுகள் சொல்லுந்தரத்தனவல்ல! எவரிடத்துப் பேசினும் இக்கல்லூரியின் வளர்ச்சி பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார். இவர், ஒருநாள். கல்லூரியின் வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ கல்லூரியைத் தொடங்கிவிட்டோம். என் உடல்நலம் குன்றி வருகிறது. இக் கல்லூரியினின்று பல்கலைக் கழகத் தேர்வுக்கு ஒரு மாணவன் சென்று பட்டம் பெற்றுவந்தான் எனக் கேட்டு மகிழ்ந்தபிறகு இறப்பேனானால் என் வாழ்க்கை ஒருவாறு பயன்பெற்றது என்னும் நினைவோடு செல்லலாம்" எனக் கூறினாரென்றால் இவர்தம் பரந்த நோக்கத்தையும் தமிழ்ப் பற்றையும் எங்ஙனம் இயம்புவது?

சென்னை-அண்ணமலைப் பல்கலைக் கழகங்களில் தனித்

தமிழ்ப் புலமையும், ஏனைய மொழிக் கலையோடு சேர்ந்த தமிழ்ப் பயிற்சியும் மேம்படுவதற்கு இவர் மேற்கொண்ட செயல்கள் பலவாகும். இவரது அரிய முயற்சியாலேயே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து ஆட்சிமன்றத்திலும் (Syndicate) கலை மன்றத்திலும் (Academic Council), சென்னைப் பல்கலைக் கழகத்திலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஓர் இடம் கிடைத்தது. இம்மன்றங்களில் பல ஆண்டுகள் இவரே உறுப்பினராயிருந்து வந்துள்ளார்.

தமிழுக்கு ஆக்கம்

தமிழ் மொழியில் தக்க புது நூல்கள் வெளிவர வேண்டுமென்பதும், பிறமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டுமென்பதும், தமிழ் மொழி நூல்களைப் பிற மொழிகளில் ஆக்கவேண்டுமென்பதும் இவர் நோக்கமாகும். இந்நோக்கத்தைச் செயற்படுத்த விரும்பிய இவர், ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள ஆங்கிலப் புலவர் வரிசை (English Men of Letters) போன்று, தமிழிலும், வெளியிடத் துணிந்து, பல ஆண்டுகட்கு முன்பு நாவலர்.ந.மு.வேங்கடசாமி நாட்டாரைக் கொண்டு எழுதுவித்து *'நக்கீரர்'* என்ற வரலாற்று நூலை வெளிப்படுத்தினார்.

தமிழில் கலைச் சொற்கள் இல்லையென்னும் குறையைப் போக்க உளங்கொண்ட உமாமகேசுவரர், தமிழும், ஆங்கிலமும் வல்ல சாமிவேலாயுதம் பிள்ளை என்பாரைக் கொண்டு, கணக்கு, அறிவியல் ஆகியவற்றிற்கு நல்ல தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கச் செய்தார்; அவற்றைத் 'தமிழ்ப் பொழிலி'ல் வெளியிட்டுப் பலருமறியச் செய்தார். உமாமகேசுவரரின் பேருழைப்பினாலேயே நல்ல தமிழ்ச் சொற்கள் தமிழர் நாவில் நடமாடத் தொடங்கின. *தமிழ்ப் பொழிலி*ன் பொழிற்றெண்டராய் (ஆசிரியராய்) இறக்கும் வரையும் இருந்து, ஆயிரக்கணக்கான அரிய தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள், இலக்கண இலக்கிய விளக்கக்

கட்டுரைகள், புலவர் செய்யுட்கள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளார். இவை, இன்றும் தமிழ் கற்பாரனைவர்க்கும் பெரும் பயன் தரவல்லன.

நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவராய் இருந்த இவர், தம் ஆட்சிக் காலத்தில், தமிழர் பலர்க்கும் பெருமளவில் வேலைகள் தந்து பாதுகாத்துள்ளார். பிராமணர்களிடம் தனிப்பட்ட முறையில் அன்பும், ஆதரவும் உடையரேயாயினும், அவர்கட்கு நிறைந்த அளவில் வேலைகள் தந்து உதவினாரில்லை. இதனால் இவர் 'வகுப்புவாதி' என்ற பெயரையும் ஏற்கவேண்டியதாயிற்று. ஆனால் அது குறித்து இவர் கவலைகொள்ளவில்லை. தாம் பிராமணர்க்கு வேலைவாய்ப்புப் பெருமளவில் அளிக்காமைக் குரிய காரணங்களை, அவர்கள் மனங்கொள்ளுமாறு தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறிவிடுவார். இதனால், உயர்ந்த பதவிகளிலுள்ள பிராமணர்கள் கூட இவர்பாலமைந்த நேர்மையைக் கண்டு, அன்பு பாராட்டியே வந்துள்ளனர்.

ஐயாற்றுக் கல்லூரியில்

உமாமகேசுவரனார் செய்து முடித்த அரியவற்றுள் குறிப்பிடத்தக்கது மற்றும் ஒன்று உண்டு. அதுவே, திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழுக்கும் இடந்தேடித் தந்தது.

தஞ்சை மராட்டிய மன்னர்கள் திருவையாற்றில், காவிரியின் வடகரையில் ஒரு பெரிய அழகிய, மூன்று மாடிகள் உள்ள அரண்மனையை அமைத்துள்ளனர். ஆற்றங் கரையிலமைந்த அவ்வரண்மனை அறச்சாலையாக விளங்கியது. ஆங்குப் பிராமணர்கட்கு மட்டும் வடமொழி கற்றுக் கொடுக்கப்பட்டுவந்தது. அவர்கட்கு உணவும் உறைவிடமும் அன்பளிப்பாகத் தரப்பட்டு வந்தன. ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பிராமண மாணவர்கள் வடமொழி இலக்கண, இலக்கிய, தருக்க நூல்களைக் கற்று வந்தனர்.

இதனைக் கண்ட உமாமகேசுவரனார், ஏனையோரும் இதிற் பங்குபெற்றுப் பயனடையுமாறு செய்தல்வேண்டும் எனக் கருதினார். கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய ஆறு ஆண்டுகளிலேயே இவ்வெண்ணம் இவருள்ளத்தே கால் கொள்ளத் தொடங்கிற்று. எனவே, தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ., தலைமையில் கூடிய சங்கத்து ஆறாவது ஆண்டு விழாவின்போது, கீழ்க்கண்ட தீர்மானத்தைத் தாமே முன்மொழிந்து பேசினார் உமாமகேசுவரனார்:

"பழமை பெருமைகளிற் சிறந்த நம் தமிழ்மொழி வழங்கும் தமிழகத்தில், இத் தஞ்சை மன்னரால் அறத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கும் பொருளின் பயனைக் கல்வி நெறியில் தமிழர்கள் அடையுமாறு இளைஞர்களின் கல்விப் பயிற்சிக்கு வேண்டியாங்குதவவும், திருவையாறு வடமொழிக் கல்லூரியில் தமிழையும் முதன்மைப்பாடமாக வைத்து நடத்தவும், இன்னும் அக்கல்லூரியை இச்சில்லாவின் தலைநகராகிய தஞ்சையில் வைத்து நடத்தவும், தஞ்சாவூர்ச் சில்லா இறைத் தண்டற்றலைவர் (Collector) அவர்களுக்கும், நாட்டாண்மைக் கழகத்தார்க்கும் (District Board) விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்".

தீர்மானத்தை மட்டும் நிறைவேற்றி விட்டு வாளாவிருந்து விடாமல், அதனைச் செயலுக்குக் கொண்டு வரப் பெரும்பாடுபட்டார் இவர். சர்.ஏ.டி. பன்னீர்ச்செல்வத்தின் பெருந்துணை கொண்டு பலரும் பயில்தற்குரிய இடமாக அதனை ஆக்கினார். கல்லூரியில் பிராமணரல்லாத ஏனையோரையும் வடமொழி கற்கச் செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வித்துவான் பட்டத்திற்குரிய வகுப்புகளை ஏற்படுத்தினார்; படிப்படியாக ஏனைய மாணவர்க்கும் உணவு, உடை, கல்வி முதலியன அன்பளிப்பாக அளிக்க வழிவகுத்தார். இவ்வாறே ஒரத்தநாடு, இராசாமடம் முதலிய இடங்களிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளிலும் எல்லா மாணவர்க்கும் பலவகையான கொடைகளைப் புரியச் செய்து

அரும் பணிகளை ஆற்றினார். இவற்றால், தமிழ்பயிலும் மாணவர்களின் உள்ளங்களில் என்றும் உறையும் உயரிய இடத்தைப் பெற்றுவிட்டார் உமாமகேசுவரனார்.

சங்கக் காவலர்

எடுத்த பணியை இடைவிடாமல் செய்து முடிப்பதில் வல்லவர் தமிழவேள் உமாமகேசுவரனார். தம் இளவல் இராதாகிருட்டினனாருக்குப் பிறகு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பல்லாற்றானும் வளப்படுத்திவந்தார். சங்கத்திற்கென ஒரு கட்டிடத்தை உருவாக்கினார்; பரந்த வெளியிடத்தையும் அதனோடு சேர்த்தார். இவருடைய பெரு முயற்சியால் தொடக்கப்பள்ளி, மருத்துவச்சாலை, திக்கற்ற மாணவரில்லம் ஆகியவை தோன்றின. சங்கக் கூட்டம் நடத்தத் தமிழ்ப் பெருமன்றத்தை அழகுற அமைத்தார். சங்கத்தைச் சூழவும் சோழன் பூங்கா, பாண்டியன் நீழல், சேரன் விளையாட்டரங்கம் என எல்லாவற்றையும் தமிழிலேயே வழங்கினார். சங்கத்துக்குப் பல பேரறிஞர்களை வரவழைத்து விரிவுரையாற்றச் செய்தார்; விழாவிற்கு வருவோரனைவர்க்கும் எவ்விதக் குறைபாடுமின்றி எல்லா வசதிகளையும் செய்து வைத்ததோடு தாமே அனைத்தையும் நேரிற் கவனித்தார்; தனித் தனியாக ஒவ்வொருவருடனும் அன்புடன் அளவளாவி மகிழ்ந்தார். இவற்றால் கரந்தைத் தமிழ்ச் சங்க விழா, பெருவிழாவாகத் தமிழகம் போற்றும் திருவிழாவாகக் காட்சியளித்தது!

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியிற் பயின்று வெளியேறுவோர் நிறைந்த புலமை பெற்றவராயிருத்தல் வேண்டும் என விரும்பிய இவர், அரசினர் பாடத்திட்டத்துடன் தாமாகச் சில நூல்களை மிகுதியாகச் சேர்த்துப் பயிலச் செய்வார். அக்காலத்து, இப்பள்ளியில் எட்டாம் வகுப்புப் பயில்வோருக்குப் பள்ளியிறுதி வகுப்புப் (S.S.L.C) பாடங்களும் சேர்க்கப் பெற்றிருந்தனவெனின் உமாமகேசுவரரின் உயரிய எண்ணத்தை எங்ஙனம் அளவிட்டுரைக்க முடியும்?இம் முறையால், கரந்தைத்

தமிழ்ச்சங்கப் பள்ளி மாணவர்க்குப் பெருமதிப்பு உண்டாயிற்று. எனவே, இப் பள்ளியிலிருந்து வெளியேறும் மாணவர் ஒவ்வொருவரையும், தஞ்சையிலுள்ள ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியும் விரும்பியழைத்துப் பயிலச் செய்தல் வழக்கமாயிற்று. தூயபேதுரு உயர்பள்ளித்தாளாளர் இலேம்ப் துரையவர்கள், தம் பள்ளிக்கே மாணவர்களை அனுப்பி வைக்குமாறு உமாமகேசுவரரைக் கேட்டுக்கொள்வாராம்! இக் காலத்தில், எல்லாப் பள்ளிகளிலும் கைத் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால், இவற்றை முதன் முதல் தம் தொடக்கப் பள்ளியிலேயே அறிமுகப்படுத்திச் செயன் முறையிற் கொண்டு வந்தவர் நம் தமிழவேளேயாவார்!

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர் கல்லூரியைத் தோற்றுவித்த உமாமகேசுவரனார், தாமே வகுப்பாசிரியராகவும் இருந்து பாடஞ் சொல்லுவார். கால்டுவெல் ஒப்பிலக்கணத் தையும், பரிதிமாற் கலைஞரின் தமிழ் மொழி வரலாற்றையும் கேட்போர் உளங் களிக்குமாறு, மிக இனிமையாக எடுத்துக் கூறுவார். ஆங்கிலத்திலுள்ள கால்டுவெல் ஒப்பிலக்கணத்தைக் கையில் வைத்துக்கொண்டு தமிழில் பாடம் நடத்துவார்.

தமிழாசிரியர்கள் தலைமையாசிரியர்களாக வரவியலாத நிலை முன்பு இருந்தது. பெரும் போராட்டம் நடத்தியதன் பயனாகத்தான் தற்போது தமிழாசிரியர்கள் தலைமை யாசிரியராகலாம் எனச் சட்டமியற்றப்பெற்றது. ஆனால், அந்நாளிலியே பள்ளிகளின் தலைமையாசிரியராகத் தமிழாசிரியரும் வரவேண்டும் என அடிக்கடி சொல்லிவந்தவர் உமாமகேசுவரனார். தம் தொடக்கப்பள்ளித் தலைமை யாசிரியராகத் தமிழாசிரியர் ஒருவரை அமர்த்தினார் எனின் இவர் தம் நெஞ்சுரத்தைப்பற்றியும் தமிழ்ப்பற்றையும் என்னென்பது? தண்டாயுதபாணிக் காடவராயர் என்ற புலவர் குத்தாலம் உயர்நிலைப்பள்ளியிலும், தஞ்சை அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர்.

அவரைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக்குத் தலைமை யாசிரியராக அமர்த்தினார் தமிழவேள். கல்வியலுவலர் ஒருவர் இப்பள்ளியைப் பார்வையிட வந்தபோது, 'இத் தலைமை யாசிரியருக்கு ஆசிரியப் பயிற்சி இல்லையாதலின் இவர் தகுதியற்றவர்' எனக் கூறிவிட்டார். உடனே உமாமகேசுவரனார், "ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராயிருந்து, பல ஆசிரியர்களை உருவாக்கிய ஒருவர், தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியராக ஏன் இருத்தல் கூடாது?" என வினாவி, அவ்வலுவலரின் ஒப்புதல் பெற்றார்.

மொழிப்போரில் கரந்தை

சமுதாய வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றான மொழி மக்கள் தம் உளப்பாங்கைப் பெருமளவில் வளர்க்கும் சிறப்பு உடையதாகும். அத்தகு மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழிக்குப் பிற மொழிகளால் இடையூறு எற்பட்டபோது அதனைக் களைந்து தமிழ் மொழியின் தனித்துவம் போற்றத் தமிழர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக இந்நூற்றாண்டில் தமிழ்மொழி மீது பிற மொழி ஆதிக்கம் வந்துள்ள போதெல்லாம் தமிழர்கள் எதிர்க்கும் பான்மையைக் காணமுடிகிறது. "இந்தியப் பொது மொழி" பெயர்களில் இந்தி மொழியை1937-ம் ஆண்டு கட்டாயப் பாடமாக்கிய போது அதனை எதிர்த்து போராட்டம் நடந்தது. இப்போராட்டத்தில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் பெரும் பங்காற்றியுள்ளது. *கரந்தை* என்றால் *மீட்டல்* என்பதற்கேற்ப தமிழ்மொழியை மீட்பதில் கரந்தைத் தமிழ்ச்சங்கம் முதன்மைக்களமாக திகழ்ந்துள்ளது.

முதற்குரல்

இந்தி எதிர்ப்புப் போராட்டத் தொடக்கப் பகுதியில் கூட்டங்கள் நடத்திப் போராட்டத்தின் நிலையை விளக்குவது முதன்மைப் பணியாக இருந்தது. தமிழ் நாட்டின் முதன்முதல் இந்தி எதிர்ப்புக் கூட்டம் தஞ்சைக் *கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில்*

27.8.1937. அன்று வழக்கறிஞர் வேங்கடாசலம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தமிழவேள் த.வே.உமா மகேசுவரனார், வழக்கறிஞர் ஜே.எம்.சோமசுந்தரம் பிள்ளை, சிவ. குப்புசாமிப்பிள்ளை, திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கவியரசு வேங்கடாசலனார் ஆகியோர் *கட்டாய இந்தி தமிழுக்குத் தீங்கு தரும்* என்பதை வலியுறுத்திப் பேசினார். மேலும் கரந்தை மற்றும் திருவையாறு தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பலரும்' இந்தியால் தமிழ் கெடும்" என்று பேசியமை குறிப்பிடத்தக்கது.

உயர்நிலைக் கல்வியில் முதல் மூன்று படிவங்களில், அதாவது 6,7,8, வகுப்புகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்குவதென்றும். அவற்றிலும் மேல்வகுப்புகளில் வரலாற்று நூலை இந்தி மொழியில் கற்பிப்பதென்றும் அரசியலார் செய்திருக்கும் முடிவைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் கூடிய தஞ்சைப் பொது மக்கள் வன்மையுடன் கண்டித்து ஏழு தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றிச் சென்னை மாகாண அரசிற்கு அனுப்பிவைத்தனர்.

அத்தீர்மானங்களாவன:

அ. இளம்பிராயத்தினராயுள்ள மாணவர்கள் கற்கவேண்டி இருக்கும் தாங்கவொண்ணாத சுமையாகும். பாடத் திட்டத்தில் இந்த அயல் மொழியையும் சேர்ப்பதால், மாணவச் சிறார்களின் உடல் நலமும், கல்வி முன்னேற்றமும் கேடுற்றுப் பாழ்படும்.

ஆ. ஆங்கிலம், தாய்மொழி இவற்றிற்குரிய பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் காலத்தை இந்திமொழி பற்றிக் கொள்வதால் அம்மொழிகளில் மாணவர்களின் தேர்ச்சிக் குன்றி மொழிவளம் பாழ்படும்.

இ. வடமொழி பயிலும் மாணவருக்கு மிக்க உதவியாகவும் கல்வித் துறையில் பின்னிலையில் நிற்கும் வகுப்பினரின் கல்வி

முன்னேற்றம் தடைப்பட்டுக் கேடாகவும் இது வாய்ப்பாக அமையும்.

ஈ. மக்களிடையே தொடக்கக்கல்வியைப் பரவச் செய்வதற்கு வேண்டிய அளவு பணமில்லாதிருப்பதுவும் பயனற்றதாகிய இந்தி வளர்ச்சியில் உள்ள முதலைச் செலவிடத் துணிவது மதியீனமும், பயனற்றதும் ஆகும்.

உ. இந்த மாகாணத்து மக்களுக்கு எவ்வித நற்பயனும் விளைவிக்க மாட்டாத இந்தி மொழியைப் பரப்புவோமென ஆராயாது விரைவதும், பொதுமக்கள் தமக்கு இன்றியமையாது வேண்டுமெனப் பரிந்து கேட்கும் கல்விச் சீர்திருத்தங்களைக் கருதாது நெகிழவிட்டிருப்பதும் அரசியலார் இயற்றும் தவறுகள் ஆகும்.

ஊ. பொதுமக்களின் மனப்பான்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு இதனை வெளியிடாததோடு இதனால் விளையவிருக்கும் கேடுகளைக் கருதாததும், இத்தகைய முக்கியமான கருமத்தை மிகமிகச் சடுதியில் தொடங்கத் துணிந்ததும் இழுக்காகும்.

எ. விரும்பவும், வேண்டவும் படாததொரு மொழியை, முன்னெச்சரிக்கையில்லாது மக்களின் மீது தமது அதிகாரக் கொடுமையால் சுமத்துவோமென வன்கன்மை புரிவது மக்களாட்சியின் தத்துவங்களையும், தாமே நமக்குப் பெருமையெனப் பேசிக் கொள்ளும் அகிம்சாதருமத்தையும் வலிந்துதாக்கும்.

இவ்வேழு முக்கிய முடிபுகளையும் *தமிழவேள் த.வே.உமாமகேசுவரனார்* முன்மொழிந்தார். *டி.ஆர்.மதுரமுத்து மூப்பனார்* வழிமொழிய ஜே.எம்.சோமசுந்தரம் பிள்ளை துணை மொழிந்தார்.

இதைப்போலவே தமிழ்நாட்டிலிருந்த தமிழ்ச் சங்கங்கள், பொது அமைப்புகள், பல்வேறு நிறுவனங்கள் இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றி அரசிற்கு அனுப்பிவைத்தன.

தமிழவேள் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் வழக்கறிஞராகவும் இருந்த "தமிழவேள்" த.வே.உமாமகேசு வரனார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரும் பணியாற்றியுள்ளார்.

திருச்சியில் 26-12-1937-ல் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழர் மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய உமாமகேசுவரனார், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினால் தமிழர்கட்கு ஏற்படும் தொல்லைகளைக் கவர்னரிடம் எடுத்துரைக்கும் குழுவில் ஒருவராகப் பங்கேற்றுப் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும்,

"பொது மக்கள் பணத்தைக் கொண்டு சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் தேவையற்ற இந்திக்குப் பணம் செலவழிக்கக் கூடாதென இம்மாநாடு எச்சரிக்கிறது"

என்ற தீர்மானத்தை 27-2-1938 அன்று காஞ்சித்தமிழர் மாநாட்டில் "வழிமொழி" ந்ததன் -மூலம் வற்புறுத்தினார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் இதழான "தமிழ்ப் பொழில்" உமாமகேசுவரனார் எழுதிய இந்திமொழி எதிர்ப்புக் கட்டுரையைத் தாங்கி வெளிவந்து தமிழர்களுக்குத் தாய்மொழி உணர்ச்சியை ஊட்டியது.

"இந்தியாவின் அரசியல் பொதுமொழி வேண்டும்.. இந்திமொழி நாடெங்கும் பெரு

வழக்கிற்று அதுவே சிறந்தது' என்கின்றனர். அரசியல் வளர்ச்சிக்குப் பொதுமொழி இன்றியமையாதது என்பதே தவறு' இந்திய நாடு இந்நிலை வருவதற்கு இந்திமொழி சிறிதும் துணை செய்ததில்லை. நாட்டில் வழங்கி வரும் பன்மொழிகளும் துணைசெய்து மக்கட்கு அரசியல் உணர்ச்சியை அளித்தன. காந்தி அடிகள் ஆகிய தலைவர்கள் தென்னாட்டிற்கு வந்த காலை நாட்டுமொழி அறியாது இடர்ப்பட்டாரில்லை. அவர்கள் கருத்துக்களை அறியுமாறில்லாத தென்னாட்டினர் தடுமாறினதுமில்லை. இந்திய மொழி இந்திய நாடெங்கும் பெரு வழக்கில் உள்ளது. எனுங்கூற்று ஒப்பத்தக்கதன்று. இந்திமொழி தென்னாட்டில் வழக்கில்லாதது. வடநாட்டில் சிற்சில பகுதிகளில் மட்டும் பல்வேறு உருவங்களில் வழக்கில் இருப்பது. பெருவழக்கில் இருப்ப தென்பதும் மெய்க்கூற்று அன்று. ஆங்கில ஆட்சியின் தொடர்பு முழுதும் விடுபட்டு இந்தியநாடு தன்னரசு கொள்ளும் நாளில் இந்தி மொழியே அரசியல் மொழியாகத் திகழும். அதுகாலை தென்னாட்டினர் ஏக்கற்று நிற்காது முதன்மையிடம் பெறுதற் பொருட்டு இந்தியில் புலமையும், பயிற்சியும் பெறவேண்டும் என்பது மற்றொரு காரணம். இதுவும் ஏற்கப்படக் கூடியது அன்று. அரசியலற்றலைமையில் இருக்கும் ஒரு சிலர் விரும்பும் இந்திய செயல் நிறைவேற்றுவதற்குப் பிறர் கருவிகளாய் இருப்பது இழிந்த செயலாகும்"[4].

என்று இந்தி மொழியைக் கற்பதற்குச் சொல்லப்படும் காரணங்களின் பொருத்தமின்மையை விளக்கினார். தனிப்பட்ட முறையிலும், தமிழ்ச்சங்கம் என்ற அமைப்பு முறையிலும்

உமாமகேசுவரனார் செய்த பணிகள், நாட்டிலிருந்த பிற இயக்கத்தார்க்கும், சட்ட வல்லுநர்களுக்கும் இதன் தூண்டுகோலோய் அமைந்தன எனலாம்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் திங்கள் இதழான *தமிழ்ப்பொழில்* சிறந்த இலக்கிய இதழாக 1926-ஆம் ஆண்டு முதல் திகழ்ந்து வருகின்றது. இவ்விதழ் மொழிப் போராட்டக் காலத்தில் இந்தி எதிர்ப்புக் கட்டுரைகளை வெளியிட்டது. *தமிழவேள்* த.வே.உமாமகேசுவரனாரின் "இந்தி மொழி எதிர்ப்பு" எனும் கட்டுரையை 1937 ஆம் ஆண்டு அக்டோபர் இதழில் "தமிழ்ப்பொழில்" வெளியிட்டது. அக்கட்டுரையில்,

> *"மொழி வேற்றுமையால் மனவேற்றுமை விளையும். மொழி ஒன்றுபட்டால் மக்களின் மனமும் ஒன்றுபடும் என்பது மற்றுமொரு காரணம். இதுவும் அனுபவத்திற்கு முரண்பட்ட பொய்யுரை சாதிபற்றியும், சமயம் பற்றியும் போராட்டங்கள் நிகழ்வது உண்மை. சாதி சமயப் பிணக்குகளால் கொலை, பழி பாதகங்களும் பகைமையும் ஒரு மொழி பயில்வோருக்குள்ளேயே நாடெங்கும் மலிந்து கிடக்கின்றன. மக்களும் வேற்றுமை உணர்ச்சிகளை வளர்த்து இன்னல்களை விளைவிக்கும் தீய செயல்களும், கொள்கைகளும் பலவாயிருக்க, அவற்றை அகற்றி ஒற்றுமையை வளர்க்கக் கருதாத மந்திரி இந்திமொழியை ஆட்சியில் கொணர்ந்து ஒற்றுமை வளர்ப்போம் என்பது மதியின்மையும் ஏமாற்றமும் ஆகும்."*[5]

என்று இந்தி மொழி பொதுமொழியாகாதென்பதற்கான காரணம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப்போல பல கட்டுரைகள் *தமிழ்ப்பொழிலில்* இடம் பெற்றிருந்தன.

முதல் மொழிப்போரில் கூட்டங்கள் வாயிலாகவும், தமிழ்ப்பொழில் வாயிலாகவும் *தமிழவேள்* உமாமகேசுவரனார் தமிழ்ச்சங்கத்தின் அன்பர்களைக் கொண்டு பெரும் பங்காற்றியுள்ளார். இன்றுவரை தமிழ்ச்சங்கம் அதன் தனித்தன்மையை விடாமல் காத்து வருகிறது என்பது வெளிப்படை.

ஆட்சியில் செய்த மாட்சி

தமிழர்களின் உரிமைகளையும் நன்மைகளையும் பெறவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் தோன்றிய தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் நீதிக்கட்சி 1917 ஆம் ஆண்டு வாக்கில், தஞ்சை மாவட்டத்தில் மிகுந்த ஆதரவு பெற்றிருந்தது. அவ்வமயம் தஞ்சை மாவட்ட நீதிக்கட்சியில் முப்பெருந்தலைவராகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்கள், *சர்.ஏ.டி.பன்னீர்ச் செல்வம், தமிழவேள். த. வே. உமாமகேசு வரனார், ஐ.குமாரசாமிப் பிள்ளை* என்னும் மூவருமாவார். இந்நிலையில் 1920 ஆம் ஆண்டு உள்ளாட்சிக் கழகச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் காரணமாக மாவட்டக் கழகத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் *திரு.வி.கே.இராமானுசாச்சாரியார்* தலைவராகவும், *திரு.பன்னீர்ச்செல்வம்* துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். தஞ்சை வட்டக் கழகத்திற்குத் தலைவராக நம்முடைய *தமிழவேள்* அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதில் உள்ள சிறப்பு என்னவென்றால் தஞ்சை வட்டக் கழகத்திற்கு மக்களால் முதன் முதல் சின்னாட்களில் மாவட்டக் கழகத்தலைவராகவிருந்த திரு.ஆச்சாரியர் தம்முடைய பதவியிலிருந்து விலகியமையால் துணைத்தலைவரான பன்னீர்ச்செல்வம் தலைவரானார். தஞ்சை மாவட்டமும், தஞ்சை வட்டமும் செய்த தவப்பயன் என்று கூறுமாறு, மாவட்டக் கழகத்தலைவரும், வட்டக்கழகத்

தலைவரும், தமிழர் நலம் பேணும் தாளாளர்களாக அமைந்தனர். *மாவட்டக் கழகச் சட்டத்தின்படி* வட்டக் கழகத்தலைவராக இருப்பவர் மாவட்டக் கழக உறுப்பினராகிவிடுவார் என்பதனால் பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்தது என்னும் பழமொழிக்கேற்ப வட்டக் கழகத் தலைவராக வளர்பணியாற்றி வந்த தமிழவேள் அவர்கள் மேலும் மேலும் உயர் பணியாற்றும் வகையில் மாவட்டக் கழகத்தின், உறுப்பினராகவும் ஆனார். "மக்கள் பணியே மகேசன் பணி, என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கைகளையுடைய தமிழவேள் அவர்கள் இந்த இரு பொறுப்புகளையும் ஏற்றுத் திறம்படச் செயலாற்றி வந்தார்கள்.

கல்வித் துறையில் கணக்கிலாப் பணிகள்

நீதிக்கட்சியின் சார்பில் தமிழவேள் அவர்கள் வட்டக் கழகத்தலைவர் மாவட்டக்கழக உறுப்பினர் என்னும் இரு பொறுப்புகளையும் ஏற்றுச் செயலாற்றிய காலத்தில் தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாகவே இருந்தன. இதனால் நாட்டில் படித்தவர்களின் தொகை நூற்றுக்கு ஐந்து(-5-/100) விழுக்காடுதான் இருந்தது. இந்நிலையைப் போக்க

"கேடில் விழுச் செல்வம் கல்வி"

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

"அறம் பொருள் இன்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும், கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை"

"கைப்பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின்
கண்ணும் ஆகும்
மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர்
துணையும் ஆகும்

என்னும் செந்தமிழ்ப் புலவர்கள் செப்பியவற்றைச் செம்மையாக உணர்ந்த தமிழவேள் அவர்கள் இந்த இழிநிலையைப் போக்க வேண்டும் என்று உறுதிகொண்டார். தம்மைப் போன்ற பொறுப்பிலிருந்த பெரியோர்களுடன் சேர்ந்து இது குறித்துப்பாடுபட்டார். இதன் பயனாகத் *தொடக்கப்பள்ளிச் சட்டம்* என்னும் ஒரு புதிய சட்டத்தையே நீதிக்கட்சி கொண்டுவந்தது. இச்சட்டத்தால் தனிவரி, தனிநிதியமைப்பு போன்ற சலுகைகள் கிடைத்தன. நம் உமாமகேசுவரனார் அவர்கள் இச்சட்டத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொண்டு கல்வித்துறையைச் சிறப்படையச் செய்தார்கள். அவரது அயராத் தொண்டின் பயனாக ஐம்பது பள்ளிகள் மட்டுமே இருந்த தஞ்சை வட்டத்தில் நூற்று எழுபது பள்ளிகள் உருவாகிக் கல்விப் பணி செய்தன.

தன்னுடைய ஆட்சியின் கீழ் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவரிடமும் தகுந்த மரியாதை காட்டுவார்-அவர்களிடம் அன்பாகவும், பரிவாகவும் பேசுவார். நல்ல முறையில் பணியாற்றுகின்ற கடமையிற் சிறந்த ஆசிரியர்களை நேரில் அழைத்துப் பாராட்டி ஊக்கம் அளிப்பார். ஆனால் கடமைகளைச் சரிவரச் செய்யாமல் ஏமாற்றுகின்றவர்களைத் தண்டிக்கவும் தயங்கமாட்டார். எவ்வகையிலும் திருந்தாதவர்கள் சிலர் அலுவலில் இருந்து விலக்கப்பட்டதும் உண்டு. எப்பொழுதும் பிறர் கூறும் குற்றச்சாட்டுகளைக் கேட்டு நடவடிக்கை எடுக்கமாட்டார். தாமேநேரிற் பலமுறை கண்டு உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே நடவடிக்கை எடுப்பார்.

கல்வித் துறை ஆய்வாளர்கள் பள்ளிகளுக்கு வந்து பார்வையிட்ட போது எழுதும் குறிப்புகளைக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும் முறையைத் தஞ்சை வட்டக் கழகத்தலைவர் மட்டும் தான் முழு அளவில் செயல்படுத்தி வந்தார் என்று அந்தக் காலத்தில் கல்வித் துறையைச் சார்ந்தவர் பாராட்டினையும் இவர் பெற்றுள்ளார். முன்னறிவிப்பு

இல்லாமலேயே திடீர் என்று பள்ளிக்குச்சென்று பார்வையிடுவது அங்கு குறைபாடுகள் காணப்படின் உடனடியாக நடவடிக்கை எடுப்பதும் ஆகிய செயல்களை இவர் மேற்கொண்டிருந்தார் இதன் காரணமாக எல்லாப் பள்ளிகளும், தலைவர் எந்த நேரத்திலும் வந்து பார்வையிடக் கூடும் என்ற அச்சத்துடன் ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை வழுவாமற் செய்வார்களாம் அதேநேரத்தில் ஆசிரியர்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளையும் எந்தக்குறையும் இல்லாத அளவுக்கு வேறு எந்த வட்ட-மாவட்ட-க்கழகமும் செய்திராத அளவுக்கு செய்து உதவியுள்ளார். தம் ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்களுக்கு புதுமுறையில் ஊதியம் வழங்கினார். ஊதியத்தில் இருந்த வேறுபாடுகளையும்-குறைபாடுகளையும் நீக்கி ஒரேதரமான-முறையான-ஊதியம் கிடைக்க வழிவகை செய்தார்-இதன் பயனாக பிற மாவட்ட-வட்டங்களில் பணியாற்றி வந்த ஆசிரியர்களும் ஆசிரியரல்லாத ஏனைய துறையினரும் தமிழவேள் அவர்களின் ஆட்சியாளர் கீழே பணியாற்ற விரும்பிவந்தனர் என்றால் இவருடைய ஆட்சித்திறனை எவ்வாறு புகழ்வது *ஊருக்கு ஒரு பள்ளி* என்று தற்போழ்து கூறப்படுகின்ற முறையை அந்தக் காலத்திலேயே செயல்படுத்தியவர் தமிழவேள்.

பள்ளிகளுக்குத் தேவையானவற்றை உடனடியாக வழங்கிவிடுவதை இவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். அத்துடன் பள்ளிகளுக்குத் தேவையான கட்டடங்களை விலைகொடுத்து வாங்குவதையும், வசதியான கட்டடங்கள் கிடைக்காத போது புதிதான கட்டடங்களைக் கட்டுவதையும் இவர் தமக்கென்று அமைந்த தனிச்சிறப்பாகக் கொண்டிருந்தார். பள்ளிகளைக் கண்காணித்து வருவதற்காக மேற்பார்வை யாளர்களை நியமித்தார். வட்டக் கழகத்துப் பள்ளிகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்தார் ஒரே காலத்தில் தேர்வு நடைபெறவும், ஒரே மாதிரியான விடைத்தாள்களை அளிக்கவும் ஏற்பாடு செய்தார். ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்குத்

தனித்தனியாகப் பொதுத் தேர்வுகளை நடத்தும் முறையைக் கட்டாயமாக்கினார். இத்தகைய ஏற்றமிகு துணிவின் பயனாக இவருடைய ஆட்சியில் உள்ள வட்டக் கழகத்தின் சார்பில் இயங்குகின்ற தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள், எல்லாம் உயர் நிலைப் பள்ளிகளோடு போட்டிபோடுகின்ற அளவுக்கு உயர்ந்த கல்வித்தரமும் கட்டுப்பாடும் உடையனவாகச் சிறந்து விளங்கின.

இவ்வாறு மாண்புறு கல்வித்துறையில் மாவட்டம் போற்ற மாற்றங்கள் பல செய்து மகத்தான வளர்ச்சியை உண்டாக்கிய மதிப்பிற்குரிய தமிழவேள் அவர்கள் மக்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளையும் வாரிவழங்கத் தவறவில்லை. நாட்டுப்புற மக்களுக்காக (Rural Dispensaries) மருத்துவமனைகளை அமைத்து நலம் காக்கும் பணியினை நன்முறையில் செயல்படுத்தினார். தம்முடைய நிருவாகத்திற்குட்பட்ட கல்விநிலையங்களிலும் ஏனைய துறைகளிலும் சாதி சமய வேறுபாடுகளின்றித் தமிழர்கள் வேலைவாய்ப்புகள் பெற்று உயர்வடைவதற்குத் தக்க வழிவகை செய்தார்.

"தமிழ் நாட்டில் தமிழ்தான் இல்லை"

என்று மனம் நொந்து பாடிய பாவேந்தரின் ஏக்கத்தைப் போக்கவேண்டும். "தெருவெல்லாம் தமிழ் மணக்கச் செய்தல் வேண்டும்" என்று உறுதிகொண்டார். அதன் பயனாகக் கடைத் தெருக்களின் விளம்பரப்பலகைகளில் உள்ள ஆங்கிலப் பெயர்களை மாற்றி அழகு தமிழ்ப் பெயர்களைச் சூட்டிடவும் ஆவனசெய்தார். இத்தமிழ்ப் பெயர்களையும் நல்ல-தூய-தமிழ்ப் பெயர்களாகச் சூட்டவேண்டும் என்று வலியுறுத்தினார். இது தொடர்பாகத் தில்லித் தலைமை நிலையத்திற்குப் பலமுறை அஞ்சல்களையும் எழுதிவந்துள்ளார்.

தஞ்சை நகரில் மிகச்சிறப்பாகக் கல்விப் பணியாற்றும் சுப்பையா நாயுடு தொடக்கப்பள்ளியின் மேலாளராக நம்முடைய உமாமகேசுவரனார் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். அதன்பிறது அந்தப் பள்ளியின் வளர்ச்சியையும் தன்னுடைய குறிக்கோள்களுள் ஒன்றாகக் கருதிய இவர் அப்பள்ளியின் தேர்வு நடத்துதல் முதலான அனைத்துப் பணிகளையும் தாமே மேற்கொண்டார். பள்ளிமாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோர்க்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். பள்ளிக்குத் தேவையான கருவிகள், கட்டட வசதிகள் ஆகியவை கிடைக்க ஏற்பாடு செய்து பள்ளியை அனைவரும் பாராட்ட வழிவகை செய்தார். அண்மையில் நல்லாசிரியர் விருது பெற்ற தலைமையாசிரியர்களுள் இப்பள்ளித் தலைமையாசிரியரும் ஒருவர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

வட்டாட்சிக் கழகத் தலைவராகவும், மாவட்டக் கழகத்தின் மாண்புறு உறுப்பினராகவும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கண்ணனைய தலைவராகவும் பள்ளிகளின் மேலாளராகவும் பொறுப்பேற்ற காலத்தில்,

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"
காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே-காய்வதன்கண்
உற்றகுணம் தோன்றா தாகும்; உவப்பதன் கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

என்னும் கனித் தமிழ்க் கருத்துக்களைக் கடைப்பிடித்து வந்தவர் உமாமகேசுவரனாரவர்கள்

ஒன்றல்ல; இரண்டல்ல; மேலும் மேலும்
உயர்பதவி பலவந்து இணைந்த போதும்
குன்றுபோல் நிலைநின்று; குறைகள் யாரும்
கூறவியலாதபடி சேவைசெய்தார்,

என்று பாராட்டும்வகையில் தொண்டு செய்து வந்தார்.

கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றிய உமாமகேசுவரனார் அவர்களின் அரிய முயற்சியால், 1919 ஆம் ஆண்டு கரந்தையில் *திராவிட கூட்டுறவு வங்கி* தொடங்கப் பெற்றது. *நிலவள வங்கி* ஒன்று 10.09.1926-இல் பதிவு செய்யப்பெற்று, 11.12.1926 அன்று கரந்தையில் உமாமகேசு வரனார் அவர்களின் அரிய முயற்சியின் பயனாய் உருவெடுத்தது. இவ்வங்கி தற்சமயம் தஞ்சாவூர், ராஜப்பா நகரில் செயற்பட்டு வருகின்றது. இதுமட்டுமன்றி தமிழவேள் அவர்களின் தளரா முயற்சியால், கரந்தை ராமர்கோவில் அருகில், 10.12.1926 இல் பதிவு செய்யப்பெற்ற *கூட்டுறவு அச்சகம்* தன் பணியினை 16.02.1927 முதல் தொடங்கியது. இவ்வச்சகம் தற்போது மருத்துவக் கல்லூரி சாலையில் சீருடன் செயற்பட்டு வருகின்றது. 1939 ஆம் ஆண்டு மானோஜிப்பா வீதியில் தொடங்கப்பெற்று தற்போது நாஞ்சிக்கோட்டை சாலையில் சிறப்புடன் பணியாற்றி வரும் *தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனைக் கழகமும்* செந்தமிழ்ப் புரவலர் அவர்களின் செம்மார்ந்த முயற்சியின் பயனாய் தோன்றியதாகும். இதனால், திராவிடக் கூட்டுறவு வங்கியின் தலைவர் பதவியும் கூட்டுறவு அச்சகத் தலைவர் பதவியும், அர்பன் வங்கியின் உறுப்பினர் பதவியும், நிக்கல்சன் நகர வங்கியின் உறுப்பினர் மற்றம் சட்ட ஆலோசகர் பதவிகளும் உயர் நிலைப்பள்ளிக் கல்விக்குழுவின் உறுப்பினர் பதவியும் இவரைத் தேடிவந்தடைந்து பெருமையடைந்தன. பொறுப்புகள் நிறைந்த இந்தப் பதவிகளையெல்லாம் ஏற்று மெய்வருத்தம் பாராது பசி நோக்காது, கண்துஞ்சாது கருமமே கண்ணாகக் கொண்டு செயல்படுத்தி வந்த இவருடைய திண்மையை-மனவலிமையைப் பற்றிச் சிந்திக்கும் போது

"வைகல் எண்டேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன்னோனே'

நாள் ஒன்றில் எட்டுத் தேர்களைச் செய்து முடிக்கின்ற ஆற்றல் வாய்ந்த தச்சுத் தொழிலாளி ஒருவன் மிகமிக முயன்று

ஒரு மாதகாலத்தில் ஒரு தேர்ச்சக்கரத்தை மட்டும் செய்வானானால் அந்தச் சக்கரம் எத்துணைத் துட்பமும் நுட்பமும் அழகும். அருமையும் வாய்ந்ததாக அமைந்திருக்குமோ அந்தத் தேர்க்கால் போன்ற திட்பமும் நுட்பமும் ஆற்றலும் அறிவும் வாய்ந்தவன் என்னுடைய தலைவன் என்று ஔவைப்பிராட்டியாரால் செவ்வையுற புகழப்பட்ட அதியமான் அஞ்சியின் நினைவுதான் தோன்றுகிறது.

இத்தனை பதவிகளையும் பொறுப்பேற்றுச் செயலாற்றி வருகின்ற காலங்களில் இவர்பால் வருபவர்கள் கற்றோர் கல்லாதார். ஏற்றமிகு பதவிகளிலுள்ளார்-எளியார். அறிமுகமுடையார்-அறிமுகமில்லார் என்ற எவராக இருப்பினும் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்க்கு ஆவன செய்யும் இயல்பைப் பெற்றிருந்தார். எத்தனை முறைகள் இவ்வாறு அவர்கள் உதவிகேட்டு வந்தாலும் முதல் நாள் போலவே முகம் மலர்ந்து வரவேற்கும் இயல்பு இவர்க்கே உரியது. இக்காரணத்தால் இவ்வியப்பைப் பாராட்டும் தமிழ்ச்சான்றோர்கள்

"ஒருநாட்செல்லலம் இருநாட்செல்லலம்
பலநாட் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத்து அது பொய்யாகாதே
அருந்து ஏமாந்த நெஞ்சே
வருந்த வேண்டாம் வாழ்க அவன்தானே"

என்று ஔவையார் அதியமானைப் பாராட்டிப் பாடிய பாடல் தமிழவேள் அவர்களுக்காகவே பாடியதைப் போல அமைந்திருக்கிறது என்று புகழ்ந்து கூறுவார்கள். அத்துடன் பகுத்தறிவுப்பகலவன் வெண்தாடி வேந்தன். தந்தை பெரியார் அவர்கள் தம்மால் செய்ய முடிந்தால் தான் உறுதிமொழி

தருவாராம். அவரைப் போலவே நம் உமாமகேசுவரர் அவர்களும் எல்லா வகையிலும் ஆய்ந்து பார்த்தபிறகு செய்ய இயன்றவைகளையே செய்து தருவதாக உறுதி மொழி தருவார்களாம். அவ்வாறு உறுதிமொழி தந்து விட்டால், எப்படியேனும் முயன்று அவற்றைச் செய்து தருவார்களாம். இதனால் இவரைப்பற்றிக் கூறும்போது "செய்ய முடிந்ததையே சொல்வார்; சொல்லி விட்டால் எவ்வாறேனும் செய்துவிடுவார்" என்று கூறுவார்கள்.

தாம் செல்லும் வழியில் காண்கின்றவர்கள், சிறியவர் பெரியவர் என்ற வேறுபாடின்றி அனைவரோடும் அன்புடன் உரையாடி நலம் விசாரிக்கும் இயல்பு இவர்க்கேயுரியது என்பர். அதிலும் படித்துக் கொண்டிருக்கும் சிறுவர்களைக் கண்டால் இவருக்குப் பரவசமே உண்டாகிவிடும். விரைந்து செல்ல வேண்டிய நிலையில் தான் இருந்தபோதும் பள்ளிச் சிறார்களைக் கண்டால் நின்று அவர்களைப் பற்றியும்-அவர்கள் கல்வி நிலை குறித்தும் கேட்டறிந்து அவர்களுக்குத் தேவைப்பட்ட உதவிகளையும் உடனடியாகச் செய்வார்களாம். இவ்வகையில் பெருந்தலைவர் காமராசர் அவர்களும் புரட்சித்தலைவர். எம்.ஜி.ஆர்.அவர்களும் கற்கவியலாமற் போனமை குறித்த ஏக்கவுணர்வால் மற்றவர்களேனும் படித்து உயர்வு பெறவேண்டும் என்று எண்ணி மாணவனை கல்வி வளர்ச்சிக்காக மதிய உணவு-சீருடைத்திட்டங்கள் தந்து உதவிய நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன. அவர்களிருவரும் தங்களால் அடைய முடியாத கல்விச் செல்வத்தைப் பிறருக்கு அளித்திட நினைத்தார்கள். ஆனால் நம் தமிழவேள் அவர்களோ தம்மைப் போலவே தமிழினத்துச் சிறார்கள் அனைவரும் கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், புகழ்ச் செல்வமும், பெற்றுப் பொலிந்திடவேண்டும். அப்போதுதான்

என்னருமை தமிழ்நாட்டின்கண்
எல்லாரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால் அன்பால்
உன்னத இமயம் போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பும் நாள் எந்த நாளோ

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் கனவு நனவாகும் நாள் என்று எண்ணினார்கள்.

இத்தகைய தொலைநோக்குத் திட்டத்தைத் தம் தூய உள்ளத்தே வைத்திருந்தமையால் தான் கல்வியில் ஆர்வம் உடைய -ஆனால்-கற்பதற்கு வசதியற்ற ஏழை எளிய மாணவர்பால் இரக்கம் காட்டி அவர்களையழைத்து வந்து தாம் அமைத்துள்ள திக்கற்ற மாணவர் இல்லத்தில் சேர்த்துக் கொள்வார். இவ்வகையில் தமிழவேள் அவர்களின் உதவியாலும் ஆதரவாலும். அறிவுரையாலும் படித்து வெளியேறிய பலர் இன்று தமிழகத்தில் பெரும்புலவர்களாகப் புகழ்பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் தமிழவேள் அவர்களைப் பற்றி நன்றிப் பெருக்குடன் கண்கலங்கி மனம் நெகிழ்ந்து கூறும் பொழுது கேட்பவர் உள்ளங்களும் உருகிப் போவதையுணரலாம்.

தம்மை நாடிவருகின்ற தமிழ்ப் புலவர்கள். தமிழன்பர்கள். பல்துறைச் சான்றோர்கள். அலுவலர்கள். மற்றவர்கள் அனைவரையும் "சேய்மையிற் கண்டவழி இன்முகமும். அதுகண்டு நண்ணியவழி இன்சொல்லும் அதுபற்றி அடைந்த வழி நன்றாற்றலும்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கிணங்க முக மலர்ச்சியோடு அன்புரை கூறி வரவேற்று அகமும் முகமும் மலர விருந்தளித்துப் போற்றுவது இவர்பாற் கண்ட மறக்கவியலாப்

பண்புகளுள் மகத்தான பண்பு என்று அவர்பால் விருந்தயர்ந்த அன்பர் பலர் வியந்து பாராட்டுவர். தாம் எவ்வாறு வரவேற்று உபசரிப்பது வழக்கமோ அதுபோலவே தம் வீட்டிலுள்ளார் அனைவருமே வந்தாரை வரவேற்றுப் போற்றும் வகையில் தம் குடும்பத்தினரையும் உருவாக்கியிருந்தார்கள். பெரியவர்கள் வீட்டில் இல்லாத நிலையில் கூட அவர் இல்லத்துச் சிறுவர்களும், வந்தவர்களை அன்புடன் வரவேற்று அமரச் செய்து உபசரிக்கும் பண்பைப் பெற்றிருந்தார்கள் என்றால் அவருடைய பண்பைப் புகழ்வதா "கன்றும் உதவும் கனி" என்னும் தமிழ் மொழியை உறுதிப்படுத்தும் உத்தமச் சிறார்களைப் புகழ்வுதா என்று வியப்படைய வேண்டும் என்று அவளுடைய இல்லத்திற்குச் சென்று தாமே அனுபவித்த நிகழ்ச்சி பற்றிக் கூறியதைக் கேட்டபோது புறநானூறு தான் மறுபடியும் நினைவுக்கு வருகிறது.

முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு முகமலர்ந்து அளித்தவனும் மூவேந்தர்களுக்குத் தன்னையே அளித்தவனும்,

"பாரிபாரி என்று பலருவந்தேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே"

என்று பொய்யாநாவிற் புலவர் பெருந்தகையால் புகழப் பட்டவனும் ஆகிய வள்ளல் வேள்பாரியிடம் பன்னாட்டங்கி யிருந்த அவ்வையார் அடுத்த நாடு செல்ல அவனிடம் விடை கேட்டார். வித்தகப் புலமை வாய்ந்த அந்த சித்திரக்கிழவியாரை விட்டுப் புரிய விரும்பாத பாரி அவரிடம் பரிசில் பல கொடுத்து அனுப்பினான். அவர் பின்னர் ஆட்களையனுப்பி அவர் பெற்றுச் செல்லும் பரிசிலைப் பறித்து வருமாறும் செய்துவிட்டான். பதறிப்போன புலமைப்பாட்டியார் பார்த்தி பனாம் பாரியிடம் நிகழ்ந்தது கூறி வருந்தினார். பின்னர் தான் தெரிந்து கொண்டார் தன்னைப் புரிய விரும்பாத பாரியே செய்த சூழ்ச்சியஃது என்று.

அதன்பின் பழையனூர்க்காரியிடம் சென்றபோது அவன் அவ்வையாரைப் பல நாட்கள் தம்முடனேயே இருக்கச் செய்யவேண்டும் என்று திட்டமிட்டுத் தன்கழனியிற்களை பறிக்கச் செய்வோம் வாரீர் புலவர் பெருமாட்டியே என்று கூறி அவர்கையிலும் "களைக் கொட்டு" ஒன்றைக் கொடுத்தான். ஒருவாறு அவனிடம் விடை பெற்றுச் சேரநாடடைந்தார் ஔவையார். அன்று சேரமன்னன் தன்மகன் பிறந்த மங்கலநாள் கொண்டாடிய நேரம் ஔவையை அன்புடன் வரவேற்றான். விருந்துண்ண அமர்ந்துள்ளார் வரிசையில் வித்தையில் சிறந்தாரையமர்த்தி வைத்தான். அனைவரும் உண்ணத் தொடங்கிய நேரத்தில் புதிய விருந்தினர் ஒருவர் வந்தார். அவரை உண்ணச் செய்ய இடம் இல்லை. இந்நிலையறிந்த சேரமன்னன் ஔவையாரை எழுந்து வருமாறு அழைத்தான். அந்த இடத்தில் புதிய வரை அமர்த்தி உண்ணச் செய்தான்.

இம்மூன்று செயல்களையும் அவ்வையார் மிகமிகப் புகழ்ந்து புகழ்ந்து மனம் நெகிழ்ந்து போவார். தாம் பெற்ற ஏனைய பெரும் பெரும் பரிசில்களை அனைத்தையும்விட பெருமை வாய்ந்தவையிவை எனப் பேசி வந்தார். இந்நிலையில் இம்மூன்று பரிசிலையும் வெல்லும்படியான ஒரு பரிசு அவருக்குக் கிடைத்தது அதைப்பற்றியும் புகழ்ந்து பாடியுள்ளார்.

வள்ளல் பாரிவேள் வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டமை கேட்ட புலவர் மனம் நொந்தவராய் பலநாடுகளிலும் அலைந்து திரிந்த பின்னர் மீண்டும் திரும்பி வந்தார். ஒருநாள் மழையால் நனைந்து குளிரால் நடுங்கிப் பசியால் வாடிக் களைப்புடன் ஒரு குடிசையையடைந்தார் அவ்வீட்டில் பெரியவர்கள் எவரும் இல்லை. சிறுமியர் தாம் இருந்தனர். அச்சிறுமியர்கள் ஔவையை அன்புரை கூறி வரவேற்று அவரது குளிர் போக்குதற்காக நீலச் சிற்றாடை ஒன்றைத்தந்தனர். பின்னர் கீரையைச் சமைத்து உணவாகப் படைத்தனர். அச்சிறுமியர்தாம் பாரிவள்ளலின் மகளிர் என்பதையறிந்த ஔவையார் பதறித்

துடிக்கிறார். கைம்மாறு கருதாத கனித்தமிழ் வள்ளலின் கான் மூளைக்கு இந்தக்கதியா என்று கசிந்து கண்ணீர் வடிக்கிறார். அப்போது கண்ணீரோடு கலந்து எழுகிறது ஒரு பாடல்.

பாரிபறித்த கலனும். பழையனூர்க்
காரியன் றீந்த களைக்கொட்டும்-சேரமான்
பாராய் எனவுரைத்த வாய்மொழியும் : இம்மூன்றும்
நீலக்சிற் றாடைக்கு நேர்

என்ற பாடல் தான் அது. இதுபோலப் பெரியவர்கள் எத்துணையளவு பண்படுத்தியிருந்தால் தமிழவேள் அவர்களின் வீட்டிலுள்ள சின்னஞ்சிறுவர்களும் அன்புரை கூறுபவர் களாகவும். ஆதரவு காட்டுபவர்களாகவும் அடக்கத்துடன் பேசி விருந்து அளிப்பவர்களாகவும் விளங்குவார்கள் என்பதை எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாதல்லவா.

தன்மான உணர்வாம் தலையாய பண்பு

"எவ்வகையிலேனும் பொருள் சேர்த்துச் சங்கத்தைப் போற்றி வளர்ப்பேன். அதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்வேன்" என்று மிகவும் உறுதியுடன் வாழ்ந்தவர் உமாமகேசுவரனார் அவர்கள். ஆனால் இதற்காகத் தன்னுடைய தன்மானம்-சுயமரியாதை-குறையும் வகையில் பிறரிடமிருந்து எவ்வளவு பெரிய தொகை கிடைப்பதானாலும் அதனைக் கையாலும் தொடேன். மனத்தாலும் விரும்பேன் என்ற மானவுணர்வுடன் வாழ்ந்தார். இதனை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சியொன்று பற்றிக் காணலாம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பொருள் திரட்ட வேண்டுமென்று கருதிய. பண்டிதமணி கதிரேசச் செட்டியாரவர்கள். உமாமகேசு வரனாரிடம் வந்து தாம் சிங்கப்பூர் செல்ல விருப்பதாகவும். தன்னுடன் உமாமகேசுவரரும். ஒளவை துரைசாமிப்பிள்ளை: வெள்ளைவாரணனார்; சிவ. குப்புசாமிப்பிள்ளை ஆகியோரும் தம்முடன் சிங்கப்பூர் வந்தால் அங்குள்ள தமிழர்களிடம் சங்க

வளர்ச்சிக்கு நிதியுதவி பெறலாம்" என்றும் கூறினாராம். அதனைக் கேட்ட உமாமகேசுவரர் "நான் உயிரோடிருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா" என்று கேட்டாராம். உதவி கேட்பது இழிவான செயல் என்பது இவரது கருத்து என்பதையும்

"ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்"

என்ற குறட்பாவிற்கேற்ப, 'எத்தகைய-இன்றியமையாத-செயலைச் செய்வதற்காவும் பிறரிடம் யாசிப்பது இழிந்த செயல்' என்று உமாமகேசுவரர் கருதினார் என்பதனையும் இவர் பண்டிதமணியவர்களுக்குக் கூறிய வீரம் நிறைந்த விடையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

தனக்கென வாழாத் தனிப்பெருந்தகையர்!
பொருணசையில்லாப் புகழ்சேர் புண்ணியர்!

தம்முடைய முன்னோர்களின் வழியாகத் தமக்குக் கிடைத்த பரம்பரைச் செல்வம், வழக்கறிஞர் தொழிலை வளம்படச் செய்தமையால் கிடைத்த வளர்செல்வம், பிறவருமானத்தால் கிடைத்த செல்வம் ஆகிய அனைத்தையும் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்காகவே செலவழித்த தண்ணளியாளர் அவர்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற குறட்பாவிற்கு எடுத்துக்காட்டாக இலங்கிய ஏந்தல் அவர்.

உறுபொருளும் உல்குபொருளும் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்

என்பதற்கேற்ப,

முன்னோர் பொருளும் முயற்சியால் சார்பொருளும்
தன்பொருளும் சங்கப் பொருள்

என்று வாழ்ந்த தண்டமிழ்ப் புரவலர் அவர் தமிழ்ச் சங்கத்திற்காகத் திங்கள்தோறும் இருபத்தைந்து உரூபாய்களை

அளித்து வந்தார். அஃதன்றி எத்தனை விழாக்கள் நடை பெற்றாலும் அவ்விழாக்களுக்கு ஆகும் முழுச் செலவையும் தாமே ஏற்றும் வந்தார்.

இது தவிரச் சங்க நிகழ்ச்சிகளிற் பங்குபெற வந்தார்க்கு உணவு வழங்கிய வகையிலும், திக்கற்றவர்க்கு உதவிய வகையிலும், நூலகத்திற்கு நூல்கள் கொடுத்த வகையிலும் ஆன செலவுத் தொகையைக் கணக்கெடுத்துப் பார்த்தால் அஃது ஒரு நூறாயிரத்துக்கு மேற்பட்ட தொகையாக இருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டு

என்று வாழாமல்

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்; மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும்; என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்.

என்ற குறிக்கோளோடு தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ் வளர்ச்சிக்காகவும் தமிழ்ச் சங்க வளர்ச்சிக்காகவுமே ஒப்படைத்துக் கொண்ட உமாமகேசுவரர் அவர்களைத்

"தனக்கென வாழாத் தண்ணளியாளர்"

என்று அழைப்பதா

"பொருணசையில்லாப் புண்ணியர்" என்பதா?

உள்ளொன்று - புறமொன்று - அறியாத உத்தமர்.

உமாமகேசுவரர் வஞ்சகம் என்னும் பொருளறியாத நெஞ்சினர். இவருடைய எண்ணம்-சொல்-செயல் ஆகிய மூன்றும் ஒரே தன்மையனவாயிருக்கும். உள்ளதை உள்ளவாறே கூறிவிடுகின்ற உறுதிப்பாடு இவரிடம் உண்டு. எந்தக் கருத்தினையும் தெளிவாகவும், உறுதியாகவும் வரையறை செய்தும் கூறிவிடுவார். இவருடைய பேச்சைப் போலவே இவருடைய கையெழுத்தும் தெளிவாகவும், அழகாகவும் இருக்கும். எதைப்பற்றி எழுத வேண்டியிருந்தாலும் அதுபற்றிச் சிறிது நேரம் சிந்தனை செய்த, பின்னரே எழுதத் தொடங்குவார். எழுதத் தொடங்கிவிட்டால் தொடர்ந்து எழுதிக்கொண்டே போவார். அடித்தல் திருத்தல் இல்லாமல் விரைந்து எழுதுவது இவருடைய தனிச்சிறப்பு என்று இவருடன் பழகியவர்கள் கூறுவார்கள்.

"பேச்சாற்றல் மிக்கவரிடம் எழுத்தாற்றல் அமையாது
எழுத்தாற்றல் மிக்கவரிடம் பேச்சாற்றல் அமையாது"

என்றும்; ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காகத் திகழ்ந்தார். தமிழிலும், ஆங்கிலத்திலும் அடுக்குமொழியில் அழகாகப் பேசுவதைப்போல எழுதவும் செய்வார்" என்று கூறுவார்கள்.

நம்முடைய உமாமகேசுவரர் அவர்களும் நல்ல-தூய-அழகான தமிழ் நடையில் அழுத்தமாகவும், தெளிவாகவும் பேசுவார்கள். தெளிவாகப் பேசுவதைப் போலவே நல்ல இலக்கண முறையான-ஆங்கிலத்தில் அழகான நடையில் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். அவ்வாறே இருமொழிகளிலும் சிறப்பாக எழுதுகின்ற ஆற்றலையும் பெற்றிருந்தார்கள்.

பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான வகையில் மிக மிகக் கண்டிப்பான கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். எத்தகைய சூழ்நிலையிலும் எவரிடமும் இவர் கடன் வாங்குவதில்லை. அதேபோல பிறருக்குக் கடன் கொடுப்பதும் இல்லை. இக்கொள்கையை இறுதிவரை கடைப்பிடித்து வந்தார். எவருக்கேனும் உண்மையிலேயே பணவுதவி இன்றியமையாதது. என இவர் உணர்ந்தால் அன்பளிப்பாக ஏதேனும் ஒரு தொகையைத் தந்துவிடுவார். இக்கொள்கைகளை மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துவார்.

பிற வழக்கறிஞர்களால் ஏற்று நடத்தவியலாது என்று கருதப்பட்ட சிக்கலான-கடினமான-ஆனால் நேர்மையான வழக்குகளை, உமாமகேசுவரர் ஏற்று நடத்தினால் எப்படியும் வெற்றி தேடித் தந்துவிடுவார் என்று கருதுபவர்கள் இவரை அணுகிச் சங்கத்திற்கு நிறைந்த நன்கொடை தருவதாகக் கூறினால் சங்கத்தின் நலன் கருதி அந்தப் பெரும்பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். இதிலிருந்து இவர் சங்கத்தின்பால் வைத்துள்ள பெருமதிப்பையுணரலாம்.

ஒழுக்கமும் நாணும் வாய்மையும் காத்த உரவோர்

"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு"

என்ற இனிய குறட்பாவிற்கு இலக்கணம் போன்று, தான் பிறந்த குடும்பத்திற்குரிய இயல்புகளான, அனைவரிடமும் முகமலர்ந்து வரவேற்கும் இயல்பையும், வாரி வாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மையையும் எவரிடமும் இன்சொல் பேசும் எளிமையையும், பிறரை இகழ்ந்து பேசாத பெருந்தன்மையையும் பெற்றிருந்த இவர், ஆன்மீக நெறியிலும் ஆழ்ந்த பற்றுக்கொண்டிருந்தார். சிவனடி மறவாச் சிந்தையராக வாழ்ந்த இச்செம்மல்

தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும்; தாழ்வடமும்;
நாயகன் சேவவடி தைவரு சிந்தையும்; நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்; பதிகச்
செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையவர் புகுந்தனர் வீதியுள்ளே

என்று நாவுக்கரசர் பெருமானைப்பற்றிப் பாடப்பட்ட செய்யுளில் கூறியிருப்பதைப்போல். வெண்ணீறு திகழும் மேனியும், அக்கமாலை தவழும் அகன்ற மார்பும், சிவனையே நினைத்துருகும் சிந்தையும். திருமுறையிசைக்கும் திருவாயும். கண்ணுதலானை நினைந்து வடிக்கும் கண்ணீரும், எளிய உடையும், ஏற்றமுறு நடையும் கொண்ட இவரது கோலங்கண்டு அனைவரும் பரவசமாகி நிற்பது வழக்கமாகும்.

முத்தமிழ் வளர்த்த முடியுடை வேந்தர்கள்;
வித்தகப் புலவர்கள்: குறுநில மன்னர்கள்;
இத்தரை தனைவிட்டு ஏகிய போதும்
பத்திரப் பரம்பரை இவரெனல் போலவும்:

"பாரியே. நள்ளியே. ஆய். பண்புறு அதியமானே,
காரியே. ஓரி, பேகன் கான்முளை என்னல் போலும்"

திகழ்ந்தவரும்.

சங்ககாலத்தில் கனித்தமிழ் வளர்த்த காவலர்களையும் வண்தமிழ் போற்ற. வாரிவாரி வழங்கிய வள்ளற் பெருமக்களையும் யாங்களெல்லாம் கண்ணாரக் கண்டு மகிழும் பேறு பெற்றிலேமே என்று எண்ணி எண்ணி ஏக்கமடைகின்ற தற்காலத் தமிழ்ப் புலவர்கள், தமிழ்ச் சான்றோர்கள் அத்தனை பேர்களுக்கும் மேற்கூறிய அத்தனை வள்ளற்பெரு மக்களுடைய மொத்த வடிவமாக - முழுவடிவமாகத் - தோன்றியவருமாகிய நம்முடைய உமாமகேசுவரர் அவர்களைப் பட்டங்கள் பல நாடி வந்தன.

"வரலாறு படித்தவர்கள் பலபேர் இருப்பார்கள்; ஆனால்,
வரலாறு படைத்தவர்கள் சிலபேர்தாம்"

என்னும் பழமொழிக்கேற்ப, வரலாறு படைத்த நம் உமாமகேசுவரர் அவர்கள்

"பட்டம் பதவி பெறப் பாடவில்லை-தங்கப்
பதக்கங்களை என்றும் நாடவில்லை"

என்னும் வகையில் எந்தவிதமான பயனையும், நன்றியையும் எதிர்பாராமல்

"இம்மைக்குச் செய்தன மறுமைக்குஆம் எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்"

என்னும் சங்கப் பாடலுக்கேற்பவும்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற வாகீசர் வாக்கினைச் செயல்படுத்தும் வகையிலும்

"இன்றமிழைப் போற்றுதற்கே
இறைவன் எனைப் படைத்தான்"

என்னும் நம்பிக்கையுடன்

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"
தவலரும்தொல் கேள்வித் தன்மையுடையார்
இகலிலர்; எஃகுடையார்; தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பான் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி

என்ற, ஒப்பற்ற உணர்வுடன் துணிவுடன் தமிழ்ப் பணி செய்வதும், தமிழ்ச் சான்றோர்களுடன் உரையாடுவதும் தன் வாழ்வின் பேறு என்று வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆனால்

"அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு"

என்னும் அய்யன் வள்ளுவனின் ஆன்ற கருத்திற்கேற்றவாறு மாபெரும் பட்டங்களும் மறுக்கவியலாத விருதுகளும் மகத்தான மாமேதையர்களின் மாண்புறு கரங்களால் இந்த மனிதருள் மாணிக்கத்திற்கு வழங்கப்பட்டன.

தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக் கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்

என்னும் புகழ்மொழிக்கேற்ப இவர் பெற்ற பட்டங்கள் எல்லாம் அவருக்குப் பெருமை தந்தன என்பதுடன் அவரையடைந் தமையால் அவையும் பெருமையடைந்தன என்று அறிஞர் பெருமக்கள் கூறி மகிழ்வார்கள். ஒருவர்க்குப் பட்டம் வழங்கப்படுகின்ற தென்றால், அஃது எத்தகைய பட்டம் என்பதைவிட அது யாரால் வழங்கப்பட்டிருக்கிறது? யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதில்தான் அதன் சிறப்பு அடங்கியிருக்கிறது என்பார்கள். எனவே நம்முடைய மாமகேசுவரனார் பெற்ற பட்டங்களைப் பற்றிக் காணலாம்.

செந்தமிழ்ப் புரவலர்

ஒண்டமிழ் போற்ற ஓயாதுழைத்துவரும் நம் மாமகேசுவரனார் அவர்களின் ஒப்பற்ற தமிழ்த் தாண்டினைப் பாராட்ட வேண்டும் என்று தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்ப் புலவர்கள், சைவநெறிச் சான்றோர்கள், ஆன்மீக அறிஞர்கள் பலரும் கூடி முடிவெடுத்தனர். இத்தகைய அறிஞர்களுள் ஒருவர்தாம் தவத்திரு ஞானியாரடிகள் என்னும் நற்றவமுனிவர்.

1873இல் சைவநெறி தழைத்தோங்க சால்புடைய தமிழோங்க. சகமீதில் அவதாரம் செய்த அடிகளார், 1942 ஆம் ஆண்டு வரை இந்நிலவுலகில் தவநெறி வாழ்வு நடத்திய தனிப்பெருந்தகையாளர்.

மார்பிற்கண் டிகையைத் தாங்கி
மனத்தினும் சீலம் தாங்கி
பார்வையிற் கருணை தாங்கி
பத்தியை உணர்வில் தாங்கி
சோர்விலா உழைப்பைத் தாங்கி
சொல்வதில் ஞானம் தாங்கி
ஊர்தொறும் சென்றே சைவத்
துறுபொருள் தாங்கி வென்றார்

என்று பாடிப் பரவும் அளவுக்கு வாழ்ந்த பான்மையர். சிவநெறிபோற்றும் சிந்தையர்; அருட்சிவ வேடம் தாங்கிய அறிஞர்; ஒழுக்கத்தால் உயர்ந்த உத்தமர்; உண்மைத் துறவயிாய் வாழ்ந்த உரவோர்; பகைவரையும் தம்பால் ஈர்க்கும் பண்பாளர்; தமிழ் இலக்கண இலக்கியங்களில் புலமை வாய்ந்த தகைமையர்; ஆங்கிலம் வடமொழியறிந்த அற்புதர்; சங்க இலக்கியம் முதல் சமய இலக்கியங்கள் வரை சரியாகக் கற்றுணர்ந்த சால்பினர். ஆயிரக்கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்து அவற்றை அருமையாக விளக்கிக்கூறும் ஆற்றலாளர்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் வித்தகர். கடன் மடைதிறந்த வெள்ளம் என்னும் கவின்தமிழ்ப் பழமொழியை மெய்ப்பிப்பதுபோல் இடையறாது சொற்பொழிவாற்றும் ஏந்தல். மேடையில் ஏறினால் மூன்று மணிநேரம் முழக்கம் செய்யும் மேதை. மாணவர்க்குப் பாடம் சொல்வதில் தமக்கு நிகர் தாமே எனத்திகழ்ந்த பார்த்திபர்! ஆன்மீகக் கடலாகவும், அறக்கடலாகவும், அருட்கடலாகவும் திகழ்ந்த அண்ணல். சைவநெறியோடு தமிழையும் வளர்க்கக் கருதி மதுரை பாண்டித்துரைத் தேவரைக்கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும், ஜே.எம். நல்லுசாமிப்பிள்ளை போன்றவர்களைக் கொண்டு சைவ சித்தாந்த மகாசமாசத்தையும் தோற்றுவித்த பெருமைக்குரியவர். தமிழ் வானிற்கொரு தனி ஞாயிறாகத் திகழ்ந்தவர். ஊர்கள் தோறும் தமிழ்ச்சங்கங்களை

உருவாக்கச் செய்து அவற்றின் வழியாக மாணவர்கள் பலர்க்குப் பாடம் பயிற்றுவித்த மாண்பாளர். இளைஞர்கள் பலரை இன்றமிழ்ப் பேச்சாளர்களாக்கிய இமயம். ஆற்றல் வாய்ந்த பேச்சாளர்களைப் பார்த்து இவர் அடிகளார் மாணவராக இருப்பாரோ என்று எண்ணுகின்ற அளவுக்கு நாவாற்றல் மிக்காரை உருவாக்கிய நாவலர். சைவ நூல்களிலும், சமய நூல்களிலும் இதுவரை வேறெவருங் கூறியிராத ஆழ்ந்த நுட்பங்களையும், அரிய நயங்களையும் எடுத்துக் கூறுவதில் தனக்கு நிகர் தானே என்று திகழ்ந்தவர். இத்தகைய இவருடைய திட்ப அறிவிற்கும், நுட்பப் புலமைக்கும், தேர்ந்த ஞானத்திற்கும் சான்றாக ஓர் எடுத்துக்காட்டினைப் பார்க்கலாம்.

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன் - சொல்லறத்துள்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்.

என்னும் பாடலை உளமுருகிப் பாடுவார்கள். அப்போது இருவகைப் பொருளும், அமையுமாறு பாடுவார்கள். திருப்போரூர் முருகப்பெருமானே! என்றைக்குத்தான் நான் கடைத் தேறப் போகிறேனோ? என்று வருந்துவது போல முதல்முறையும், திருப்போரூர் முருகா! உன்னுடைய பெயரைச் சொல்லிச் சொல்லியே கடைத்தேறுவேன் என்ற பொருள் படுமாறு இரண்டாம் முறையும் பாடி அவையை வியப்பில் ஆழ்த்துவார்.

இத்தகைய ஆன்றவிந்தடங்கிய அருளிறை ஞானியாரடிகளாருக்குச் சீமுக ஆண்டு வைகாசித் திங்கள் மூல நாளுடன் (1933-மே) அறுபது ஆண்டுகள் நிறைவுற்றன. திருப்பாதிரிப்புலியூரில் தெய்வீக மணம் வீசிக்கொண்டிருக்கும் இவருடைய திருமடத்தில் பயின்று வரும் மாணவர்கள், மணிவிழாவாக் கொண்டாடினர். பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமையின்கீழ் அறிஞர் பெருமக்கள்

பலர் சொற்பொழிவாற்ற அடிகளாரின் மணிவிழா அனைவரும் போற்றும் வகையில் கொண்டாடப்பெற்றது.

நூற்றுக்கணக்கான தமிழ்ச் சங்கங்கள் அடிகளாரை வாழ்த்தி பெருமையடைந்தன. வண்டமிழ்ப் புலவர் பலர் வாழ்த்துப் பாக்கள் பாடி வணங்கினர். ஆன்மீக அன்பர்கள் அடிகளாரைப் போற்றிப் பரவி அருள் பெற்றனர். சிவநெறி போற்றும் சீலர்கள் அடிகளாரைச் சேவித்துச் சிந்தை மகிழ்ந்தனர். இவ்வமயத்தில் அடிகளாரவர்கள் மணிவிழாவின் அறிகுறியாகப் பல நற்செயல்களைச் செய்தருளினார்கள். அவற்றுள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை இரண்டு. முதலாவது, திருப்பாதிரிப் புலியூர்ப் பகுதியில் தமிழ்க் கல்லூரியொன்றைத் தோற்று வித்தமை. இதற்காகப் பத்தாயிரம் உரூபாயை முதலீடாகத் தந்தார்கள். இக்கல்லூரியால் திருப்பாதிரிப்புலியூர் மட்டு மல்லாமல் அதனைச் சூழ்ந்துள்ள பல ஊர்களிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்கள் வந்து படித்து நல்ல தமிழறிவு பெற்றுப் புலவர் பெருமக்களாய் வெளிப்போந்து புகழுடன் திகழ்கின்றனர்.

அடிகள் புரிந்த மற்றொரு குறிப்பிடத்தக்க செயல் அன்னையாம் தமிழுக்கு அளப்பரும் தொண்டாற்றிய அருளாளரைப் பாராட்டியது. தண்டமிழ்ச் சேவையில் தனக்கு நிகர் தாமே என்னும் தன்மையில், தமிழின் வளர்ச்சியே தம் வளர்ச்சி எனக் கருதித் தமிழே தானாய் தானே தமிழாய் விளங்கி நாளும் நற்றமிழ்ப் பணியே நந்தம் பணியெனக் கொண்டு வாழ்ந்து வரும் நாயகர் உமாமகேசுவரரைப் பாராட்டிய பாங்குறு செயலாகும்.

முற்றும் துறந்த முனிவராகிய ஞானியாரடிகளாரே தம் திருவாய் மலர்ந்து காசினி போற்றக் கரந்தைத் தமிழ்ச் சங்கம் கண்டு கவின்தமிழ் புரந்து.வருகின்ற த.வே. உமாமகேசுவரனார் அவர்களுக்குச் *"செந்தமிழ்ப் புரவலர்* என்னும் சிறப்புறு

பட்டத்தினை அளிக்கிறேன்" என்று புகழ்ந்து பேசிப் பொன்னாடையும் போர்த்திச் சிறப்பித்தார். மும்மலம் கடிந்த முழுமுதல் ஞானியராம் அடிகளார் முத்தமிழ் காக்கும் உத்தமராம் நம் உமாமகேசுவரரைப் பாராட்டியது எத்துணைப் பொருத்தமானது.

இவ்விழாவில் கலந்து கொண்ட பண்டிதமணி கதிரேசன் செட்டியார் கா.சு. பிள்ளையென்று புகழப்பட்ட தமிழறிஞர் சுப்பிரமணிய பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை; தமிழ்த் தென்றல் திரு.வி.க. பி.சி. ஆச்சாரியா, இரசிகமணி சிதம்பர நாதமுதலியார் போன்ற தமிழறிஞர்கள் பலர் உமாமகேசுவரனாரின் பண்பு நலன்கள் பற்றியும் அவர் செந்தமிழ் புரக்கும் சீர்மை பற்றியும் பலவாறு பாராட்டிக் கூறியதுடன் *"செந்தமிழ்ப் புரவலர்'* என்னும் பட்டம் உமாமகேசுவரனார் அவர்களுக்கு மிகமிகப் பொருத்தமானது என்பது பற்றியும் விளக்கிக் கூறி இப்பட்டத்தினை வழங்கிய அடிகளாருக்குத் தமிழர்களின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். அன்று முதல் உமாமகேசுவரனார் செந்தமிழ்ப் புரவலர் என்று அனைவராலும் புகழப்பட்டார்.

இராவ் சாகிப் என்னும் ஏற்றமார் பட்டம்

நம் செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரனாரவர்கள், வட்டக் கழகத் தலைவராகவமர்ந்து சாலைகள் அமைக்கும் பணியையும், பள்ளிச் சாலைகள் உருவாக்கிய வகையையும் சமய விழாக்கள் சரிவர நிகழச் சால்புற நிகழ்த்திய செயலையும், ஏனைய சமுதாயப் பணிகளையும், அரசியல் துறையிலும், ஆன்மீக நெறியிலும், வழக்கறிஞர் தொழிலிலும், வண்டமிழ்ப் பணியிலும் தமக்கெனச் சில வரையறைகளையும் வழிமுறைகளையும் ஏற்படுத்திக் கொண்டு ஆரவாரமின்றி பணியாற்றிய பாங்கினையும், அனைத்திற்கும் மேலாக அச்சமே இல்லாதவராய் உள்ளதை உள்ளவாறே உரைத்துவிடும்

உறுதிப்பாட்டினையும், தமிழக மக்கள் மீது அவர் கொண்டிருக்கும் தளராத பரிவினையும் கண்ட அரசியலார் அவரைப் பாராட்ட வேண்டும் என்று முடிவெடுத்து 1935 ஆம் ஆண்டில், வெள்ளிப் பதக்கத்தையும் *"இராவ் சாகிப்"* என்னும் பட்டத்தினையும் வழங்கிப் பெருமைப்படுத்தினர்.

சங்கத்தின் வெள்ளி விழாவும் சங்கத் தலைவருக்குத் தமிழவேள் பட்டமும்

முத்தமிழ் வளர்த்த முதல், இடை, கடைச் சங்கங்களுக்கு பின்னர் தனிப்புகழ்க் கரந்தை நகரில் தமிழ்ச் சங்கம் ஒன்றைத் தம்முடைய தளரா முயற்சியாலும் தன் கைப் பொருளாலும் தமிழகமே போற்றுமாறு நடத்திவரும் சிறப்பினைத் தமிழ்ச் சமுதாயம் சிந்திக்கத் தொடங்கியது.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், நூலறி புலவனாம் வேல்கரத்தொருவனும் வித்தகப்புலவராய் வீற்றிருந்தருளிக் குவலயம் முழுதுமே தமிழ்மொழி கோலோச்சுமாறு செய்த குளிர் தமிழ்மொழியானது ஆரிய மொழியின் ஆரவாரத்தாலும் ஆங்கிலமொழியின் அதிகாரத்தாலும் அடக்கியொடுக்கப் பட்டமையால், மேடைப் பேச்சாளர் எல்லாம் தனித்தமிழில் எனக்குப் பேசவராது என்று கூறுவது பெருமைக்குரியது என்று எண்ணிவந்த தரங்கெட்ட சூழ்நிலையில்; ஆங்கில மொழியைக் கலந்து பேசுவதுதான் ஆற்றல் வாய்ந்த ஸ்பீச்சு என்றும், வடமொழி கலந்து பேசுவதுதான் வளமான பிரசங்கம் என்றும் எண்ணி வந்த காலத்தில், தூயதமிழில் எழுதவும் பேசவும் விரும்பினாலும் பேசமுடியாமலிருந்த சூழலில்; வேற்று மொழிச் சொற்கள் கலவாத தூயதமிழ் நடையில் பேசும் பெருமை படைத்தவர்களே பேச்சாளர்கள்; அவ்வாறே எழுதும் எழுத்தாளர்களே ஏற்றமுறு எழுத்தாளர்கள். பிறமொழி கலந்து பேசுபவர்களும், எழுதுபவர்களும் பேதையர். பெருமையைக் குலைப்பவர் என்ற உணர்வைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம்

உருவாக்கியது. தமிழகத்தில் வேறு எந்தச் சங்கமும் செய்திராத இந்த மாபெரும் புரட்சியைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம்தான் செய்தது.

சங்கத்து ஆண்டு விழாக்களின்போது தமிழகத்துப் பெரும் புலவர் பலர் வருகைதந்து மிகச் சிறந்த கருத்துக்களை வாரி வழங்கினர். தமிழகத்தில் ஆங்காங்கே குடத்துள் விளக்குப் போல இருந்த தனித்தமிழ்ப் புலவர்களையெல்லாம் அழைத்துச் சங்கத்தில் உரையாற்றச் செய்து அவர்களைக் குன்றில்மேல் இட்ட விளக்காகச் செய்தது. தலைசிறந்த தமிழ்ப் புலவர்களெல்லாம் ஒன்றுகூடி அளவளாவுவதற்கு வழி செய்தது; வேற்றுமொழி கலந்து பேசுபவர்கள் வெட்கப்பட்டு வேதனையடைந்து விலகிச்செல்லுமாறு செய்தது. தனித்தமிழில் பேசவியலாதவர்கள் அவையோரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலையை உருவாக்கியது. சுருங்கச் சொன்னால் தனித்தமிழ் நடைக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கநடை என்ற பெயரே உருவாகும் உன்னதநிலையை உண்டாக்கியது.

மாபெரும் புலவர்களின் மடியிலே குடியிருந்த, வீற்றிருந்த சங்க இலக்கியங்களை மக்கள் மத்தியிலே நடமாட வைத்துப் பாமரரும் அவற்றைப் பயிலும் பான்மையைப் படைத்துத் தந்தது கரந்தைத் தமிழ்ச் சங்கமே. தமிழகத்திலே தலைசிறந்து விளங்கிய தமிழறிஞர்களான, திருவாளர்கள். பா.வே. மாணிக்க நாயகர், நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகளார், நாவலர் வேங்கடசாமி நாட்டார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முதலியவர்களெல்லாம் சங்கத்திற்கு வந்து கலந்து பேசி, மாணவர்கள் தமிழ் இலக்கிய - இலக்கணங்களைப் பயிலும் முறைகளில் புதிய மாற்றங்களை உருவாக்கினார்கள். உரையாசிரியர்கள் எழுதி வைத்துள்ளவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் மூலங்களுக்குச் சரியான உரைகள்தாமா? என்பவற்றை ஆராய்ந்து பார்க்கும் ஆராய்ச்சி முறையே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில்தான் கால்கோள் கொண்டது எனலாம்.

சங்கம் மேற்கொண்ட இத்தகைய தொண்டுகளின் பயனாக தமிழில் ஒரு மறுமலர்ச்சியே உண்டாயிற்று. விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை - திருமண அழைப்பிதழ் ஆயிற்று. மகா ராஜ ராஜ ஸ்ரீ - ஸ்ரீமான் என்று அழைக்கின்ற முறைகள் அழிந்து, திருவாளர், திரு, திருமிகு முதலிய தமிழ்ச்சொற்கள் தோன்றின. அக்கிராசனர் - தலைவர் ஆனார். காரியதரிசி - செயலாளர் ஆனார். பொக்கிஷதார் - பொருளாளர் ஆனார். இவைபோல் இன்னும் எத்தனையோ தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கிற்கு வந்தன. வட சொற்களை வாட்டியோட்டின. தமிழ்மொழியின் இத்தகைய வளர்ச்சிக்கும், தன்னையே தமிழுக்கு ஒப்படைத்துக் கொண்ட தண்டமிழ்ப்பெருந்தகை செந்தமிழ்ப் புரவலர். த.வே. உமாமகேசுவரனார் அவர்களே முழுமுதற் காரணமாவார் என்பதையுணர்ந்த தமிழ்ச் சான்றோர்களும், தனித்தமிழ்ப் பற்றானர்களும் இவருக்கு மேலும் ஒரு சிறந்த பட்டத்தை வழங்க வேண்டும் என்று எண்ணியிருந்தனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழா அருட்டிரு ஞானியாரடிகளின் சீரிய தலைமையில், அண்ணல் உமாமகேசு வரனாரின் அயரா உழைப்பால் 1938 ஆம் ஆண்டு கொண்டாடப் பெற்றதென்பதை முன்னர் கண்டோம். அவ்வெள்ளி விழாவின் போழ்து தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வருகை புரிந்திருந்த புலவர் பெருமக்களும், தமிழறிஞர்களும், தமிழ்ப் பற்றாளர்களும், பெரியோர்களும், இருபத்தைந் தாண்டுகளுக்கு மேலாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து அரிய பணியாற்றிய உமாமகேசுவரனார் அவர்கட்குத் தமிழகத்து நன்றியையும், நன்மதிப்பினையும், வணக்கத்தினையும், வாழ்த்தினையும் தெரிவிக்கும் வகையில் தகுதிவாய்ந்த பட்டம் ஒன்றினை வழங்க வேண்டுமென்று விரும்பினர். இவ்விருப்பத்தினை வெள்ளி விழாத் தலைவரான ஞானியாரடிகளிடம் தெரிவித்தனர். "உயர் மனம்படைத்த சான்றோர்களின் எண்ணங்கள் ஒன்றாகவே இருக்கும்" என்னும் பழமொழிக்கேற்பத் தவத்திரு ஞானியாரடிகளாரும் இக்கருத்

தினையே தம்மனதுட் கொண்டிருந்தமையால், அனைவரும் மனம் மகிழும்படியாக இந்தச் செய்தியை வெள்ளிவிழா நிகழ்ச்சியிலேயே அறிவித்தார்கள். அப்போது உமாமகேசு வரனார் அவர்களைப் பலபடப் பாராட்டிப் பேசியதாவது.

செந்தமிழ்ப்புரவலர் த.வே.உமாமகேசுவரனார் அவர்களைப் பல்லாண்டுகளாக யான் நன்குணர்வேன். அவர்கள், தமிழ் அன்னையையே தமக்குத் தாயாகவும், தந்தையாகவும், சேயாகவும், உடன்பிறப்பாளனாகவும், மற்றும் எல்லாமாகவும் கொண்டுள்ளவர்கள். தமிழ்ப் பணியே தம் பணியாகக் கருதிப் பலதொண்டுகள் செய்து வருகின்றார்கள். அவர்களைத் தமிழகம் தக்கவாறு சிறப்பித்தல் இயல்பு. தன்னாட்டு மக்களாலேயும், அறிஞர்களாலேயும் அளிக்கப் பெற்று ஒருவர் அடையும் பட்டம் ஏனைய பட்டங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்தது. பிள்ளையவர்களுக்குத் *"தமிழவேள்"* என்னும் பட்டம் மிகவும் பொருத்தமானது என்று கூறினார்.

பின்னர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் நாவலர். ச. சோமசுந்தர பாரதியாரவர்கள் வந்திருந்த பேரவையினர் சார்பாக இப்பட்டம் செந்தமிழ்ப் புரவலர். இராவ் சாகிப். த.வே. உமாமகேசுவரனார் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்று முன்மொழிந்து பேசும்போது, உமாமகேசுவரனாரின் பல பண்புகளை எடுத்துக் கூறிப் பாராட்டினர். மேலும் அவர் பேசும்பொழுது, "உலையா ஊக்கமும் வரையாத வள்ளன்மையும் பொருந்திய இவர்களுக்கு *"வேள்"* என்னும் சிறப்பு எவ்வகையானும் உரியது. *"வேள்'* என்னும் இப்பட்டம் தமிழரசர்களால் பண்டை நாட்களில் சிறப்புடையவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அத்தகைய சிறப்புக்கேற்ற பண்புகளெல்லாம் நிறையப்பெற்ற நம்முடைய பிள்ளையவர்கள் இக்காலத்துத் தமிழவேள் என்னும் சிறப்பைப் பெற்று நீடு வாழ்வார்களாக" என்று கூறினார்.

பின்னர் அவரைப் பின்பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர். சீனிவாசாச்சாரியார். அப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்களான பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார். நாவலர். ந.மு. வேங்கடசாமி நாட்டார், தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர் சச்சிதானந்தம்பிள்ளை, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறை விரிவுரையாளர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, கரந்தை இராவ் சாகிப் ஐ. குமாரசாமிப் பிள்ளை ஆகியோர் செந்தமிழ்ப் புரவலர். உமாமகேசுவரனார் அவர்களின் தமிழ்த் தொண்டு பற்றிப் பாராட்டி வழிமொழிந்து பேசினர். தமிழ்ப் பேரவையினர் அனைவரும் தங்களின் மனமொருமித்த கருத்தினைக் காட்டும் வகையில் அவையே நடுங்குமாறு கையொலி எழுப்பிப் பேரின்பத்தில் திளைத்தனர்.

இவையனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று, தவத்திரு ஞானியார் சுவாமிகள் தம் தலைமையுரையில் உமாமகேசு வரனார் அவர்களின் தனித்தொண்டு, தன்னலமற்ற சேவை, தர்மான வாழ்வு, ஆழ்ந்த தமிழ்ப்புலமை, அயலாரையும் மதிக்கும் அறவுணர்வு ஆகியவைபற்றி விளக்கமாகக் கூறியபின், *"தமிழவேள்"* என்றப் பட்டப்பெயரின் சொற் பொருளை இனிதே விளக்கி, இந்தப் பட்டத்தைப் பெறுவதற்குச் செந்தமிழ்ப் புரவலர் அவர்கள் எத்துணைப் பொருத்தம் உடையவர் என்பதனையும் உணர்வு வெளிப்படுமாறு எடுத்துரைத்தார். மேலும் தமிழவேள் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "தாம் நாளும் முருகவேளை வழிபட்டபின் நம்நாட்டு நல்லோர் பலரைத் தம் நெஞ்சத்தே உள்ளுவது வழக்கமென்றும், அப்பலருள் முதல்வராக உள்ளப் பெறும் சிறப்புடையவர் சங்கத்தைலைவர் உமாமகேசுவரனாரே" என்று கூறி வாழ்த்தித் தமிழவேள் பட்டத்தின் பொற்பூவைத் தம் திருக்கரங்களால் சூட்டினார். அவையோர் தமிழவேள் வாழ்க! தமிழவேள் வாழ்க! தமிழவேள் வாழ்க! என்று பேரார் வத்துடனும், பெருமகிழ்வுடனும் முழக்க மிட்டனர். அடுத்து

அவையோர் அனைவர் நெஞ்சங் களையும் நெகிழச் செய்யும் வகையில், உமாமகேசுவரனார் அவர்கள் அப்பேரவைப் பெரு மன்றத்திலேயே அடிகளாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் திருநீறு பெற்று தம் உள்ளங்குளிர்ந்தார். மூவாசையையும் துறந்த முழுதுணர் ஞானியாம் அடிகளார் முத்தமிழின் மீதும், முத்தமிழ் போற்றி முனைந்து நின்ற தமிழவேள் மீதும் வைத்திருந்த பற்றினைக் கண்டு வியப்பதா? மனை, மனைவி, மக்கள் என்னும் முப்பற்றுக்களோடு மகிழ்வுடன் வாழவேண்டிய தமிழவேள் அவர்கள் இந்த மூவாசைகளையும் துறந்து முத்தமிழ் வளர்த்த முழுதுணர் துறவு நிலையை வியப்பதா?

வடபுலச் செலவும் - வற்றாத் துயரும்

உண்ணும் சோறும் பருகும் நீரும் தமிழே என்று வாழ்ந்து வந்த உமாமகேசுவரனார் அவர்கள் வடநாட்டிற்குச் சென்று ஆங்குப்புகழுடன் இயங்கி வருகின்ற பல்கலைக் கழகங்களுக்குச் செல்ல வேண்டும், ஆங்கெல்லாம் நாட்டு மொழிகள் எவ்வாறு போற்றப் பெறுகின்றன, அம்மொழிகளைப் போற்றுதற்கு எவ்வெவ்வழிமுறைகள் கையாளப் பெறுகின்றன என்பனவற்றையெல்லாம் நேரிற் கண்டுணரவேண்டும், அவற்றுள் நல்லனவாகிய-நமக்குத் தேவையான-நடை முறைகளைப் பயன்படுத்தி நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தையும் உயர்த்த வேண்டும் என்று விரும்பினார். அத்துடன் அங்குள்ள மக்களின் முன்னேற்றம், தாய்மொழி வளர்ச்சிக்காக அவர்கள் அமைத்துள்ள மன்றங்கள், மேற்கொண்டுவரும் செயல் திட்டங்கள் ஆகியவற்றையும் பார்த்து வரவேண்டும் என்றும் நினைத்தார். இஃது இவர் மேற்கொண்ட இரண்டாம் வட்புலச் செலவு என்பது குறிப்பிடத்தக்கது. எச்செயலையும் திட்டமிட்டுச் செய்கின்ற இயல்பு படைத்த நம் தமிழவேள் அவர்கள் எல்லா வகையான முன்னேற்பாடுகளையும் செய்து கொண்டு புறப்பட்டார்.

அவ்வாறு புறப்படுதற்குமுன், சங்கத்தில் சால்பு நிகழ்ந்த திருநாவுக்கரசர் திருநாள் விழாவிற்கு வருகை தந்தார். அறிஞர் பெருமக்கள் பலர் ஆளுடைய பெருமானைப் பற்றி ஆற்றிய அருளுரைகளை ஆர்வத்துடன் செவிமடுத்தார். பின்னர் அன்பர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார். இறுதியில் நெற்றி நிறைய நீற்றினைப் பூசியவராய் நிறைந்த நெஞ்சினராய்த் தன் இனிய நண்பர் கணபதிப் பிள்ளையவர்களை யுடனழைத்துக் கொண்டு, அனைவரிடமும் பிரியாவிடை பெற்று வடபுலச் செலவை மேற்கொண்டார்.

தவஞானச் செல்வராம் ஆளுடைய அரசரின் திருநாளில் புறப்பட்ட நம் தமிழ்ஞான அரசராம் தமிழவேள் அவர்களும் புறப்பட்ட காரணத்தால் அப்பர் பெருமான் மேற்கொண்ட ஒப்பிலா வழியிலேயே இருவரும் சென்றனர். வழியில் சென்னையம்பதியில் தங்கினார். ஆங்கிருந்த உயர்கல்வி அலுவலர்களைச் சந்தித்து, கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியின் நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் தகுந்த உதவிகளைச் செய்யவேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கொண்டார். பின்னர் கல்கத்தா சென்றடைந்தார். ஆங்கிருந்த தமிழன்பர்கள் பலருடன் உரையாடி மகிழந்தார்; அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப அவர்கள் நடத்திவந்த தமிழ்ச்சார்புச் சங்கங்களில் அரிய விரிவுரைகளை நிகழ்த்தினார். பின்னர் ஆசுதோசு முகர்சி போன்ற கல்வித்துறை வல்லுநர்கள் கல்வித்துறை வளர்ச்சிக்காக அந்நகரில் செய்துள்ள செயல்களையும் கண்ணாரக் கண்டறிந்ததுடன், ஆங்குப் பணியாற்றும் விற்பன்னர்களிடம் அவர்களின் திட்டங்கள் பற்றியும் அவற்றை அவர்கள் செயல்படுத்திய முறைகள் பற்றியும் விளக்கமாகக் கேட்டறிந்தார். அத்தகைய திட்டங்களைத் தஞ்சைத் தமிழ்க் கல்லூரியிலும் செயல்படுத்த வேண்டுமென்றும் கருதினார்.

அதன்பின்னர், கவியரசர் இரவீந்திரநாத தாகூர் அவர்களால் உருவாக்கப்பட்டதும் உலகமெல்லாம் புகழும் வகையில் உயர்ந்து நிற்பதுமாகிய சாந்திநிகேதனத்தைக் கண்டுவியந்தார். போற்றினார். தம்முடைய சங்கத்தையும் தமிழகச் சாந்திநிகேதனமாக வளர்க்க வேண்டும் என்று உறுதிகொண்டார். அங்கிருந்து *"கயா"* சென்று அங்குள்ள இன்றியமையா இடங்களைக் கண்டபிறகு காசிக்குச் சென்றார். கங்கையில் நீராடியபிறகு, காசி விசுவநாதரையும், காசி விசாலாட்சியையும் கைம்மலரால் மணமலர் தூவி மனமலரால் வழிபட்டார். கடவுளர் உறையும் கோயில்களைவிட கலைமகள் உறையும் கோயில்களையே கருதிப் போற்றுபவரான நம் தமிழவேள் காசிநகரில் காசினியே புகழத்திகழும் கல்வி நிலையங்களைக் காண விரும்பிச் சென்றார். காசி இந்துப் பல்கலைக் கழகத்தைக்கண்டு அங்குப் பணியாற்றும் பன்மொழிப் புலவர்களுடன் உரையாடி மகிழ்ந்தார். அப்பன்மொழிவாணர்களும் நம்முடைய நன்மொழிச் சான்றோரின் நாவன்மையையும், ஆங்கில மொழியறிவையும் அழகு தமிழ்ப் புலமையையும் கண்டு இவரைப் போற்றினர். அவ்வறிஞர் பெருமக்களிடம் பிரியா விடைபெற்றுச் சாரநாத் சென்று ஆண்டிருந்த புத்தர்பெருமானின் போதத் திருவுவைக் கண்டு வணங்கினார். பின்னர் பிரயாகையில் நீராடி மகிழ்ந்தார். அங்கிருந்து "அரித்துவாரம்" செல்லவேண்டுமென்று விரும்பினார். இந்நிலையில் அவருக்குச் சிறிதே காய்ச்சல் கண்டது. இதனைக் கண்டு துடித்துப் போனார் தமிழவேள் அவர்களின் உயிர் நண்பரும், உடன் வந்திருந்தவருமாகிய கணபதிப்பிள்ளை கண்ணீர்விட்டுக் கசிந்துருகினார். இதைக் கண்ட நம் பிள்ளையவர்கள் எனக்கு ஒன்றும் நேராது அஞ்ச வேண்டாம் என்று கணபதிப் பிள்ளையைத் தேற்றினார். பின்னர் இருவரும் அயோத்தியின் அருகிலமைந்த பைசாபாத் புகைவண்டி நிலையத்தில் இறங்கினர்.

தமிழவேள் அவர்கள் எத்துணையோ தடுத்துக்கூறியும் மனநிறைவடையாத கணபதிப் பிள்ளை, உடனடியாக தமிழவேள் அவர்களைக் "குறைஷி" என்னும் மருத்துவமனையிற் கொண்டுபோய் சேர்த்து அருகிலேயே இருந்து தேவைப்பட்ட உதவிகளையெல்லாம் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்.

உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்ற குறட்பாவை உணர்ந்தவரல்லவா அவர்.

காலனுக்கும் அஞ்சாத கவின்தமிழ்க் காவலர்

1941 ஆம் ஆண்டு மேத் திங்கள் ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை காலை வரை கணபதிப்பிள்ளையவர்களுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்த தமிழவேள் அவர்கள் தமக்கிருக்கும் காய்ச்சல் இன்னும் ஒரே நாளில் நீங்கிவிடும் என்றும் சாதாரணக் காய்ச்சலுக்கெல்லாம் கலங்கலாமா என்றும் கூறி அவரைத் தேற்றிக் கொண்டும் இருந்ததுடன் தாங்கள் மேற்கொண்டு பயணம் மேற்கொள்ளவிருந்த ஊர்கள் எவையெவை என்பது பற்றியும் அவற்றிற்குரிய வழிகள் இன்னின்னவை என்பது பற்றியும் தெளிவாகவும் திட்பமாகவும் பேசிக்கொண்டிருந்தார். மருந்தும் பாலும் மட்டுமே அருந்தி வந்தார். அதேநாள் மாலை 3.50 மணியிருக்கும். தெளிவாகவும் கணீரென்றும் பேசிய பேச்சு ஒடுங்கிக் கொண்டே வந்தது. இறுதியில் மூச்சும் ஒடுங்கியது. தமிழ்வாழ - தமிழர்வாழ - தளர்ந்த சிறார் வாழ - இத்தமிழகம் முழுவதும் அரியேற்றின் முழுக்கம்போல ஆர்ப்பரித்த பேச்சு அவையோரை அச்சடித்த பதுமைகளாய் ஆடாமல் - அசையாமல் அவரவர் இருந்த இடங்களிலேயே அழுத்தமாய்ப் பதிந்துவிடுகின்ற பேச்சு

விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினும்
வைக்கும் தன்நாளை எடுத்து.

என்ற குறட்பாவிற்கேற்ப இத்தமிழைப்பற்றிப் பேசாத பேச்சு பேச்சல்ல தமிழ்ப் பற்றிப் பேசாத நாட்களை என் வாழ்நாளின் பயனற்ற நாட்கள் என்று கருதுவேன் என்று அலைகடல் போல ஆற்றல்பால் பேச்சு அடங்கிவிட்டது. தமிழையே சுவாசமாகக் கொண்டிருந்த அவருடைய மூச்சு - நெருங்கிவிட்டது.

இறுதிபயப்பினும் எஞ்சாது இறைவர்க்கு
உறுதி பயப்பதாம் தூது

என்ற குறட்பாவிற்கேற்பத் தன் உடல் தளரினும் உயிர் நீங்கும் நிலையிலும் தமிழ்த்தாயின் வளர்ச்சியையே எண்ணி உழைத்து வந்த உடல் ஓய்ந்து விட்டது.

வடபுலச் செலவு என்றாலே அது வாழ்வின் இறுதிப் பயணத்தைத்தான் குறிக்கும் என்பர் பெரியோர். அதனால்தான் சுடுகாடு இடுகாடு - கொண்டுசெல்லவிருக்கும் உடல்களை வடக்கே முகம்பார்க்குமாறு வைப்பர் போலும். ஊர்களுக்கு வடக்குப்புறத்திலேயே பெரும்பாலும் அத்தகைய மயானங்கள் அமைந்திருக்கும் நிலையையும் இணையற்ற ஆற்றலையும் எண்ணிலா வரங்களையும் பெற்று இதய மகிழ்ச்சியில் திளைத்து மங்கல வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த இராவணனுடைய செவிகளில் அவனுடைய தங்கை சூர்ப்பநகையின் அழுகுரல் என்னும் அமங்கல ஒலியானது இலங்கையின் வடதிசை யிலிருந்துதான் எழுந்தது. அது அவனுடைய முடிவுக்கே வழிவகுத்தது என்று தமிழர்கள் குறிப்பிடுவார்கள்.

ஆன்மீகப் பணியையும் ஆன்ற தமிழ்ப் பணியையும் அமைந்த விருகண்களாகக் கருதி என் கடன் பணிசெய்து கிடப்பதே என்று அயராதுழைத்துவந்த அண்ணலாம் நாவுக் கரசர் பெருமான் 'வடநாடு நோக்கிப் பயணம் செய்தார். கயிலைநாதனின் கரையிலாக் கருணையால் யாதும் சுவடு படாமல் ஐயாறடைந்தார். அவரைப்போலவே அன்னைத் தமிழுக்குப் பணியும், அனாதையர்க்குப் பணியும் எந்நாளும்

மேற்கொண்டு "என்கடன் தமிழ் என்றும் வளர்ப்பதே" என்ற கொள்கையோடு ஏற்றமிகு பணி செய்து வந்த நம் தமிழவேள் அவர்களை வெள்ளிப் பனி மலையில் வீற்றிருக்கும் வித்தகனாம் வெற்றி முதற்சங்கத்தில் வீற்ற முதற்பாவலன் நாவுக்கரசரைத் தமிழகம் அனுப்பி விட்டதைப்போல இத்தமிழ் பாவிற் கரசரையும் அனுப்பிவிடக் கூடாது. எனக்கும் உயர் தொண்டன் இன் தமிழன் வேண்டும் என்று எண்ணியதைப்போல தமிழரின் உள்ளங்களெல்லாம் உருகிக்கலங்குமாறு நம்தமிழவேள் அவர்களைத் தன்னிடத்திற்கே அழைத்துக் கொண்டானோ.

மாம்பழத்தைத் தோல்சீவி துண்டுசெய்து
மலைத்தேனில் ஊறவைத்துத் தருவதேபோல்
தேம்படுத்த தென்றமிழ்ச் சொற் பெருக்குதன்னை
திசையெல்லாம் தமிழ்நாட்டில் பொழிந்தபோதும்
தாம்பறுத்த விலங்குகளாய்த் தமிழ்மக்கள்
தடுமாறி நிற்கின்ற நிலைமை கண்டு
வீம்புடைய இவர்களையே திருத்துதற்கு
விருப்புடனே வடக்கிருத்தல் மேற்கொண்டாரோ

என்ற பாடலுக்கேற்ப "தமிழர்களுக்கு விழிப்புணர்வும். மொழியுணர்வும் தன்மானவுணர்வும் உண்டாகவில்லையே என்ற வாடாத வருத்தத்தால். வடக்கிருந்தாரோ" என்று எண்ணுகின்ற வகையில் நம் தமிழவேள் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய இயலாது இழப்பு. தமிழர்களின் இழப்பு-தமிழ்நாட்டின் இழப்பு-தவிக்கின்ற ஆதரவற்ற இளைஞர்களின் இழப்பு-என் தமிழ் அன்னைக்கே இழப்பு என்று கூறும் வகையில் அனைவரையும் அளவற்ற துன்பத்தில் ஆழ்த்திவிட்டது. அதனால்

ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புன்ற புள்ளழுத

என்று கம்பநாட்டாழ்வார் கசிந்து உருகுவதைப்போல நம் தமிழவேள் அவர்களின் மறைவு குறித்து கற்றவர்கள். கல்லாதவர்கள். உற்றார்கள். உறவினர்கள். அற்றார். அலந்தார்.

கரந்தை நகரார், காசியினில் வாழும் கனித்தமிழ்ப் பற்றினர் போன்ற அனைவரும் வருந்தினர்.

இவ்வாறு வழக்கறிஞர்களில், இராவ் சாகிப், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் என்னும் பட்டங்களுக்குப் பெருமை தரும் வகையில்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்று வள்ளுவன் கூறியாங்கு இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த நம் தமிழவேள் அவர்கள், தாம் அன்றாடம் வணங்கிவரும் சிவநேயச் செல்வருமாகிய உமாமகேசுவரரின் திருவடிகளில் இணைந்து சாயுச் சியப்பதவி அடையச் சென்றுவிட்டார்கள். மண்ணுலகத்தில் தாம் கண்ட தமிழ்ச்சங்கம் போல விண்ணுலகத்திலும் ஒரு தமிழ்ச்சங்கம் அமைக்கச் சென்றுள்ளார் என்று நாம் அனைவரும் அமைதி கொள்வோம். அவருடைய ஆன்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டிக்கொள்வோம்.

இறுதியாக, ஒரு கருத்தை நாம் அனைவரும் சிந்தையில் சேர்க்க வேண்டியிருக்கிறது.

பண்ணன் என்ற ஒரு வள்ளல் வாழ்ந்தான். அவன் ஏழை எளியோர்களுக்குப் பசியாற உண்டிக் கொடுத்து வந்தான். தன்னுடைய உழைப்பால் வரும் செல்வம் அனைத்தையுமே இதற்காக ஒதுக்கி வைத்தான், ஏழை மக்கள் இவனது கொடையால் பசி நீங்கி வாழ்ந்தனர். இதனால் இவனைப் *"பசிப்பிணி மருத்துவன்"* என்றே அழைத்தனர். பண்ணன் என்ற பெயர் மறைந்து பசிப்பிணி மருத்துவன் என்ற பெயரே நிறைந்தது. இதனை அறிந்தான் அந்த நாட்டை ஆண்டுவந்த முடியுடை வேந்தனான சோழமன்னன். தன்னுடைய குடிமகன் ஒருவன் தன்னைவிட புகழ்படைத்து விளங்குகிறானே என்று

அழுக்காறு கொள்ளவில்லையவன். என்னே! பண்ணனின் வள்ளன்மை. பேரரசனான என்னால்கூடச் செய்யவியலாத அருட்செயலை வேறுஒருவன் செய்கிறானே என்று மகிழ்ந்தான். அவனைப் பாராட்ட நினைத்தான்; தன்னை ஓர் இரவலனைப் போல எண்ணிக் கொண்டான்; பசிப்பிணி மருத்துவன் இல்லம்

"அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"

என்று உணவு இரந்து கேட்பவனைபோல வந்து ஊர்மக்களிடம் கேட்டான். அத்துடனமையாது "என்னுடைய வாழ்நாளையும் பெற்று அந்தப் பண்ணன் வாழ்வானாக" என்று வாழ்த்தினான். அதேபோல செட்டிநாட்டு வள்ளல் பெருந்தகை பெத்தாச்சிச் செட்டியார் போன்ற பெரும்பெரும் செல்வந்தர்கள் எல்லாம் நம்முடைய தமிழவேள் அவர்களைப் பற்றி பேசும்பொழுது எங்களைப் போன்றவர்களால் செய்யமுடியாத இத்தகைய அரும்பெரும் தொண்டுகளை உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் செய்துள்ளார்கள். இத்தகைய செயற்கரிய செயல் களுக்குத் தேவைப்படுவது அளவற்ற பணம் மட்டுமல்ல- அகன்ற மனம் வேண்டும்

உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப வள்ளற் பெருந் தகையாம் தமிழவேள் அவர்கள் தமிழர்களின் நெஞ்சங்களி லெல்லாம் நிறைந்து நிலைத்து விளங்குகிறார்கள் என்று எண்ணி தமிழவேள் அவர்கள் ஏற்றிவைத்த விளக்கு மேலும் மேலும் ஒளிவீசித் திகழுதற்கு அவற்பாற் பற்றும் பாசமும் வைத்துள்ள அனைவரும் பாடுபடவேண்டும். அதுதான் அந்த நல்லவருக்குச் செய்யும் வழிபாடு என்று எண்ணிச் செயல்படுவோமாக.

வாழ்க தமிழவேள் புகழ்
வளர்க அவர் தொண்டு

வாழ்த்துப் பாக்கள்

தமிழ்க் கல்வியளித்த

உயர்திரு. பண்டிதமணியவர்கட்கு

வெள்ளியளித்த விழாநாளில்,

தலைமை தாங்கிய தஞ்சைத் தமிழவேள்,

உயர்திரு. த.வே. உமாமகேசுவரம்பிள்ளை

அவர்கட்குத் தில்லைத் தமிழ்க் கழகத்தார் படித்தளித்த

வாழ்த்துப்பா

சொற்கொண்ட செருத்துணையார் சோர்வில்லாச்
சிறுத்தொண்டர்
மற்கொண்ட இயற்பகையார் மயிலியலி புனிதவதி
செப்பரிய அதிபத்தர், சேணோங்கும் அமர்நீதி
தப்பறியாக் குங்குலியர் தாவில்சீர்க் கணம்புல்லர்
இப்பெரியார் அவதரித்த எழிலிடங்கொள் தஞ்சையினில்
நல்வேம்பின் தவப்பயனாய் நானிலத்திற் றமிழ்வேளாய்ச்
செந்தமிழின் புரவலனாய்ச் சேவுகைத்தார்க் கன்பனுமாய்
வந்துதித்த பெரியோயே வருக *வுமா மகேசரனே!*
முன்னொருநாள் செருத்துணையோர் மூக்கரிந்தா
ரென்பவே
கன்னர்தமிழ் பழிப்பார்பன் னாவரியுஞ் செருத்துணைநீ,
அன்றொருநாள் சிறுத்தொண்டர் வாய்காத்தா ரென்பவே
இன்றுபல வாய்காக்கும் இன்றமிழ்க்குத் தொண்டனீ,
இல்லினையுந் துறந்திட்டா ரியற்பகையா ரென்பவே
இல்லிழந்தும் மனைகொள்ளா இயலுறுதி யுடையோய்நீ;
தன்னலத்தைப் புனிதவதி தகைந்திட்டா ரென்பவே
உன்னலமும் உன்னாதே உயர்தமிழிற் குழைப்பைநீ,

அனைய நிலையின் அறவோய் நின்னை
இனையை யென்றல் எமக்கரி தரிது.

ஆங்கிலந் தமிழ்நிறை யருங்கடல் நீ.
ஓங்கு மொழுக்கத் துயர்குன்றுந் நீ.
பேசும் பண்பாற் பேரியாறுந் நீ.
வீசும் மன்பால் விண்முகி லுந்நீ.
ஆங்க.

கரந்தைச் சங்கக் காவல வருக!
அரந்தை யகற்று மார்வல வருக!
தமிழ்க்கே யுழைக்குஞ் சான்றோய் வருக!
தமிழர்க் குழைக்குந் தலைவா வருக!
சிலவாண் டாகவித் தில்லைப் பதியுட்
சிலப்பதி காரம் செவ்விதி னளித்த
பண்டித மணிக்குச் செய்யுமித்
தொண்டினிற் றலைமைத் தோன்ற லாகவே.

சிதம்பரம், *இங்ஙனம்,*
03.04.1939. *தில்லைத் தமிழ்க் கழகத்தார்.*

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர், உயர் திருவாளர்,

செந்தமிழ்ப்புரவலர், இராவ்சாகிப்,

த.வே. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L.,

அவர்கட்கு

திருவையாறு அரசர்கல்லூரி மாணவர்கள் அளித்த

வாழ்த்துப்பா

நேரிசை ஆசிரியப்பா.

வடவயின் வேங்கடம் ஒழிதிசைப் பெருங்கடல்
எல்லை கொண்டுலவு மினித்திடு செந்தமிழ்
தன்னொப் பிலாத தகவுடைத்தாக
மன்னவர் மூவரும் மன்னுபல் புலவரும்
கண்ணென வளர்த்த கனிந்திடு தீந்தமிழ்
மக்கள தியல்பம் மக்கள் மொழியினும்
தக்கிடு மென்பதன் சான்றென இயல், இசை,
கூத்தென முக்குணம் கொண்டிடுமின்தமிழ்
அரியணைப் பொலிந்த அழகுறு வண்டமிழ், முன்னர்
நம்தமிழ் நாட்டில் சிலர்புகுந் தமையால்
பொன்னுளம் சுருங்கி புழுக்குற் றழுங்கி
வெய்துயிர்த் தழுது வெங்கணீர் சிந்தி
வடிவுகுலைந் துலறிய வாடிய நிலையில், பின்னர்
ஆங்கில ஆட்சியில் அரும்பதம் பெறுவான்
தீங்கிலவ் வசன்மொழி தேர்ந்தனர் ஒழிந்தார்
இத்தகைத் தமிழர்; என்னென இசைப்பேம்
அத்தகை ஆங்கில மறிபல அறிஞரும்
தாய்மொழிக் குழைத்திடின் தகவுறும் நம்மொழி

இந்நிலை இன்றால் இழிந்தனள் யாயும்
அந்நிலை அவநிலை அழிநிலை கண்டே
நீதோன் றினையே நெடுந்தகை அண்ணல்!
உமாமகேசுரப்பேர் ஒன்றிடு மிக்கோய்!
எத்துணை இடுக்கணும் யாய்க்குறல் பொறேனென்று
மடிதற் றெழுந்தனை மாண்புடைப் பெரும! நீ
அனைமொழிக் காற்றிய அரும்பணி எத்துணை!
ஒருவர்க் கொருமொழிக் காயிற் றொழிந்த
அருமைசே *ரையாற் றரசர் கல்லூரியில்*
தமிழர்க்கும் தமிழ்க்கு மிடங்காண் தகைமையும்,
தமிழ் மொழி பேணிய தகையுறு சோழர்
அமர்வுறு தஞ்சையை அடுத்திடு புகழார்
வாடாக் கரந்தை குவியாச் சங்கமொன்
றார்வமொடு நிறீஇ அரும்பெரும் நூல்களும்
திங்கள் இதழும் திறம்படி வெளியிட்டும்
பேரா சிரியர் பலர்தமைப் பேணி
மாணவர்க் கனைமொழி ஆங்கிலம் பயிற்றியும்,
ஆண்டுகள்
நூறு கால்கொள நடத்திடு நோன்மையும்,
வெள்ளியில் தொடங்கும் வெள்ளி விழாவில், இளைஞரை
வெள்ளி அனையார் ஆக்குதற் கருந்தமிழ்க்
கல்லூரி ஒன்றும் காணும்ஓர் தனிக்கலை
குற்ற முடைத்தெனும் கொள்கையின் மருத்துவம்,
கைத்தொழில், இன்னிசை, ஏனைய பிறவும்
பயின்றிட நெறியும் படைத்திடு பண்பும்,
நொந்தனள் வாழும் நந்தமி ழாட்டியை
இந்தி என்னும் செந்திரு வாட்டி
தகைத்திடா வண்ணம் தகைத்திடு செருக்கும்.

தமிழ்க்கண் நீகொளும் சான்ற மெய்ப்பற்றினைக்
கண்டிடறக்கமைந்த கட்டளை அலவோ?
நாவா யிரமிலேம் கூறுவ தெவன் கொல்?
புறமொழி பேசுவார் பேசுக நீநின்
தனிமொழி ஓம்புதல் தவிர்ந்திலை அறிவேம், தமிழே!
எந்தமக் கன்னை நின்றனக்கு மகளே, நீயவள்
தோற்றிவளர்த்தலின்; நின்மகள்யாண்டும்
இளமையள் ஆதலின் நீயுமிளமையை
தோன்றிய பொருட்குணம் தோற்றிய பொருளிடை
இல்லையாதல் யாங்ஙனம்? பெரியோய்!
பலப்பல ஊழி வாழியர்
நலப்பல தொண்டு ன்மகட் புரிந்தே.

சங்கத்தலைவர், செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப்,

திரு. த.வே. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L.

அவர்களுக்கு,

சங்கக் கல்லூரி ஆசிரியர்கள் கூறிய

வாழ்த்துப்பா.

உயர்தனிச் செல்வ! உயர்தனிச்செல்வ!
செயிர்தீர் நந்மிழ்த் திருநாட்டகத்துத்
தஞ்சைப் பதிபுகழ் விஞ்சுற் றொளிர
நயமலி வேம்பன் நன்மக வாகி
அயரா நெஞ்சத் தாண்மைபெற் றோங்கித்
தாய்மொழிப் புலமையும் தகைமிகு மாங்கிலத்
துறைபயில் தெளிவும் தொல்லோர் நெறியின
வாய்மையிற் றிறம்பா வகைவழக் குணருந்
தூய்மையுங் கொண்டு சுவைமிகு செந்தமிழ்த்
தாய்மொழிக் குழைக்குந் தகைசா லுரனும்
தீயன கருதாச் சிந்தையும் பெற்றே
உமையொரு பாகத் தொருவனைப் போற்றும்
உமாமகே சுரனாம் உயர்தனிச் செல்வ!
அறங் கூறவையத் தாட்சியை நிறுவிய
திறன்மிகு சோழர்தம் சீர்த்தியை நாட்டித்
திருமுறை கண்ட பெரும்பெயர் வளவன்
இராச ராசன் ஈசற் கமைத்த
பெருவுடையார்தளி பிறங்கும் தஞ்சைத்
திருவளர்ந் தொளிர்கருந் திட்டைக்குடியில்
இராதா கிருட்டின னெனுநின் னிளவல்
விராவுமெய் யன்பின் மேதக நிறீஇய

தாவில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்
தலைவனா யமர்ந்து கலைநலம் புதுக்கிப்
புலவர்ப் போற்றிப் *பூம்பொழில்* வளர்த்து
நிலவுநங் கரந்தைக் கல்லூரி நிறுவி
உலகினிற் சுற்றமற் றுறுதுணை பெறாஅ
துலைவுறு மாணவர் குழுவொன் றமைத்தே
அன்னவர் தமக்கிங் கருங்கலை வளத்தோ
டுண்டி, யுறையுள், உய்திதந் தருந்தமிழ்த்
தொண்டு முதலாந் தொழில்பல காட்டி
ஆரா அன்பி னாங்கவர் தமக்குப்
பேரா தரவாம் பெரும் புகழ்ப் பெரும!
சொற்றமிழ்ப் புலவர் சோர்விலா மாணவர்
சுற்றமென் றுவக்கும் நற்றமிழ்த் தோன்றால்!
தஞ்சை நாட்டாண்மைத் தலைமையேற் றருளி
நாட்டின் மக்கள் நனிமிகு செல்வர்
மாட்சிமிக் குயர்ந்தோர் மன்னவையாளர்
யாவரும் போற்ற இயற்றுதற் கரிதாம்
பல்லறம் புரியும் பண்புடையாள!
அரசியன் மேலவர் ஆர்வமோ டளித்த
உரைசெயுஞ்சீர்த்தி யுயர்பேராள
ஆல நீழ லடிகளைப் போற்றுஞ்
சீலமார் சைவத் திருத்தொண் டாற்றித்
தென்னாட் டவர்தம் சீர்பெற வுழைக்கும்
தன்னல மற்ற நன்னயப் பெரியோய்!
எம்போல் வார்பலர்க் கிருப்பிடந் தந்து
கல்வி புகட்டிப் பல்பொரு ளளித்து
நல்லா சிரியராய் நாட்டிய செல்வ!
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்

வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கைத்
திருமிகப் பெற்ற *செந்தமிழ்ப்புரவல!*
தெள்ளு பேரறிஞர் சேர்தமிழ்ச் சங்க
வெள்ளி விழாவினை விருப்புடன் ஆற்றும்
வள்ளியோய்! தமிழர்க் கெய்ப்பிடை வைப்பே!
உலக மீக்கூறு முயர்குடித் தோன்றி
நல்லிசை நாட்டும் பல்லோருள்ளும்
புலவர்ப் போற்றும் புரவலர் தாமே
நிலமிசை யென்றும் நிலவுவரென்ப
நீயே.
புலவர்ப் போற்றும் புரவல னன்றியும்
மாணவர்ப் புரந்து மாண்புறு கல்வி
மருந்து முதலா வளித்துத் திருந்திய
புலவராக்கும் புகழினை யாகலின்
உலகெலாம் புரக்கும் ஒருவன தருளால்
நிலமிசை யென்றும் நீடுவாழியரோ.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில்

சங்கத்தலைவர், செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப்,

திரு. த.வே. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L.,

அவர்களுக்குச்

சங்கக்கல்லூரி மாணவர்கள் கூறிய வாழ்த்து

1. சீர்வள ருந்தமி ழெங்கு முழங்கச்
செந்தமி ழன்னை திருவடிக் கன்பீன்
ஆர்வமு மெங்க ளகத்திற் புகுத
ஆன்றவர் சொற்பொழி வாற்றுதல் மேய
கார்வள ருங்கரந் தைப்பொழிற் கண்ணே
கல்லூரி நாட்டிநின் கண்ணினிற் காப்போய்
பேரருண் ஞானியா ரடிகளளித்த
பெற்றிகொள் செந்தமிழ்ப் புரவல ரேறே!

2. பெற்றவ ரற்றொரு சுற்றத்தா ரிலராப்
பேதுறு மாணவர்ப் பேணி வளர்த்தே
சுற்றிய சுற்றமுந் துணையுமாய் நின்று
சோறளித் தெம்முயிர் வீறுகல்வி
நற்றிற நூல்கள் படிப்பிடம் வாழ்க்கை
நாடு மருந்தெந்த நாளு மளித்துக்
கற்றவ ராக்கியெங் கண்கள் திறக்குங்
கதிரவ யாஞ்செயுங் கைமா றறியேம்.

3. சங்க நிறுவுதொல் பாண்டிய ரொப்பத்
தஞ்சைக் கரந்தைநற் சங்கமமைத்தோன்
துங்க னிராதா கிருட்டினப் பேர்கொள்
தோன்றல் தமிழ்மகன் தூயநின் தம்பி
எங்க ளுமாமகே சுரனெனும் பெரியோய்!
இன்றமிழ்ச் சங்கத் திறையவ னென்ன
அங்கவ னாக்கிய சங்கத் தலைமை
அமர்ந்தனை வாழிபல் லாயிரம் யாண்டே.

செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப், தமிழவேள்,

திரு. த.வே. உமாமகேசுவரம்பிள்ளை B.A., B.L.,

அவர்கட்கு

சங்கத்து வெள்ளிவிழாவைக் கருதி

திரு. சு.ப.வெ. கலியாணசுந்தரனார் அளித்த

வாழ்த்துப்பா.

ஆசிரியம்

பூமேவு செங்கமல மென்முக மலர்ந்தழகு
புனைகுவளை விழிவிழித்துப்
புதுநறா வெயர்வது பொருந்திவள் ளைச்செழும்
புனிதவொண் செவிகுலுக்கிப்
பொற்புமிகு மிதழுமமு தப்பெருக் கமுமுள்ள
பூங்குமுத வாய்பொருந்திப்
பொங்குவெண்ணித்திலப் புன்னகை திருந்திவண்
புற்புதத் தனமதுற்றுப்
பொன்றாத சைவலக் குழல்புரள நந்தெனும்
புகரில்கந் தரமொலிப்பப்
பூங்கொடிச் சிற்றிடை துவண்டசைய வெழிலுறும்
பொற்சிறை யனத்தினொலிநூ
புரமென விளங்கநலம் விரவுதங் கணவரின்
புயபூ தரத்தைமருவும்
பூவையர் நிகர்க்குமலர் வாவிதிகழ் தஞ்சையம்
புரியிலுயர் புண்யசீலன்

காமேவு கரகமல னருள்பெருகு மிருவிழிகொள்
கலைமதியை யனையவதனன்
கற்றவ ரியற்றுபா மாலையொடு பூமாலை
கமழ்தரும் புயபூ தரன்
கருணையாற் கரியதிரு மாலினை நிகர்த்தவன்
கமலைநோக் கினிதுற்றவன்
கைதவமி லாதவுயர் சைவநலொ ழுக்கினன்
கடவுண்மெய்ப் பத்தியுடையோன்
கரந்தையிற் றிக்கற்ற மாணவர்க் குணவுடை
களித்தீந்து தன்மகவுபோற்
காத்திரட் சித்துநற் கல்வியோ தித்தேழை
கட்கெலா மிலவசத்திற்
கண்ணுறத் தகுமருத் துவசாலை யுஞ்செய்ய
கலைகணிறை நூனிலையமுங்
கடலுலகெ லாம்புக ழுறத்தகு தமிழ்ச்சங்கக்
கல்லூரி யும்நிறுவினோன்

பாமேவு புகழ்மருவு பான்மையன் வேம்பெனப்
பன்னரும் பேர்படைத்தோன்
பகருறத் தக்கநல் லகமுடைய வம்சசம்
பன்னன்முன் பரனையுன்னிப்
பண்ணிய தவத்தில்வரு புண்ணிய குமாரன்விற்
பனமுறுந் தனகுபேரன்
பல்கலைக் கழகத்தர் சொல்வழக் கறிஞராம்
பதவியும் பெற்றுயர்ந்தோன்
பழுதற்ற வரசாங்க வுத்தியோ கத்தராற்
பரவுறுமி ராவுசாகிப்

பட்டமும் ஞானியார் அடிகளால் தமிழவேள்
பட்டமும் பெற்றமகிபன்
பண்புமிகு நண்புபொறை யன்புறுந லம்புகழ்
படைத்த்வுப காரதீரன்
பங்கயச் செல்வியுறை யுங்களப மார்பனிப்
பார்புகழு மாமகேசன்

தேமேவு முயர்தெய்வத் திருவருளு நிறைவுற்ற
செல்வமும் உயர்கல்வியும்
தேசமெல் லாம்புகழு மாசிலாச் சீர்த்தியும்
செய்கா ரியப்பூர்த்தியும்
செப்புறும் ஒப்பற்ற பற்பலசி றப்புமித்
திண்புவியின் மேலுமோங்கித்
தெள்ளறிஞ ரனைவர்களும் உள்ளுவந்தேத்தச்
செழித்தினிது வாழ்கவென்று
திங்களுங் கங்கையும் பொங்குறத் தங்கிடுஞ்
செஞ்சடா டவியுற்றவன்
சீதரனும் வேதனுந் தேடியுங் காணாத
திருவடியு முடியுமுடையோன்
தேசுலவு மான்மழுச் செங்கையன் மங்கையுமை
சேர்ந்துறையும் வாமபாகன்
செய்யவடி மலர்களைத் துய்யமுடி மேற்கொண்டு
சிந்தித் திறைஞ்சுவாமே.

****

துன்பமாலை



கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தலைவர் பிரிவு

துன்பமாலை

நமது சங்கத் தலைவரும், பொழிலின் ஆசிரியருமாகிய தமிழவேள், செந்தமிழ்ப் புரவலர், இராவ் சாகிப். த.வே.உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் 9-5-41 வெள்ளிக் கிழமை இறைவன் திருவடி நீழல் அடைந்தார்கள் என்னும் துன்பச் செய்தியைத் தெரிவிக்கும் தீவினை எமக்கு இத்திங்கள் நேர்ந்துள்ளது. அந்தோ! தன்னலம் இல்லாத் தனிப்பெருந் தலைவரை இனி எந்நாட் காண்போம்? வீரம் பொருந்திய அன்புதவழும் அறிவுரைகளையும், அறவுரைகளையும், இனி எந்நாட் கேட்போம்? செந்தமிழின் தூய்மையும், வன்மையும் மிளிரும் கட்டுரைகள் இனி எந்நாள் வெளிவரும்? திருநீறு பொலிந்த திருமுகத்தையும், பரந்த வுள்ளத்தைக் காட்டுவது போன்று அகன்ற மார்பையும், ஏறு போன்ற பெருமித நடையையும், வேற்றுமை கருதாது எவரையும் கைகுவித்துப் புன்முறுவலோடு வரவேற்கும் செயலையும், உள்ளத்தேசென்று இனிக்கப்பேசும் கனிந்தசொற்களையும், இனி நாம் காணபதும் கேட்பது முளதாமோ? அந்தோ மறைந்தன. காலமென்னும் பேராற்று வெள்ளம் கவர்ந்தது; ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கதறுகின்றார். இத்துயரம் ஆற்றக்கூடியதா? மாற்றக்கூடியதா? அன்று அன்று.

நந்தலைவர் வடநாட்டிற்குச் சென்று அங்குள்ள பல்கலைக் கழகங்களையும், மக்கள் முன்னேற்றம், மொழி முன்னேற்றம் முதலியவற்றைக் கருதி உழைத்து வரும் சங்கங்களையும்

பார்த்து வர வேண்டுமென்று நெடுநாளெண்ணி யிருந்தார். வடநாட்டுக் கலைக் கழகங்களில் நாட்டு மொழிகள் போற்றப் பெற்றுவரும் வழிகளை நேரே தெரிந்து வரவேண்டுமென்பது அவர் கருத்து. அவற்றைத் தெரிவதெல்லாம் நம் சங்கவளர்ச்சிக்கே. என்னே! இறைவன் திருவருள் இருந்தவாறு.

திருநாவுக்கரசர் திருநாளன்று சங்கக் கூட்டத்திற்கு வந்திருந்து அங்கு திருநாவுக்கரசரைப் பற்றி நிகழ்ந்த விரிவுரைகளைக் கனிவுடன் கேட்டார். விரிவுரைகள் முடிந்த பின்னர் திருநாவுக்கரசரின் செயற்கருஞ் செயல்களைப் பற்றி மனமுருகி அன்பர்களுடன் பேசினார். அங்கு வழங்கிய் திருநீற்றை வாங்கிப் பூசிக்கொண்டார். அங்கிருந்தபடியே வடநாட்டின் வழியை மேற்கொண்டார். ஆளுடைய அரசு சென்றவாறே இவரும் சென்றார். அடிகள் தென்னாடுய்யத் திரும்பினார். நந் தலைவர் இறைவன் றிருவருளிற் கலந்துகொண்டார். அருட் செயல்! அருட் செயல்! வடநாட்டுச் செலவில், சென்னையில் தங்கிச் சங்கப் புலவர் கல்லூரி, தொடக்கக் கல்லூரி முதலியவற்றின் உயர்வுக்காக வேண்டிய வைகளை அங்குள்ள அதிகாரிகளிடம் கலந்து பேசினார். கல்கத்தாவில் சிலநாட் டங்கித் தமிழன்பர்களைக் கண்டளவளாவினார். அங்கு அரிய தமிழ் விரிவுரைகளை நிகழ்த்தினார். கல்கத்தாவில் ஆசுத்தோசு மூகர்சி முதலிய பெரியோர் செய்து வைத்துள்ள வேலையின் திறனை நுணுகி நுணுகி யாய்ந்தார். அத்தகைய பணிகளைச் சங்கத்தை நிலைக்களனாக வைத்துத் தான் மேற்கொள்ள வேண்டுமென்றெண்ணினார். பின்னர் உலகம் மெச்சும் சாந்தி நிகேதனத்தைக் கண்டார். கவியரசு ரவீந்திரநாத்தின் பணிகளை நேரே கண்டு தெரிந்து மகிழ்ந்தார். உடனே சங்க வளர்ச்சியைக் கருதினார். கயாவுக்குச் சென்று வணங்கிப், பின்னர்க் காசிப் பதியைக் கண்டார்; கண்டு நீராடினார். அத்தூய நீர் கொண்டு பெரிய பெருமா (விசுவநாத) னையும் திரு மஞ்சன மாட்டினார். தன்னாவி மலரை அப்பெருமான் அடிகளில் அணைவிப்பதின் முற்குறி போன்று

மலர்கொண்டு திருவடிகளை அர்ச்சித்தார். இந்து பல்கலைக் கழகத்தைக் கண்டார்; பிறகு சாரநாத்துச் சென்று புத்தப் பெருமானின் அருட் கோலத்தைக் கண்டு வணங்கினார். அதன் பின்னர் பிரயாகையில் நீராடிப் புறப்பட்டார். அங்கிருந்து அரித்துவாரம் போக வெண்ணினார். வழியில் சிறிது காய்ச்சல் கண்டவுடனே அயோத்தியி னருகிலுள்ள *'பைசாபாத்'* என்னும் புகைவண்டி நிலையத்தி லிறங்கினார். உடனிருந்து வந்த திரு.அ.கணபதிப் பிள்ளை யவர்கள் சிறிது கலங்க, ஒன்றுக்கு மஞ்சவேண்டா வென்று தேற்றினார்.

கணபதிப்பிள்ளையவர்கள், *'குறஷி'* (Qureishi) மருத்துவச்சாலையில் இவர்களைக் கொண்டுபோய்ச் சேர்த்து வேண்டிய உதவிகளைச் செய்தார். மேத் திங்கள் ஒன்பதாம் நாள் காலை வரையில் கணபதிப்பிள்ளையவர்களைத் தேற்றிக் கொண்டும், மேலே செல்ல வேண்டிய ஊர்களைப் பற்றிப் பேசிக்கொண்டுமிருந்தார். காய்ச்சல் ஒரு நாளைக்குமேல் தன்னை வாட்டாதென்றார். அதற்கு மேல் ஒன்றும் பேசினாரில்லை. ஆனால் அவ்வப்போது மருந்து, பால் முதலியவற்றை ஏற்றுவந்தார். மூன்று மணிக்குச் சிறிது மருந்தும் பாலுங் கொண்டார். ஐயகோ! மாலை 3-50மணிக்கு ஏதொரு வாதனையுமின்றித், துடுமென மூச்சொடுங்க, இறைவனிணையடி யடைந்தார். உடனிருந்த உயிர்த்துணைவர், பிள்ளையவர்களின் திருமேனியைச் *'சரயு'* நதியின் கரையில் அங்கியங்கடவுளிடை யமர்த்தினார். தயரதற்கு இறுதிக் கடனிறுத்த இடத்திலேயே நம் தலைவருக்குத் தன் கைகளால் கடனாற்றினார். 'ஊனில் ஆவியுயிர்க்கும் பொழுதெல்லாம் நான் நிலாவி யிருப்பனென் னாதனை' என்ற திருவாக்கிற்கிணங்க ஊனிலாவியுயிர்க்கும் பொழுதெலா நந்தலைவர் தமிழையும் சிவனையும் எண்ணியே வந்தார். அதற்கிணங்கவே கலைக்கழகங்களையும் திருப்பதி களையும் கண்டும், தூய நீராடியும், அன்பு மலரால் ஆண்டவனை வழிபட்டும், முடிவாகத் தன்னையே தலைவனுக்குப் பலிகொடுத்து அவன் திருவடிகளில் சேர்ந்தும்

இறுமாந்து இருக்கின்றார். அவர் தமிழையும், தமிழ்ச் சங்கத்தையும் அன்பர்களையும் என்றும் வாழ்விப்பாராக.

தன்னாடு தமிழ் நாடாகவும், தன் குடித் தமிழ்க் குடியாகவும் தோன்றிய நந்தலைவர் தஞ்சையில் ஓர் உயர்ந்த அஃகமுடைய வேளாளர் குடியில் தோன்றியவர். இவர் தந்தையார் வேம்பப் பிள்ளை யென்பவர். தஞ்சை வளநாட்டில் (சில்லாவில்) தாசில்தாராக இருந்து வந்தார். அவருடைய நெறியையும் உயர் குணங்களையும் இன்றும் பாராட்டுவார்கள். சுமார் இருபதாண்டு களுக்கு முன்பு நம் பிள்ளையவர்களின் தன்மையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபொழுது, காலஞ்சென்ற இராவ்பகதூர் திரு. சீநிவாச பிள்ளையவர்கள் 'வேம்பப்பிள்ளையினுடைய குண நலங்களையும், நீதிமுறை களையும் பலருமறிவர். ஆனால் அவருடைய அறிவின் மாட்சியையும், தெளிவையும், தத்துவக் கருத்துக்களை எவரும் அறிந்து கொள்ளக் கூடிய எளியநடையில் எழுதும் ஆற்றலையும், ஒரு சிலரே அறிவர். எங்களிளமையில் புனை பெயரால் அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பலவாம்.' என்று கூறியது எம் நினைவிற்கு இப்பொழுது வருகின்றது. மிக்க இளமையிலேயே நம் தலைவர் அவர்கள் பெற்றோரை யிழக்க நேர்ந்தது. பிள்ளை யவர்களுடைய சிறியதாயாரும், அவர்கள் கணவனார் வீ. சுப்பராயபிள்ளையவர்களும் பெற்றோரினும் மிக்க பேரன்புடன் இவரை வளர்த்து வந்தார்கள். பெற்றோரை யிழந்த கவலை பிள்ளையவர்களுக்குத் தோன்றவில்லை யென்றே கூறலாம்.

இளமையில் மிக்க ஊக்கத்துடன் கல்வி பயின்று, தஞ்சையில் அப்போதிருந்த சென் பீட்டர்ஸ் காலேஜில் படித்து பி.ஏ. பட்டம் பெற்றார். பின்னர், அவர்கள் சிலகாலம் தஞ்சைக் கலெக்டர் ஆபிசில் வேலை பார்த்து, அதையொழித்துச் சட்டக் கல்லூரியில் பயின்று, பி.எல். பட்டம் பெற்றுத், தஞ்சையில் வழக்கறிஞரா யமர்ந்தார். முப்பத்திரண்டாண்டுகட்கு மேலாகக்

கட்சிக்காரர்கள், நீதிபதிகள் பொதுமக்கள் முதலிய எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுத் திறம்பட இவ் வேலையைப் பார்த்து வந்தார். உழைப்பிலும், உண்மையைக் காணும் ஊக்கத்திலும், கண்டவுண்மையை எடுத்துரைக்கும் வன்மையிலும், வழக்கறிஞர்களுள், உயர்ந்தோர்க்குள் உயர்ந்தோராக இவரைக் கூறுவார்கள்.

இவர்களுக்குப், பொதுநலத் தொண்டிலுள்ள ஆர்வத்தையறிந்த அரசாங்கத்தார் தஞ்சை நாட்டாண்மைக் கழகத் (தாலுக்கா போர்டு) தலைவராக முதன் முதல் நியமித்தார்கள். பின்னர் இப்பதவியில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து செய்துவந்த நன்மைகள் பல. தஞ்சை வட்டத்தில் தொடக்கக் கல்வியும், தமிழ ஆர்வமும், போக்குவரவு வசதிகளும், மிகவும் பெருகின. திருவையாற்று ஏழூர்த் திருவிழா இவர்கள் காலத்து ஒரு தனிச்சிறப்பை யடைந்தது. அத் திருவிழாவிற்குச் சென்று இவர்கள் வலம் வராதது இவ்வாண்டேதான்.

தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தில் (ஜில்லாபோர்டு) பல ஆண்டுகளாக உறுப்பினராகவும், இடைநிலைத் தலைவராகவும் இருந்து இவர்கள் செய்துவந்த நன்மைகள் பல. திருவையாற்று அரசர் கல்லூரியில் தனித்தமிழ் வித்துவான் வகுப்புக்கள் அமைந்ததும், பல தமிழ் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டதும் இவர்களுடைய முயற்சியால் நிகழ்ந்தவையேயாகும். உயர்தரப் பள்ளிக் கூடங்களை மிகுதிப்படுத்தியதும், அவைகளில் தமிழ் உணர்ச்சி பெருகச் செய்ததும் இவர்கள் செயல்களே யாம்.

கூட்டுறவியக்கத்தில் சேர்ந்து பல பணிகளாற்றி வந்திருக்கின்றார்கள். *தஞ்சைத் திராவிட பாங்கு, நில அடமான பாங்கு, கூட்டுறவுப் பதிப்பகம்* முதலியன இவர்களுடைய முயற்சியாற் றோன்றியனவாகும்.

சமயப் பற்றுதலில் தலைசிறந்தவராக விளங்கினார்கள். திருக்கோவில்களைக் கண்டு வணங்க வேண்டுவதென்பதைத் தம் முதற் கடமையாகக் கொண்டிருந்தார்கள். திருப்பதிகம்பெற்ற பதிகளை முறையாகக் கண்டு வணங்கி வந்தார்கள். திருக்கோயில்களுக்குச் செல்லும் பொழுது இவர்களுடைய தூய ஆடையும், திருநீற்றுப்பொலிவும், முதிர்ந்த பத்தியும் காண்போர் மனதில்,

'தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே'

என்ற செய்யுளை நினைவுறுத்துவதாகும்.

நம் சங்கம் தோன்றிய நாளிலிருந்து முப்பதாண்டுகளாக அதன்றலைவராகவிருந்து இவர்கள் செய்த அரிய தமிழ்ப் பணிகள் தமிழுலகம் நன்கறியும். சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் மருத்துவச்சாலை, நூல்நிலையம், படிப்பிடம், திக்கற்ற மாணவ ரில்லம், கல்லூரி, முதலிய பலவும் இவர்களுடைய ஊக்கத்தாலும், உதவியாலும், தோன்றி நடைபெறுவனவேயாகும். ஒவ்வொன்றையும் தாமே நேரிற் பார்த்து வந்தார்கள். திக்கற்ற மாணவரில்லமென்றால், ஒவ்வொரு மாணவனையும், பிறப்பு, வளர்ப்பு, அறிவுநிலை, குணம் முதலிய எல்லா விபரங்களுடனும் இவர்கள் அறிவார்கள். கல்லூரியில் பயிலும் ஐந்நூற்றுவர்க்கு மேற்பட்ட மாணவர்கள்ளயும் தனித்தனியாகத் தெரிந்து கொண்டிருப்பதோடு, அவர்களுடைய பெற்றோர்களைக் காணுந்தோறும் அம்மாணவர்களது கல்விநிலையைப்பற்றியும் கடமைகளைப் பற்றியும் பேசி வேண்டுவன செய்யத் தூண்டுவார்கள். தம் எல்லையற்ற பல வேலைகளுக்கிடையிலேயும் பள்ளிக்கூடத் தேர்வு நடத்துவதை, விடைகள் திருத்துவதுட்படத், தம் பொறுப்பிலேயே வைத்து வந்தார்கள். தனித்தமிழ்

வித்துவான்களுடைய நிலையை உயர்த்தவேண்டுமென்பதும், அவர்களுக்குப் பரந்த அறிவும் நோக்கமும் உண்டாவதோடு, அவர்கள் தம் வாழ்க்கையை நடத்துதற்குத் தமிழ்ப் பண்டிதர் வேலையொன்றையே கருதிக் கொண்டிராது வேறு துறைகளிலும் சென்று பயன்பெறும் வன்மையுடையவர்களாக வேண்டு மென்பதும் பிள்ளையவர்களுடைய நெடுங்கால நோக்கமாக இருந்துவந்தது. இவ்வெண்ணங்களை நிறைவேற்றுவதற்காக ஒரு புலவர் கல்லூரியைத் தோற்றுவித்தார்கள். அக்கல்லூரி சங்கத்து வெள்ளிவிழாவன்று திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு. ஞானியார் சுவாமிகளால் திறக்கப்பெற்றது. இவ்வாண்டு இக்கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தாரது ஒப்பமும் பெற்றுள்ளது. சிலவாண்டுகளாக இக்கல்லூரியின் சார்பாகத் தொடர்ந்த கவலையும் முயற்சியும் கொண்டிருந்தார்கள். கல்லூரியைத் தொடங்குவதற்கு முன்பு பலருக்கும் இவர்கள் போக்கிய விண்ணப்பத்தை இப்பொழுது பார்ப்போமானால் இவர்கள் கருத்தும் நோக்கமும் நன்கு புலப்படும். இக்கல்லூரி வேரூன்றித் தழைக்கு முன்னரே இவர்கள் இறைவனடி யடைந்தது பெரிதுங் கவலத் தக்கதாகும். கல்லூரியைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது, 'நம் கல்லூரியிற் படித்து நங்கருத்துப்படி ஒரு மாணவன் புலவனாக வருவதைப் பார்த்தபின் என் உயிர் நீங்கி அதுவே எனக்குப் பெரும் பேறாகும்.' என்று அவர்கள் கூறியது மிகவும் வருத்தத்துடன் இப்பொழுது நினைக்கவேண்டியதாக இருக்கின்றது

தமிழ்மொழியில் சொற்பொழிவுகளாற்றுவதில் ஒரு தனி நிலையையடைந்திருந்தார்கள். எத்தகைய கருத்துக்களையும் பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் எவரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில் பேசுவதில் ஓரெடுத்துக் காட்டாகவே விளங்கினார்கள். அண்மையில் சென்னை ஆட்சியாளர் (கவர்னர் துரை) அவர்கள் தஞ்சையில் செய்த விரிவுரையை இவர்கள் உடனே மொழிக்கு மொழி மாறிமாறித் தெளிவும் ஆற்றலும் பெறத்தூய தமிழில் பேசியது எல்லார்க்கும்

வியப்பைத் தந்தது: தமிழ் மொழியின் ஆற்றலை விளக்கியது. குற்றங்களைத் திருத்துவதற்காகவும், நல்லநெறிகளை யடைவதற்காகவும் இவர் பேசுகின்ற பேச்சுக்கள் எவரும் அஞ்சி நெறிப்பட வேண்டியனவாக இருந்தன. இவர்கள் பேச்சுக்க ளெல்லாம் உண்மையும், உணர்ச்சியும் ததும்பியனவாகவே யிருக்கும். தமிழுலகத்தில் எதற்கும் அஞ்சாத ஒரு வீரர் இவர் என்று கூறுவது மிகையாகாது.

தமிழன்பர்களிடத்திலும், புலவர்களிடத்திலும் அளவு கடந்த அன்புடையவர்கள். தமிழறிஞர்களிடத்து இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர்கள் முகத்திலேயே ஒரு தனியான களை யேற்படுவதுண்டு. தமிழிலக்கிய நயங்களை எவர் எடுத்துக் கூறினும் மிகவும் அமைதியுடன் கேட்டுக் கொண்டிருப்பார்கள். எவரிடத்திலும் எளிமையாகப் பழகுவது இவர்கள் இயற்கை. தம்மொடு பழகிய நண்பர்களது வாழ்வில் மிகவும் ஈடுபட்டவர்கள். ஒவ்வொருவருக்கும் வேண்டிய நன்மைகளைத் தாமே யறிந்து செய்து வருவார்கள். தாம் செய்யும் நன்மைகளையும் கொடுக்குங்கொடைகளையும் பிறரறியாமல் காப்பாற்றிக் கொள்வது இவர்களியல்பு. தன் நன்மைகளைப்பற்றியோ குடும்பத்தின் பிற்கால வாழ்க்கையைப் பற்றியோ இவர்கள் ஒருநாளுங் கருதினதில்லை. சங்கமும் தமிழுமே இவர்கள் கருத்து. தம் வாழ்நாளி லீட்டிய பொருள்கள் அனைத்தையும் பொது நன்மைக்கே செலவிட்டார்கள். தனக்கென வாழாப் பிறர்க் குரியாள னென்னுந் தகுதி இவர்களுக்கு நன்கு பொருந்துவதாகும். இத்தகைய பல நலங்களையும் பெற்ற பெரியார் தமது ஐம்பத்தெட்டாவது வயது முடிந்த இரண்டு நாட்களில் நம்மையெல்லாம் விட்டுத் திருவருளோடு கலந்தது, ஆற்றமுடியாத ஒரு பெருந்துன்பமாக இருக்கின்றது. எம் ஆற்றெணாத் துயரையும், ஆறுதலையும் பிள்ளையவர்களுடைய குடும்பத்தார்க்கும் நண்பர் - உறவினர்கட்கும் தெரிவித்துக் கொள்கிறோம். தெய்வப்பற்றும் சைவப்பற்றும் ஓங்கிய இப்பெரியார் பண்ணுறத் தமிழையாய்ந்த

கண்ணுதற் பெருமான்' கழற்கீழ்த் தங்கித் தமிழையும் நம்மையும் காப்பாராக!

நமது தலைவர்கள் பிரிவாற்றாது எம்மோடு வருந்தும் அன்பர்களின், துன்பமாலைகளையும் வெளியிட்டுள்ளோம்.

-கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்

இரங்கற்பாக்கள்

அந்தோ! செந் தமிழ்த்தாயின் அருண்மைந்தன், அருந்தொண்டன், அதனைப் போற்றும்
நந்தாத புகழனுமா மகேசுரப்பேர் நற்கோமான், நம்வாழ் வாவோன்,
தந்தாயின் திருவடியைத் தானாடி யுறினன்னோன் றானே தாயாங்
கந்தாக வளர்சேயாம் கரந்தை நகர்த் தமிழ்ச்சங்கக் கதியென்? அந்தோ!

முற்றுமொழிக் கணியுரைபோல் வடநாட்டில் முடியுநிலை முன்னிற் றேனும்,
மற்றெவரு மிலரேனும், வாய்ந்ததமிழ் அன்னையது மடித்த லத்தே
உற்றதுயர் முகத்தினனாய் உயிர்த்துணைவன் ஒருவனிருந் துறுவ செய்யப்
பெற்றனைநீ திருக்கயிலை பெறும்பேறு காசியடை பேற்றோ டம்மா!

நங்களன்ப ருடன்காசி நாம்செல்வம் இன்றில்லை நாளைக் காண்பாம்
திங்களொன்றின் வந்திடுவர் சென்றெதிர்வம் சேட்கண்ட சிறப்பை யெல்லாம்
பொங்குமகிழ் வோடுரைப்பர் கேட்டிருப்பம் என்றெல்லாம் புகன்ற நெஞ்சே!
தங்கியநம் எண்ணமெலாம் தனியிடிபோ லொருசெய்தி தகர்த்த தந்தோ!

சங்கமுதல் வாயிலிலே தளிராலின் நிழலகத்தே சார்ந்த மன்றம்
அங்கங்காம் அவற்றகத்தே ஆற்றிடத்தே அகல்வெளியாம் ஆங்கே மற்றும்
எங்கணுநீ நிற்கின்றாய் இருக்கின்றாய் இயல்கின்றாய் எளியேம் பாலே
பொங்கினிய மொழிகின்றாய் பொற்புடைய தலைவ! இவை பொய்யோ மெய்யோ!

அறிவுருவொன் றடைந்ததென அருங்கலைதங் கரைகண்டாய்! ஆற்றல் தானே
செறியுருவம் கொண்டதெனச் செய்தொழில்க டமிற்சிறந்தாய்! செவ்வி தாய
அறவடிவம் ஈதென்ன அருந்தமிழின் பெருந்தொண்டும், அன்ன சீர்த்தாம்
மறுவில்தமிழ் நாடுதமிழ் மக்களது தனித்தொண்டும் வாய்ந்தாய் அம்மா!

ஆயதொரு பொதுத்தொண்டை யாற்றுவார் அதற்கெனவே அமைக்குங்
காலம்
ஏயவுட னலமுதலக் கின்றியமை யாக்கலத் தெச்ச மாகும்:
நீயவரின் வேறெயந் நீள்தொண்டு பலவாற்றி நின்ற காலே
ஏயதுயில் முதலனவும் எய்திடுவை நினதிச்சீர் எவர்க்காம் அம்மா!

உள்ளொன்று புறமொன்றா யுளதாகா வுரையொன்றும். உலகத் தொண்டர்
தள்ளரிய தன்னலத்தைத் தன்னமுநா டாச்சிறப்பாம் தகைமை யொன்றும்.
எள்ளுநிலை ஏத்துநிலை எதனினுந்தன் கொள்கையினில் இழியா ஒன்றும்.
விள்ளுபிற கொள்கையரும் வேண்டிநினைப் போற்றுமுதல்: வீறார் செம்மால்!

பல்லாண்டு நாட்டாண்மை பயில்கழகத் தருந்தொண்டின் பான்மை யோர்ந்த
எல்லாண்ட புவியரசர் இராவ் சாகி பெனும்பட்டம் இனிது தந்தார்!
தொல்சான்றோர் அளித்திட்ட தோற்றஞ்சால் தமிழவேள் தொடரும் ஏனைப்
பல்லாரும் போற்றரிய செந்தமிழின் புரவலராம் பட்டம் பெற்றாய்!

விரியவுள நிலப்பரப்பு வேண்டுமினி யென்னாது விலைப்பாற் கொண்டாய்!
பெரியதொரு மன்றமொடு பிறவாய கலையிடங்கள் பிறங்கக் கண்டாய்!
அரிய பொழில். அச்சுதவி. அரும்பள்ளி. கல்லூரி. அமையக் கண்டாய்!
உரிய இவை எங்னுற்ற? உனதரிய வூக்கஞ்சே ருழைப்பா லன்றோ!

கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம்பிள்ளை

பாதி மாதுடைப் பங்கனுக் கன்பினன்.
நீதி வாத நெறியினி ரம்பினான்.
ஆதி மென்மொழி யாந்தமி ழன்னையின்
மீதில் எல்லையில் காதல் மிகுந்தவன்:

பொய்யி லுள்ளம் பொதிந்தொளிர் வாய்மையன்.
மெய்யின் வார வினைத்திறம் வல்லுநன்.
பெய்யி னன்மை பெருக்கு மழையினும்
கையில் வண்மை களிக்க வளர்த்தவன்:

மடமும் மன்னரும் மற்றுடைச் செல்வர்கை
வடமெ லிந்து த ளர்ந்ததன் தாய்மொழி
நடமி டத்துணை நல்கு பெருந்திறல்.
கெடல ரும் புகழ்க் கெழுதகு கேண்டேனே:

புலமை யின்றிப் புலவரைப் போற்றினன்
தலைமை கொண்ட தென் தஞ்சையூர் வாணன்முன்;
புலவனாய்த் தமிழ்ப் புரவலன் தானுமாய்
இலகு நீர்த்தஞ்சை வாணனிவ் வள்ளல்தான்;

உரந்து ணைதனக் கொன்று கொண்டொருவனாய்க்
கரந்தைச் செந்தமிழ்க் கழகம் வளர்த்தவன்
நிரந்தரச் செம்மல் நிலையினினேரினும்
கரந்தும்வந்த பகைகள் கடந்தவன்;

தோன்றலு மாமகே சன்; தமிழவேள்;
சான்ற தீந்தமிழ்ச் சார்பினுக் கவ்வியம்
கான்ற வடபுலம் காண வந்தான் தமிழ்
மாண்டவீறு மறுதர நிறுவுவன்.

என்று தன் மனத் தெண்ணி விருந்தறம்
கொன்றவனுயிர் கொண்டதுகொல்? வளம்
நின்றகாவிர் போலுள நீர்மையன்
என்று நன்றல தெண்ணவு மொல்லன்.

அம்ரருண்டுடல் அல்லலகற்றிய
அமுதின் விஞ்சி அறிவுயிரின்புறத்
தமிழருத்தி யுயர்திணை தந்தவர்
சமழ்மை நீக்கத் துறக்கம் புகுந்தனன்;

தாவிலொண்புகழ்த் தக்கவர் சாவிலர்;
நாவலனமை நீங்கியநாள், அவன்
தேவர்தம்மிற் சிறந்துயர் சீரோடு
வீவிலாப்புது வாழ்வினை மேவினான்;

தமிழ ரீண்டு தயங்கி மயங்கிட.
அமிழ்த முண்டவர் ஆர்த்தெதிர் கொண்டிட
விமலன் வேண்ட விழைந்துவிண் சென்றனன்
தமர முங்கலென் வாழ்த்துதல் தக்கதே.

சிவனைத்தூது செலுத்திய செந்தமிழ்த்
தவமகன் தமராகுந் தமிழர் நாம்
அவன் மகிழ்ந்த அருந்தமிழ்த் தொண்டினை
அவம் படாதினி யாற்றுவதே கடன்.

எஸ். சோமசுந்தரபாரதியார் பசுமலை.

பிரிவிரக்கம்

திங்களணி சடைப்பெருமான் றிருவடியுந்
தமிழன்னை செய்ய பாத
பங்கயமும் இடையறா தலருமுளம்
படைத்தவ! இப் படிமேல் யாரும்
எங்கள் தமிழ்த் தலைவனென இயம்பும் உமா
மகேச்சுரப்பே ரேந்தால்! எங்கள்
அங்கமெலாஞ் சுடுதுயரம் ஆற்றவொணா
வகையகன்றா யந்தோ! வந்தோ!!

தம்பியா ருளங்குளிர்ந்து வித்திடத்தோன்
றிய கரந்தைத் தமிழ்ச்சங் கப்பேரப்
பைம்பயிரை வளர்த்துலகம் பயன்பெறற்கே
முயன்றனையப் பயனை முற்றும்
இம்பரிடைத் தமிழ்மக்கள் எய்துதல் கண்
டின்புறா தேகி னாயவ்
வும்பருல கின்பிதனிற் சிறந்ததென
வெங்ஙனநீ யுளங்கொண் டாயோ.

என்முகங்கண் டின்புறுநின் இனியமலர்
முகமெங்கே! இயைந்து கேட்போர்
நன்முகமெ லாமலர வுளம்பதிக்கும்
வீரவுரை நவில்நா வெங்கே!
சொன்மலருந் தனித்தமிழின் றுறைதோய்ந்த
புலவரெலாஞ் சூழத் தோன்றும்
நின்மலர்ந்த வுருவெங்கே! இனிக்காண்டல்
நினைவுலகில் நிகழுங் கொல்லோ!

உணவெலாந் தமிழ்ச்சுவையே உறவெலாந்
தமிழ்ப்புலவ ருவக்கும் அன்பிற்
றணவிலா நன்மக்கள் தமிழ்பயிலும்
மாணவரே தமிழ்த்தாய்க் கேற்ற
குணநிலா வியமகனே யுமாமகேச்
சுரப்பெயர்கொள் கோவே நிற்கு
மணமுலாம் நல்வீடு தமிழ்க்கழகம்
அன்றோநீ மறந்தாய் கொல்லோ!

கங்கைநறும் புனல்படிந்து காசிவிசுவ
நாதனொடு கலந்து தோன்றும்
மங்கைவிசா லாட்சியையு மனமுருகிக்
காண்டலுமே மகிழ்ந்து நின்னை
இங்குவர விட்டிலரோ! தமிழ்பயிலா
வடநாட்டி லிருந்த லானே
அங்கிருத்திக் கொண்டனரோ! தமிழ்ச்சுவையில்
அவர்க்கிருந்த ஆர்வம் என்னே!

அருங்கன்று பிரிந்துழலும் ஆப்போலத்
தமிழரெலாம் அலந்து சோர
இருங்கொன்றைத் தாரவன்றா ளினியநிழற்
பெருவாழ்வி னியைந்தா யைய!
ஒருங்கொன்று பிறர்நலமே யுருக்கொண்ட
உமாமகேச் சுரப்பே ருற்றோய்
மருங்கொன்று கேண்மையினா யிச்செயனின்
மதிசென்ற வாறு நன்றே!

பண்டிமணி மு. கதிரேசச் செட்டியார்

செந்தமிழ்ப் புரவலராய் விளங்கிய திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் மறைந்துவிட்டமை நம்மனோர்க்கெல்லாம் ஆற்றொணாத பெருந்துன்பமாயுள்ளது. அவர்கள் தமிழன்னைக்குப் புரிந்துவந்த அருந் தொண்டுகளை உலகம் அறியும். எல்லையற்ற தமிழன்பை அவர்கள் உள்ளத்தில் தோற்றுவித்த இறைவன் அவர்களுக்கு நீண்ட ஆயுளை அளித்துதவ மறந்துவிட்டான் போலும். நமது தமிழன்பினைச் சோதித்தற்பொருட்டு இறைவன் செய்யுந் திருவிளையாடல் இதுவெனத் தோன்றுகிறது.

பிள்ளையவர்கள் அவர்களது குடும்பத்தார்க்குமட்டும் உரியவர்கள் அல்லர். தமிழப் பெருங்குடும்பம் முழுமைக்கும் உரியவராவர். ஆதலால் அவர்களை இழந்த துன்பம் தமிழ்ப் பெருங்குடும்பத்தார்க்கே முதற்கூறாக உரியது. இத்துன்பம் நம்மை வருத்துமாற்றை யுணர்த்தும் வழி ஒன்றே யுள்ளது. அதுதான் யாதெனின், பிள்ளையவர்கள் மேற்கொண்ட பணிகளைத் தளரவிடாது ஆர்வத்தோடு மேன்மேலும் இயற்றிவருதலேயாம். அவர்கள் இறைவன் திருவடிநீழலில் இனிது தங்கிப் பேரின்புறுக!

மழை பெயலின்றி வாடிய பயிரென,
அரசுகோல் கோடிநல் லமைச்ச ரின்றித்
துன்புறு நாட்டின் மன்பதை யென்ன,
ஆண்கட னிறுக்கும் அருமகா ரின்றிக்
கைப்புற்று வருந்துங் கற்பின ளென்னப்
போற்றுந ரற்றுப் பொலிவழிந்து சிதைவுற்
றுணங்குதமி ழணங்கிற்கோர் உறுதுணை யாகி
அவளைப் - பேணுத லொன்றே பேரற மெனவும்
ஓம்புத லொன்றே உயிர்க்குறுதி யெனவும்
அவளது - ஆக்க மொன்றே நோக்க மெனவும்
உளங்கொண் டுழைத்த உரவோன்; நலம்பல
சீரிதிற் புனைந்த திறலோன்; பேர்வின்றி
இடுக்கண் பலவு மெய்தினும் நடுக்கற்றுத்
தொண்டுகள் புரிந்த தூயோன்; 'வண்டமிழ்ப்
புரவல னெ'ன்னும் புகழோன்; இரவொடு
வருந்திச் சென்ற அருந்தமி ழறிஞர்கட்குக்
கற்பக மென்னக் கைசிறந் துதவும்
பொற்பகப் புகலோன்; போற்றுறு தகவோன்:
நமையுளம் பிணித்த உமையொரு தலைவன்
உயர்ந்த வுலகம் புகுந்தனன் இன்றென
இரங்கு தமிழகத் தேழை மாந்திர். அவன்
தமிழெனும் அமிழ்திற் றழைத்த வுயிரோன்
ஆதலின். இன்றும் உள்ளான் என்றும் உள்ளான்
உலகுள தனையும் உள்ளான் கவல் வொழிந்து
போற்றுகம் நந்தமிழ் புகழ்மிக
ஆற்றுகம் வம்மோ அவற்குறு கடனே.

எஸ். வையாபுரிப்பிள்ளை.

என்னவினி யாம் செய்வோம்! எவரைக் காண்போம்!
இவ்வுலகில் எமக்கிடமாய் இருந்த சூழல்.
கன்னலெனும் வடிவுடையோன்! கருணை யூற்று.
கலைப்பெருக்கக் கடல்தந்த அமுத மானோன்.
செந்நலத்தின் உமாமகேசன் சென்றான் எங்கே!
செப்புவீர்! எனக்கேள்வி கேட்டு நின்று
பன்னலமும் அழுதரற்றிப் பிழைத்து வாழப்
பதுங்குமிடம் காணாமல் திரியும் அந்தோ!

உன்னுதவி யாற்கலைகள் கற்றுத் தேர்ந்தோர்.
உத்யோகப் பதவிகளில் உயர்ந்து நின்றோர்.
நன்னிதியம் பெற்றவர்கள். நண்ப ரானோர்.
நமதுகுல விளக்கென்று மகிழ்ந்த உற்றார்
பொன் காசுப் பொதியதனைக் கொண்டுவந்தோன்
நடுக்கடலிற் போட்டதென' இழந்தே. யுன்னை
என்னுயிரே! என் தலைவா! எங்கே சென்றாய்!
எனவழுதார் தனித்தனியே. உமாமகேசா?

பொங்குதமிழ்த் தாய்ப்பணியைப் போற்றி நின்றே
புலவர்குழாம் குடியேறத் தகுந்த வாறு
எங்கரந்தைத் தமிழ்ச்சங்கம் வளர்த்து நின்றாய்!
எந்நாளும் பொருளளித்தாய்! உழைத்து வந்தாய்!
இங்குனைப்போல் ஒருமகவைப் பெறுவதென்றோ
எனவேங்கித் தமிழ்த்தாயும் தவித்து நின்றாள்;
சங்கத்தார் எல்லோரும் வடக்கு நோக்கச்
சார்ந்தாய்நீ எங்கே; சொல்; உமாம கேசா;

பொதுப் பணிகள் புரிகின்றோம் என்று கூறிப்
புகழ்மயக்கும் பொருட்டொகுப்பும் கொள்ளைகொள்ளும்
மதிப்புடைய மக்களெலாம் மனது நாண
மாந்தர்பணி செய்வதுவே மதமாய்க் கொண்டோய்!
துதிப்புடைய சொல்வரினும். பிறரைத் தூற்றும்
தொழிலுடையார் இகழ்ந்தாலும் பொருள்பண்ணாமல்
புதுப்பொருளாய்ப் பழந்தமிழை வளர்த்த வேளே!
புலமைநிறை உமாமகேச போனாய் எங்கே!

செந்தமிழை உலமெலாம் பரப்ப வெண்ணிச்
சிந்தனை. சொல். செயல்மூன்றும் அதற்கே யாக்கி.
இந்தநிலம் புகழ்கரந்தைச் சங்கம் தன்னில்
இனியதமிழ்க் கல்லூரி நாட்டி மக்கள்
வந்துணவு கொண்டுறைந்து கல்வி கற்க
வழிசெய்தாய்! அவையென்றும் நிலைத்து வாழ
எந்தலைவா! நீ பட்ட கவலை எண்ணின்
யாரேதான் மனங்கசியார் உமாமகேசா!

நல்லவர்கள் தீயவர்கள் என்றில்லாமல்
நலிந்துவரும் அனைவருக்கும் தண்ணீர் ஊட்டி.
நில்லாமல் பலதிசையும் வளைந்து செல்லும்
நீரோடை திடுமென்று வற்றினாற் போல்
எல்லோரும் நலமடையப் பணிகள் செய்த
எழிலுருவே! நீ மறைந்து சென்றாய் அந்தோ!
பொல்லாத மக்கள் பலர் உயிரோ டுள்ளார்.
புகழ்தமிழுக் கென்னபயன் உமாமகேசா!

புன்சிரிப்புத் தவழுமுகப் பொலிவு நோக்கின்
போற்றாரும் புகழ்வோரும் பணிந்து நிற்பார்!
வன்மனத்தோ டெடுத்தவினை முடிக்கும் வள்ளால்!
வாய்மையே வழக்கினிலும் பேசுவோனே!
கன்மனத்தார் இளகும்வகை தமிழில் உள்ள
கலைப் பெருமை விரித்துரைக்கும் நாவலோனே!
நன்மையெனும் கனிபழுத்த தருவாய் நின்ற
நாயகனே! பட்டனையே! உமாமகேசா!

சந்ததமும் தமிழறிந்த குழுவி னோடு
சார்ந்துதமிழ் ஆராய்ச்சி செய்து நின்றாய்!
சொந்த நலம் குடும்பநலம் கருத்திற் கொண்டே
சொல்லவொணாத் தீவழியிற் பொருள்கள் சேர்க்கும்
இந்தநிலத் தொருநீயே தமிழ்ப்பணிக்கென்(று)
ஈட்டினை எப் பொருள் களையும் உமாம கேசா!
செந்த மிழின் கவிச்சுவையே! சிறந்த தேனே!
செழுங்கரந்தைப் பதிகாணும் விளக்க மானோய்!

கெம்பீரத் திருவுருவம் என்று காண்பேன்!
கிளர்ச் சிதரும் வீரவுரை என்று கேட்பேன்!
செம்பாகத் தமிழ் பேசிச் சிரிப்புக் காட்டிச்
சிந்தை யினைப் பறிக்கு முகம் என்று பார்ப்பேன்!

கொம்பாகத் தமிழ்க் கொடி மேற் படர நின்ற
குரிசிலே என்றலைவா! உமாமகேசா!
நம்பாதென் மனமேநீ மறைந்த செய்தி.
நல்லிசையின் உருக்கொண்டு நிற்கின்றாயே!

சாமி. சிதம்பரனார்.

அந்தோநம் தமிழ்த்தலைவர். அருந்தமிழ்வேள். ஆவிநீத் தகன்ற. செய்தி.
அந்தோஎன் சிந்தைதனில் ஆற்றோணா வெந்துயரை யடையச் செய்து
அந்தோஎன் நிலைகலக்கி அறிவழித்து உயிர்பிரித்தே யளிய னாக்கி
அந்தோநான் கரைகாணாத் துயர்க்கடலி லிறுதிவரை யாக்கிற்றன்றே

அன்னையை யிழந்தேன் என்கோ அப்பனையிழந்தேன் என்கோ!
என்னையே இழந்தேன் என்கோ என்னையனை இழந்ததாலே!
முன்னியமுடித்து நல்கும் முதல்வனை இழந்தே னீங்கு
பின்னையே னிருக்கின்றேனே பேதையேன் வாழ்ந்தவாறே.

பல்கலைக் கழகத்தார் ஒப்புதலைப் பாங்காகப் பெறு கல்லூரி
பல்விதத்தில் சிறக்கவே பணிபுரிதல் தங்கடமை யென்றே யன்பாய்
செல்வித்த அவர் கடிதம் பெற்றேன் சின்னாள்முன்ன ரின்றே யந்தோ
கொல்விக்கும் செய்திதனைப் பெறவிருந்தேன்! என்னேயிக் கொடியவாழ்வு!

செந்தமிழே யவருயிராம்: செழும்புலவோரவரறிவாம்: சீர்த்திவாய்ந்த
நந்தமிழின் மேன்மைதனை நாட்டுதற்கு முயலாத நாளுமுண்டோ?
இந்தவோர் செயலால்தான் இருந்தமிழ்த்தாய் போக்கினளோ என்னே யையோ
செந்தமிழ்க்குப் பணிபுரிந்தோர் எவரெனும் செலநூறும் வாழ்ந்த துண்டோ.

சி. இலக்குவன்.

அந்தோ வித்தமிழகமும் அளப்பரிய துயர்க்கடலுள் அமிழ்ந்து நாளும்
சிந்தாகு லம்முறநீ சேணோடு சென்றனையால் சேர்ந்தோர்க் கெல்லாஞ்
சிந்தா மணியனையாய்! செஞ்சடையெம் பெருமான்றாள் தினமும் போற்றும்
நந்தா மணிவிளக்கே! நல்லுமா மகேச்சுரப்பேர் நயந்த கோவே!

தஞ்சையின்பாற் கரந்தைவளர் தமிழ்ச்சங்கம் புரந்தருளுந் தலைவனாகி
உய்ஞ்சனம்யாம் எனத்தமிழர் உவந்திடநீ புரிந்தபணி உரைக்கற் பாற்றோ!
மஞ்சனைய கொடைக்கரத்து வள்ளால்நீ வளர்த்ததமிழ்ப் பொழிலை விட்டுத்
துஞ்சியதுங் கேட்டிந்நாள் துயருற்ற நெஞ்சினராய்த் துடிக்கின் றேமால்!

கவிக்கினிய பெரும்புலவன் கம்பன்முனம் புகழ்சரயு கவின்மிக் கோங்கும்
புவிக்கணியாய் நிலவுமொரு புண்ணியநன் னதியெனவே புரிவு கொண்டோ
செவிக்கினிய சொற்பொழிவால் செந்தமிழ்நா டுய்வித்த சீர்சால் கோவே
தவிக்குமெமைத் தணந்தவண்போய் விண்ணாடு புகுந்ததுதான் சாற்று வாயே!

அலைகடல் புவியதனில் அரியதமிழ் மொழியின்பால் ஆர்வ முற்றோர்
கலைகள்பல கற்றுணர்ந்து கடனாற்ற வெள்ளிவிழாக் கண்ட நாளில்
தலைமையுறுங் கல்லூரி தனைநிறுவி மற்றதனைத் தகுதி வாய்ந்த
நிலையினிற்கண் டுளமகிழ நினைத்தனையே யின்றுலகம் நீத்த தென்னே!

ஈவாருங் கொள்வாரும் இல்லாத வானகத்தே யிருப்போ ரெல்லாம்
சாவாத புலவரெனச் சார்ந்தனையோ மற்றவர்க்குத் தமிழன் புண்டோ!
ஓவாது பணிபுரிந்தாய் உமாமகே சுவரப்பேர் உற்றாய் நின்னை
ஆவாவின் றிழந்தனமால் ஐயகோ விக்கொடுமை அறையுற் பாற்றோ!

தந்தையிலாச் சிறுவரையுந் தாயில்லாச் சேய்களையுந் தக்கோ ராக்குஞ்
சிந்தையுடன் நீயமைத்த பேரில்லச் சிறப்பெம்மால் செப்பற் பாற்றோ!
தந்தையினும் பரிவுமிகுந் தண்ணளிகொள் பெரியோய்! நின் தகைமை யுள்ளிப்
புந்திமிக நைந்துருகிப் புலம்புமால் புலவர்க்கோர் புகலாய் நின்றோய்!

கற்றவர்க்குப் பெருந்துணையே! கரந்தைவளர் சங்கத்தின் கண்ணே யாவாய்!
நற்றமிழின் சுவையுணர்ந்தோய்! நானிலமும் பரசு புகழ் நல்லோய்! எங்கள்
கொற்றவனே! புகலரிய குணக்குன்றே கண்ணிலியாங் கொடிய காலன்
இற்றைநா ளுனையழைத்த திருந்தமிழிற் புலமைபெறும் எண்ணி மேயோ!

பொன்னிவளங் கொழித்திடுமிப் புனல்நாட்டைத் துறந்ததமிழ்ப் புலவரேறே!
துன்னியபல் துறைகளிலுந் தொண்டுமிகப் புரிந்தபெருந் தோன்றால்! நீயும்
சென்னிமதி யணிந்தபிரான் செய்யமல ரிணையடியிற் சிறந்து நாளும்
மன்னுகவே பேரின்ப வாழ்வென்னும் பெருங்கடலுள் வயங்கி மாதோ!

தி.வை. சதாசிவபண்டாரத்தார்.

ஐயோ! செந்தமிழ்த் தலைவன். தமிழவேள்
மறைந்தானென் றறிவிக்கின்றார்:
மெய்யோ? மெய்யாயின் இறைவன் தமிழ்பால்
விருப்ப னென மேலோர் கூறல்
பொய்யோ? பொய்யல எனின் செந்தமிழ்புரக்கும்
புரவலனைப் பொருந்தாக் கூற்றம்
ஐயோ என் றுளம்கலங்கித் தமிழர் அல
மரக்கொடுசென் றகலாதன்றே.

என்நினைந்திச் செயல்புரிந்தாய்? இழவூழே!
நினைக்கிழவூழ் எய்திடாதோ?
முன்நினைந்தன்றோ எதையும் முயல்வதுதக்
கதுநீதான் முயன்ற செய்கை.
தன் நினைந்து தமிழ்நினைந்து தன்வாழ்வை
அதற்குரிமை தந்தான் தன்னைக்
கொன்னினைந்து தமிழறிஞர் குலம் இனைந்து
நெகிழ்ந்தழியக் குமைத்ததா லோ.

நம் தமிழின் நலம்கரந்து கெடச் சூழ்ந்த
நயமிலவர் நயந்த வெட்சிச்
சிந்தைமுத லறமலைந்து செந்தமிழின்
திறம் சிறந்து திகழக் காண்பான்
வந்த புரவலன் கரந்தை யணி உமா
மாகேசன் எனவே வாழ்த்தத்
தந்தவளக் கரந்தை வளர் தமிழ்ச் சங்கத்
தலைவனெனத் தழைத்தான் மன்னே.

நனியாரும் தமிழ்ப் பொழிலின் நறுந்துணர்கண்
டான்: அது தான் நயந்து காய்த்த
கனியாரும் தமிழ்ப்புலவர் கல்லூரி கனிவித்துக்

கவினக் கண்டான்;
தணியாத தமிழ்ச் சங்கம் தனியாகத் தணந்தான் இன்
றென்றால் சங்கத்(து)
இனியாவர் இவன்போல இன்தமிழாள் வார்எனயாம்
இனைகின்றே மால்

திக்கற்ற சிறுவர்கட்குச் சீரில்லம் அமைத்தான்:
நோய்தீரத் தேர்ந்து
சிக்கற்ற மருந்துவகை செய்தளிப்பச் செய்திட்டான்:
தீமை செய்வார்
தொக்கற்றம் புரியாமைச் சூழ்வனகள் சூழ்ந்தமைத்தான்:
தூய சொல்லால்
மிக்குற்ற புலவரகம் மேவலின் விண்புலவரகம்
மேவினான் கொல்.

தாயாகி உண்பித்தான்; தந்தையாய்
அறிவளித்தான்; சான்றோ னாகி
ஆயாத நூல்பலவும் ஆய்வித்தான்:
அவ்வப் போதயர்ந்த காலை.
ஓயாமல் நலமுரைத்து ஊக்குவித்தான்
இனியாரை யுறுவேம்: அந்தோ!
தேயாத புகழான்தன் செயல் நினைந்து
உளம் தேய்ந்து சிதைகின்றேமால்.

எங்கண் அருந்தமிழ்க்கழகம்: எங்கினிய
தமிழ்க் கூட்டம் இயலு மேனும்,
அங்கண் அருந்தலைவ, நினைக்காண்பதுவே
அடியேங்கட் கமைந்த காட்சி;
நங்கள் அருந்தமிழ் வளர்வே நம்வாழ்வென்
றறிவுறுத்தும் நல்லோய்! யானும்
எங்கண் இனி நினைக்காண்பேன்: எப்பணியில்
உளம்சிறப்பேன்: இனைகின்றேனே.

திருமயிலைச் சித்தாந்த மாநாட்டில் என்சொல்லைத்
தீரக் கேட்க
வரமுடியாமையை மொழிந்தே இனிக் கேட்க
வாய்க்குமோ வாயாதோ என்(று)
உரமவிய அன்றுரைத்த உரைக்குறிப்பின்
உண்மையையின் றோரும்பாவி
திருமிகுமா மாகேசச் செம்மால்! அன்(று)
ஓராதே தீர்ந்தேன் ஐயோ!

வடநாட்டில் கேகுதும்யாம் எனவரைந்த
எழுத்தினது வாய்மை நோக்கித்
திடநாட்டிக் கொள்ளாது மாட்டாமை
தனைநாட்டித் தேம்பிக் கெட்டேன்:
மடநாட்டும் மனத்தேன்யான் மதிநாட்டும் பெருமான்நின்
மனத்து நாட்டம்
கெடநாட்டும் வகைதவிர்ந்தேன்: இன்றேல்நின்
தாள்நிழல் போல் கிளர்ந்திருப்பேன்.

இதுகிடக்க: இனிஎவரை "வக்கீல் ஐயா"
எனயாம் இனிது சொல்வோம்;
செதுவில் தனித் தமிழாற் சொற் பொழிவாற்றும்
செம்மல் எனச் செப்பவல்லேம்;
எதுவரினும் அஞ்சாமல் எவர்தவறும்
எதிர்கழறும் ஏந்தல் என்பேம்;
பொதுவாய்மைத் தலைவ! உமாமகேச
நினைநினைந்து புலம்புவேமே.

ஒளவை. சு. துரைசாமி.

வையம் போற்றுங் கரந்தைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் வரித்துணையே!
உய்யு நெறிசே! ருரனுடைய உமாமகேசப் பெருந்தகையே!
செய்ய மணியே! தமிழவேள் என்னு மெங்கள் புரவலனே!
ஐய! அயோத்தி நகர்க்கருகே. ஆவி நீத்தாய் ஆற்றுவமோ?

சிறக்குஞ் செல்வந் தமிழெனவே கொண்டா யதனா லிந்நாட்டில்
இறக்குந் துணையுந் தமிழ்மொழியின் ஏற்றங் காண வுழைத்தனைநீ.
அறக்குன் றனையாய்! அளியேங்கள் அகமு மறிவும் நிலைகலங்க
உறக்கங் கொளல்போல் வடநாட்டுச் செலவி னுடலை நீத்தனையே.

தஞ்சைக் கூற்றத் தலைவனெனத் தகைசால் பெரியோய் நீயமர்ந்திங்
கெஞ்சா வன்பிற் செய்த பணி யெழுத்தா லெழுது மியல்பினதோ
செஞ்சொற் பயிலுங் கலைக்கூடம் செய்தாய். திருவை யாறதனில்
தஞ்சை யரசர் அறநிலையத் தமிழ்க்கல் லூரி கண்டனையே.

இளவல் நிறுவுந் தமிழ்ச் சங்கத் தேற்றங் கண்டு கரந்தையினில்
வளமை கூரத் தமிழ் வளர்த்து, மன்னுசங்கத் தலைவனென
உளமா ரன்பி னுயர்வதனா லோங்கும் வெள்ளி விழாப்புரிந்தாய்;
அளவில் பெருமைத் தமிழ்ப்புலவர் கல்லூ ரியையும் அமைத்தனையால்.

'நந்தம் புலவர் கல்லூரி நாளும் வளர்ந்து, மாணவர்கள்
முந்து புலவ ராய்த்தேறும் முதல்வர் வரிசை கண்டதற்பின்
இந்த வுடலைப் பிரிந்திடினும் இன்பமாம்' என் றுரைத்தனையால்
அந்த வுரையை நிறைவேற்றா தகன்று மறைதல் நன்றாமோ?

மன்னு தமிழ்க்கே யுடம் பெடுத்தாய் வளமார் தமிழைக் குறைப்போர்க்கு
முன்னின் றெதிர்க்கும் மொழியுடையாய்! முயன்று புரிநற் செயலுடையாய்
அன்னை நிகர்ப்பாய் ஆதரவற் றிருக்குந் தமிழ்மா ணவர்கட்கே,
இன்னல் தீர்க்கும் நினைப்பிரிந்தே எவ்வா றெளியேம் உய்வேமால்.

தன்னை யுயிராக் கொள்பெரியோன் தயர தற்குத் தனிச்சிலைக்கை
மன்ன னிராமன் இறுதிமுறை வகுத்த சரயு யாறருகே
நின்ன துயிர்நீங் கிடஆங்கு நினக்கு மிறுதிக் கடன்முடித்த
இன்ன செய்கை கேட்டிரங்கும் எளியேந் துயர்க்கும் முடிவுண்டோ?

கயிலை வரைகண் டரனருளாற் கடிது மீண்ட 'நாவரசர்'
செயலைப் புகழுந் திருநாளில் வடநா டதற்குச் சென்றனையால்
இயலா ரிசைநற் றமிழ்வளர்க்க இறைவன் அரசை விடுத்தாங்கு
நயமார் தமிழ்த்தொண் டாற்றவுனை நங்கை கேள்வன் விடுப்பதென்றோ?

ஆறு சுவையோ டுனதுளத்தின் அன்பின் சுவையுங் கலந்திட்ட
சோறு நாளும் வந்தவர்கள் துய்க்க வவர்தம் முகங்கண்டே
யீறிலா வின் புடையு நின துள்ளத்தியல்பை யறிந்தேங் கண்
ஆறு பாயச் சென்றனையோ அகலா அன்பிற் பெரியோனே!

மக்கள் வருந்த; யாம்வருந்த; மன்னு புலவர் தாம் வருந்த,
ஒக்க லெல்லாங் கூடியழ, உடலை மறைத்துச் சென்றனையால்
தக்க தமிழ்நன் னாவலனே! சால்பி னுருவாம் தமிழ்த்தோன்றால்!
அக்கு மரவும் பூண்டருளும் ஐயன் றாளை யணுகினையே.

உலகை யியக்கந் திருவருளின் ஊற்றங் கொண்ட பேரன்ப!
புலவ ருளத்தீந் தமிழ்வளர்க்கும் பொதுவி லாடும் அடி நீழல்
நிலையை யடைந்தங் கின்புறுவோய்! நீடும் பரிவா லவ்வருளே
நலமார் நினது புகழுயிரைத் தமிழ்நாட்டகத்து நாட்டுகவே.

க. வெள்ளைவாரணன்.

உலகெலாம் இன்தமிழ் உணர்வு பாழாகி
அலகிலாக் காரிருள் அமிழ்ந்த ஞான்று
உமாமகேசநீ ஒளியெனத் தோன்றினை
"நீ யொழிகாலை நின்னா டெல்லாம்
தாயொழி குழவிபோலக் கூஉம்"
கரந்தையிற் றிகழ்ந்து கவினுறு தமிழின்
அரந்தை நீங்க அருளினை 'தமிழ்ப்பொழில்'.
உழைப்பின் விளையும் உறுதிக ளுணர்ந்து
கழப்பிற் கிளரும் கையற வோர்ந்து
முழுவுள மூன்றித் தொழுபணி காட்டினை
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாண்டகை!
நினக்கென அதிற்றழை நின்மல! இன்பமும்
செந்தமிழ் அமுதும் சிந்தையின் மாந்திய
சீருடை யரும்பெறற் றிருவினாய்! நினக்கும்
சூருடை யிறுதியின் றெல்லை யுண்டோ?
அமர னாயினை யவனினு முயர்ந்த
தமிழ்க் கிறை. வாழும் தனியுல கெய்தினை
யீண்டையோர்க் கியல்பாம் இன்ன லுழவாது
ஆண்டையோர் துய்க்கும் அழிவறு மின்பம்
துய்த்தனை பண்டுசெய் மெய்த்தவத் தோயே!
நின்னினை வென்றும் வாடா தெழிலுற
முன்னி யமைத்த மொய்ம்புறு சங்கமும்
அறிவு நலன்செய் பள்ளியும் நிறுவினை
நிதிவளஞ் சுருங்கினு நேயர் அருகினும்
எதிர்வலி பெருகினும் இறையும் சோர்வொரீஇப்
புரவல னாகியும்; தகைசால் இரவலன்
ஆகியும் தமிழ்வளர் ஈகைசேர் நின்கரம்.

பரிசவேதியைப் பழித்தது மெய்யே
வரிசை கெழு நின்வாலுளம் யாண்டும்
துரிசறு சம்புவின் றுணைக்கழல் சூடுக
ஊழிதோ றூழிதோ றுலவா
வாழையடி வாழையென வளர்கநின் றொண்டே.

அ. ஸ்ரீநிவாசாசாரியார்

பொன்னுலகம் புகுந்தனரெந் தமிழவேளெனுஞ் சொல்லெஞ் செவியுட்புக்கே
மன்னவெங்கூர் மழுக்காய்ந்து நுழைதலென நுழைந்த. தொரு மானின்மீது
துன்னுபுதை யம்பேறப் பதைப்பதெனப் பதைக்கின்றேன்: துயரைப் போக்கி
மன்னவகை புரிபவர்கள் யாரெனக்கிங் குளரந்தோ வாழ்க்கை என்னே.

சங்கமதி லிருந்தோங்குந் தமிழன்னை வளர்தரவே சால்பு விஞ்சுந்
துங்கமுடி மூவரசர் புலவர்களைப் புரந்தனர்வே றெருவர் தோன்றார்
மங்கும்வகை தமிழினுயர் சீர்கெடுப்போ மெனவெண்ணி மகிழ்ந்தார் நாண
இங்கடைந்து தமிழரச ரெனத் தமிழைப் புரந்தவனீ யெங்குற்றாயோ?

தமிழ்ச்சங்கம் நிலைநாட்டிப் புலவரெலாம் புடைசூழத் தகவி னோடு
தமிழெங்க ளுயிரதற்கே வாழ்கின்றே னெனக்கிளந்து சான்றோய் மேலும்
இமிழ்கடல்சூ ழலகமதி லாந்திரர்வங் காளிகளு மினிதாய்த் தங்கள்
அமிழ்தமெனும் மொழிபுரக்குந் தகவுரைத்தாய் மறைந்தனையே வந்தோ!
வந்தோ!!

அஞ்சாமை யீகையறி வாற்றலொடு மிளிர்ந்தவுனை யவற்றா லொப்பார்
மஞ்சாரும் பொழிற்புவியி லொருவருமே யிலையிலைமேல்
வருவர் கொல்லோ!
எஞ்சாம லெத்துறையும் படிந்துயர்ந்த நிலையுடையாய் எங்குற்றாயோ
அஞ்சாதீ ரெனவுரைக்க மீண்டுமிவண் வருவாயோ ஐயோ என்னே!

நூல்நிலையந் திக்கற்ற மாணவர்க ளில்லமொடு நுவல வல்லோர்
நூலனைத்தும் விரித்துரைக்கும் தமிழ்மன்றம் உயர்பள்ளி நோக்கும் நெஞ்சின்
மாலகற்றுந் தமிழ்ப்புலவர் கல்லூரி யிவையாவும் மறந்து வானில்
மாலடைந்து கண்களில்நீர் மல்கியிவண் யாம் வாட மறைதல் நன்றோ?

இனியதமிழ் புரப்பார்யா ரெந்தலைவ! நின்போன்றிங் கினிமை விஞ்ச
இனியவுரை தருவார்யார்! பொதுவாழ்வி லுயர்தலைமை யேற்ற ஞான்றும்
கனியவுள முயர்செயல்கள் செப்பமுட னாற்றியொளி காட்டி நின்றாய்
இனியாரே நின்போன்றிங் கினித்திடுவா ரென் செய்வே னெங்குற் றாயோ?

தமிழ்நாடு தழிருக்கே யெனுமுழக்கந் தமிழகத்தில் தழைக்கச் செய்து
இமிழ்நீரார் கடல்மறைந்த எழில்பன்னீர் செல்வத்திற் கினித்து நின்று
தமிழ்நாடு மொழியுணர்ச்சி யூட்டியவர் துணைகொண்டு தகுமை யாற்றில்
தமிழ்நாட்டிற் பலபுலவர் தோன்றவழி செய்தோய்நீ தணத்தல் ஆமோ?

ஒருபாட்டிற் குயர்பதவி யளித்தெமையே புரந்திட்டா யுயர்ந்த பாக்கள்
தரக்கேட்டு மகிழ்ந்தினித்துத் தனியன்போ டாதரித்தாய் தந்தைபோன்றே
திருகோட்டு முன்றனையே தெய்வமென வெண்ணியுளத் திருந்தேன் தெய்வ
முருகூட்டு மீறில்லான் றாளடைந்தா யெனைப்புரக்கும் முனைவர் யாரோ?

தமிழ்நாடு செய்குறையோ தமிழர்கள்செய் தவக்குறையோ தனக்கொப்
பில்லாத்
தமிழ்மொழிசெய் தவக்குறையோ யாம்புரிந்த தவக்குறையோ தமிழ்க்
கரந்தைத்
தமிழ்ச் சங்கஞ் செய்குறையோ விவணின்றே யாம்வருந்தத் தணந்து
சென்றாய்
தமிழ்ப்பொழிலிள் றனித்தலைவ நினக்கீடு செயவெவர்கொல் சாற்று வாயே!

அருளற்ற கொடுங்கால! வண்ணலுயிர் கொடுவுடலை யழித்தா யுன்றன்
மருளுற்ற வுளநாண வெந்தலைவர் புகழுடம்பு வயங்கித் தோன்றத்
தெருளுற்ற சிலைநாட்டி வணங்கிடுவ மென் செய்வாய் செப்புவாய் நீ
பொருளற்ற புன்றெழிலைச் சிலைமாட்டுஞ் செய்வாயோ புகன்றி டாயோ!

வெண்பா

செய்யவிசு சித்திரையுந் தேதியிரு பத்தேழுந்
துய்யவெள்ளி சித்திரையுந் தோன்று நாள் - ஐயனவன்
சீருமாம கேசுரனாஞ் செம்மைத் தமிழ வேள்
தார்முருகன் றாளடைந்த நாள்.

கோ.சி. பெரியசாமி.

என்னி னிச்செயல் நமக்குள? நெஞ்சமே! இருந்த மிழ்க்குயிர்; ஞாலம்
முன்னு செந்தமிழ்ப் புரவலன்; தமிழவேள்; முதுக்குறைவுசால் முதுவன்;
மன்னு நற்குணம் யாவையுந் திரண்டதோர் வடிவு; உமாமகேசன்; ஆம்
நன்ன ராளனைப் பல்புகழ் பரப்பிய நண்பனை யிழந் தேமால்!

ஐயகோ! தமி ழன்னையுற் றிடுதுயர் ஆற்று தற்கெளிதோ? இவ்
வைய மீதினில் உடல் பொரு ளுயிரெலாம் வழங்கியே தமிழினைக் காத்த
ஐயனை நெடுஞ் சேணிடைப் பொய்ம்முத லகன்றொளித்திட வாழ்ந்த
மெய்யனைத்தனை யிகழுநர் நவடு வீறுளான்றனை யிழந்தே.

மன்றினி லேறி வழக்கறுத் துரைக்கு மதிமையோ? மன்னுமா மகேசன்
ஒன்றிய நாட்டாண் மைக்கழ கத்தே யுஞற்றிய வொப்புர வாண்மை
வென்றியோ? தமிழின் மேன்மையும் சைவ விளக்கமும் பேணிய விறலோ?
அன்றியைம் புலனைக் கன்றிய திறலோ? ஐயகோ! யாதினை மறக்கேம்?

அரிய வன்னையைத் தம்பியை மக்களை அருமை நண்பரை யொக்கலைப்
பிரித லொண்டுற வென்னினும் வண்டமிழ்ப் பெருமைசான்ற சங்கத்தையும்
விரியும் பல்கலை யோங்குகல்லூரி விளங்கு மாணவர் குழாத்தையும்
மருவு மின்னுயிர் பிரித லென்ன நீ பிரிவதோ? உமாமகேசனே.

திருநாவுக் கரசன்பின் பெருமையினைச் சிறியரேம் பேசக் கேட்டே
உருகாநின் றரசனைய தோற்றமுடன் உலகநா யகனைக் காணப்
பெருகார்வ முடன் சென்ற பெரியோய்! நின் பெரும்பிரிவு கருதா தீண்டு
வருநாளை யிரவுபக லெண்ணியே மதியற்றோம் மாழாந்தோமே.

தமிழவேள் தனிமாண்பு

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் அரசர்க்குரிய பண்புகள் இயல்பிலே அமைவரப்பெற்றவர்; அவர், செல்வம், பதவி, ஆணை என்பவற்றிற் பிறர் எத்துணைச் சிறந்தோராயினும் அவை கருதியே அவர்க்கு வழிமொழிதலுடைய ரல்லர்; செய்தக்க செய்யாக் குறையோ, செய்தக்க வல்லன செய்யுங் குற்றமோ அவர்பாற்காணின் அவர் கண்ணெதிரே கழற்றுரை கூறித் தெருட்டு நீர்மையர்; முற்கூறிய மூன்று மில்லாரை அவையின்மை யேதுவாக மீக்கூறுதலுடையா ருமல்லர்; அவர் பாற் கடப்பாடறியும் பண்புடைமை காணின் அவர்க்கு வழிமொழிதலுஞ் செய்வர்; மற்று, எனக்கிது செய்க வெனு எக்காலத்தும் யாரொருவர் கண்ணும்

யாதொன்றனையும் இரத்தலறியார்: ஒல்லுவ தொன்றனைப் பிறர் இரந்த வழி அதனை மறத்தலு மறியார்: இன்னவாற்றால், புறப்பாட்டிலே, நம்பி நெடுஞ் செழியனைப் பேரெயின் முறுவலார் கூறிய 'வலிய ரென வழி மொழியலன், மெலிய ரென மீக்கூறலன், பிறரைத் தான் இரப்பறியலன், இரந்தோர்க்கு மறுப்பறியலன்" என்னும் ஏத்துரைகள் நம் தமிழவேளுக்கும் நற்கியையு மென்க.

மற்று, சால்பு என்னும் பொறையினைத் தாங்கிய தூண்களென வள்ளுவனார் தெள்ளியுரைத்த அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐங்குணங்களும் தமிழவேளை அணிசெய்யாநின்றன. "பெருமை பெருமித மின்மை" என்னும் அறிவுறூஉக்கண்டு அவர் அடங்கினரோ, அவரது தருக்கின்மையானாம் பெருமையை நோக்கி அவ்வுரையெழுந்ததோ என்னுமாறு அவரது அடக்கம் சிறந்து திகழ்ந்தது. தெய்வப் புலவர் நட்பியலினின் மறைமுகத்தாற் கூறிய வரைவின் மகளிர், கள், சூது என்பன அவரிருந்த திசையினும் சென்றறியாதன மற்றும்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" "அறிவறிந்தாள்வினையின்மை பழி" என்னும் மறைமொழிகளைக் கடைப்பிடித்து, இஃது அருமையுடைத் தென்று அசாவாது, வினை செய்தலானாம் இன்னாமையை இன்பமெனக் கொண்டு இடையறாது முயலும் அவரது மீக்கோளும் ஊக்கமும் விளம்புதற்கரியன. அவர் அங்ஙனம் முயறற்கு மேற்கொண்ட வினைதான் தண்டமிழ் புரத்தலே. இரவன் மனையில் எழுந்த குழவியாம் கரந்தைத் தமிழ்ச்சங்கம் இப்பொழுது கந்தனையனையவர் கலைபயில கழகமும், பந்தினை யிளையவர் பயிலிடமும், மன்றமும், பொதியிலும் மருத்துவக் கூடமும், ஆர்தமரற்றோர் சேர்தருமில்லமும், பட்டிமண்டபமும், பரந்த நூல் நிலையமும், பிறவுமாம் உறுப்புகள் திறவிதிற்பெற்ற பேரரண் உற்ற பெற்றிதான் செந்தமிழ்ப் புரவலர் நந்தா முயற்சியின் வந்ததோர் பயனேயன்றோ? அவர் எவ்வுழிச் செல்லினும், யாருடன் பேசினும், யாது புரியினும் யாவும் தமிழின் பொருட்டே யாகும்.

இங்ஙனம் சிந்தையும், உரையும் செய்கையு மெல்லாம் செந்தமிழ்க் காக்கிய திண்டிறற் குரிசில் செந்தமிழ்ப் பயன்ாம் சிவநெறி பேணுந் தவமுடையாரு மாயினர். கனிந்த அன்பின் நனைந்த வுள்ளமொடு திருப்பதி தோறும் விருப்புடன் நடந்து கண்ணுதற் கடவுளை நண்ணி வழிபடும் ஆர்வம் இவர்பால் அளவின்றாயது. ஐயாறப்பர் திருவுலாப்போதும் ஏழ்பதிவிழாவில் மெய்ப்பையின்றியும் மேலுடையின்றியும் வெம்மை மீதுறத் தண்மையின் நடக்கும் இவரது எளிய தகைமையைப் பல்லாயிரவர் பார்த்துளம் நெகிழ்வர். மற்றும், யாவர்க்கும் இன்னாசெய்யாமையும், எளியார் பால் இரக்கங் கோடலும் கற்றாரைக் காதலித்தலும், நட்டாரை உயர்வு கூறலும், பெரியோரைப் பேணியொழுகலும் முதலிய இவர் பண்பனைத்தும் உரையில்

அடங்குவவல்ல. சுருங்க வுரைக்கின் இவரது வாழ்க்கை ஒரு கல்விக்கூடம்: உயர்நிலை விரும்புமொருவன் அதனிற்புகுந்து பயிறல் வேண்டும்.

ஆ! இப் பெருந்தகையாம் அருந்துணையைப் பிரிந்தேயும் இருந்தேம்யாம்! எம் அன்பிருந்த வாறென்னே!!

ந.மு.வேங்கடசாமி நாட்டார்.

இழந்தனமே இழந்தனமே எடக்ரடநதைத் தமிழ்ச்சங்கத் திறைவா நின்னை
இழந்தனளே என் தமிழ்த்தாய் இரங்கிநின்றாள் இனிப்புரியும்
செயல்தா னென்னே
இழந்தனரே ஏங்கிநின்றார் இல்லமுறை மாணவகர் எளியர் ஆனார்
இழந்தனமே பிரிந்தனமே இனித்துணையார் காண்பதெப்போ
தொங்கள் கோவே

ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமே யில்லாத உரவோய்! நின்னை
இப்பாரில் காண்பதெவண்! இனியமொழி கேட்பதெவண்! எந்த நாளும்
தப்பாரும் உரையாத தகவுடையோய்! தணந்ததுவும் பொய்யோ? மெய்யோ?
இப்பாரில் ஒப்புகிலர் எமைத்துறத்தல் நினக்கழகோ என்செய் வேமால்

செந்தமிழிற் றிளைப்புண்டு தீந்தமிழின் சுவைமாந்தத் தேவர் கோவாம்
கந்தனொடும் உலகீன்ற கன்னியொடும் புவியடைந்தான் கபாலி யென்பர்
சொந்தமதா யுனையடைந்த தடங்கண்ணி யிடப்பாகன் சூழ்ச்சியென்னே
எந்தவகை நினைப்பிரிந்த இத்துயரம் ஆற்றிடுவோம் எழிலார் கோவே!

தமிழனையே நின்னுடலாம்: அவள்புகழே நின்னுயிராம்: தரணி மீது
தமிழ்வளமே நின்னுளமாம்: தமிழ்நெறியே நின்விருப்பாம்: தக்கோர்
போற்றும்
தமிழுயர்வே நின்னுஞ்ழ்ப்பாம் தமிழ்ப்பெருக்கே நின்பொருளாம்:
தகைமைசான்ற
தமிழ்மொழியே நின்னுயிர்ப்பாம் நினைப்பிரிந்தோம் இனித்துயரம்
தாளமாட்டோம்

அன்புடனே உவந்தழைக்கும் ஆர்வச்சொல் கேட்போமோ? அணிசேர்
யாக்கை
என்புடனே தமிழ்க்குரித்தாம் இயல்பதனை எண்ணுவமோ? யாண்டும்
என்றும்

வன்புடனே இடித்துரைத்து வழிப்படுத்தல் காணுவமோ? மாண்பொன் றின்றி
வன்புடனே உயிர்குடித்த மறலியுயிர் வாழுவனோ? மயங்கி நின்றோம்

தஞ்சைவளர் கரந்தைநகர்த் தமிழ்ச்சங்கம் கல்லூரி தாமேகண்டாய்!
விஞ்சுபுகழ் தமிழ்வளர்க்க நஞ்செல்வன் கல்லூரி விளங்கக் கண்டாய்!
எஞ்சலிலா மாணவர்க்காய்த் திக்கற்றா ரிலங்கண்டாய் இனியார் நின்போல்
அஞ்சலிலாப் பணிபுரிந்து தமிழ்வளர்ப்பார்! நினையிழந்தோம் அந்தோ!
அந்தோ!

வடநாடு சென்றுள்ளாய்: வந்திடுவாய்: எனக்கருதி வருநா ளெண்ணி
உடனாக நீகுறித்த செயல்பலவும் முற்றுவித்தே யுள்ளந்தன்னில்
திடமாக நீவருவாய் செயல்மகிழ்வாய் என்றிருந்தோம் தியங்கி நிற்க
வடநாடு தனில்மறைந்தாய் நின்முகமுங் காணாது வருந்தி நின்றோம்

மண்ணுலகிற் றமிழ்த்தாய்தன் மகவிழந்தாள் மாணவர்கள் மாழ்கிநின்றார்
கண்ணெனவே நீபுரந்த கல்லூரி சங்கமதும் கவன்று நின்ற
உண்மணியே! உயர்தருவே! உமாமகேசுவரப் பெரியோய் உன்னை நீத்தே
கண்ணிழந்தோம் மதியிழந்தோம் கலையிழந்தோம் கதியிழந்தோம்

கலைசேர் கோவே
A.R. *முத்தையன்*

ஓ! இதுவும் கேட்பதுவோ! உமாமகே சுரக்களிறே உன்போல் என்னை
ஆ இனியார் புறந்தருவர்! அருங்கலமே தவச்சேயே அந்தோ! அந்தோ!!
நீ எனைநீத் தகல்வதுவோ! ஆ கெட்டேன்! இதனை முனம்
நினைந்திலேனே
ஏ எனக்கோர் தனிமகனே! என்றுதமிழ்த் தாயலறல் எங்கம் ஆய்த்தே!

பன்னாளும் தமிழ்மொழிக்குப் பணிபுரியும் பண்புடையை ஒருநீ என்றும்:
உன்னாலே தமிழன்னை பலபேறும் படைத்துநனி உயர்ந்தாள் என்றும்:
இந்நாளில் நீயன்றித் தவப்புதல்வர் தமிழன்னைக் கிலர்கள் என்றும்:
எந்நாளும் எவ்விடத்தும் யான் உரைத்தல் நின்னுளத்திற் கின்னா தாய்த்தோ!

அரிதுமுயன் றுயர்வுடைய கல்லூரி நிறுவினைஇங் கியாரு மின்றிப்
பரிவுறுபல் சிறுவருக்கும் உணவீந்து புரந்தனைபல் பணியுங் கற்றற்

குரியனவும் அமைத்தனைநற் பொருள்பலவு முதவியுல குறுதி செய்வான்
பெரிய 'தமிழ்ப் பொழில்' வளர்த்தாய் நீ பாண்டித் துரையவரிற் பெரியை ஐய!

தன்னாட்டிற் றமிழ்மொழியைத் தனிமொழியாச் செய்விக்குந்
தகைமை வாய்ந்தான்
பன்னாட்டிற் பரவிவரு புறமொழிஉட் புகாவாறு பாலித் திட்டான்
தென்னாட்டி லிவனிருப்பின் நந்நாட்டுந் தமிழ்பரவச் செய்வானென்று
விண்ணாட்ட ருளத்தெண்ணி விருந்தாக உனை அழைத்த விரகோ ஐய.

எழிலிளமை மாறாத நின்றமிழ்த்தா யழுதிரங்க: இவணின் னோடு
பழகியவ ருளம்வெதும்பப்; பலநாளும் நீ புரக்கப் பண்பின் வாழ்ந்த
குழவிகள்பற் பலரலறக்: குடிபுலம்ப: நினதாட்சி கொண்டு வாழ்ந்த
'பொழில்' இரங்கச்: செல்வதுவும் தகுவதுவோ! ஐயதமிழ்ப் புரவலோயே.

அறம்புரிந்தாய் பொருள் செய்தாய் தமிழ்வாழக் கண்டின்ப மார்ந்தாய்:
சார்ந்தோர்
குறைதவிர்த்தாய் இளஞ்சிறாஅர் பல்லோர்க்கு மெந்நாளுங் குன்றாச் செல்வ
நிறைவளித்தாய் அரசாலும் இசைபெற்றாய் இறைவனையுண்
ணினைந்தாய் ஈண்டுப்
பெறுவவெலாம் பெற்றாய் நீ நம்பிநெடுஞ் செழியனிலும் பெரியை ஐய!

மொழியினுக்கு நீபுரிந்த பலதொண்டும்: மேற்கொண்ட முயல்வும்; முன்பு
பழகியவர் போலெவர்க்கும் நன்றாற்றுந் தனிப்பண்பும்: பார்த்த உண்மை
வழிநிற்கும் நடுநிலையும்; யாநினைப்பேம் பிறருமுளம் மறிவார் என்றும்
'பொழில்' நினைக்கும் புவிநினைக்கும் தமிழ்நினைக்கும்
புலவர்களும் போற்றுவாரே.

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

சேவையெனும் நீர்பாய்ச்சிச் செந்தமிழாம் சீர்தருவை
பூவுலகி லேவளர்த்த புண்ணியனே - யாவரினி
நின்போல் வளர்த்திடுவர் நேருமாம கேசுரநீ
மன்னுலகம் சென்றாய் மதித்து.

செங்கதிரும் வான்மதியும் தெற்குவடக் கானாலும்
சங்கரன்மீ துள்ளன்பு தான்மாறாத் - துங்கஞ்சேர்
சீருமாம கேசுரனே; சென்றனையோ விண்ணுலகம்
பாருலகப் பற்றைப் பகைத்து.

K. சோமசுந்தரம் பிள்ளை.

(வெண்டளை தழுவிய கொச்சகக்கலிப்பா ஒரு போகு)

அந்தோ! மிகக்கொடிதே! அந்தோ! மிகக்கொடிதே!
நந்தாப் புகழ்பெருகும் நற்றமிழர் வாழ்வளிக்கும்
சிந்தாமணியாகும் செந்தமிழின் தொண்டிற்கு
வந்தாரை எங்கோ மறைத்தல் மிகக்கொடிதே!
நொந்தேம் யாம்; என் செய்வேம்? அந்தோ! மிகக் கொடிதே!

சொல்லரிய துன்பந்தாம் துய்த்தழுங்கால் ஈண்டுவந்து
வெல்லத் தமிழ்அமிழ்தால் வெம்பசிநோய் வீட்டிவரும்
வல்லவரும் வள்ளலரை வாய்த்தவொரு நற்பொழுதில்
செல்லவிட்(டு) ஏங்கித் தியங்கல் மிகக் கொடிதே!
நல்லவரைத் தாம் பிரிதல் நாளும் மிகக் கொடிதே!

மக்கட்(கு) உழைப்பதுதம் மாநோக்க மாய்க் கொண்டே
எக்கணமும் தம்வாழ்வை எட்டுணைஎண் ணாதுழைக்கும்
தக்கவரைக் கன்றைவிட்டுத் தாயைப் பிரிப்பதுபோல்
ஒக்கல்அழ வேறுபிரித்(து) உய்த்தல் மிகக்கொடிதே!
சொக்கையழித் தீண்டஞரைச் சூட்டல் மிகக்கொடிதே!

அறுசீர் விருத்தம்

முத்தமிழை வளர்த்துயர்ந்த மூவேந்தர் இன்றில்லை; மூவேழ் வள்ளல்
இத்தருணம் ஈண்டில்லை எனத்தூங்கித் தமிழரெலாம் ஏங்குக் காலை
மெய்த்தகைநற் றெண்டாற்ற மேவிவரும் புரவலரின் மேன்மை வாய்ந்தார்
நத்தையுளோர் முத்தெனவே நற்றஞ்சை பயந்திட்ட நம்பி யாரோ?

தேங்கமழும் தீந்தமிழின் திரைக்கடலின் கரைகண்டுள் தெளிந்து நல்ல
ஆங்கிலமும் கற்றுணர்ந்தும் அடங்கிநல் வழக்கறிஞர் அடியார்க் கன்பர்
பாங்குலவும் உமைப் பெரியார் பைந்தமிழர் தனிதலைவர் பாரில் இன்று
நீங்கியது கேட்டுலகம் நெஞ்சுதுடித் திடச்சூழலும் நிலைமை கெட்டே.

வள்ளுவரோ(டு) அந்தோ! நம் தெள்ளுதமிழ் வகைபோயிற் றுற்ற வாகை
மள்ளரெலாம் சேரனொடு மறைந்ததொல்லை வரையாமல் வழங்கும் வண்மை
உள்ளமுயர் குமுணனொடும் ஒளித்த(து) உமாமகேசன் எனும் உயர்ந்தா னோடு
கள்ளமிலாத் தமிழ் உழைப்பும் கருணையுமெய் எல்லாமும் கரந்த இன்றே.

(வேறு)

வருந்தும் தமிழர் மனமகிழ, வண்மை யோங்கத், தமிழ்மகளின்
அரந்தை; ஒழிய முன்னோரின் அரியசெல்வநிரை மீட்கக்;
கரந்தைப் பதியில் கழகமொன்று கண்டீர்; உழைத்தீர்; களைப்பின்றி!
பொருந்தும் எண்ணம் முற்றாமுன் போய்விட் டீரோ? புரவலரே!

சாற்றற் கரிய தனிச்சிறப்பார் தமிழர்க் குரித்தாய்த் தமிழ்ப்பொழிலொன்
றாற்றிப் பொழிலின் அழகுமணம் அளித்தீர் எளிய மாணவர்க்கோர்
ஊற்றுக் கலைபோல் ஒண்டமிழை ஓதி யுணர்வான் கலைவிளக்கம்
ஏற்றி வைத்தீர் ஏன் மறந்தீர்? எங்கே சென்றீர் அண்ணாவோ?

நிலையிற் றிரியா தடங்கியபேர் நீதிக்கட்சி நெறித்தலைவா?
கலையிற் சிறந்த இராவ்சாகிப் கன்னித் தமிழ வேளே சீர்
மலையிற் சேர்ந்த புகழொளியே! மாணார் தமிழ்நூல் வழுத்துமலர்க்
குலையும் இலையும் கொண்ட. பொழில் கூட்ட நினைத்தும் மறந்தீரோ?

கொச்சகக் கலிப்பா

பவஞானம் பட்டொழியப் பகலிரவாப் பைந்தமிழின்
சிவஞானம் மிகப்பரவும் திறல்ஞானி சுவாமிகளின்
தவஞானம் உளவெளியில் தாண்டவமா டும்பெரியீர்
அவஞானம் ஒழித்தவுயர் அருளரசே! மறைந்தீரோ?

கைம்மாறு கருதாவும் கருணைமுகம் காண்பேமோ
உய்ம்மா(று) ஒன்றுணர்த்தீரோ? உமைப்பெரியீர் உம்தொழிலைச்
செய்ம்மாறுஞ் செப்பீரோ? சென்றீரோ இனித்தமிழர்
எய்ம்மாறும் அறியாமே இவண்ஏங்கிக் கலங்கினமே.

பொன்னவரும் உடல்மறைந்த பொழுதிலும்யாம் உமைமறவோம்;
தென்னவிரும் செழுந்தமிழ! செய்வதொன்றும் அறிகிலமே;
என்னவுல கியற்கைஇது! எழிலிறைவன் இணையடியை
நின்னழகார் உயிர்அமைதி நிலவிடுவான் இறைஞ்சுவமே!

ஔவைத் தமிழ் மாணவர் கழகத்தினர்-பாநுகவி மாணவர் கழகத்தினர்

வாடாத கரந்தைநகர் வேம்புபெறு மாமணியாய் வந்த தோன்றால்!
வீடாத புகழுமா மகேசுவரப்பேர் ஏய்ந்திட்ட மேலோய்! நின்னைக்
கூடாத நாணினது கூற்றுமடா நாளெவ்வையும் குறிப்பின் விண்ணிற்
கூடாத பகனாளிற் கொள்ளுவமாற் கூற்றுவன் கைப்பட்ட கோமான்!

தென்னாட்டுக் கூற்றவனும் வடநாடு சென்றநினைத் தேடி வந்தான்;
எந்நாட்டு மிவன்திரிந்தே யெவ்வுயிருங் கோடலினா லிவற்கு நாமம்
பன்னாட்டு மக்களும்வெங் காலனென வுரைத்திட்டார் பாவி தன்னைக்
கொன்னாட்ட மூன்றுடையாற் குறுகி அவற் கொலைசெய்யக் கூறுவாயே.

ஒப்புயர் விலாது தமிழகம் விளங்க ஒரு தமிழ் வளர்த்திடு தென்னன்
வெப்புநோய் நீங்கப் பாடிய ஞான சம்பந்தன் விரும்பிய பதிகம்
அப்பிடை மூழ்கு நினக்குவந் துற்ற அருஞ்சுரம் நீக்குதற் காண்டு
எப்படி யெய்தும் என்பது தெளிந்தோ ஏகினை ஏகினை ஏந்தால்!

வீடு மறந்தனை; நாடுமறந்தனை; விழைவுற்றார்
கூடு மறந்தனை; கூடு மறந்தனை; குழைவுற்றேம்
ஏடு மறந்தனை; காடு நினைந்தனை யெளியேந்தம்
வீடு மறந்தனை வீடு நினைந்தனை வியவேங்கொல்

மருந்து. புரையு நின்கூற்ற மடுப்பக் கொல்லோ தென்கூற்றம்
விருந்தி னமர்ந்து நினைக்கொண்டான் மேவி யாங்கவ் வெய்யோற்குப்
பொருந்து மினிய வறவுரைகள் புகன்றெம் மோரின் இனியாரை
அருந்த லைய எனவுரைத்தவ் வறவன் பெயர்க்கே யமைவிப்பாய்.

பெற்றவளைப் பேணாத பேரறிவிற் பெரும்புலிகாள் பிழையே நீவிர்
உற்றசெய லெனவுரைத்து முணராத தமிழர்முகத் துன்னுங்காலை
மற்றுவிழித் திடல்பவமா மவர்நாட்டு மறைந்திடலு மறமா மென்னக்
கற்றுணர்ந்தா யயலகத்துப் போய்மறைந்தா யெமை மறந்தாய் கையே
யையா!

செ. சிங்காரவேலுச் சேதிராயர்

ஐயகோ! எம்மைப் புரந்து வந்த செந்தமிழ்ப் புரவல! தமிழவேளே! நீ. இம்மண்ணக வாழ்வினை நீத்தமை. உண்மையோ? எம்போன்ற எண்ணிலா எளியவர் தமக்கு உற்ற. இருமுது குரவராயிலங்கி யிருந்தனையே: நினைக் காலன் எனுங் கண்ணிலி, எவ்வாறு கொடு செல்லத் துணிந்தனன்? ஆ! கால. என் செய்தாய்? மதியிலி! மாதமிழைப் புரந்த எம் தமிழவேளைத் தொட்டதனால். நின் மடமையின் எல்லையைச் சுட்டியவனானாய்... என்னை?

உணர்விழந்தேன்: ஊக்கங்கெட்டேன்: செயலற்றேன். தமிழவேளே! நின் பிரிவு என் குலை நடுங்கச் செய்கின்றது. என் பால் தோழமை பூண்டு. முகமலர்ந்து இன்பமொழிபேசி. என்குறை தவிர்த்து, எனக்கின்பம் விளைப்பையே. அறுசுவையோடு அன்புரை கலந்த உணவை நின்னோடு அளவளாவி யிருந்து பல கால் அயின்றனனே பாவியேன். யான் பெற்ற வின்பம் பெறுக என் அன்பர். எனும் நின் பண்பால். பாவியேன் பெற்ற பயனும் திருவும் நலனும், இனி எந்நாள் எய்துமோ?

என் தலைவ! நின்னைப் பிரிந்து வாழும் என் உழுவலன் பிருந்த வாறென்னே?

அந்தோ! கால! அறனிலி! ஆ! ஆ!
அருமைத் தலைவனின் ஆருயிர் கவர்ந்தனை
தனக் கொப்பில்லாத் தண்டமிழ் மொழிச் சீர்
மீட்டிங்களிக்க வேட்டே கரந்தை

மாநகர தனிடை மாட்சிசேர் சங்கம்
புரந்த புரவலன்; புலவருக் கென்றும்
அடையா வாயிலா' ரணிசே ரில்லினன்;
சொல் செயல் தோற்ற மிவற்றால் தூய் தமிழ்த்

தொண்டு செய்பவர்க்குத் துணைபுரி மேலோன்;
தமிழ் வாழ் வுறவே தம் வாழ் வின்பம்
அனைத்துந் துறந்த அறவனென் கோமான்;
உமாமகே சுரப்பேர் உற்ற விவ்வேள் போல்

தோன்றியோர் யாரே? தோன்றுவர் கொல்லோ?
ஈண்டிங் கீடாய எவரையா முரைப்பேம்?
இத்தகைப் பண்பெலாம் இனிதுறக் கொண்ட
அறவனை அறனிலி ஐயகோ மாய்த்தாய்.

மாய்த்தனை யாயினும் வண்டமிழின்பம்
உண்டவெம் முரவோன் உயிர் உயர்ந்தொளிரும்
ஈறி லாதவனிணையடி எய்தி
ஆறாவின்பத் தாழ்ந்ததை யறிவோம்

ஆயினும்,
அவன் போலெம்மை அளிகொடு புரப் போர்
யாரிங்குளர் கொல்? யாருளர் கொல்லோ?
அயர்ந்துழல் எமக்கி யாருளர், அந்தோ!

- கரந்தை-சிவ-குப்புசாமி

அருட்கடலே! குணமலையே! யன்புருவே! இன்புருவே! ஐயா! நின்னை
இருட்கடலு ளுழன்றவர்கள் தாய்தந்தை யாகவடைந் தென்று நன்றே
தெருட்பெறவே யுண்டியுடை யவர்க்குதவி வளர்த்தறிவை யூட்டித்தேடும்
பொருட்-குவையை மகிழ்ந்தளித்தாய் போயொளித்தா
யவர்நிலையென் புகலுவாயே!

புலமைக்கோர் வரம்பெனவே நின்றுயர்ந்த தனித்தமிழிற் பேசுவாய்நீ
புலமைக்கே மதிப்பளியும் எனத்தமிழர்க் கறிவுறுத்திப் புகலும் வானோர்
புலமுற்றுத் தனித்தமிழின் மாட்சியவர்க் குரைக்க வெனப் புகுந்திட்டாயோ
புலமுற்றார் தமையுயர்த்தி வாழ்வித்தோய் எமைப்பிரிந்து போதலென்னோ?

சின்னாளின் முன்னருயர் செந்தமிழை வளர்த்துயர்ந்த சீர்பெற்றோருள்
மன்னாகுஞ் சேதுபதி பெத்தாச்சி மாணிக்க வள்ள லோடு
மன்னாரும் புலவர்துணை நமச்சிவா யப்பெயர்கொள் வள்ளல்தாமும்
துன்னா ராய்ச் சென்றனர்நீ யவர்க்கீடா யிருந்தனை பின் செல்லலாமோ?

உயிர்பிரியும் நாள்முதனா ளரிமாவின் நோக்கோடங் குயர்ந்து, மேய
பெயர் பெருகுங் கற்கத்தா நகருற்றுத் தமிழர்களின் கடமை பேசி
மயர்வறுசீர் மனநிலையை யுணர்த்தியுயர் நாடடைந் தாய் வள்ளால்! நன்றே
துயர் கெடுக்கத் தோன்றியுயர் புகழ்பொறித்தாய் நின்போன்றார்
தோன்று வாரோ?

உயர்ந்தொளிருந் தமிழ்ப்புலவ ரெல்லோருஞ் சுற்றமென ஒன்ற நின்றாய்
உயர்ந்ததலை நட்பினுக்கோ ரிலக்கென்ன வவருரைக்கும் உழுவ லாள!
மயர்வடைந்து யாம்வருந்த மண்ணுலகை நீத்தேகல் மாண்பதாமோ
உயர்வுடையாய் இவ்வாறிங் கொன்றியபிற் பிரிதலெவன் உரைசெய்
வாயோ?

அரசியலின் தலைவரெலா மென்றலைவர் மறைந் தாரென் றலற; வான்ற
உரனுடைய வறிஞரெலா மோரறிஞன் மறைந் தானென் றோதிவாட;
வரன்புகழோ டுனைவளர்த்த தாயலறி மனமு டைந்து வருந்த வெங்கும்
அரந்தையுடன் றமிழரெலாம் உயிர்கூம்ப நீமறைதல் அழகி தாமோ?

நிலவுலகத் துயிரெழுச்சியுறவீர வுரைவழங்கி நிலைத்த கொள்கை
நலமுறவே கடைப்பிடித்தின் றமிழ்த்தொண்டு புரிந்துயர்ந்த நன்மையாற்றி
புலமினிக்குந்தமிழ் தமிழே போற்றிடுமி னெனக்கூறிப் போற்றும் பண்பு
வலமுறவே நின்பாலே யொன்றி யுறைந்தன மறைந்தாய் வள்ளா லந்தோ?

நின்னுடைய சொல்லாலும் பொருளாலும் எழுத்தாலு முயர்ந்து நின்றோர்
பின்னருளை மறந்தாலு மவர்வரி னன்றவர்க்குதவி பேசும் பண்பு
நின்னிடமே கண்டனம்யாம் பலகழகத்துறுப் பினனாய் நிரலினின்று
பன்னரிய நலம்புரிந்தாயினியவரென் செய்திடுவர் பகர்ந்திடாயோ!

உமாமகேசுவரன் தமிழ் மாணவர் கழகம், தஞ்சை.

செந்தமிழும் தமிழகமும் செய்ததவப் பயனாகித் திகழ்கரந்தை
வந்தவுமாம கேசுவரப்பேர் வாய்த்ததகாய் வேம்பருளும் மணியே! நீதான்
இந்தநிலத் தரசர்பொருள் யாவர்க்கு முரியவென எழில்சே ரையாற்
றந்தமன்னர் கல்லூரி தமிழர்க்கு மமைவித்தாய் மறைந்தா யையா!

மாண்புமலிந் திடுசங்க நூல்களுரை வகைப்படுபுல் மரங்க ளாய
காண்பினிய நமது பெருந் தமிழ்ச்சங்கப் பூங்காவில் காணவைத்துப்
பேண்பெரிதும் பயனுடைத்தென் றவைவளர்த்த முயற்சியுடைப்
பெரியோய்! நின்னைக்
காண்குவவோ அவைகாணா கருகுவவால் ஆவிழந்த கன்றி னையா!

வித்திட்டு நீர்பாய்ச்சி வளர்த்துமிகு பயன்காண்செய் வினைஞர் போனீ
பத்துற்ற நல்லாய்ச்சிப் புலவர்ப(ள்)ளி நிறுவியதிற் பயின்று தேறும்
மெச்சுற்ற ஒருபுலவர்க் கண்டுமகிழ் திறந்திடனான் விரிநீர் ஞாலம்
நச்சுற்ற நசையென்றாய் அந்நசையும் பாழ்க்கவினை நண்ணினாயே.

தமிழவே ளென்னுந் தகைப்பேருந் தண்செந்
தமிழ்ப்புரவ லர்ப்பேருஞ் சார்ந்தாய் - அமிழ்தனைய
நீபுரந்த செந்தமிழும் நின்றேங்கி நின்றிடவே
நீதுறந்தாய் நீளிந் நிலம்.

அ. வடிவேலன்.

வள்ளுவரும் கம்பருமே வான்றமிழ்க்கோர் கதியென்பார் மலிந்த மேலோர்
உள்ளுகந்திங் காராயில் நீயுமதற்குள்ளகதி ஒருவனாகித்
தெள்ளுதமிழ், தனித்ததமிழ், செந்தமிழென் றெவ்வெவர்க்குந்
தளியவைத்துப்
பிள்ளை உமா மாகேச்சுரனே பிரிந்தனையால் எந்துயரம் பேசொணாதே!

பரந்ததனித் தமிழ் மொழியே பாருலகில் பரவுதற்குப் பாடுபட்டும்
கரந்தைத் தமிழ்ச் சங்கமென்று கருவுயிர்த்தும் அதை வளர்த்தும்
காத்தும் வந்தாய்!
நிரந்தரமாய்க் கல்விகற்கும் மாணவர்க்கும் மானுடர்க்கும் நிலையாய் நின்று
சுரந்துதவி நனிபுரிந்தாய் சொர்க்கமிதை விடப் பெரிதோ சொல்வாய் ஐயா!

எண்ணரிய மாணவர்க்கும் எளியவர்க்கும் தாய்மொழியில் ஏற்றகல்விக்
கண்ணளித்த பெருந்தகையாய்! கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாய்! காதலோடிம்
மண்ணளித்த பெருந்தவத்தால் மானிடம்பெற்ற வதரித்த வள்ளால்! நிற்கு
விண்ணளித்த பதவியென்னே? இச்சுவையில் அதுபெரிதோ விளம்புவாயே!

தெய்வதமிழ் வளர்ப்பதற்காய்ச் சேயனென அவதரித்த செல்வா! நீயும்
உய்வதரு ளிறைவனடி உயர்ந்ததெனச் சென்றனையோ ஓகோ யாரே
மெய்வருந்தி நின்போன்று மேதினியிற் பிறர்க்குழைப்பார் மேலும்
ஆன்றோர்
பொய்யுலகீ தென்றனரே அது நிசமென்றுணர்த்தினையோ புகழ்மிக்
கோனே!

அன்னையெனும் தமிழ்மடந்தை ஆற்றலுறும் மைந்தர்பலர்
அடைந்தாளேனும்
நின்னையவ ளீன்றதனால் தாய்நாட்டில் அரசோச்சி நின்றாளென்போம்
சென்னை செனெட் மெம்பரெனச் சிறந்துநின்றாய் எமைப்பிரிந்து
சென்றாய்!ஆனால்
உன்னையெம துளம்மறப்ப தெங்ஙனங்கொல்? அதற்கொர்வழி
உரைசெய்வாயே!

பசுபதியாஞ் சைவநெறி; பைந்தமிழாந் தெய்வநெறி, பரப்புமாறோர்
சிசுவெனவே தஞ்சைநகர்க் கருந்திட்டைக் குடிபுகுந்த சீரோனான
வசுநிகர்த்த நினதரிய வாணாளை இழந்துநனி வாடாநின்ற
விசுவருட மென்ன ஒரு விசுவாச மற்றதென விளம்பலாமே!

முத்தமிழை யாதரிக்க முன்வந்தே ஊக்கமொடு முயலா நின்ற
வித்தகமே!ஆ! உமா மகேச்வரமே! புலவருக்கோர் விருந்தே நின்னை
இத்தரையில் இந்நிலையில் இவ்வளவில் இவணிழந்தே ஏங்காநின்ற
சித்திரையை வருடமுதல் மாதமெனச் செப்புதலும் சிறந்ததாமோ!

கொள்ளையெனப் பிறமொழிகள் குவலயத்திற் பெருகியுமென்
கூறுந்தோறும்
உள்ளமதி னுள்ளினிக்கும் உயர்ந்த தமிழ் வளர்ப்பதற்கே உதித்த நின்னைப்
பிள்ளைமதி யாலிழந்து பெருந்துயரில் மூழ்கிநின்ற பெருமை சான்ற
வெள்ளியெனும் கிழமையினை வெறுங்கிழமை என்பதிலும்
வியப்பிங்கென்னே!

சங்கமிது தழைத்தோங்கத் தக்கபொருள் தானீட்டித் தந்தாய், மேலும்
அங்கமிகு தொழிற்கல்வி ஆற்றுதற்கும் அணிநிலையம் அமைத்தாய்;
இன்னும்
பொங்குபொருள் போதாதால்"தருக" வெனப் போற்று தமிழ் பொருந்த
முன்னர்
இங்களித்த சிவபெருமா னிடங்கேட்கச் சென்றனையோ இயம்பு வாயோ!

"இறப்பவர்கள் எழுவதில்லை" என்பதுமெய் என்றாலும் ஏந்தால்! நின்னை
மறப்பதற்கு மருந்துமில்லை வாழ்வுநிலை என்னென்பேம், மாயம் மாயம்!
சிறப்படைதல் அவரவர்பால் செறிந்தபுகழ் ஆமென்றே தேறப்பெற்றேம்
பிறப்பறுத்த பெருந்துறவி! நின்பேரிங்கழியாது பிறங்கிற் றன்றே.

பழந்தமிழின் சுவையுணர்த்தப் பாலகனா யுடம் பெடுத்த பண்பா! நின்னை
இழந்தனம்யா மென்னிலமே இறைவனிடத் தேயேகி இனிதவற்கோர்
குழவியென யானைமுகன் ஆறுமுகன் தம்பி எனக்குலவி வாழ்க
விழைவினொடு வாழ்த்துகின்றோம் வாழியநீ சாமீபம் விரவி மாதோ!

நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள்.

திருவார் தஞ்சைக் கரந்தையினிற் றிகழ்வே ளாண்மை யகம்படிமைக்
குருவார் குலத்து வேம்பினிடைக் குலவு குருந்தா கியவரசே!
தருவாய்த் தமிழைத் தமிழர்தமைத் தாங்குங் குரிசில்! இத்தரையில்
மருவார் புகழு மிசையாளா! மற்றுங் கரந்தைத் தமிழ்வேளே!

விதியா லிராதா கிட்ணனெனு மிக்கோன் கண்ட வியன்கரந்தைப்
பதியிற் சீரார் தமிழ்ச்சங்கம் பாலித் தருளெம் புரவலனே!
கதியில் சிறுவர் பயிலுதற்காங் கல்லூ ரிதனைக் கண்டவனே!
நிதியிற் புலவர் தமக்கெல்லா நிறைந்த வுபகா ரியுமானோய்!

வாக்கான்மனத்தாற் செய்கைதனால் மாறாப் பெரியோய்! மதிவலத்தால்
தூக்கி வினைசெய் திட்பமுளோய்! தூய நினைவே கொளுமுளத்தோய்!
ஊக்கப் பாட்டா லெவ்வெவர்க்கு முறுதி பயக்கு மன்பதனைத்
தேக்கி வேண்டு வனபுரிந்தே திசையின் முற்றுஞ் சீர்த்தியுளோய்!

மேனாள் மதுரைத் தமிழ்ச்சங்கம் மேலோர் மதிக்கும் பாண்டியர்போல்
ஆனாச் சீர்த்திப் புலவனுமா யண்ணல் பாண்டித் துரைபுரந்தான்
தேனா ராத்திச் சோழர்பிரான் சிவணக் கரந்தைத் தமிழ்ச்சங்கம்
வானோர் புகழ நீபுரந்தவ வானும் புரப்பான் சென்றனையோ?

புலவ ரெனப்பேர் கொண்டுமெவன் புகழ்ச்செந் தமிழின் சுவையறியீர்
புலவ ரெனுஞ்சொல் தமிழன்றோ புரப்பீ ரதனாற் செந்தமிழே
புலவ ரவியிற் சுவைமிகுத்த பொலஞ்செந் தமிழின் சுவைநுகர்வீர்
புலவ ரென்னும் பெயருடையீ ரென்னப் புகல்வான் சென்றனையோ?

அந்தோ தமிழின் சுவையறியா வகல்வான் செல்லத் துணிந்தனையே
அந்தோ கரந்தைத் தமிழ்ச்சங்கத் ததிபா! உமாம கேசுவரா!
அந்தோ சங்கம் புரப்பாரார் அந்தோ புலவர்ப் புரப்பாரார்
அந்தோ தமிழர்க் குறுதுணையா ரன்பி னெமக்குப் புகல்வாயால்

த.ச.மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

மறைந்தாயோ உலகைவிட்டு மறந்தாயோ தமிழன்னை மாண்புதன்னை
உறைந்தாயோ பரமபதம் உயர்பரம சரயுநதி யோரத்தேகிக்
குறைந் தாயோ வாணாளில் குணமான பணியாற்றுங் கொள்கை நிற்க
இறந்தாயோ பரமன்பேர் கொண்டவெழில் குணக்குன்றே என்செய்வேமோ.

எங்குற்றா யெங்கடைந்தா யினியெப்போ துனைக்காண்போ முலகு தன்னில்
கங்குல்வந்து சேர்ந்ததெனக் கருத்தழிந்தே யனைவோருங் கருதுஞ் சிந்தை
பங்கமுற்றார் பலனுண்டோ பரமனிதை யறியானோ பரிந்து மிக்க
இங்குற்றா ரென்செய்வா ரினியதமிழ் வளர்ப்பதற்கு இனிவேறாரே.

நம் தமிழன்னைக்கு அரும்பெருந் தொண்டாற்றிவந்த உமா மகேசுவரம் பிள்ளையவர்கள் பரமனடி நீழலை எய்தினதுபற்றி மிக வருந்துகிறோம். அன்னார் கைம்மாறு கருதாது கரந்தைச் சங்கத்தில்

காட்டியிருக்கும் அன்பை நினைக்கில் அவர்போல் இனியொருவர் அமைவது அருமையே. 'நத்தம் போறகேடு முளதாகுஞ் சாக்காடும்' இத்தகைய பெரியார் கட்கலல்லது மற்றையோர்க்கமையாது.

வேலப்ப செட்டியார்.

சென்றனையோ இவ்வுலகை விட்டகன்று கணப்பொழுதில் தேவ லோகம்
குன்றனைய தமிழ்த்தொண்டு தினம்புரிந்து பலர்க்கினிய குணத்தால் மெச்ச
நின்றிலங்குந் திருக்கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவனென நீடு வாழ்ந்தோய்!
என்றுனையாம் இனிக்காண்போம் பெருந்தகையே எழில்மிகுந்த
ஏந்தால்! ஏந்தால்!
கூற்றுவனாங் கொடுஞ்செயலோன் அந்தோவந் தேனழைத்தான்
கோமா னுன்னை
ஆற்றலுடன் நந்தமிழர் நலம்பெறுதற் கரியசெயல் ஆற்றி நின்றோய்!
சாற்றுதற்று நின்புகழை வகையறியோம் தவிக்கின்றோம் சாந்த சீல!
ஏற்றிடுக நின் ஆன்மா சாந்திஉமா கேச்சுரனே ஈடில் லோனே!

ந. சுப்பிரமணியம்.

வாமக் கரந்தைநகர் மாண்வேம்பு தான்பெற்ற
ஏம உமாமகேச வேந்தானீ - நாமமுடை
ஏமற் குயிரளித்தே யெங்கட் கினல்விளைத்தார்த்
தாமத்தன் தண்ணருள்சார்ந் தாய்.

மனையிருக்க வளமிருக்க மருவினிய நட்பிருக்க வசையி லாத
துணைமகவு மிருக்கவுளச் சோர்வின்றி நீ வளர்த்த தூய ராயும்
புனைவுபெறு தமிழ்ச்சேயு நின்முகம்பார்த் திருக்க விணில் புக்கா யையா!
துணையமரர் இனியவுரை கூறிநினை எதிர்ந்தனரோ துகளில் தோன்றால்

மலரினைப் பெறாத வண்டெனக் கால மழையினைப் பெறாதவண் பயிரின்
புலரியைப் பெறாத யுயிரெனப் பொங்கு புனலினைப் பெறாதமீ னென்ன
பலமனர் தம்மின் னுயிரெனப் புரந்த பாக்கிய மற்றிடு தமிழ்ச்சேய்
நிலவிரி நினது முகந்தனை எண்ணி நெட்டுயிர்ப் பெறிந்திடு மையா!

தமிழர்தாம் பேரற்றார் பேறற்றார் எனவுலகம் சாற்று மாந்தத்
தமிழர்தாம் வழங்குதனித் தமிழ்மொழியே நீயுமந்தத் தன்மை சார்ந்தாய்
அமிழ்தினிய நினைமதுரை நகர்வளர்த்த பாண்டி(த்) துரை அந்தோ
மாய்ந்தான்
இமிழ்கரந்தை நினைவளர்த்த எங்கோவும் மறைந்தன்னால் என்னே என்னே

மருத்துவமு மோவியமும் பொருளு மெண்ணு முதற்கலைநும் மாண்புமிக்க
புலவர்பள்ளித்
திருத்தமுறப் புலவரெனத் தேர்வார் தேறித் திசையெட்டும் புகழ்பரப்ப
வேண்டுமென்னும்
அருத்திகொடு முயன்றுபல பணிக ளாற்று மையாநிற் கொண்டதுவெங்
கூற்றமந்தக்
கருத்துமினி நிறைவுறுமோ நிறையச் செய்வார் யாவரோ காணகிலமாங்
கருத்தும்வேமால்

கல்லு முருகும்; மரங்குழையுங்; காண வினிய கொடிவாடும்;
புல்லு மிரங்கும்; புள்ளரற்றும்; பூத்த தமிழ்மாதயர்வுறுமால்;
பல்ல பல்ல பன்னியெவன் பாரி னுயிர்க ளெல்லாம் நின்
அல்லற் பிரிவா னழிவுறுமெம்ஐயா! ஒருகால் வருவாயோ.

ஐ.இராமையாச்சேதிராயர்

அயோத்தி,
(பைசாபாத்)
விசு.சித்திரை,உ.எ,
9.5.41.

அன்பு நிரம்பிய தண்டமிழ்த் தொண்டரே,

நம் அருமைத் தலைவரும், தண்டமிழ்த் தொண்டருள் முதல்வரும், பல்குடிக்கொடிகட்குக் கொழுகொம்பும், வீரத்திருமகனும் ஆகிய

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் (இராவ்சாகிப்) திரு.உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் இங்கு தம் வினையை ஒழித்துக் கொண்ட கடுஞ் செய்தியைத் தங்கட்கு ஆற்றெணாத் துயருடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தமக்கெனச் சிறப்பேதும் வேண்டாத் தம் உண்மைக் கருத்தினாலேதான், நண்பர் உற்றார், உறவினர், சங்கச் செல்வர்கள் எல்லாரையும் விட்டு, இங்கு அயோத்தியில், யாரும் தம் பெருமை யறியாதபடி, தனித்த முத்தி தேடிக் கொண்டார்கள் போலும்.

இவர்கள் பிரிவு கேட்டார்க் கெல்லாம் மாற்றொணாத் துன்பம் தரும். இவர்களுடன் தனித்திருந்து இவர்களை விட்டுப் பிரியும் தீவினை எனக்குத் தனியுரிமை யாயிற்று, என் செய்வேன்.

அ. கணபதி.

அன்பர் திருவாளர். உமாமகேசுவரம்பிள்ளையவர்களைத் தமிழுலகில் எவர்தாம் அறியார். அங்ஙனமறியத் தமிழ்நாட்டுக்குப் பேருதவி புரிந்தனர். தமிழை வளர்த்தனர். தமிழர்களை உயர்த்தினர். ஆம் வரை முயற்சித்து ஐயாற்றில் அரிய தமிழை நிலைப்பித்தனர். அதன் வழியே பல தமிழர்களை வித்துவான்களாக விளக்கினர். பல்லாண்டுகளாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராக அமர்ந்து இணையிலா வகையில் சங்கத்தை வளர்த்தனர். தஞ்சைத் தாலுக்காபோர்டு தலைவராகத் தங்கித் தமிழையும் தமிழ் வித்துவான்களையும் தமிழர்களையும் உயர்நிலைக்குக் கொண்டு வந்தனர். சென்னையிலும் அண்ணாமலை நகரினும் உள்ள யுனிவர்சிடியில் அங்கத்தினராக இருந்து, தமிழை வளர்க்கு மாற்றை அறிவித்து முன்னேறச் செய்தனர். அழைத்த பல இடங்கட்குச் சென்று, அஞ்சாது, தாம் மேற்கொண்ட கொள்கையை உரைத்து மகிழ்ச்சிவரச் செய்தனர். எங்கட்கும் எங்கள் போன்றார்க்கும் ஆலோசனைக்குரியராக இருந்தனர். அரசாங்கத்தாரும் அவருயர்வைக் கருதி ராவ்சாகேப் எனும் பட்டம் தந்தனர். தமிழரும், சிறப்பாகத் தமிழ்ப்புலவரும் தமிழவேள் எனும் பட்டஞ் சூட்டினரே. செந்தமிழ்ப் புரவலரென எங்கள் மடாலயம் தந்ததும் மிகப் பொருத்தம் உடையதே. பல வித்வான்கள் உடம்பு இவர்கொடுப்பித்த அன்னத்தால் வளர்ந்த தன்றோ? பலவகை உதவிபுரிந்த இவர் திடீரென மறைந்தனரே. யார், தாம் செய்யுந் தொண்டைச் செய்வரெனக் கருதினர்? எல்லாம் வல்ல இறைவன்பால் அவர் செய்துவந்த பத்தியை நாம் நன்றாய் அறிவமே.

தமிழில் வைத்துள்ள பற்றினும் சமயப்பற்று மிகப் பெற்றிருக்கின்றனரே எனப் பல அறிஞர்கள் பேசினரே. இறைவனை அடைந்த இவர் நன்றிருக்க. அசுரர்த்தடிந்த-அமரர்க் காத்த-ஆறுமுகப் பெருமான் அடிமலரை வேண்டுகின்றோம்.

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார் ஞானியர் மடாலயம்,

திருப்பாதிரிப்புலியூர்.

அன்பு நிறைந்த ஐயா,

கல்கத்தாவிலிருந்து தாங்களெழுதிய கடிதங் கிடைத்து ஆறாத்துயரிலழுந்தினேன் தாயைப் பிரிந்த சேயைப் போன்றும் மன்னனைப் பிரிந்த குடிகள் போன்றும் நாமெல்லாம் துன்புறும் வண்ணம் செந்தமிழ்ப்புரவலரவர்கள் பிரிந்து சென்றார்கள். இறுதிநாளிலே அவர்களோடு உடனிருத்தற்குரிய அன்புத் தொடர்பு சிறப்புரிமையாகத் தங்கள்பால் அமைந்திருந்தது.

அண்மையிலே மற்றிருவர் தமிழன்பர்கள் பிரிந்தமையினாலே என்னுள்ளம் ஏற்கனவே கலக்கமெய்திற்று. "உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்" எனக் கூறுதற்குரிய நிலையினை ஆண்டவனருளினாலே ஓரளவிற்கு எய்தினேனெனினும், "கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்" எனக்கூறும் உள்ளத் துணிவினை யான் எய்தவில்லை. பண்டைக்குலத் தொடர்பினை நீத்தேனாகிய யான் தமிழ்த் தெய்வத்திற்கு ஆட்பட்டு அன்னை பணிசெய்யும் அன்பர்க் குழாமாகிய தொண்டக் குலத்திற்கு உரியனாயினேனாதலினாலே, தமிழ்ப் புலவர் பிரிவு ஆறாத்துயரினை அளிக்கின்றது. "முத்தமிழ் நூல் கற்றார் பிரிவும் கல்லாதா ரிணக்கமுங் கைப்பொருளொன் றற்றாரிளமையும் போலக் கொதிக்கும் அருஞ்சுரம்" என ஔவை கூறிய பிரிவு என்னும் பாலையுட்பட்டுத் துன்புறுகின்றேன்.

யாழ்ப்பாணத்து மட்டுவில் வேற்பிள்ளை யாசிரியர் மகனாகிய மகாலிங்க சிவனார் பிரிந்தார். அப்பிரிவுத்துயர் ஆறுதற்குமுன் தமிழறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் மகனாகிய பிரான்சிசு கிங்சுபெரி

யென்னும் அழகசுந்தர தேசிகனார் மறைவுற்றாரென் னுஞ் செய்தி செவிப்பட்டுத் துயரின்மேற் றுயராயிற்று. செந்தமிழ்ப்புரவலரும் தமிழ்வேளும் கண்போல் நண்பருமாகிய உமாமகேசுரனாரது பொன்னுடலம் திருவயோத்தி நகரிலே சரயு நதிக்கரையிலே தீக்கு இரையாயிற்று என்னுஞ் செய்தி துயரின்மேற் றுயராயிற்று.

இமயம் நோக்கி யான் புறப்படுங்காலையிற் கொழும்பு நகரிலே சைவமங்கையர் கழகத்திலும் விவேகானந்த சபையிலும் உளங்கசிந்த அன்புரை கூறி மனமார வாழ்த்தி விடையளித்த அழகசுந்தரதேசிகரும், வரும் வழியிலே தஞ்சையிலே கரந்தைத் தமிழ்ச்சங்கத்து ஆண்டுவிழாவிலே வாழ்த்துரை கூறி விடையளித்துப் பிரியாது பிரிந்த செந்தமிழ்ப் புரவலரும் இத்துணை விரைவிலே மண்ணுலகை நீத்து வானவர்க்கு விருந்தாவாரெனக் கனவிலும் நினைத்தேனல்லேன். நமது புரவலரது தகுதியினை ஓராது

'நினையாக் கூற்றம் இன்னுயிருய்த்தன்று
பைதலொக்கற்றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்'

எனப் புலவர் குழாத்தை விளித்துக் கூறுவதொன்றன்றி வேறு செய்வதறியாது திகைப்புறுகின்றேன்.

புரவலரவர்கள் போற்றி வளர்த்த அறநிலையங்களாகிய சங்கம், செந்தமிழ்க் கலாசாலை, புலவர்கல்லூரி, மருத்துவசாலை, திக்கற்ற மாணவரில்லம் என்னும் இவற்றினை யெல்லாம் பாதுகாத்து நிலை தளராவண்ணம் நிறுவுதல் தமிழ் மக்கள் கடனாகும். எனது அன்பினையும் ஆசிமொழியினையும் அவர்களது புதல்வர்க்குஞ் சுற்றத்தார்க்குந் தெரிவிப்பதோடு என்னாலாகவேண்டியவுளவேல் எழுதித் தெரிவிப்பீர்களாக.

விபுலாநந்தர்

செந்தமிழ் அன்னாய்! தஞ்சைக் கோட்டத்துக் கரந்தையில் தோன்றி, நின்னைச் செழுமையில் புரந்த தமிழவேள் மறைந்தனரே! அவரை வழிகாட்டியாகக் கொண்டு நடந்து வரும் பலரும் வருந்த அவரை நிலவுலகு

நீங்கச் செய்த இறைவனின் கருணையை என்னென்பேம்! திடுக்கிடுகிறது. நெஞ்சம் அலமருகின்றது. யாங்கள் என் செய்வதென அறியாது நிற்கின்றோம்.

நா.ப.தணிகை அரசு.

தஞ்சை சில்லாவின் சிறந்த வழக்கறிஞரும் நீதிக்கட்சியின் நெடுநாளைய தலைவரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தனித்தலைவருமாகிய தமிழவேள் உமாமகேசுவரம் அவர்கள் இவ்வுலகவாழ்வை நீத்தார் என்ற செய்தியைக் கேட்டுத் தமிழ்நாடு கண் கலங்குகிறது.

விடுமுறைக் காலத்தில் வெளிநாடு சுற்றித், தமிழரின் பண்டைச் சிறப்புக்களை நன்கறிந்து தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு ஆக்கந்தேட எண்ணிச் சென்ற அண்ணல் அப்பணியிலேயே ஆவிதுறந்தது அனைவருடைய உள்ளத்தையும் நடுங்கச்செய்துவிட்டது.

பறந்துமறைந்த பன்னீர்செல்வத்தைப் பின்பற்றி ஊர்ந்து மறைந்தார் உமாமகேசுவரம் எனக் கூறவேண்டியதாயிற்று. அது அவர்களின் நட்பின் பிணைப்பை நன்கு விளக்கிக் காட்டுகிறது. எனினும், பொதுவாக தமிழ்நாடு, சிறப்பாகத் தஞ்சை சில்லா தனது இரு பெருந்தலைவர்களையும் அடுத்தடுத்து, உடலொடும் உயிரோடும் காணாவிடத்திற் பறிகொடுத்துப் பரிதவிப்பது பெரிதும் வருந்தத்தக்கதேயாகும்.

கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய காலந்தொட்டு உடனிருந்து தலைமைவகித்தும் தமிழாராய்ந்தும் போற்றிவந்த பெருந்தலைவர் - அரும்புலவர்-அருமைப்புரவலர் இன்று மறைந்தார். இத்தமிழ்த் தலைவரை, தமிழவேளை, அன்புருவத்தை நகைமுகத்தை, குணக்குன்றை தமிழ் கூறும் நல்லுலகம் எக்காலும் மறவாது. மறக்கவும் முடியாது. மறந்தாலும் அதன் வாழ்வு சிறக்காது.

அன்பால் உமாமகேசுவரம் அவர்கள் தமது வாழ்நாளில் எப்பாடுபட்டேனும் சங்கத்தை நன்குவளர்த்து, நன்னிலையில் நிறுத்திப், புலவர்கல்லூரியைப் புதுப்பித்துப் புலவர்களைப் பெருக்கி, தமிழும் தமிழரும் தமிழ்நாட்டில் தலைசிறந்து வாழ்ந்து பிறநாடுகளுக்கும் பெரிதும்

பயன்படவேண்டுமென்ற எண்ணத்தை உள்ளத்தேவைத்து ஒழுகிவந்தது பலரும் நன்கறிந்ததாகும்.

இளமுகமும் புன்சிரிப்பும் எவர்க்கும் தந்து; எக்காலும் தன்வருவாய் தமிழுக்கீந்து, முக்காலும் மறைந்தொழிந்த சங்கந்தன்னை; மொழிவளரக் கொண்டுவந்தோன் எங்கே? எங்கே? என்று அழுவதாலும், புலம்புவதாலும் தமிழ் மக்களின் கவலைதீரலாம். கடமை தீராது.

காலமல்லாக் காலத்தில் கரந்தை மன்னன் மறைந்த மறைவினால் கண்ணீருகுத்துக் கலங்கி வருந்தும் தமிழ்மக்கள் அனைவரும் நல்லாறுதல் பெறவேண்டிக்கொள்ளுகிறேன். அதோடு அவர்கள் விட்டுப்போன வேலைகளைத் தொடர்ந்து நடத்தி அவர்களின் நல்லெண்ணத்தை நிறைவேற்றிவைப்பதும், அவர்களின் உருவச்சிலை ஒன்றைச் சங்கக் கூடத்தின் முன்னிலையில் நினைவுக்குறியாக நிலைநிறுத்திவைப்பதுமாகிய இரண்டும் இக்காலத்தில் செய்யவேண்டிய தமிழ்ப்பெருமக்களின் நீங்காக்கடமைகளாகும் என்பதையும் வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கி.ஆ.பெ. விசுவநாதம்.

'என்னை வழித்தொண்டு' கொள்ளத் 'தோற்றிய தோற்றம் போற்'றுவதன்றி வேறு 'சொல்லுவதறியேன்'

தி.க.நாராயணன்.

தன்னலம் மறந்து தாய்மொழிக்கும் தாய்நாட்டவர்க்கும் ஓயாது பாடபட்ட நம் வேளைப் பறிகொடுத்து நாம் இனி எவர் இவ்வாறு பெரும் பணிகளை ஆற்றவல்லார் என இரங்குகின்றோம்.

ந.பால்வண்ண சுந்தரம் பிள்ளை.

தமிழ்நாட்டில், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவருள் தலைசிறந்தோராய் விளங்கிய நம் அருமைத் தமிழவேள், உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமிழ்த்தாய் பணிக்கெனவே விட்டிட்டார் ஆயினார். தமிழுலகில் அவரனைய சிறப்பும் ஒழுக்கமும் குணநலமும் , தமிழ்ப்பற்றும், தமிழரிடத்தன்பும், சிவசிந்தனையும் உடையார் சிலரே. அச்சிலருள் வணங்கத்தக்க பெற்றிவாய்ந்த பெரியார் இவரெனின் இழுக்காகாது. தமது மதி நுட்பத்தையும், நூனுட்பத்தையுஞ் செல்வாக்கையும் ஒல்லும் வாயெல்லாம் தமிழன்னைக்கே பயன்படுத்திய அம்மகனையிழந்து நம் தாய் அவலிக்கிறாள்.

கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழாநாளில் "இன்று நிலைநாட்டப் பெறும் புலவர் கல்லூரி ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகும். அக்காலத்தில் நீங்கள் இருந்து அதனைக் காண்பீர்கள்" என்று சொல்லி விழாமேடையிற் பிள்ளையவர்கள் தழுதழுத்த குரலோடு கண்ணீர் அரும்பியது என் கண்முன் தோன்றுகின்றது. இதனை அன்று அவண் வந்திருந்த அனைவரும் அறிவர். அவரெல்லாம் பிள்ளையவர்கட்குச் செய்யும் நன்றி, புலவர் கல்லூரியைத் தமிழ்ப் பல்கலைக் கழகமாக்க முயலுதலே யாகும். பிள்ளையவர்களுடைய ஆன்மா அமைதி யுறுக என வேண்டுகின்றேன்.

அ. சிதம்பரநாதச் செட்டியார்.

தமிழ் என்றால், அதுவே நம் நண்பர் உமாமகேசுவரம்பிள்ளை அவர்களுக்குத் தெய்வம். சதா தொண்டு செய்து தமிழைப் பாராட்டி வந்தவர்கள். அவர்கள் மறைந்தது தமிழ் நாட்டுக்குப் பெரிய நஷ்டமாகப் போய்விட்டது. நாம் எல்லாரும் கையை நெரிக்க வேண்டியிருக்கிறது. கடவுள் நம்மை எப்படி யெல்லாமோ சோதிக்கிறார்.

டி.கே.சிதம்பரநாத முதலியார்.

நமது அருமைத் தலைவர் தமிழ்வேள் அவர்கள் திடீரென விண்ணுலகெய்தி மறைந்த செய்தி எம்மை ஆற்றொணாத் துயரத்திலாழ்த்தியது. சில மாதங்களுக்கு முன்பேதான் தமிழ்ப் பெருமகன்

மற்றொருவர் தம் பூதவுடம்பைக் காட்டாதும் விண்ணிடையே மறைந்தார். அத் துயரம் இன்னும் நம்மிடையே அகலாதிருக்க, இதற்குள்ளாக இப்பெருந் தீங்கும் நம் தமிர் மக்களுக்கு ஏற்பட்டது நமது துர்ப்பாக்கியமே. இதனை எவ்வாறு பொறுப்பதென்று தெரியாவகையான திகைக்கின்றேன்.

குணப்பெருங் குன்றாகிய நம் தமிழ் வள்ளலின் அன்பை நினைப்பதா? அவர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்த வாழ்க்கையை நினைப்பதா? அவர் தமிழ்த் தாய்க்கும் சமயத்திற்கும் உழைத்த பணியை நினைப்பதா? அவர் சலியா ஊக்கத்தை பெரும் பணிகளை நினைப்பதா? நினைப்பதற்கரிய பெரிய கவலையிலே நம்மையெல்லாம் விட்டுச் சென்று விட்டனர். அவரது தூய்மையான உயிர் எம் அண்ணல் பரசிவத்தின் நீழலையடைவதாக.

ஜெ.எம். சோமசுந்தரம்

திரு. இராவ்சாகேப் த.வே.உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் அயோத்திக்கருகில் தேகவியோகமானதைக் கேட்க மிகவும் விசனிக்கிறேன். பிள்ளையவர்கள் தமிழகத்திற்கு சிறந்த சேவை செய்துள்ளார்கள். அவர்களுடைய அகால மரணம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குப் பெருத்த நஷ்டமே. அவர்களின் ஆத்மா சாந்தி அடையவேணுமென்று பிரார்த்திக்கிறேன்.

இராஜா சர் அண்ணாமலை செட்டியார்

திருமிகு.தமிழவேள், செந்தமிழ்ப் புரவலன், இராவ்சாகிப் உமாமகேசுவரன், சீர்சால் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவன், சாற்றும் அச் சங்கத் தமிழ்நூல் நிலையமும் தமிழ்ப் பொழிற் பெயரிய தனிப் பத்திரிகையும் உயரிய தமிழ்க் கல்லூரியும் மருத்துவ சாலையும் நிறீஇ அவை தம்மை வளர்த்தவன், வழக்கறிஞர்க்குள் மதிக்கும் நிலையினன். சென்னை அண்ணாமலை சிவணிய பல்கலைக் கழகத் தமிழ்த்துறைகளின் உறப்பினன், நகராண்மைக் கழகம் நாட்டாண்மைக் கழகம் எனும் இரண்டினும் உறுப்பினனா யமர்ந்து பொதுநலச் சேவை புரிந்த புண்ணியன். தமிழை வளர்த்தலே தன் ஆயுட்பணி எனக் கொண்டிராப்பக லிடையறா

துழைத்தோன். தமிழ்வலார் தமையெலாம் தமர்களாக் கொண்டோன். சேத்திர யாத்திரைசெய்வானாகி வடநாடுற்று வளப்பம் மிகுத்த சரயு நதிக்கரை தன்னை அடைந்தவன். ஆயிரத்துத் தொள்ளாயி ரத்து நாற்பத்தொன் றாம்வரு டத்துமே மாதத்(து) ஒன்பதாம் தேதியில் உற்றனன் சிவபதம். அவன் குடும்பத்தவர் ஆறுதல் அடைச் சிவபெருமான் அருள் செய்வானாக. அன்னான் ஆற்றிய அருந்தமிழ்ப் பணிகட்(கு) யாதொரு குறையும் எய்திடா வண்ணம் அவனொடும் அப்பணி ஆற்றிய அன்பர்க்(கு) ஆக்கமும் ஊக்கமும் ஆயுளும் அருளுமா(று) எலாம்வல இறைவனை இறைஞ்சு கின்றேனே.

வெ.ப. சுப்பிரமணிய முதலியார்.

தமிழ்க் குலத்தலைவர் மறைந்த செய்திகேட்டு அருந்துயருற்றேன். தன்னேரில்லாத் தமிழவேள் மறைந்தார். தஞ்சைக் கரந்தையே தஞ்சமெனக் கரதி வாழ்ந்த தமிழ்த்தாய் தயங்குகின்றாள். தமிழகத்தின் நடுவே தழைத்து ஓங்கி நின்ற பழுமரம் வீழ்ந்ததென்று புலவர் அனைவரும் அலமருகின்றார் தனிப்பெருந் தலைவராய வீரரை இழந்து தண்டமிழ்த் தொண்டர் கண்ணீர் விடுகின்றார். தமிழர் செய்த பாவம் அந்தோ. பெரிது. ஆயினும் பிரிந்து சென்ற பிள்ளையவர்களுக்குத் தமிழ்மக்கள் செயற்பாலதாய இறுதிக் கடன் ஒன்றுண்டு. அவர்கள் காட்டிய நெறியைக் கடைப்பிடித்து. கரந்தையில் அன்னார் நிறுவிய நிலையங்களைப் பாதுகாத்து வளர்த்தலே நம் கடன். இதுவே அவர்கள் இன்னுயிர்க்கு இன்பம் தருவதாகும். பிள்ளையவர்கள் போன்ற மெய்வீரர் பலரைத் தமிழ் நாட்டுக்கு நல்கியருளுமாறு இறைவன் திருவடி தொழுகின்றேன்.

ரா.பி. சேதுப்பிள்ளை.

தமிழவேள் சிவனடிசேர்ந்த செய்தியையறிந்து ஆற்றொணாத் துயரமடைந்தேன். மிகமிக எளிய வாழ்க்கை. அளவுகடந்த தமிழ்ப்பற்று. எல்லையில்லதோர் சைவப்பற்று. தமிழ்மக்கள் முன்னேற்றத்தில் நிரம்பிய ஆர்வம். த புலவர்களிடத்தில் உண்மையான அன்பு. தமிழிளைஞர் கட்கு ஊதியமும். வேலையுந் தேடிக் கொடுப்பதில் தளராத வுழைப்பு. உயர்திரு. ஞானியாரடிகளார் போன்ற சைவப் பெரியார் கட்டளைகளை

நிறைவேற்றும் பெரும்பணிவு முதலிய எண்ணிறந்த நற்பண்புகளைப் பெற்ற தமிழ்த் தாயின் தவப்புதல்வர், பெருநம்பி உமாமகேசுவரனார் ஆன்மா உமாதேவி சமேத மகேசுவரன் திருவடியில் இரண்டறக் கலந்து இன்புறுக.

ம. பாலசுப்பிரமணியன்.

நம் தமிழ்தாயின் அருமைப்புலவர் உமாமகேசுவரனாரை யிழந்த தமிழுலகம் கண்ணொளி யிழந்த காயமும் விண்மணியிழந்த விசும்பும் போல் இருண்டு கிடக்கின்றது குறித்து என் உள்ளமும் துன்ப இருளில் சுழல்வதாயிற்று!

அ. வரதநஞ்சையன்.

தமிழுக்செனவே தோன்றி தமிழுக்கெனவே வாழ்ந்து தமிழுக்காகவே தம் ஆருயிர் விடுத்த தமிழ்வேள் அவர்கள் நல்லுயிர் எல்லாம்வல்ல இறைவன் தன்னடி நீழலில் அமைதியுற்றிருக்கவும் அந்நல்லாரது அரும்பெருந் தொண்டு அரும்பெருஞ் சொற் பொழிவுகள் தமிழ்மாணவர் நல்வாழ்வுபெறற் பொருட்டு எடுத்துக்கொண்ட நன்முயற்சிகள் தமிழ்ப் பொழில் நடாத்தும் வகையில் காட்டிய பேரூக்கம் ஆகிய நலன்களையெல்லாம் தமிழுகம் அறியுமாறு காட்டவும் வேண்டும்.

சி.கு. நாராயணசாமி முதலியார்.

இராவ் சாகேப் திரு. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் இறைவனையடைந்ததைக் கேட்க மிகவும் வருந்துகின்றேன். எக்காலத்தும், எப்பொழுதும் தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்காக அஞ்சாது அவர் செய்து வந்த தொண்டு போற்றத் தக்கது. இவரால் பல வழியில் தமிழ் நன்மையடைந்தது என்பதற்கு ஐயமே இல்லை தமிழிற்சிறந்த புலமைவாய்ந்து. தன் செல்வத்தையும்; செல்வாக்கையும் தமிழ்மொழியின் சிறப்பிற்காக உபயோகித்துவந்த இவரது பிரிவால் தமிழ்மக்கள் நற்றுணை

இழந்தவராவர். கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கும், அவர் சுற்றத்தார்க்கும் என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*குமாரராசா **M.A.** முத்தையா செட்டியார்*

சங்கத்தலைவர், தமிழவேள், த.வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் இயற்கையெய்தின செய்தி கேட்டுத் துயரடைந்தேன். அன்னார் குடும்பத்தார்க்கும், சங்கத்தார்க்கும் என் ஆறுதல்கள் உரித்தாகுக.

***T.V.* காசிவிஸ்வநாதன்**

இராவ்சாகிப்.த.வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் வட இந்திய யாத்திரை செய்யுங்காற் சரயுநதிக்கரையில் விண்ணுல கடைந்தவிட்டார்கள் என்னும் செய்தி கேட்டுத் திடுக்கிட்டுக் கனவருத்தமடைந்தேன். நம் நாடு பலதுறைகளில் முன்னேற்றமடைய வேண்டிப் பல இன்னல்களினிடையே முயன்றுகொண்டிருக்கும் இக்காலத்தில், சிறந்த தலைவர்களுள் ஒருவராகிய பிள்ளையவர்கள் பிரிந்துவிட்டமை ஈடுசெய்ய முடியாத பெருநட்டமாகும். அவர்கள் தனிவாழ்க்கையும் சமுதாயத்தொண்டும் உண்மை நேர்மை, ஆண்மை, வினைத்திறன், அன்பு, அருள், தெய்வங்கொள்கை முதலிய அரிய பண்புகளால் மாண்புற்று விளங்கியதைத் தமிழுலகம் நன்கறிந்து அவர்களை மனமாரப் போற்றி வந்துள்ளது. கரந்தைத் தமிழ்ச்சங்கம், சங்கத் தமிழ்க் கல்லூரி, சங்கப் பாடசாலை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதலியவற்றின் வாயிலாக அவர்கள் தம் தாய்மொழிக்கும் தாய்நாட்டிற்கும் சமயத்திற்கும் செய்துள்ள பெருந்தொண்டுகள் என்றும் பாராட்டற்குரியன. கிழமைப்பட வாழ்ந்த பட்டங்கள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். அவர்கள் தொடங்கி நடத்திவந்த பொதுநலப் பணிகள் யாவற்றையும் குறைவுறாது செழிக்கச்செய்து வருதலே அவர்கள்பா லன்புடையோர் அவர்கட்குச் செலுத்தும் சிறந்த நன்றி யாகும். ஆழ்ந்த சமய வுணர்ச்சியுடன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாம் பெற்றிமையைக் குறிக்கோளாகக் கொண்டு புனிதப் பெருவாழ்வு நடாத்திய பிள்ளையவர்கள் உமையொரு பாகம் உடையானடிக்கீழ் இன்புற்றமர்ந்து இலகுவார்களாக.

ச. சச்சிதானந்தம் பிள்ளை.

என் அருமை நண்பர் திருவாளர் த.வே.உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் தேகவியோகம் அடைந்த விபரம் மகா விசனத்துடன் தெரிந்து, இறைவனிடம் பொறுதி செய்துகொண்டேன். அவர்களின் இரண்டு குமாரர்களுக்கும், இதர பந்துக்களுக்கும் தமிழ்ச் சங்கம் அங்கத்தினர் களுக்கும் என் மனம் நிகழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

I.A. *பீர் முகமத் சாயபு.*

சென்ற மார்கழித்திங்களில் யான் தஞ்சைக்கு வந்தபோது நம் சங்கத்தலைவர் திரு. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் கூறிய அன்பு நிறைந்த மொழிகள் இன்னும் என் செவியகத்தே ஒலித்துக் கொண்டிருக் கின்றன. ஈடுசெய்யமுடியாத அவர் மறைவை நினைந்து, நினைந்து வருந்துகின்றேன்.

ரா. தேசிகன்

சங்கத்தலைவர், இராவ்சாகிப், த.வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்களுடைய பிரிவு அவருடைய நண்பர்கள் எல்லோருக்கும் குறிப்பாக கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும் தாங்கமுடியாத ஒரு செய்தியாகும்.

S.A. *அரங்கசாமி செட்டியார்.*

செந்தமிழ்த்தாயின் சிறந்த புதல்வராய் தமிழ் மக்களுக்கோர் கலங்கரை விளக்காய் நின்ற தமிழவேள் உமாமகேசுவரனை இன்று அருந்தமிழ்த்தாய் இழந்து அலறுகின்றாள். தமிழகம் தவிக்கின்றது. மக்கள் மனம் கலங்குகின்றது. கூற்றுவன் கொடுமையை வாயாரச் செந்தமிழ்ப் புரவலர்கள் வைது பேசுகின்றார்கள்.

இன்னாரெனவும் இனியரெனவும் கருதாது தன்னையடைந்த தமிழர்க்கு உண்டியும் உரையுளும் உவந்தளிக்கும் பெருந்தகையினை யான் கண்ணாரக் கண்டிருக்கின்றேன். புன்னகையும் இன்னுரையும் பொலியும்

தன்னலங்கருதாத் தமிழவேளை இழந்த புலவருலகம் பெரிதும் புலம்புகின்றது.

பா. சொக்கலிங்கம்

நமது மாபெருந்தலைவர் திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் காலஞ்சென்றது பற்றிப் பெரிதும் கவலையடைகின்றேன். உண்மைத் தியாகியை இழந்தோம். அவர்களுடைய காலம் இவ்வளவு சீக்கிரத்தில் முடிவடையுமென்று நினைப்பதற்கில்லை. எல்லாம் இறைவன் செயல்.

இ.எம்.கோபாலகிருஷ்ண கோன்.

இராவ்சாகிபு, தமிழவேள், வழக்கறிஞர், உயர்திரு. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் தனது வடநாட்டுச் சுற்றுப்பயணத்தில் பேரின்பம் பெற்றார் எனக் கேட்டுத் திடுக்கிட்டேன். ஒரு மாதத்திற்கு முன்பு என்னை ஒரு சிறு கலைத்தொண்டனாக ஆகக் கட்டளையிட்டாரே என் தொண்டை ஏற்றுக்கொள்ளவில்லையே என மனம் பதைத்தேன் அப்பொழுது என் மனதில் தோன்றிய செய்யுளை இங்கு எழுதுகிறேன் (இவர்கள் எழுதிய வடமொழிச் செய்யுள் இங்கு வெளியிடக்கூடவில்லை இவர்கள் எழுதியுள்ளபடி அதன் கருத்துப் பின்வருமாறு).

வருத்தம் நீங்கப்போகிறது
அறிவுண்டாகப்போகிறது
மகிழ்ச்சி தோன்றப்போகிறது
உலகம் மகிழ்ச்சியில் பெருமை அடையப் போகிறது
என்று பண்டித உலகம் புகழேந்தியே!
நினைத்துக் கொண்டிருக்கும்போது
ஊழால் உண்ணப்பட்டாயே!!

***N.** சேஷாத்திரி.*

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர் தமிழவேளை நான் நேரில் கண்டதுமுதல் இடையறாத ஒரு அன்புயாதொரு பிரதிநலனுமின்றி எனக்கு ஏற்பட்டிருந்தது. வாழ்நாட்களெல்லாம் பாழ் நாட்களாக்காமல் தமிழின் தனிச்சிறப்பை யுணர்ந்து அதனைப் போற்றுதலே தம் கடமையெனத் தெளிந்து அதற்காவன செய்து தன்னலமற்ற தியாகியாய் தன்வாழ்க்கையின் குறிக்கோளை அவர் எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாது இறுதிவரை திறம்படச்செய்தது போற்றுதற்குரிய செயலாகும். மனிதனாய்ப் பிறந்தான். பொருள் தேடினான், இன்பந் துய்த்தான், செத்தான் அவனது வாழ்க்கை அதோடு முடிந்துவிட்டது என்ற கூற்றுகளுக்கிரையாகாமல் நால்வகை உயிர்வகைகளில் தலைசிறந்ததாகிய மானிடப் பிறவியை எடுத்து அதனால் அடையவேண்டிய பயனை நம் தமிழவேள் அடைந்தார் என்பதில் ஐயமேயில்லை.

தமிழ்மக்கள் சிறிதுகாலமாக அரும்பெருந் தலைவர்களைத் திறனோடு பொருந்திய செயல்களை ஆற்றுகின்ற சமயங்களில் இழந்துவருகின்றனர். இதற்காக உள்ளம் வீழ்ச்சி அடையாது அவர்களின் அரும்பெரும் நோக்கங்களையும் பணிகளையும் நாம் எத்திறத்தினும் இளைக்காது ஆவலுடன் ஏற்றுக் காலஞ்சென்றவர்களின் வழியைப் பின்பற்றுவோமாக.

P. துரைசாமி நயினார்.

என் அன்பரும் நெடுநாள் உற்றத்துணைவருமாயிருந்த காலஞ்சென்ற உமாமகேசுவரரைக் குறித்து இத்தமிழ்நாடு ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டத்தையடைந்ததாகக் கூறலாம்.

ஈ.வே. இராமசாமி.

கண்ணகிப் பாலத்தைத் திறந்துவைக்க திரு. த.வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களை அழைக்கத் தீர்மானித்திருந்தேன். அவருடைய எதிர்பாராத அகால மரணம் எனக்கு அவருடைய நேரான பரிசயம் இல்லாவிடினும் மிக்க வருத்தத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழ் முன்னேற்

றத்திற்கு உழைத்துவந்த ஓர் உயர்ந்தவர் ஸ்தானம் காலியாகிவிட்டது. அது பூர்த்தியாவது எப்பொழுதோ?

மு. பட்டாபிராமன்

தமிழ் வளர்த்த பெருந்தகையாராகிய நம் சங்கத் தலைவரை அறியாத தமிழர் தமிழகத்தும் பிறவகத்தும் உளரேயோ? இப்பெரியாரை அளவளாவி மகிழாத தமிழ்ப் புலவரும் உளரோ? மற்றும் இவர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உயர்திரு. உ.வே. சாமிநாதையரவர்களின் பாராட்டுக்கும் உரியராயினர் சங்கத்துக்கு இடம் பொருள் ஏவல் என்னும் முத்திற வசதிகளையும் மெத்தப்பெருக்கினார் கல்லூரியும் சங்கமுமே தம்முயிர்க்குறுதி பயப்பதெனக் கருதித் தம் உடல் பொருள் ஆவிகளை அவைகட்கே வழங்கியுள்ளார். இப்பெருந்தகையார் தமிழ் மக்களுக்கும் பிற மக்களுக்கும் பேருபகாரியாயிருந்தாரென்பது மலையிலக்காகும். இன்னோரன்ன நற்குண நற்செயல்கள் நிறைந்து விளங்கியவரும் முடியுடை மூவேந்தர்களுக்குப்பின் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து வளர்த்த பாண்டித்துரையேபோல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தை முப்பதாண்டுகளாக முட்டின்றி வளர்த்த செப்பருஞ் சீர்த்தியாளருமாகிய நமது உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் இறைவன் றிருவடி நீழலை யெய்தினார் என்ற செய்திகேட்ட செந்தமிழன்பர் பலரும் வருந்துவர். ஆனது குறித்து வருந்தி யாவதென்னே! எல்லாம் இறைவன் செயலே யென்று தேறுவதே விவேகத்தின் பாலதாம் என்பதை அவர்களின் உற்றார் உறவினருக்கும் அன்பர்கட்கும் மனநெகிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்றி அவர் ஆற்றிவந்த பேரறத்தைப் பேணி நிலைநிறுத்தி அப்பெரியாரின் எண்ணத்தை நிறைவேற்றவும் வேண்டுகிறோம்.

சிவநேசன். இராமசாமி

எனது நண்பர் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்,இராவ்சாகிப், திருவாளர். த.வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பூவுலகு நீத்துப் பொன்னுல கெய்திய செய்தியறியந்

துயர்க்கடலி லாழ்ந்தேன். அவ்வன்பரை நான் 1914 ஆம் ஆண்டு முதலறிந்துளேன். அக்காலம், கரந்தைத் தமிழ்ச்சங்கம் இளங்குழவிப் பருவம். நண்பர் அச்சங்கத்தை வளம்பெற வளர்த்து அதன் பெருமை தமிழுலகை முழுதும் பரவச் செய்ததோடு மாணவர்கட்கும் அது பயன்பெறுமாறு சங்கக்கல்லூரி ஒன்று ஏற்படுத்திச் செவ்வனே நடத்தி வந்துளார். அதில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் இலவசக் கல்வி பெற்று அறிவு வளர்ச்சி யடைந்திருக்கின்றனர். திக்கற்ற மாணவரில்ல மொன்று நிறுவி அதனை வந்தடைந்த மாணவர்களுக்கு உடை, உணவு, உறையுள், கல்வி முதலிய யாவும் இலவசத்தில் தந்து நூற்றுக்கணக்கான திக்கற்ற மாணவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளார். மாணவர்களின் உடல் நோய் போக்க, மருத்துவசாலை யொன்று நிறுவி யிருப்பதும் மாணவர்பால் நண்பர் வைத்துள்ள பேரன்பை உணர்த்துவதாகும். அச்சுநிலையமொன்று நிறுவிச் சங்கவெளியீடாகிய 'தமிழ்ப்பொழில்' பதிப்பிக்கவும் சங்கத்திற்காக மற்றும் அச்சிடவேண்டியவைகளைக் காலத்தே எளிதில் வெளியிடவும் வசதி ஏற்படுத்தியுள்ளார். சங்கத்திற்கு நாளடைவிலேயே கட்டடங்கள் கட்டியும் சங்கம் மேலும் மேலும் வளர்ச்சி யடைவதற்கேற்பக் கட்டடங்கள் கட்டவும் மாணவர்கள் ஓடி விளையாடவும் வசதியான பெரிய இடத்தை வாங்கியுள்ளார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரமான செந்தமிழ்ப் புலவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொருட்டு உயர்தரக் கல்லூரி நிறுவி, வித்துவான் பட்டம் பெறுபவர்களின் படிப்புக்கும் ஏற்பாடு செய்துள்ளார். இன்னும் சங்கத்திற்காக எத்தனையோ செய்யத் திட்டஞ் செய்துள்ளார். தன் வாழ்க்கை முயற்சியாகிய வழக்கறிஞர் முறையிலீட்டிய பெரும் பொருளையும் சங்க வளர்ச்சிக்காகவே நெடுகிலும் செலவிட்ட பெருந்தகையாளன். சுமார் 35 வயதில் தன் ஆருயிர்த் துணைவியை இழந்தும் சங்கப் பணிக்கும் தமிழன்னையின் பணிக்கும் மறு விவாகம் இடையூறாகுமோ என்றெண்ணி உற்றாரும் நண்பரும் பெரிதும் வேண்டியும் மறுமணம் மறுத்திட்ட மனத்திடமுடையோன். அல்லும் பகலும் கனவிலும் நனவிலும் சங்கத்தின் வளர்ச்சியே தன்பணியாகக் கொண்ட உத்தமன். தமிழன்னையைப் போற்றிய பெருந்தவப்புதல்வன், தமிழன்னைக்கு ஊறு நினைந்தாரை ஒறுத்த உரனுடையோன். உடல் பொருளாவியும் சங்கத்துக் கென்றே தத்தஞ் செய்த கருணைக்கடல். தனக்கென வாழாத்தகைமையாளனை இறைவனும் தன் பாலிருத்த விழைந்தது வியப்பொன் றன்றே. இழந்தனம் மாசிலாமணியை, கருணைமாகடலை, ஒழுக்கத்தின் செல்வனை, பெறுதற்கரிய அருமை அன்பனை, மேல் செய்வதியாதுளது? ஆவிதுறந்த அந்த நேரமும் மக்களோ, சுற்றமோ, நண்பர் தாமோ நினைவிற் புகுந்திலார். சங்கம், சங்கம்,

என் சங்கப் பணி முடிவடைந்திலதே, அரை குறையாக விட்டகல்கின்றேனே என்னுமோ ரெண்ணமே இருந்திருக்கு மாதலால் அவ்வெண்ணம் முற்றுப் பெறச் செய்தலே அன்னார் நண்பர்க்கெல்லாம் உரிய கடமையாகும். உடல் வீழ்ந்ததாயினும் ஆவி உடலினின்று பிரிந்த அக்கணமே சங்கத்தின் பாற்சென்று தங்கிருக்கு மென்பதிற் சற்றுமையமில்லை. அந்த ஆவி இன்புற அன்னார் பணியை அவரன்பர் யாவரும் மேற்கொண்டு முற்றுவிப்போமாக. அன்னாரை யிழந்த தமிழ்த்தாயின் தளர்ச்சியை மாற்றுவோமாக. நண்பர் புகழ் நீடூழி நிற்கப் பொருந்துவன செய்வோமாக.

க. சண்முகம் பிள்ளை.

நண்பர் உயர்திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பொதுவாக மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் மக்களுக்கும் செய்துள்ள நன்மைகள் அளவில. அன்னவருக்குத்தமிழ் மொழியிலுள்ள அபிமானம் சிறிதல்ல உற்ற தாய் தந்தை, தனையன், தெய்வம், குரவர் எல்லாம் தமிழே எனக்கருதித் தன் ஓய்வு காலத்தையும் ஈட்டியபொருளையும் தமிழுக்கே உதவி வந்தார் என்பது வெள்ளிடை விலங்கல். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைக் கல்லூரி நிலையில் நிறுவிவைக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சி அளவிடத்தக்க தல்ல. தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தார் ஆளுகைக்குட்பட்ட திருவையாற்று வடமொழிக் கல்லூரியில் தமிழரும் வடமொழிபயிலவும் அக்கலா சாலையில் தமிழும் போதிக்கப்பட வேண்டிய ஒரு மொழி என்ற ஏற்பாட்டிற்குங் காரணராய் விளங்கியவர் அன்னவர் தான் என்று நினைக்குந்தோறும் தமிழ்மக்கள் அவருக்கு என்ன கைம்மாறு செய்வதென ஏங்கவேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். அன்னவருடைய எதிர்பாராத அகாலமறைவு பொதுவாக மக்களுக்குச் சிறப்பாகத் தமிழ் மக்களுக்கு விலக்குதற்கரிய குறையாம். இதுவும் இறைவனது திருவிளையாடல் போலும்; தமிழ்மக்களே நாம் இனி மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு அவர்களின் நோக்கத்தையும் தொண்டையும் நினைத்து அவைகள் பயனுறும் முறையில் நடந்துகொள்வதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

***R.** கந்தசாமி மூப்பனார்*

செந்தமிழ்ப் புரவலரும், செந்தமிழ் அன்னையின் செல்வச்சேயும், சைவமணியுமாகிய இராவ்சாகேப் த.வே.உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் மறைந்தமை கேட்டு ஆற்றொணாத் துயரம் எய்தினேன். இந்நிகழ்ச்சியை எண்ணுந்தோறும் உண்டாகும் இத்துயரத்தைத் தமிழுலகம் நெடுங்காலம் மறக்க இயலாததென்றே எண்ணுகிறேன்.

மா.அ. கனகசபை.

தம் தம்பியார் நிறுவிய வண்டமிழ்க் கழகத்தைக் கண்ணே போற்காத்து வளர்த்துப் போற்றி யதன் வாயிலாகப் பன்னூறு புலவர்க்கும் மாணவர்க்குந் தமிழ்மணத்தின் றூய்மையைப் பரவுவித்துப் பின்னுமதனைத் துலக்குவான் கருதிப் பைந்தீந் தமிழ்ப் பொழிலையதன் அரிய பெயர்க்கேற்பத் தண்ணிதாயினியதா யுலகெங்கணும் உலவப் பண்ணிப் பேரிசை வாய்க்கப் பெற்ற பெருமை நம்பிள்ளையவர்கட்கே உரியதொரு தனியமைப் பாகும்.

கனம் சேதுபதி வேந்தர் இராசராசேச்சுரனார் கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவின்கண் (1916-ம் ஆண்டு) தலைவராயமர்ந்த ஞான்று யான் இவர் தமைக் கண்டு கண்கொளாக்கவினும் உவகையும் யுன்னுந்தோறும் நெஞ்சம் பிளக்கின்றதே! என்செய்வது? ஆறுதலைக் கொண்ட பெருமான் யாவர்க்கும் ஆறுதலையளிப்பானாக.

கவிராஜ பண்டிதர். ரா. திம்மப்ப ஐயர்.

நமது அரும் பெருந்தலைவரும் எனது அரிய நண்பரும் ஆகிய திரு. த.வே.உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் சிவனடி நீழல் சேர்ந்த செய்தி கேட்டு இடியேறுண்டதுபோலப் பெருவருத்தமெய்தினேன்.

செந்தமிழ்த்தாய் தனது அருமந்த தனித் தலைமகனை இழந்தனள். கரந்தைத் தமிழ்ச் சங்கம் மட்டுமா? தமிழுலகம் முழுதும் தமது தனித் தலைவரை இழந்து பெரிதும் வருந்துகின்றது. அணிமையில் திருவை யாற்றுக்கு நான் போந்த போது தஞ்சையில் வினவிய காலத்து அவர்

காசிக்குச் சென்றுள்ள செய்திகேட்டு அவரது நல்வரவினை எதிர் நோக்கினேன். அதற்கு மாறாக அவர் பொன்னுலகப் புலவர்க்கு விருநதினராகப் பொன்னி நன்னாட்டினைத் துறந்து பொன்னாட்டவர்க்குத் தமிழ்புகட்டும் தலைவராகச் சென்று சேர்ந்தமை தெரியத்துன்பமடைந்தேன்.

அவரது உயிர் இறைவனடி நீழலில் இன்புறுவதாக. அவர் மேற்கொண்டு வளர்த்த தமிழ்த் தொண்டுகள் அவர் அங்கு நின்று புரியும் ஆசியால் அருள் பெற்று வளர்வனவாக.

சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

கரந்தை தமிழ்ச்சங்கத்தலைவர் இராவ்சாகிபு திரு. த.வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் இறைவன் திருவடி நீழலை எய்தியமை கேட்டு மிகவும் ஆழ்ந்த துக்கமடைகிறோம். தலைவரவர்கள் இன்னும் சிறிதுகாலம் இருந்திருப்பின் தமிழுலகுக்கும்-முக்கியமாகத்-தமிழின் வளர்ச்சிக்கும் மிகவும் பயன் பட்டிருப்பார்கள். ஆனால் நாம் அவ்வளவு பாக்கியம் செய்து வைக்கவில்லை என நான் கருதுகிறேன்.

உ. சுப்பிரமணியன்.

திரு.த.வே. உமாமகேசுவரம்பிள்ளையவர்களின் பிரிவு கேட்டுத் திடுக்கிட்டேன் கனவிலுங்கருதாத உள்ளத்திலும் உணரமுடியாத அவ்வளவு விரைவில் அவர்கள் உயிர் நீத்தமை எல்லாத் தமிழரையுமே நிலைகலங்கச் செய்துவிட்டது. அவரது பிரிவால் தஞ்சையே தன் சிறப்பிழந்துவிட்டது. செல்வர்களும், கலைஞர்களும் மலிந்திருப்பினும் அவர் பிரிவால் உண்டான பேரிழப்பை நிறைவாக்குதற்கில்லை. அவரது அன்பையும் இனிய முகத்தையும் தனித்தமிழ்ச்சொற்களையும், தளராத ஊக்கத்தையும், உழைப்பையும், தமிழ்த்தொண்டையும், பொதுப்பணியையும் எண்ணுந் தோறும் என் உள்ளங்கலங்குகின்றது. அவர் வளர்த்த சங்கத்தையும் கல்லூரியையும் திக்கற்ற மாணவ இல்லத்துச் சிறுவர்களையுங் காணுந்தோறும் என் உள்ளங்கவல்கின்றது. அவருடைய பிரிவு தமிழ் மொழிக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டிற்கும் ஈடுசெய்ய முடியாத

பேரிழப்பாகும். நாம் கவலுவதாற் பயனில்லை யாதலின், நம் தமிழவேள் விடுத்துச் சென்ற தமிழ்ப்பணியையும் நாட்டுப்பணியையும் மேற்கொண்டு நடத்தி அன்னாரது விருப்பை முற்றுப்பெறச் செய்வோமாக.

நே.அ. வர்த்தமானமுதலியார்.

"உமாமகேசுவரம் என்றால் யார்? நான் இப்பெயரைக் கேள்விப்பட்டதே இல்லையே!" என்று சொல்பவர் தமிழ் நாட்டில் அநேகமாய் மிகச் சிறு தொகையினர்தாம் இருப்பர். அவரும் வெளி சில்லாக்காரர்களாய் இருக்கலாமே தவிர, தஞ்சை சில்லாக்கார ராயிருக்கவே முடியாது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பெற்றுவளர்த்த தாயுந் தந்தையு மாவார், உமாமகேசுவரம். திடீரெனத் தனது பெற்றோரை இழந்துவிட்டது சங்கம். ஆனால் அநாதைக் குழந்தையாக விடமாட்டார், தஞ்சைக்காரரும் பிறரும். தமிழரின் வாழ்வு தமிழின் வாழ்வையும் பொறுத்திருக்கின்ற தென்பதை அறியாத தமிழன் இன்னுமா இருக்கிறான்? ஆங்கில முறைகளிலுள்ள பல அரிய கருத்துக்களையும் வழக்கங்களையும் தினசரி வாழ்க்கையில் பின்பற்றி வந்தவர், "பாலுடன் தேன் கலந்தற்றே" என்ற மாதிரி தமிழுடன், ஆங்கிலமும் கற்றுணர்ந்த கல்வியாளர். பல உமா மகேசுவரர் தோன்றினால் தான் ஒரு உமாமகேசுவரத்தின் மறைவை ஈடு செய்யமுடியும். தமிழர்களின் நஷ்டம் பெரிது.

***S.** குருசாமி.*

தமிழ்மொழி வளர்ச்சியின் தொண்டிற்கே தனது வாழ்வை அர்ப்பணம் செய்த தியாக வீரத்தமிழரை-கரந்தைத் தமிழ்ச் சங்கத் தனிப்பெரும் தலைவரை-ஷி கல்லூரிப் பிதாவை "தமிழ்ப் பொழில்" ஆசிரியரை-திக்கற்ற மாணவரது தந்தையாரை - கரந்தை நாயகரை - தஞ்சைமாமணியை - உறுதியான வழக்கறிஞரை - சைவசித்தாந்தப் பெரியாரை- சுருங்கச் சொன்னால், தமிழ்த் தாயின் தவப்புத்திரர்களில் ஒருவராகிய தமிழவேளை இழந்து தமிழன்னை கண்ணீர்வடித்துக்

கொண்டிருக்கிறாள். இவரது பிரிவால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை விரைவில் ஈடுசெய்ய முடியாது.

ரா. நாராயணசாமி.

எனக்கினியா னெனக்கிளையா னெனநினையே கூறிமகிழ்ந்
தின்புற்றேனென்
றனக்கினியாய்! தகுதியறி வாசாரந் தனின்முதியாய்! தக்கோர்க்கென்று
மனக்கினியாய்! தமிழ்க்கினியாய்! நிமறைந்த தையாற்றின் மருவக் கேட்டே
எனக்கினியார்? எனக்குமுனே யுடல் மறைந்தா யென்றுற்றே
னின்னலெந்தாய்!

நின்றலைப்பே ரெழுத்திரண்டுந் தமிழவே ளெனக்குறிக்கு நிலைமையாலோ
நின்றிருப்பேர் வடமொழியி னேர்ந்திடினுந் தமிழ்போற்று நேர்மை
கொண்டோ
மன்றிலினி யான்முருக வேளாகச் சூர்தடிந்த மாண்பு கண்டோ
நின்றனைப்பா திரிப்புலியூர் ஞானியார் தமிழ்வேளா நிகழ்த்த லண்ணால்!

அப்பர்திரு நாளதன்னில் வடநாடு நீசெல்கை யறிந்தே னன்றி
ஒப்பிலுந்தன் முகங்கண்டே னோருரையும் பேசுகிலே னுன்னோடையா
கப்பியநின் மரணமதை யையாற்றுப் பெருவிழவிற் கழறக் கேட்டுச்
செப்பலுமே மூர்சென்றுன் செயல்கண்டுன் புகழதனிற் றிளைத்தே னையா!

புன்னகையு மின்சொல்லும் பொருந்தியநின் முகங்கண்டு
பொலிவுற்றேனென்
றன்னுள்ள மெதுகண்டெடன் பெறுமென்ப தறியாது தளர்வே னையா
முன்னுள்ள படிராமன் சரயுநதி மூழ்கினது முறைமை யென்றோ
அந்நதியின் கரைப்பாங்கர் அமைவுறுநின் னுடல்மறைந்தா யறிஞரேறே

P. *சிங்காரவேலு பிள்ளை.*

உமா மகேச னுண்மைய னுயரியன்
இமா சலமிவர்ந் தீங்கு வதிந்தனன்
சமான மில்தமி ழன்னை தம்பழஞ்
சிமா சனமேற்று வித்தாங்கு மீண்டனன்.

C. வேதாசலம்.

It was extremely painful to read of the sad and and sudden death of our esteemed friend Rao Sahib Umamaheswaram Pillai. His death is a irrespairable loss to us and to our sweet Tamil. He was a jealous patron and sacrificed everything at the altar of the goddess of Tamil. It was only the other day that I had the pleasure of seeing his monumental work. I never dreamt the end was so near.

Roa Bahadur, P. Avoodiappa Pillai.

It came like a dagger to my heart tho news of Tamilvel's death. I can very well understand your feeling, you to whom it had been given to move with him so closely for many years. The Tamil country has lost leader of rare personality, the world of Tamil scholars a stout fighter for its rights, you and I am peerless friend. This is the most unkindest cut of all.

What shall be the future of the sangam, the college and the school and journal? I should think a fit monument to his self sacrifice and service to the cause of the Tamil is

to place these institutions on a solid and lasting foundation. Some way should be found fot it. Now you alone can do that.

My honest opinion is that you must shoulder the responsibility of the president ship of the sangam. It is no flattery to say that you possess the necessary Tamil-scholarship, passion for Tamil, high ideals and ideas.

S.K.Govindaswami Pillai

I had a great shock when I read of the death of Mr.Umamaheswaram pillai. It is a great loss not only to our friends and the cause of Tamil language and literature. By his death a void has been created which cannot easily be filled. please convey my heartfelt condolences to the members of his family on their sad bereavement.

Sir. P.T. Rajan.

The demise of Tao Sahib T.V. Umamaheswaram Pillai is quite unexpected and a great loss to the karanthai Tamil Sangam. We offer our deep condolence to the members of the sangam and the bereaved family.

His Holyness Kasivasi. Swaminatha Thambiran.

The members of the Executive Commitee S.P.C.A. Tanjore record their feelings of deep sorrow and regret at the sudden death of their able Honorary Legal Adviser Sri Rao Sahib, Thamilavel Senthamil Puravalar T.V. Umamaheswaram Pillai, B.A.B.L. on the 9th May 1941 at Fyzabad of Filarial fever while on pilgrimage to Benares, Rishkesh etc., side.

S.P.C.A. Tanjore.

I have learnt with extreme sorrow of the passing away of Mr. Umamaheswaram Pillai under tragic circumstances in the far off Fyzabad. I had been anxiously waiting for his visit to Delhi. But fate has decided differently.

I shall miss him greatly and so will the whole of Tamil Nad. He was a selfless worker and unfortunately the world had few such men.

Rao Bahadur. D. Sadasivam Pillai

This Council resolves to express its profound sense of grief at the demise of Sri.T.V. Umamaheswaram Pillai, President, Karanthai Tamil Sangam.

Municipal Council, Vellore.

தென்னாப்பிரிக்கா தமிழர் சங்கம்

கரந்தைத் தமிழ்ச் சங்க ஸ்தாபகரும் சிறந்த தமிழறிஞரும், 'தமிழ்ப் பொழில்' ஆசிரியருமாகிய ஸ்ரீ த.வே. உமாமகேசுவரம்பிள்ளை காலமானர் என்பதையறிய மிகவும் வருந்துகின்றோம்.

திரு. ச.மு. பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் 22.07.1941-ல் மேற்கண்ட சங்கச்சார்பில் ஓர் அநுதாபக்கூட்டம் பெரியார் மறைவைக் குறித்து நிகழ்ந்ததென்றும் இதன் மூலம் தங்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்பெரியார் மறைவு தமிழ் மக்கட்கு ஓர் பெரும் நஷ்டமேயாகும். இன்னாரது மரணத்தால் துக்கமடைந்துள்ள யாவருக்கும் மேற்கண்ட சங்கத்தாரின் அநுதாபம் உரித்தாகும்.

மு.வ. பத்தர்,
அமைச்சர்,
டர்பன் நெட்டால்.

"The Yarrows,"
Simla S.W.
The 26th May 1941.

Dear Sir,

I was extremely sorry to hear of the death of my valued friend, Mr. T.V. Umamaheshwarm Pillai, and under the most tragic circumstances away from his home and in a foreign place. His public work is known to every one in Tamilnad and Tanjore District in particular, which is the poorer for this irreparable loss. Please accept my very

sincere condolences and convey them to the other members of the family.

Sir. A.R. MUDALIAR.

Dear Sir,

The news of the sudden demise of Rao Sahib Sri. T.V. Umamaheswaram Pillar, your revered President, was received here some days ago and caused us much distress. Ordinarily, you do not find persons of such eminence taking interest in literary studies. I hope the Sangam will be able to secure, ere long, a suitable successor.

M.Krishnamachariar.

காந்தியாருடன் தமிழவேள்

16.09.1927 அன்று தஞ்சாவூர் நகரில் நடைபெற்ற ஒரு சுகியமான காரியம் நீதிக்கட்சியைச் சேர்ந்த சில தலைவர்களும் காந்திஜியும் சந்தித்துப் பேசியதேயாகும். பன்னீர்செல்வம், உமாமகேசுவரம்பிள்ளை (நீதிக் கட்சித் தலைவர்கள்), உக்கடைத் தேவர், சையத் தஜுதின், கார்குடி சின்னையா பிள்ளை, பட்டுக் கோட்டை தண்டபாணி செட்டியார் ஆகியோருக்கு அண்ணல் பேட்டி அளித்தார். நீதிக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது இரு தரப்பினருக்குமே நல்லதாகப் போயிற்று. காந்திஜியின் தரப்பை அவர்களும் அவர்கள் தரப்பை காந்திஜியும் அதிகம் புரிந்து கொள்ள இந்தச் சந்திப்பு உதவியது.

நீதிக் கட்சித் தலைவர்களான பன்னீர்செல்வமும், உமாமகேசுவரம்பிள்ளையும் காந்திஜியைச் சந்தித்துப் பேசிய உரையாடல் "சுதேசமித்திரன்" இதழில் அந்தக் காலத்தில் விவரமாக வெளியாகியிருந்தது. சுருக்கத்தைப் படித்துப் பார்ப்பது கூட இப்போது சுவையாக இருக்கும்.

உமாமகேசுவரம்பிள்ளை : பிராமணர்-பிராமணரல்லாதார் விவகாரம் வரவரச் சிக்கலாகி வருகிறது. தலைவர்கள் இதில் தலையிட்டு, சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும்.

மகாத்மா : பிராமணரல்லாதாரே இந்த இயக்கத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர் - பிராமணரல்லாதாருக் கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்துவிடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார். என்னைப் போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். ஆனால் ஈரோடு இராமசாமி நாயக்கர் தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும் என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு, மன நிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு வந்தபோது எஸ். சீனிவாச

அய்யங்கார் வீட்டில் தாழ்வாரத்தில் தான் உட்கார்ந்திருந்தேன். இப்போது அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகி வருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரை வரை செல்கிறாள்.

பன்னீர்செல்வம் : பிராமணர்கள் அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் தாங்களே வைத்துக் கொள்கிறார்கள். பிற வகுப்பார் அவைகளை அடைவதற்கு இடமில்லாமற் போய்விடுகிறது.

மகாத்மா : நீங்கள் சொல்வதிலிருந்து அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் பங்கு போட்டுக் கொள்வேத உங்களுடைய முக்கிய குறிக்கோளாய் இருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு குறிக்கோளுக்கு நான் ஆதரவாயிருக்க முடியாது. பொது மக்களுடைய நன்மையைக் கருதாத எந்த இயக்கத்திலும் எனக்கு அனுதாபம் கிடையாது.

உமாமகேசுவரம்பிள்ளை : அதிகாரம் பெறுதல் என்பது பல நோக்கங்களில் ஒன்றாகும். சமூகத் தீமைகளைப் போக்குவதும் மத சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதும் எங்களுடைய மற்ற குறிக்கோள்கள்.

மகாத்மா : உங்கள் இயக்கத்தின் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருப்பது நல்லது. சமய சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்வது நோக்கம் என்று கூறுகிறீர்கள். ஆனால் பிற மதத்தினரையும் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்களே?

உமாமகேசுவரம்பிள்ளை : இந்து சமயத் தலைவர்கள் எங்கள் இயக்கத்தைக் கவனியாதிருந்தபோது. நடந்த வரையில் நடைபெறட்டும் என்று கருதி இந்துக்களல்லாதாரும் இயக்கத்தின் தொடக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பிராமணரல்லாதார் பல் வழிகளிலும் பிராமணர்களால் அவமதிக்கப் பட்டிருக்கிறார்கள். பொது மக்களிடையே இப்போது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மகாத்மா : இப்போது நடைமுறையிலிருக்கும் வர்ணாஷ்ரம தர்மத்தைக் களைந்தெறியலாம். ஆனாலும்

அடிப்படையான தத்துவத்தை அழிக்க முற்படலாகாது. பிறப்பினால் மட்டும் ஒரு மனிதன் உயர்ந்தவனாகிவிட மாட்டான்.

பன்னீர்செல்வம்: கதர் இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள், பல பிராமணரல்லாதார் உங்களோடு சேர்ந்து வேலை செய்ய இடங் கொடுக்காமல் இராஜகோபாலாச்சாரியார் செய்கிறார் என்ற புகார் இருந்து வருகிறது. எஸ். இராமநாதன் கதர் இயக்கத்தில் இருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் அவரையும் வெளியே போகும்படி பிராமணர்கள் செய்துவிடுவார்கள். (இவ்வாறு அவர் கூறியபோது ராஜாஜியும். எஸ். இராமநாதனும் அங்கிருந்தார்கள்)

மகாத்மா : ஆச்சாரியார் கதர் இயக்கத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். கதர் இயக்கத்திலிருந்து அவருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. பஜாஜுக்கு நான் எழுதி அவருக்கு உதவி கொடுக்கும்படி செய்தேன். கதர் இயக்கத்தில் ஈடுபாட்டுடன் வேலை செய்யக் கூடியவர்கள் வந்தால் ஆச்சாரி யாரை விலகிக் கொள்ளச் சொல்கிறேன். நானும் விலகிக் கொள் கிறேன். ஆச்சாரியார் தமது வக்கீல் தொழில். சம்பாத்தியம். பதவி இவைகளையெல்லாம் ஏன் விட்டுவிட்டு வர வேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டாமா?

பன்னீர்செல்வம் : கதர் வேலையைக் காரணமாக வைத்துக் கொண்டு தமக்கும் தம்மைச் சேர்ந்தவருக்கும் செல்வாக்குத் தேட வேண்டும் என்பது தான் அவர் நோக்கம். உங்களுடைய பக்கத்தில் இருப்பதால் மக்கள் ஒருவித பிரமையை அடைகிறார்கள். தேர்தல் காலத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வழக்கமாகிவிட்டது.

மகாத்மா : ஆச்சாரியார் சம்பந்தப்பட்டமட்டில் அந்த மாதிரியான நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. கதர் இயக்கத்தில் வேஷக்காரர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படியிருந்தாலும் அவர்கள் கதர் வேடம் தானே போடுகிறார்கள்? அந்த அளவில் நன்மை தானே?

இந்த உரையாடல். அந்தக் காலத்தில் பிராமணர் அல்லாதார்

மத்தியிலிருந்த கருத்தை எடுத்துக் காட்டுகிறது. மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்த உரையாடலைப் பற்றி கூட்டத்தில் காந்திஜி குறிப்பிட்டார். காந்திஜி சொன்னார்: "இங்கு சில நண்பர்களுடன் நான் பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கலைக் குறித்து விவாதித்தேன்"

இந்த வாதம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. முன்னைக் காட்டிலும் சற்று நல்லமுறையில் பிராமணரல்லாதார் இயக்கத்தைப் பற்றி இப்போது நான் புரிந்து கொண்டிருக்கிறேன். இந்த வாதத்தின் போது என்னைப் பற்றி அவர்கள் ஒரு கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அது அவர்கள் மனத்தைத் துன்புறுத்திக் கொண்டேயிருக்கிறது என்பதையும் கண்டேன். பிறப்பால் ஒருவர் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று நான் கருதுவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். எல்லா மனிதர்களும் பிறப்பால் சமம் என்பது தான் என் கருத்து என்பதை அவர்களுக்கு நான் விளக்கினேன். ஒரு பிராமணரோ அல்லது யாரோ தாம் உயர்ந்தவர் என்று உரிமை கொண்டாடும் போது பிராமணரல்லாதார் அதை எதிர்த்துப் போரிட்டால் அதை முழுக்க முழுக்க நான் ஆதரிக்கிறேன். நான் உயர்ந்தவன் என்று உரிமை கொண்டாடுபவன் மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு உரியவனல்ல. ஆனால் இந்த நம்பிக்கைகளெல்லாம் எனக்கு இருந்தாலும் வர்ணாஷரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய பெற்றோர்கள், மூதாதையர்கள் ஆகியோரை அனுசரித்த உருவம் எவ்வாறு கிடைககிறதோ அதே போன்று அவர்களுடைய ஆற்றலும் கிடைக்கிறது. இதை வெளிப்படையாக ஒப்புக் கொள்வதன் மூலம் நம்முடைய லோகாயத ஆசைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைககப் பெறுகிறது. ஆன்மிக வளர்ச்சிக்கு நம் சக்தி பயன்படுகிறது. இதை நீங்கள் ஒப்பு கொள்வதனால் சமய அடிப்படையில் பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கல் எளிதாகத் தீர்ந்துவிடும். ஒரு பிராமணன் பணம் சம்பாதிப்பதில் இறங்கி விட்டால் அவன் பிராமணனே அல்லன்.

நன்றி **தமிழ் நாட்டில் காந்தி,** ஆசிரியர் அ. இராமசாமி மற்றும் **நீதிக் கட்சி 75 வது ஆண்டு** (பவள விழா) மலர்.

Printed by-Lucme, T.J. 53141